
# குழுமத்தின் கூட்டு அறிவாற்றலில் நங்கூரமிட்டு நிற்கும் வளர்ச்சி

## குழுமங்களை அணிதிரட்டுவதற்கான ஒரு கையேடு

ஜோசப் சேவியர்



# குழுமத்தின் கூட்டு அறிவாற்றலில் நங்கூரமிட்டு நிற்கும் வளர்ச்சி

## குழுமங்களை அணிதிரட்டுவதற்கான ஒரு கையேடு


ஜோசப் சேவியர்

உடன் நின்றோர்

திருமிகு. ஸ்ரீவித்யா சாய்நாதன்
முனைவர். சதானந்த் பாக்



தமிழில்: யூஜின் முத்து & மாறன்

குழுமத்தின் கூட்டு அறிவாற்றலில் நங்கூரமிட்டு நிற்கும் வளர்ச்சி:
குழுமங்களை அணிதிரட்டுவதற்கான ஒரு கையேடு

ஆசிரியர்: ஜோசப் சேவியர்

பதிப்புரிமை: இந்திய சமூக நிறுவனம், பெங்களூரு
காரிதாஸ் இந்தியா, புது டில்லி

முதல் பதிப்பு: 2021

**ISBN: 978-81-947949-5-0**

வெளியீடு:
இந்திய சமூக நிறுவனம்
24 பென்சன் ரோடு, பென்சன் டவுன்,
பெங்களூரு - 560046
மின்அஞ்சல்: ajoexavier@gmail.com
வலைத்தளம்: www.isibangalore.com

காரிதாஸ் இந்தியா
சிபிசிஐ சென்டர், 1 அசோக் பிளேஸ்
புது டில்லி - 110001
வலைத்தளம்: www.caritasindia.org

முகப்பு அட்டைப்படம் மற்றும் வடிவமைப்பு: ஜோதி பிரிண்ட்டர்ஸ்

அச்சிட்டவர்: ஜோதி பிரிண்ட்டர்ஸ், சி.12, செக்டர் - 8, நோய்டா - 201301

இந்த வெளியீட்டை இந்த நூலில் நீங்கள் காணும் வெளியிட்டவர்கள் யார் எப்போது வெளியிட்டார்கள் என்கின்ற தகவல்களை முறையாகப் பதிவுசெய்து எப்படி வேண்டுமானாலும் வெளியிடலாம், எந்த வகைகளில் வேண்டுமானாலும் பகிர்ந்துகொள்ளலாம்.

காரிதாஸ் இந்தியா மற்றும்.்.அல்லது இந்திய சமூக நிறுவனம், பெங்களூரு தனித்தனியாகவோ அல்லது ஒத்த கருத்துடைய பிற அமைப்புகளோடு சேர்ந்தோ, ஒருவர் மற்றவருடைய பங்களிப்பைப் முறையாக அங்கீகரித்து, லாப நோக்கம் அற்ற வகையில் எதிர்காலத்தில் இந்த வெளியீட்டை மொழிபெயர்க்கவும், திருத்திஅமைக்கவும், மறுவெளியீடு செய்யவும் முழு உரிமையையும் தக்க வைத்துக்கொள்கின்றது.

# உள்ளே

முன்னுரை . . . . 04

வாழ்த்துச் செய்திகள் . . . . 08

Abbreviations. . . . . 13

1. அறிமுகம்: குழுமங்களின் தலைமையில் வளர்ச்சிக்கான வழிமுறைகள் . . . . 15
2. தன்னம்பிக்கையையும் பிறர் நம்பிக்கையையும் வளர்த்தெடுத்தல் . . . . 29
3. எல்லோரும் புரிந்துகொள்ளச் செய்தல் . . . . 35
4. ஒன்றுபட்டு செயல்படும் குழக்களை உருவாக்கி செயல்படச்செய்தல . . . . 41
5. விமர்சனக் கண்ணோட்டத்தை உருவாக்குதல் . . . . 49
6. சமூகச் சிக்கல்களை அடையாளம் கண்டு முன்னுரிமை வரிசைப்படுத்துதல் . . . . 57
7. வாழ்வாதாரத்திற்கான வாய்ப்புகளை விரிவுபடுத்திக்கொள்ளுதல் . . . . 65
8. மற்ற குழுக்களுடைய செயல்பாடுகளைப் போய்ப் பார்த்தல் . . . . 75
9. செயல்பட்டு – சீர்தூக்கிப் பார்த்தல் முறையைப் பின்பற்றுதல் . . . . 83
10. ஒத்துழைப்பது, பிணைப்பது மற்றும் குரல்கொடுப்பதற்கான செயல்பாடுகள் . . . . 91
11. தன்னார்வத்தோடு முன்வருவது, கொடுப்பது மற்றும் பகிர்ந்துகொள்வது . . . . 99
12. கொண்டாடுவது, வெளிக்காட்டிக்கொள்வது மற்றும் அங்கீகரிப்பது . . . . 107
13. மாற்றம்பெற்றுவரும் ‘ஆதரவு நல்கும்’ அமைப்புகளின் செயல்பாடுகள் . . . . 113

நிறைவாக . . . . 119

துணைநின்ற நூல்கள் . . . . 123

# முன்னுரை



மக்களாட்சி சமுதாயங்களில், சமூக இயக்கங்களின் மூலமாக உரிமைகள், நல்வாழ்வு, மற்றும் குழுமத்தில் இணைந்து வாழும் பலவிதமானவர்களின் வாழ்க்கை நலன் ஆகியவற்றிற்கான கூட்டு ஞானம் வடித்தெடுக்கப்படுகின்றது, பலவேறு வகையாக ஆதரவுக் குரல் எழுப்புவதன் வழியாகவும், கூட்டு செயல்பாடுகளின் வழியாகவும் ஒருமித்த குரல் எழுப்பப்படுகின்றது. 150 ஆண்டுகளாக சமூக சீர்திருத்தத்திற்கு கட்டியம் கூறுகின்ற பலதரப்பட்ட சமூக இயக்கங்களையும், பெருந்திரள் அணிதிரட்டல்களையும் நாம் கண்டுவருகின்றோம். இந்த சமூக இயக்கங்கள் ஆதிக்கச் சொல்லாடல்களை அடித்து நொறுக்கிப் புறந்தள்ளி, இளைஞர்கள் இளம் பெண்கள், கூலி உடல் உழைப்பாளர்கள், விவசாயிகள், தலித்மக்கள், இன மற்றும் சமய சிறுபான்மையினர், பெண்கள் மற்றும் மூன்றாம் பாலினத்தவர் ஆகியோரது தேவைகளையும், கோரிக்கைகளையும், கனவுகளையும் ஆசைகளையும் நமது கண் முன்னும் கவனத்தின் முன்னும் நிறுத்தியிருக்கின்றது. இந்த இயக்கங்கள் வெற்றிகரமாக குழுமங்களை அணிதிரட்டியதாலும், தொண்டர் படை கட்டியெழுப்பியதாலும், குழுமங்களுக்காக முன்னின்று முடிவெடுக்கும், தலைமையேற்று நடத்திச் செல்லும் அதே நேரத்தில் யாருக்காக உழைக்கின்றார்களோ அவர்களுக்கு கடமைப்பட்டவர்களாக கண்ணியம் காக்கும் குழும நலன்களுக்கான பணியாளர்களை உருவாக்கியதால் தாக்கங்களை ஏற்படுத்தின. இப்படிப்பட்ட குழுமங்களில் வேரூன்றிநிற்கும் சமூக அக்கறைகொண்ட தன்னார்வலர்களை வளர்த்தெடுக்கும் முக்கியமான பணிக்கு ஒரு பயிற்சிக் கையேடு என்பது இன்றைக்கு தேவைப்படுகின்றது. முனைவர் ஜோசப் சேவியர் அவர்கள் செல்வி. ஸ்ரீவித்யா சாய்நாதன் மற்றும் முனைவர் சதானந்த் பெய்க் ஆகியோருடன் இணைந்து தயாரித்து அளிக்கும் ‘குழுமத்தின் கூட்டு அறிவாற்றலில் நங்கூரமிட்டு நிற்கும் வளர்ச்சி: குழுமங்களை அணிதிரட்டுவதற்கான ஒரு கையேடு’ என்னும் இந்த நூல் அந்தத் தேவையை நிறைவுசெய்கின்றது.

இயல் 1. குழுமங்களின் தலைமையில் வளர்ச்சிக்கான வழிமுறைகள் என்ற அறிமுகம் விழிப்புணர்வை உருவாக்குதல்,உலர்ந்த எலும்புகளைப் போன்ற மக்களை உயிரோட்டம் உள்ளவர்களாக்கும் செயல்முறை, சமூக மாற்றத்தை நோக்கிய ஒரு பார்வை என்று சுதி சேர்க்கின்றது. இந்த அறிமுகம் வரலாற்றில் தாக்கங்களை ஏற்படுத்திய சார்புக் கோட்பாடு, நவீனப்படுத்துதல் கோட்பாடு வளர்ச்சியை எட்டிப் பிடித்துக் கொள்ளும் கோட்பாடு, சமூக வளர்ச்சிக் கோட்பாடு, நிலைத்த வளர்ச்சிக் கோட்பாடு ஆகியபல வளர்ச்சிக்கான கோட்பாடுகளை தெள்ளந் தெளிவாக, மேதாவித் தனமாக இல்லாத வார்த்தைகளில் விமர்சனக் கண்ணோட்டத்தோடு அணுகுகின்றது. இந்த அறிமுகம், தான தர்ம போக்கு, வளர்ச்சிப் போக்கு, சமூக செயல்பாட்டுப் போக்கு மற்றும் மனித உரிமைகள் போக்கு என்னும் நான்கு வளர்ச்சிக்கான மாதிரிகளை எடுத்துக் காட்டுகின்றது. அடித்தட்டில் இருந்து எழும் சமூக பண்பாட்டு மற்றும் சமூக மாற்றத்திற்கான அமைப்பு முறை மற்றும் முனைவர். அமர்த்தியா சென் அவர்களின் தகுதிப்படுத்துதல் முறை ஆகியவற்றைப் பற்றி கலந்துரையாடி, வாழ்க்கை அனுபவங்களில் இருந்து கற்றுக்கொள்வதை அடிக்கோடிட்டுக் காட்டிநிற்கின்றது. அத்தோடு செய்முறை ஒன்றை வரிச்சட்டமாகக் காட்டுகின்றது. அந்த வரிச்சட்டம் குழும அணிதிரட்டல் முறைகளை விளக்குவதற்காக உருவாக்கப்பட்ட பாய்வு வரைபடங்களின் மூலமாக வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல எளிதாக சித்தரிக்கின்றது. இந்த அறிமுகம் நீதிநெறிகளைச் சுக்குநூறாக்கும் சுரண்டலுக்குத் துணைபோகும் குழும வளர்ச்சிக் கோட்பாடு பற்றிய ஆய்வுகளால் நேரக்கூடிய ஆபத்துக்களைப்பற்றியும் சிந்திக்கின்றது. ஒருவருக்கு ஒருவர் மரியாதை காட்டுகின்ற அடி மட்டத்தில் இருந்து மேல் நோக்கி நகர்கின்ற முடிவெடுக்கும் நிலைமை இல்லாமல், நாம் பரபரப்பில்லாமல் தொடர்ச்சியாக நீண்ட காலம் இணைந்து செயல்படக்கூடிய, அர்ப்பணமுள்ள செயல்பாட்டாளர்கள் குழு ஒன்றை கட்டியெழுப்ப முடியாது என்கின்றது.

தன்னம்பிக்கையையும் பிறர் நம்பிக்கையையும் வளர்த்தெடுத்தல் என்னும் தலைப்பில் இயல் 2 மக்களாட்சி முறையில், அனைவரின் பங்கேற்பை உறுதிசெய்யும் வகையில், குழும அணிதிரட்டலுக்கு வழிகாட்டுகின்றது. இது ஊக்குனர்கள் தங்களைத் தாங்களே எல்லா நேரமும் சீர்தூக்கிப் பார்த்துக்கொள்ளவேண்டும் என்னும் நிலையைத் தட்டிக்கொடுத்து வளர்க்கின்றது. ஒரு சமூக செயல்பாட்டாளர் தொலை பார்வை, நோக்கு, இலக்கு, இலட்சியம் ஆகியவற்றால் வழிநடத்தப்படவேண்டும். இது முக்கியம். அப்போதுதான் உடனடி உத்திகளைப் பயன்படுத்தும்

குழுமச் செயல்பாடுகளில் தலையீடுகளும், காலப்போக்கில் அடையவேண்டிய காரியங்களுக்கான வியூகமும் ஒன்றோடு ஒன்று பொருந்திப்போகும்.

நோக்கம், மதிப்பீடுகள், குழும அணிதிரட்டல் முறைகளை எல்லோரும் புரிந்துகொள்ளச் செய்தல் என்னும்இயல் 3 பொதுவான ஆர்வமூட்டும் செயல்கள், மதிப்பீடுகள், தோழமை, சமூக இணக்கம், சமூக நீதி, கருணை, மற்றும் சுற்றுச் சூழல் பற்றிய அக்கறை போன்ற நாம் ஆசையாக நினைத்து நினைத்து மகிழ்பவற்றைப் பற்றிக் கலந்துரையாடுகின்றது. குழும அடிப்படையிலான அமைப்புகள்தான் அச்சாணியாக இருந்து எந்தஒரு நிகழ்ச்சி அல்லது செயல்திட்டத்தின் வெற்றியை நிர்ணயிக்கின்றன.

ஒன்றுபட்டு செயல்படும் பலவேறு குழுக்களை உருவாக்கி செயல்படச்செய்தல் இதன் வழியாக குழுமத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு அமைப்பினை உருவாக்குதல் என்னும் இயல் 4 நாம் பொதுவான ஆர்வமூட்டும் செயல்கள், அனைவரையும் ஏற்றுக்கொள்ளுதல், பலவகைப்பட்டதாக இருத்தல், அடிப்படையில் ஓரங்கட்டப்பட்ட குழுக்களிடம் சமூக தோழமை பாராட்டுவதை அடிப்படையாகக் கொண்ட எல்லோரையும் ஒருங்கிணைக்கும் அமைப்புகளை உருவாக்குவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்ன செய்யக்கூடாது என்பதைப்பற்றி தெளிவாக எடுத்துக்கூறுகின்றது. சமூக நீதி, சமத்துவ நீதி, பாலின நீதி என்பவை குழும மைய பார்வையில் அடித்தளமாக அமைந்திருக்க வேண்டும்.

மேலே சொல்லப்பட்ட எல்லாவற்றையும் கவனத்தில் எடுத்துக்கொண்டு,‘விமர்சனக் கண்ணோட்டத்தை உருவாக்குதல்: தன்னைப்பற்றியும், குழுமத்தைப் பற்றியும், சமுதாயத்தைப் பற்றியும் அத்தோடு ஆளுமை வளர்ச்சி, தலைமைப்பண்பு வளர்ச்சி மற்றும் அறிவாற்றலை வளர்த்துக்கொள்ளுதல்’ என்னும் இயல் 5‘மரத்தை’ ஒரு எடுத்துக்காட்டாகக் கொடுக்கின்றது. இந்த மரத்தின் தண்டுப்பகுதிதான் குழுமம் என்றால் அதன் வேர்ப்பகுதி பெண்கள், ஆண்கள், இளம் ஆண்கள், இளம் பெண்கள் மற்றும் குழந்தைகளை குறித்துநிற்கிறது. இந்த இயல் பலவேறு வடிவங்களில் காணப்படும் சமத்துவமின்மை, பாதிப்பிற்குள்ளாகும் நிலைமைகள் மற்றும் பாகுபாடுகள் ஆகியவற்றை எப்படி அடையாளம் காண்பது என்கின்ற விழிப்புணர்வினைத் தூண்டிஎழுப்பிவிடுகின்றது. குழும அணிதிரட்டல் வழியாக யாரை நாம் எதிர்க்க வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றது. நமது நல்லுணர்வுகளைத் தூண்டக்கூடிய அளவில் ஒரு உண்மைச் சம்பவம் அதாவது தன் உடன்பிறந்த சகோதரி கடத்தப்பட்டிருப்பதைக் கண்டு அவரை மீட்பதற்காகப் போராடும் ஒரு பெண் குழந்தையின் செயல்பாடுகள் எடுத்துக்காட்டாக இந்த இயலின் இறுதிப்பகுதியில் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

தேவைகளைத் தெரிந்துகொள்ளுதல் மற்றும் நுணுக்கமாகத் திட்டமிடல் என்பவை சிறப்பான குழும அணிதிரட்டலுக்கு இன்றியமையாதவை ஆகும். சமூகச் சிக்கல்களை அடையாளம் கண்டு முன்னுரிமை வரிசைப்படுத்துதல் என்னும் இயல் 6 பங்கேற்புமுறை கிராம ஆய்வின் முக்கியத்தையும், குறிப்பிட்ட செயல்பாடு, அளந்து பார்க்கக்கூடிய வகையிலானது, செய்து முடிக்கக்கூடியது, பொருத்தமானது, ஒரு காலக்கெடுவிற்குள் செய்யக் கூடியது என்கின்ற (SMART– **S**pecific, **M**easurable, **A**chievable, **R**elevant and **T**ime-bound) செயல்பாட்டுத் திட்ட அட்டவணை தயாரிப்பதின் முக்கியத்தையும் நமக்கு எடுத்துச்சொல்கின்றது. பயனுள்ள சிறு தகவல்கள் என்னும் பகுதியில் இந்த இயல் குழும அணிதிரட்டல் செயல்பாட்டாளர்களை ஒரே காலக்கட்டத்தில் ஏகப்பட்ட சமூக சிக்கல்களை சரிசெய்கிறேன் பேர்வழி என்று புறப்பட்டுவிடக்கூடாது என்று எச்சரிக்கின்றது. செயல்பாடுகளை முன்னுரிமை வரிசைப்படுத்திச் செய்வது என்பது நமது வளங்களை சிறப்பான வகையில் பயன்படுததுவதற்கு மிகவும் உதவியான ஒரு செயல்பாடாக இருக்கின்றது என்று நிறுவுகின்றது.

ஒரு அமைப்பின் நிதி ஆதாரம், செய்ய வேண்டிய வேலைகள் மற்றும் அந்த வேலைகளைச் செய்ய வேண்டிய ஆட்கள் ஆகியவற்றை உள்ளது உள்ளபடியே எண்ணிப்பார்த்தால், குழும பணியாளர்கள் கீழ்கண்டவற்றையெல்லாம் தெரிந்திருக்க வேண்டும் என்றாகின்றது. எந்த வேலைக்கு எந்த அதிகாரியைப் பார்க்க வேண்டும் என்று தெரிந்திருக்க வேண்டும். சட்டங்களைப் பற்றிய அடிப்படை அறிவும் சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கு என்ன செய்ய வேண்டும் ஏது செய்ய வேண்டும் என்றும் தெரிந்திருக்க வேண்டும். தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் படி மனுக்களை எழுதவும் சரியான இடத்திற்கு அனுப்பிவைக்கவும் தெரிந்திருக்க வேண்டும். கணிணி மூலமாகவே புகார் பதிவுசெய்யத் தெரிந்திருக்க வேண்டும். காரண காரியம் பார்த்து வாதாடவும், அமைதியாக பேச்சுவார்த்தை நடத்தவும் தெரிந்திருக்க வேண்டும். ஒரு காரியத்தைத் தொட்டால் தொடர்ந்து நடத்தி முடிக்கும்வரைத் தொடரத் தெரிந்திருக்க வேண்டும். குழுவில் ஒருவரும் ஒன்றும் செய்யவில்லைஎன்றாலும் குழுவைக் கலைத்துவிடாமல் காப்பாற்றத் தெரிந்திருக்க வேண்டும். சண்டை சச்சரவுகளைத் தீர்க்கத் தெரிந்திருக்க வேண்டும். சமூக ஊடகங்கள், வழக்கமான செய்தித்தாள், பத்திரிக்கைகள், தொலைக்காட்சி போன்றவற்றில் நாம் கையாளும் சிக்கல்களைப் பற்றிய செய்திகள் தலைப்புச் செய்திகளாகும்படி புதுமையான பாங்கில் செயல்படத் தெரிந்திருக்க வேண்டும். வாழ்வாதார வாய்ப்புகளைப் பெருக்கத் தெரிந்திருக்க வேண்டும். சமூகப் பாதுகாப்பு பற்றி அறிந்திருக்க வேண்டும். சமூக பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தெரிந்திருக்க வேண்டும்.

வாழ்வாதாரத்திற்கான வாய்ப்புகளை விரிவுபடுத்திக்கொள்ளுதல் மற்றும் அதற்கான கடமை உள்ளவர்களோடு தொடர்பு மற்றும் செயல்பாடுகளை மேம்படுத்துதல் என்ற தலைப்பு கொண்ட இயல் 7 அரசின் வளர்ச்சித் திட்டங்களில் மக்களின் கைகளுக்குச் சென்றடையவேண்டிய பங்கு பற்றியும் அதனைப் பெற்றுக்கொள்வதற்காக – உள்ளாட்சி அமைப்புகள், காவல்துறை மற்றும் நீதிமன்றங்கள், கட்சிகள் மற்றும் அரசு அலுவலகங்கள் என அதிகார அமைப்பில் உள்ளவர்களிடம் முட்டி மோதி ஒரு சமூகமாக அவர்கள் எதையெல்லாம் இழந்து என்ன வெல்லாம் செய்ய வேண்டியிருக்கின்றது என்பதைப் பற்றியும் நல்லது கெட்டது என்னவென்று கலந்துரையாடுகின்றது. பலவேறு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதையும், நிகழ்ச்சிகள் நடப்பதையும், அவற்றை நடத்தம் நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளையம் நேரடியாகப் போய்ப் பார்த்துத் தெரிந்துகொள்வது

மற்றும் விழிப்புணர்வு சுற்றுலாக்கள் மேற்கொள்வது குழுமங்களை அணிதிரட்டும் வேலையைச் செய்பவர்களுக்கு மிகவும் முக்கியமானது. இவற்றின் வழியாக அவர்கள், வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு சமூக பண்பாட்டுச் சூழல்களில் செயல்பட்டுவரும் வெவ்வேறு அரசு சாரா தொண்டு நிறுவனங்கள், குடிமை சமுதாய அமைப்புகள், தோழமை இயக்கங்கள், மாநில, தேசிய மற்றும் உலகளாவிய பிணைப்புகள் முன்னெடுக்கின்ற வெற்றிகரமான கைமேல் பலன்தரக்கூடிய செயல்பாடுகளை கண்ணால் பார்த்துத் தெரிந்துகொள்கின்றார்கள், தங்கள் சொந்தக் காதுபடக் கேட்டுக் கற்றுக்கொள்கின்றார்கள். பலவேறு முயற்சிகளில் உள்ள சிக்கல்களையும் குறைபாடுகளையும்கூடத் தெரிந்துகொள்கின்றார்கள்.

மற்ற குழுக்களுடைய செயல்பாடுகளைப் போய்ப் பார்த்தல் அவர்களிடம் இருந்து கற்றுக்கொள்ளுதல் என்ற தலைப்பில் இயல் 8 மற்ற குழுக்களுடைய செயல்பாடுகளைப் போய்ப் பார்ப்பதன் நோக்கம் மற்றும் முக்கியத்துவத்தை விளக்கிச் சொல்கின்றது. இந்த இயல் குழும உறுப்பினர்கள் தங்கள் தோழர்களுடன் மேலே குறிப்பிடப்படும் செயல்பாடுகளில் எந்தெந்த அம்சங்களைத் திருப்பிப் பார்க்கவும் தங்களுக்கிடையே கலந்துபேசவும் வேண்டும் என்று நுணுக்கமாக எடுத்துச்சொல்கின்றது.

ஒரு குறிப்பிட்ட செயல்பாட்டை அந்தச் செயல்பாடு எப்படிச் செய்யப்படுகின்றது, ஏன் மேற்கொள்ளப்படுகின்றது, எப்போது நடத்தப்படுகின்றது மற்றும் அந்தச் செயல்பாட்டின் வெற்றிக்கு அல்லது தோல்விக்கு மற்றும் நாம் அந்தச் செயல்பாட்டில் இருந்து கற்றுக்கொண்டவற்றிற்கு என்னனென்னவெல்லாம் காரணங்களாக அமைந்திருக்கின்றன என்று மதிப்பீடுசெய்தல் மற்றும் அதன் தாக்கங்களைச் சீர்தூக்கிப்பார்த்தல் மேலே நாம் எழுப்பிய கேள்விகளுக்கான பதில்களையெல்லாம் நுணுக்கமாகப் புரிந்துகொள்வதற்கு மிகவும் முக்கியமானது.

செயல்பட்டு – சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்த்தல் முறையைப் பின்பற்றுதல் அதன் வழியாக நடைமுறைப்படுத்தக்கூடிய செயல்பாடுகளைக் கண்டுகொள்ளுதல் என்னும் தலைப்பில் உள்ள இயல் 9 ஒரு செயலைச் செய்தபின் அதைப்பற்றி எந்தெந்த வகைகளில் எல்லாம் சீர்தூக்கிப் பார்க்கலாம் என்பதை கலந்துபேசச் செய்வதன் வழியாக மிகவும் குறிப்பிடத்தக்க வரவேற்பைப் பெறுகின்றது.

மாதிரி 1: செயல்பாடு – சிந்தனை – கற்றுக்கொள்தல் - திட்டமிடல் (ARLP), மாதிரி 2: கிப்ஸ் சிந்தித்தல் சூழற்சி (Gibbs G, 1988), மாதிரி 3: ஒழுங்கமைவுசெய்தல் கருவி, மாதிரி 4: இஞ்ஞாசியார் காட்டும் ஆழ்ந்த உரையாடல் - தனிப்பட்ட மற்றும் குழும அளவிலான தேர்ந்துதெளிதல் ஆகியவை பற்றிய கலந்துரையாடல்களும், பாய்வு வரைபடங்களும் 'செய்து பார்த்து கற்றுக்கொள்ளும்' வழிவகைகளைப் பற்றி நம்மை சிந்திக்கச் செய்கின்றன.

எந்தெந்தக் குழுக்களின் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்று அந்தந்தக் குழுக்களை அடையாளம் கண்டுகொள்வது, ஏன் மக்கள் தங்கள் உரிமைகளைப் பயன்படுத்திக்கொள்ள இயலாமல் இருக்கின்றார்கள் என்பதைப் புரிந்துகொள்வது, மக்களுக்கு அவர்களது மனித உரிமைகள் மறுக்கப்படும் நிலையைச் சரிசெய்ய அந்தச் சூழ்நிலையில் நிலவும் அநீதியான அதிகாரப் பகிர்வினை எதிர்கொள்வது, உரிமை உள்ளவர்களை அந்த உரிமைகளை எடுத்துக்கொள்ளவும், பயன்படுத்தவும் ஆற்றல் மிக்கவர்களாக்குவதற்காக உழைப்பது, மக்கள் தங்கள் மனித உரிமைகளைப் பெற்றுக்கொள்வதை உறுதிசெய்யவேண்டிய கடமைஉள்ளவர்கள் தங்கள் கடமையில் தவறாமல் செயல்பட நெருக்குவது, நாம் எடுத்துச்கொண்ட இலக்கை அடைய ஒத்துழைப்பது மற்றும் பிணைப்புகளை உருவாக்கிக்கொள்வது, எந்தெந்த செயல்பாடுகளுக்கு நாம் முன்னுரிமை கொடுத்துச் செயல்பட வேண்டும் என்பதையும்,அந்தச் செயல்பாடுகளை நாம் எப்படிச் செய்வது என்றும் முடிவுசெய்வதற்கு நமக்கு வழிகாட்டும் கோட்பாடுகளை செயல்படச்செய்வது என்று அத்தனையையும் வளர்ச்சிக்கான செயல்பாடுகள் ஊக்குவித்து பாதுகாக்கின்றன.

ஒத்துழைப்பது, பிணைப்பை ஏற்படுத்திக்கொள்வது மற்றும் குரல்கொடுப்பதற்கான செயல்பாடுகள் என்னும் தலைப்பில் உள்ள இயல் 10 உரிமைகளையும் வளர்ச்சித் திட்டச்செயல்பாடுகளில் தங்கள் பங்கையும் பற்றிப் பேசுகிறது. குழுமத்தின் தலைமையில் முன்னெடுக்கப்படும் செயல்பாடுகளில் விளைவாகப் இவற்றைப் பெற்றுக்கொள்வதற்கான பாதையில் வழிநடத்துகின்றது. இந்தப் பாதையில் நடக்க ஒத்துழைக்கக் கூடியவர்கள் மற்றும் தேவையான வளங்களைத் தேடித்தரும் தோழர்களையும் தேடிக்கண்டுபித்துக்கொள்ளவும் வழிவகை காட்டுகின்றது.

தன்னார்வமாக முன்வரும் உணர்வு, குழுமத்தின் மானுட வளர்ச்சி மற்றும் ஒட்டுமொத்த சமுதாயத்தின் நலனிற்காக செயல்பட்டாகவேண்டும் என்னும் உள்மனத் தூண்டலில் இருந்து கிளர்ந்தெழுகின்றது. தனது அறிவையும், பொருளையும், பலவிதமான உடல் உழைப்பையும் அர்ப்பணித்துச் செயல்படும் பண்பாட்டை உருவாக்கும் பெரும்பணி, போதுமான தகவல்களை, தனது திறன்களை, அறிவை, தகுதிகளை, நேரத்தை பகிர்ந்துகொள்ளும் போதும், மனமுவந்து தன்னார்வ உழைப்பும் சமூக சேவையும் செய்யும்போதும் நிறைவுபெறுகிறது.

இயல் 11 தன்னார்வத்தோடு முன்வருவது, கொடுப்பது மற்றும் பகிர்ந்துகொள்வதுஎன்ற தலைப்பில் கிராம மற்றும் நகர்புற சூழலில் சமூகவளர்ச்சி மற்றும் நெருக்கடி மேலாண்மை எவ்வாறு இருக்கவேண்டும் என்பதையும், அவை நாம் எதிர்பார்க்கின்றபடி அமைந்திருக்கின்றன என்பதை எந்த அறிகுறிகளை வைத்து நாம் கண்டுகொள்ள வேண்டும் என்பதையும், தன்மதிப்பீட்டிற்கான வரையறைகள் மற்றும் தன்னார்வப்பணிக்கு எடுத்துக்காட்டுக்களையும் விளக்குகிறது.

கொண்டாட்டங்கள் குழுமத்தை மீண்டும் துடிப்பானதாகச் செயல்படச்செய்ய மிகவும் முக்கியமானவை. கொண்டாட்டங்கள் குழும உறுப்பினர்களுக்கிடையோ ஒரு பந்தத்தை உருவாக்க உதவுகின்றன. குழும அணிதிரட்டல் பணியில் உடன் நடக்கும் அனைவருக்கும், நாம் வெற்றிபெற வேண்டும் என்று ஆசைப்படும் அனைவருக்கும் கொண்டாட்டங்கள் மிகவும் முக்கியமானவை.

இத்தகைய கொண்டாட்டங்களில் பங்கேற்பவர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். அவர்கள் அங்கீரிக்கபடுவதாக உணர்கிறார்கள். பரந்துபட்ட அளவில் ஆதரவாளர்களையும் இந்தக் குழுமம் வளரவேண்டும் என்கின்ற நல்லெண்ணம் கொண்டவர்களையும் நமது கொண்டாட்டங்களுக்கு அழைக்கும் போது, குழுமத்தின் கூட்டு முயற்சிகளுக்கு நிலைத்த நீடித்த பங்களிப்பை ஆற்றக்கூடிய, நம்பிக்கைக்கு உரிய ஆதரவாளர்கள் கிடைப்பார்கள்.

இயல் 12 கொண்டாடுவது, வெளிக்காட்டிக்கொள்வது மற்றும் அங்கீகரிப்பது என்ற தலைப்பு நாம் மேற்கண்டவாறு கொண்டாட்டங்களை நடத்துவதால் என்ன விளைவு ஏற்படுகின்றது என்று விளக்குகிறது. குழும உறுப்பினர்களின் பங்களிப்புகளுக்கு எல்லோருக்கும் முன்பாக அங்கீகாரம் கொடுப்பது, கொண்டாட்ட நிகழ்ச்சிகளை ஒருங்கிணைக்கும் போதுநாம் எதிர்கொள்ளும் தடைகளும் மற்றும் சவால்களும் பற்றி எடுத்துச்சொல்கின்றது. கொண்டாட்டங்களை நாம் எவ்வாறு ஆபத்தில்லாமல் செய்து முடிக்க வேண்டும் என்று கூறுகின்றது.

குழும அணிதிரட்டலின் மையநோக்கம் என்பது திறன் வளர்த்தல், தன்னம்பிக்கையை வளர்த்தல், மற்றும் முடிவெடுப்பதில் தற்சார்ப்பு தன்மையை வளர்த்தல் ஆகும். அத்தோடு நன்கு ஒருங்கிணைக்கப்பட்டு மற்றும் முறையான வகைகளில் ஒட்டுமொத்தமான குழும வளர்ச்சிக்காகவும், தனிநபர் வளர்ச்சிக்காகவும் முனைந்து செயல்படச்செய்தல்.

இயல் 13 மாற்றம்பெற்றுவரும் **'ஆதரவு நல்கும்'** அமைப்புகளின் செயல்பாடுகள் என்ற தலைப்புடன் வழிகாட்டும் அமைப்புகளின் முக்கியபங்களிப்புகள், குழுமத்தின் நிலைத்தநீடித்த வளர்ச்சிக்கு என்ன செய்ய வேண்டும் எப்படிச் செய்ய வேண்டும் என்ற குழுமத்தினரே மெல்ல மெல்ல செய்துபார்த்து உருவாக்கி வைத்திருக்கும் வழிமுறைகள் மற்றும் குழுமத்தின் வளர்ச்சிக்கான முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச்செல்லக்கூடிய தனிநபர் மற்றும் குழுகளை அடையாளம் காணுதல் ஆகிய வெற்வேறான செயல்பாடுகளைத் தெளிவாகப் பிரித்து எடுத்துக்காட்டுகின்றது.

இந்த நூலின் நிறைவாக என்னும் பகுதியில் "இந்தக் கையேடு குழுமங்களை அணிதிரட்டும் முறைகளில் ஈடுபட்டிருக்கும் வளர்ச்சிப் பணியாளர்கள் எப்போதும் தங்களோடு வைத்துக்கொண்டிருக்க வேண்டிய ஒன்றாகக் கருதி உருவாக்கப்படுகின்றது."என்று சரியாகச் சொல்லப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சிக்கையேடு, குழும வளர்ச்சியை நகர்த்தி செல்ல 'மையப்புள்ளியாக' இருந்து செயல்படும் குழும உறுப்பினர்களையும், அத்தோடு குழும வளர்ச்சிக்கு 'வழிகாட்டுகின்ற' தொண்டுநிறுவன உறுப்பினர்கள்,ஊக்குனர்கள்,நன்கொடை நல்குபவர்கள்,மற்றும் நெறியாளர்களாக இருக்கும் பயிற்சியாளர்களையும் தனது இலக்காக கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. குழமத்தின் வளர்ச்சிக்கான வழிமுறைகளில்தான தர்ம போக்கு மற்றும் மனித நேய போக்குகளில் இருந்து தடாலடியாக மனித உரிமைப் போக்கை நோக்கி மாற்றுவழியில் நடைபோடச் செய்கின்றது இந்தக் கையேடு. மேலும் இந்த கையேடு,குழுமவளர்ச்சிக்காக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றால்குழமத்தை ஒருங்கமைப்பதன் மூலம்தான் செய்ய முடியும் என்று வலியுறுத்துகிறது. இந்தக் கையேடு வளர்ச்சியை பொருளாதார வளர்ச்சியாக குறுகிய பார்வையில் பார்க்கவில்லை மாறாக கல்வி, மருத்துவம்,மரியாதையைக் காப்பாற்றிக்கொள்ளக்கூடிய வேலை வாய்ப்பு,மனித மாண்பைக் காக்கும் சூழல்,குடிமக்களுக்கு என்ற உரிமைகள் ஆகியவற்றோடு சுரண்டல், ஒடுக்குமுறை, அநீதி மற்றும் அடக்குமறை ஆகியவற்றிலிருந்து விடுதலை போன்றவற்றை உள்ளடக்கிய ஒட்டுமொத்தமான மானுட வளர்ச்சிக்கு வழிகாட்டுகிறது.

குழும வளர்ச்சிக் கோட்பாடு மற்றும் செயல்பாடுகள் குறித்த, சூழ்நிலைக்குப் பொருத்தமான அனைத்து புத்தகங்கள் மற்றும் கட்டுரைகளின் பட்டியல், இந்தக் கையேட்டின் இறுதிப் பகுதியில், எடுத்துப் பார்க்கவேண்டிய மற்றும் வாசிக்க வேண்டிய நூல்களின் பட்டியலாக கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கையேடு மானுடத்தைப் அடுக்கடுக்காகப் பிளவுபடுத்தும், சுயநலத்தையே முதன்மைப்படுத்தும் பழமைவாதத்தின் உடும்புப்பிடியிலிருந்து மனித சமூதாயத்தினை விடுவிப்பதற்காகவும், மனிதத் தன்மையை மறக்காத மறுக்காத குழும வளர்ச்சி செயல்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் அனைத்து நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுக்கும் பொருத்தமானதாகவும், தேவையானதாகவும் இருக்கின்றது. இந்தக் கையேடு பயிற்சி அளிப்பதற்கும் வகுப்பறைகளில் கற்பித்தலுக்கும் பயனுள்ளதாக இருக்கின்றது என்பதை நிறுவனங்களும் அமைப்புகளும் கண்டுகொள்வார்கள்.தொண்டு நிறுவனங்கள், குழும அடிப்படையிலான அமைப்புகள், சமூகப் பணி நிறுவனங்கள்,ஊராட்சி அமைப்பு தொடர்பான நிறுவனங்கள் மற்றும் வளர்ச்சி செயல்பாட்டாளர்கள் ஆகியோர் தங்களது சிக்கல்களுக்கு உடனடித் தீர்வுகொடுக்கும் அற்புதமான அரிச்சுவடியாக இந்தக் கையேட்டைப் பார்ப்பார்கள்.

முனைவர். ஜோசப் சேவியர், திருமிகு.ஸ்ரீவித்யா சாய்நாதன் மற்றும் முனைவர். சதானந்த பேக் ஆகியோருடைய கடின உழைப்பு மற்றும் ஆதரவுக் கரம் நீட்டிய காரிதாஸ் ஜெர்மனி மற்றும் காரிதாஸ் இந்தியா மற்றும் இந்தக் கையேட்டை சரியான நேரத்தில் வெளியிட்டுள்ள இந்திய சமூக நிறுவனம், பெங்களுர் ஆகிய எல்லோரையும் பாராட்டுகிறேன்.

முனைவர். விபூதி பட்டேல்
மேனாள் பேராசிரியர்
டாடா இன்ஸ்டிட்டியூட் ஆப் சோசியல் சயின்ஸ்சஸ், மும்பை

# உதவிய நல்ல உள்ளங்களுக்கு நன்றியாக



திட்டங்களை மதிப்பீடு செய்வதும் சீர்தூக்கிப் பார்ப்பதும் வளர்ச்சிப் பணித் துறையில் பொதுவாக நடக்கக்கூடியதுதான். பொருளும் நிதியும் தந்து உதவிசெய்யும் தோழமை உறவுகளும், வளர்ச்சித் திட்டங்களைத் தோள்கொடுத்து நடத்திக்கொடுக்கும் அமைப்புகளும், இந்தத் திட்டங்களைச் செயல்படுத்தியதால் குழும உறுப்பினர்களின் வாழ்க்கையில் என்னென்ன விதமான மாற்றங்களெல்லாம் நிகழ்ந்திருக்கின்றது என்பதைத் தெரிந்துகொள்வதற்கு, ஆர்வமாக இருப்பார்கள். இதற்காக முன்னெடுக்கப்படும் ஆய்வுகள், மக்களின் வாழ்வு மற்றும் செயல்பாடு பற்றிய ஏராளமான செழுமையான தெளிவுகளையும் நாம் கற்றுக்கொண்ட பாடங்களையும், வெளிக்கொண்டுவருகின்றன. இருந்த போதிலும், இப்படிப்பட்ட தெளிவுகளும் கற்றுக்கொண்ட பாடங்களும் பிறரோடு பகிர்ந்துகொள்ளப்படக்கூடிய வடிவத்தைப் பெற்றுக்கொள்வது என்பது, மிக அரிதாகவே நிகழ்கின்றது. இந்தக் கையேடு, நாம் பெற்றுக்கொண்ட தெளிவுகளையும் கற்றுக்கொண்ட பாடங்களையும் மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்வதற்கான ஒரு முயற்சியாக, இல்லாத குறையைத் தீர்ப்பதற்கான ஒரு வழியாக, அமைந்திருக்கின்றது.

ஜெர்மன் நாட்டின் காரிதாஸ் அமைப்பும் மிசரெயோர் அமைப்பும், நீண்ட காலமாக இந்தியாவின் பலவேறு மறைமாவட்டங்களில், பாதிப்பிற்குள்ளாகக்கூடிய சமூகங்களிடையே, குழுமங்களால் வழிநடத்தப்படக்கூடிய வளர்ச்சி முறைகளை, ஆதரித்து வந்திருக்கின்றன. கல்கத்தாவின் எஸ்.கே.சி(SKC), புது டில்லியின் சேத்தனாலயா (Chetanalaya), அகமதாபாத்தில் எஸ்.எக்ஸ்.எஸ்.எஸ். (SXSSS), உஜ்ஜெய்ன் நகரத்தின் கிரிப்பா(Kripa), மற்றும் கோரக்பூர் நகரத்தின் பி.ஜி.எஸ்.எஸ்.எஸ் (PGSSS) ஆகிய இடங்களில், காரிதாஸ் இந்தியா அமைப்பு, செயல்பாடுகளைச் சீர்தூக்கிப் பார்க்கும் பணியினை முன்னெடுத்தது. குழுமங்களின் மற்றும் ஆதரவுதரும் அமைப்புகளின் செழுமையான அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு, இந்திய அளவிலும் மற்றும் தேவைப்படும் பிற இடங்களிலும், குழும அணிதிரட்டல் முறைகளைப் பயன்படுத்தி, வளர்ச்சிப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் முன்னெடுக்கும் செயல்பாடுகளில் உதவக்கூடிய ஒரு கையேட்டினைத் தயாரிப்பது என்பதையும் கண்முன்கொண்டு, இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. நெஞ்சம் நிறைந்த மகிழ்வோடும் நன்றியோடும், இந்தக் கையேடு உருவாவதற்கு எந்தவிதமான எதிர்பார்ப்புகளும் இல்லாமல் உதவிய நல்லுள்ளங்களை, நான் நினைத்துப்பார்க்க விரும்புகின்றேன்.

இந்தப் பணியின் தொடக்கத்திலிருந்து இறுதிவரை, ஜெர்மன் நாட்டு காரிதாஸ் அமைப்பின் ஆசியா பிரிவின் திரு.பீட்டர் செய்டல், இந்திய நாட்டு காரிதாஸ் அமைப்பின் செயல் இயக்குநர் அருள்தந்தை. பால் மூஞ்செல்லி, இந்திய காரிதாஸ் அமைப்பின் நிகழ்ச்சிகள் பிரிவு தலைவர் திரு. ராஜேஷ் உபாத்தியாயய், ஜெர்மன் நாட்டின் காரிதாஸ் அமைப்பின் ஆலோசகர் திரு. ஜேம்ஸ் ஆகியவர்கள், தாராள மனதோடு இந்தப் பணிக்குத் தங்கள் ஆதரவினை வழங்கினார்கள். இந்தக் கையேட்டின் படியினை வாசித்து தங்களது தெளிவான சில கருத்துக்களையும் பரிந்துரைகளையும் கொடுத்திட்ட, ஜெர்மன் நாட்டு காரிதாஸ் அமைப்பின் ஆலோசகர் பேராசிரியர். ஜோகான்னஸ் கினிப்கி மற்றும் ஐ.ஜி.எஸ்.எஸ்.எஸ்(IGSSS) செயல் இயக்குநர் திரு. ஜான் பீட்டர் நெல்சன் ஆகியோருக்கு எனது சிறப்பான நன்றிகள். மேலே குறிப்பிட்ட ஒவ்வொருவருக்கும் தனிதனியாக எனது உள்ளத்தில் ஊற்றெடுக்கும் உண்மையான நன்றிகளை உரித்தாக்குகின்றேன்.

சமூக சேவை மையங்களின் இயக்குனர்கள், அருள் தந்தையர்கள். பிராங்கிலின் மெனசஸ், ஜான் பிரிட்டோ, ஜசக் ருமாவோ, சுனில் ஜார்ஜ் மற்றும் ஜெய்சன் மேனுவல் மற்றும் அகமதாபாத் நகரின் எஸ். எக்ஸ்.எஸ்.எஸ்.எஸ் (SXSSS) முன்னாள் இயக்குனர் அருள்தந்தை. ராஜீவ் சக்ரநாராயண் ஆகியோர், தாங்கள் கண்டுணர்ந்துகொண்டவற்றை நேர்த்தியாக எடுத்துக் கூறினார்கள். இவர்கள்தான், வளர்ச்சிப் பணியில் குழும அணிதிரட்டலுக்காக மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகளின் பன்முகப் பரிமானங்களை, சவால்களை, செய்துமுடிக்கவேண்டிய செயல்கள் செய்து முடிக்கப்படும்போது கிடைத்த சந்தோஷ ங்களை, நாங்கள் புரிந்துகொள்ள உதவிசெய்தார்கள். எங்களுக்கு எழுச்சியூட்டும் வகையில் இவர்கள் எடுத்துக்கூறிய வார்த்தைகளைக் கேட்டுக்கேட்டு நாங்கள் மகிழ்ந்தோம். மக்களின் வளர்ச்சிக்கான இவர்களது அர்ப்பணமும், அதற்கான செயல்பாடுகள் பற்றி இவர்கள் கொண்டிருந்த அசைக்க முடியாத உறுதியும், தனிப்பட்ட முறையிலே என் உள்ளத்தைக் கவர்ந்தன. திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அமைப்பின் பணியாளர்கள் ஒவ்வொருவரும் பற்பல வகைகளில் பேருதவி புரிந்திருக்கின்றார்கள்.

மிகச் சிறப்பான வகையில், நான் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பகுதி மக்களுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்தக்கொள்கின்றேன். இவர்கள் மனம் திறந்து தங்கள் உள்ளங்களில் உணர்ந்தவற்றை, தாங்கள் கண்டறிந்துகொண்டவற்றை, ஒளிவுமறைவு இல்லாமல் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். அவர்களுடைய விமர்சனங்கள் பல, இந்த கையேட்டில் இடம்பெற்றிருக்கின்றன.

நேர்காணல் செய்யப்பட்டவர்கள், குறிப்பாக முதியவர்கள், சமயத் தலைவர்கள், பங்கேற்பு ஆய்வுக் குழு உறுப்பினர்கள், பிணையத் தோழர்கள், ஆசிரியர்கள், அரசு அதிகாரிகள், குருக்கள் மற்றும் ஆயர்கள், கூர்நோக்கு குழுக் கலந்துரையாடல்களில் கலந்துகொண்டவர்கள், ஒருங்கமைவிற்கான பயிற்சிப்பட்டறைகளில் கலந்துகொண்டவர்கள் மற்றும் பல தனி நபர்கள், பெண்கள், இளம் ஆண்கள், இளம்பெண்கள், சிறுவர், சிறுமியர் மற்றும் குழும அடிப்படையிலான அமைப்புகளின் உறுப்பினர்கள் மற்றும் தலைவர்கள் என்று ஒவ்வொருவரும், அவரவரது தனிப்பட்ட மற்றும் ஒட்டுமொத்த அனுபவங்களில் இருந்து, அவர்கள் பெற்றுக்கொண்ட தெளிவுகள், புரிதல்கள் போன்ற பெரும் மதிப்பிற்குரியவற்றை எங்களோடு பகிர்ந்துகொண்டார்கள். இந்தப் பகிர்வுகள்தான், நாங்கள், குழுமத்தின் கூட்டு அறிவாற்றலைக் கண்டு எடுத்துக்கொள்வதற்கு, எங்களுக்கு உதவியாக இருந்தது. இவர்கள் எல்லோருக்கும், நான், எனது நன்றிகளைச் சமர்ப்பித்துக்கொள்கின்றேன்.

கொல்கத்தாவைச் சேர்ந்த திருமிகு. ஸ்ரீவித்யா சாய்நாதன் மற்றும் டெல்லியைச் சேர்ந்த முனைவர். சதானந்த் பேக் என்னும் இரண்டு அற்புதமான தோழர்கள், என்னுடன் வேலைசெய்ய நான் கொடுத்து வைத்தவன். என் உளமார்ந்த நன்றிகளை அவர்களுக்குச் சொல்லிக்கொள்கின்றேன்.

எடுத்துக்கொண்ட கருத்துக்களை பெருவெளிச்சத்தில் காட்டும் அருமையான முன்னுரை வழங்கிய பேராசிரியர். விபூதி பட்டேல் அவர்களுக்கு, என் உளம் பொங்கும் நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன். அதே மூச்சில் அருள்தந்தை. பால் மூஞ்செல்லி, திருமிகு. ரோஸ் ஜோசப் மற்றும் திரு. பீட்டர் செய்டல் ஆகியோருக்கும், அவர்களது நூல் அறிமுகச் செய்திகளுக்காக எனது நன்றிகள். கிறிஷ்நகர் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருள்தந்தை. பிரதீப் ராய் அவர்கள் நூலின் படியினை வாசித்துப் பரிந்துரைகள் கொடுத்ததற்காகவும் திருத்தியதற்காகவும் பெரும் நன்றி கூறுகின்றேன். நூலினை வடிவமைத்த திரு. பிஜோய் ஜோசப், இந்திய காரிதாஸ் அமைப்பின் திரு. பேட்ரிக் ஹான்ஸ்டா மற்றும் புதுடெல்லியைச் சேர்ந்த ஜோதி பிரிண்ட்டர்ஸ் அவர்களுக்கு இந்த ஆய்வினை எழிலுற அச்சிட்டு வெளியிட்டதற்காக மிகச் சிறப்பான நன்றிகளைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

திரு. பினு கே. ஜார்ஜ் அவர்கள் மிக அட்டகாசமான படங்களை வரைந்தளித்ததற்காக எனது சிறப்பான நன்றிகள். முனைவர். சதானந்த் பேக், திருமிகு. ஹர்ஷிதா மற்றும் திருமிகு. சுஜயத்துல்லா இடைவிடாமல் இந்தக் கையேட்டில் பிழைதிருத்தம் செய்ய உதவிசெய்தார்கள். அவர்களின்றி இந்தக் கையேடு இல்லை. அவர்களுக்கு எவ்வளவு நன்றி கூறினாலும் தகும்.

இறுதியாக, அரசு சாராத, குழுமங்கள் அடிப்படையிலான அமைப்புகள், மக்கள் இயக்கங்கள் மற்றும் மக்கள் தலைமையில் அல்லது குழுமங்களின் தலைமையில் நடைபெறும் வளர்ச்சிச் செயல்பாட்டு முன்னெடுப்பு முறைகளுக்கு, இந்திய அளவிலும் ஏன் உலக அளவிலும் உதவும் என்று நான் நம்புகின்ற எதிர்பார்க்கின்ற இந்தக் கையேட்டினைத் தயாரிப்பதற்காக, பெங்களூருவில் உள்ள இந்திய சமூக நிறுவனத்தை, அடையாளம் கண்டு அழைப்பு விடுத்த காரிதாஸ் இந்தியா அமைப்பிற்கு, உள்ளார்ந்த நன்றிகளைச் சமர்ப்பித்துக்கொள்கின்றேன்.

முனைவர். ஜோசப் சேவியர் சே.ச.
இயக்குனர்,
இந்திய சமூக நிறுவனம்,
பெங்களூரு

# வாழ்த்துச் செய்தி




அன்பு நண்பர்களே,

“குழுமத்தின் கூட்டு அறிவாற்றலில் நங்கூரமிட்டு நிற்கும் வளர்ச்சி” என்ற சமூக வளர்ச்சிக்கான பயிற்சிக் கையேட்டினை அறிமுகம் செய்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஊக்குவித்தல் என்பதை “ஏழைகள் மற்றும் விளிம்பு நிலை மக்கள் இடையே சமூக மாற்றத்தைக் கொண்டுவருவதையே இலக்காகக் கொண்ட, விழிப்புணர்வு மற்றும் செயல்பாடுகளை உள்ளடக்கிய ஒரு செயல்முறை.” என்று காரிதாஸ் இந்தியா அமைப்பு வரையறுக்கின்றது. இந்த ஊக்குவித்தல், விளிம்புநிலை மக்களின் மனச்சான்றுகளைத் தட்டிஎழுப்புகின்ற ஒரு அறிவுபுகட்டும் முறை. இந்த அறிவு புகட்டும் முறை மக்களைச் சுரண்டும் சக்திகளை விமர்சனக் கண்ணோட்டத்தோடு பார்க்கவைப்பதால் சாத்தியமாகின்றது. அதன் விளைவாக மக்கள் ஊக்கமடைந்து, தன்னம்பிக்கையில் வளர்ந்து, இணைந்து எழுந்து வந்து, நடப்பில் இருக்கும் சமூக யதார்த்தத்தை ஒட்டுமொத்தமாகப் புரட்டிப்போடுவதற்கான கூட்டுச்செயல்பாடுகளை முன்னெடுக்கின்றார்கள்.

குழும அணிதிரட்டல் காரிதாஸ் இந்தியாவின் செயல்பாடுகளில் மிகவும் அழுத்தமான திசைவழியாக்கமாக உள்ளது. இது காரிதாஸ் இந்தியாவின் செயல்பாடுகளில் ஒரு பலம் வாய்ந்த செயல்பாடு. ஏழ்மை மற்றும் விளிம்புநிலைக்குத் தள்ளப்படும் சூழலில் குழும அணிதிரட்டல் மக்கள் தாங்களாகவே மாற்றங்களுக்கான செயல்பாடுகளை முன்னெடுக்கச்செய்கின்றது. மக்களின் மாண்பினை உறுதிப்படுத்துகின்றது. நீதியான ஒரு சமுதாயத்தை உருவாக்க உறுதியேற்கின்றது. ஜெர்மன் நாட்டின் காரிதாஸ் அமைப்போடு இணைந்து, நாம் குழுமங்களை வலுப்படுத்துகின்ற ஒரு செயல்பாட்டில் குழுமங்களோடு தொடர்ந்து நடைபோட்டோம், தோள்கொடுத்தோம், வழிகாட்டினோம். மக்கள் வாழும் சூழலை அலசி ஆராய்வதற்காக முறையான செயல்பாடுகளைக் கொண்ட தலையீடுகளைச் செய்கின்றோம்.

குழுமங்களின் தலைமையில் நாம் மேற்கொண்ட பயணத்தில் நம்முடைய மண்ணின் மைந்தர்கள் எடுத்த முன்முயற்சிகளை ஒருங்கிணைத்துத்தான் இந்த பயிற்சிக் கையேடு உருவாக்கப்பட்டிருக்கின்றது. சமூக வளர்ச்சிசெயல்பாடுகளில் மக்களுக்கு இருக்கவேண்டிய பங்கினை இந்தச் செயல்முறை அதிகரித்திருக்கின்றது. மக்களின் அனுபவங்கள், திறன்கள், பார்வைகள், அறிவாற்றல்கள் அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டு இதனை சாத்தியமாக்கியிருக்கின்றது. காரிதாஸ் குடும்பம் இந்தக்கையேட்டினை பலமொழிகளிலும் பெயர்த்து எழுதி அந்தந்த மொழியில் உள்ள பயிற்சியாளர்கள் குழுக்களில் பரந்த அளவில் பரவலாக்கம் செய்து இது பலனுள்ள வகையில் பயன்படுத்தப்படுவதை உறுதிசெய்ய அர்பணத்தோடு செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. இந்தக் கையேடு குழுமஅணிதிரட்டலை முனைப்போடு செயல்படுத்துவதற்கு பெருமளவு உதவியாக இருக்கும் என்று நான் எதிர்பார்க்கின்றேன். அத்தோடு இது குழுமங்களிடையே உறவுகளையும் தொடர்புகளையும் உருவாக்கிக்கொள்ளும் திறன்களை வளர்த்துஎடுக்கவும், குழுமங்களில் பெரும்பெரும் காரியங்களைச் சாதிக்கக்கூடிய ‘இது எங்கள் குழுமம்’, ‘அதன் வளர்ச்சிக்காக இது நாங்கள் நினைத்துப்பார்த்து, திட்டமிட்டு செயல்படுத்தும் எங்கள் செயல்கள்’ என்னும் பொருப்புணர்வினை உருவாக்கி, மாற்றத்திற்கான புதுப்பாதையைக் காட்டுகின்றது.

முனைவர். ஜோசப் சேவியர் அவர்களது வலுவான தலைமையில் மெய்வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது செயல்பட்ட ஆய்வுக் குழுத் தோழர்களைப் பாராட்ட விரும்புகின்றேன். அத்தோடு வளர்ச்சிப் பணிகளுக்காக மக்களை ஊக்குவிக்கப் பயன்படுத்தக்கூடிய ஆற்றல்மிக்க இந்தக் கையேட்டை வெளிக்கொண்டுவருவதற்காக இடைவிடாது தோள்கொடுத்து உதவிய கொல்கத்தா, உஜ்ஜெய்ன், அகமதாபாத், டெல்லி மற்றும் கோரக்பூர் ஆகிய மறைமாவட்டங்களுக்கு காரிதாஸ் இந்தியா சார்பாக எனது சிறப்பான நன்றிகளைச் சமர்ப்பித்துக்கொள்கின்றேன்.

அருள்தந்தை. பால் மூஞ்செல்லி,
செயல் இயக்குனர், காரிதாஸ் இந்தியா.

# வாழ்த்துச் செய்தி



குழும அணிதிரட்டல் பற்றிய இந்த ஆய்வினை மேற்கொண்டதற்காக நான் பெங்களூருவில் உள்ள இந்திய சமூக நிறுவனத்தையும், காரிதாஸ் இந்தியா அமைப்பையும் மனம் மகிழ்ந்து பாராட்டுகின்றேன். எண்ணற்ற வழிகளில் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள் ஒவ்வொன்றின் இதயமாக குழும அணிதிரட்டல் அமைகின்றது.

இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்ட விதமும் அதன் மூலம் நாம் கற்றுக் கொண்டவை அனைத்தும் அரசு மற்றும் அரசு சாராத, மக்களின் வளர்ச்சி சார்ந்த அமைப்புகளுக்கு, பேருதவியாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்தக் கையேட்டை வெளிக்கொண்டு வரும் முயற்சியில் தோள்கொடுத்து நிற்கும் காரிதாஸ் இந்தியா அமைப்பு, மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுத் துறையில் ஒரு பெரிய உதவியைச் செய்கின்றது. இந்தத் துறையில் இன்றைக்குச் செயல்பட்டுக்கொண்டு இருக்கும் ஒவ்வொருவரும் மற்றும் இனிவரும் நாட்களில் ஈடுபட இருக்கும் ஒவ்வொருவரும், எளிதாக இனிதாகச் செயல்பட சிறப்பான ஆய்வென்னும் கற்களைப் பதித்து அற்புதமான பாதை ஒன்றை அது அமைத்துத் தந்திருக்கின்றது. குழும அணிதிரட்டல் என்பது கரடுமுரடான காட்டிற்குள்ளே புதிய பாதை ஒன்றை போடுவதைப்போல இருக்கலாம். இந்தக் கையேடு அப்படிப்பட்ட பாதையை அமைக்கப் பாடுகட்டுக்கொண்டிருப்பவர்கள் மேற்கொள்ள வேண்டிய ஒவ்வொரு செய்முறையையும் செம்மையாக நேர்த்தியாக ஒழுங்குபடுத்திக் கொடுக்கின்றது.

மிகச் சிக்கலான பல்வேறுபட்ட பண்பாட்டுப் பின்புலங்களுக்கும் உணர்வுக் கொந்தளிப்புகளுக்கும் இடையிலிருந்து, இந்தக் கையேட்டின் ஆசிரியர்கள், வெற்றிகரமாக தகவல்களைக் கறந்து எடுத்து, ஒவ்வொரு சமூக மாற்ற பணியாளருக்கும் தங்கள் பணிகளை மேற்கொள்வதற்கு இன்றியமையாத ஒரு கருவியாக, இந்தக் கையேட்டை உருவாக்கிக் கொடுத்திருக்கின்றார்கள். இந்தக் கையேடு, இதன் ஆசிரியர்களின் மிகச் சிறப்பான ஆய்வு திறனுக்குச் சான்று பகர்ந்துகொண்டிருக்கின்றது.

ஊக்குனர்களின் செயல்பாடுகளுக்குத் தெளிவான ஒரு எல்லையை இவர்கள் வகுத்துக்கொடுத்திருக்கின்றார்கள். ஊக்குநர்களுக்கு எச்சரிக்கை கொடுக்கப்படுகிறது. குழும உறுப்பினர்கள் தாங்களாகவே முட்டி மோதி கற்றுத் தெளிந்து செய்ய வேண்டிய செயல்பாடுகளை **'**தள்ளிக் கொண்டுபோய் விட்டுவிடக் கூடாது**'** என்று ஊக்குனர்களுக்கு எச்சரிக்கை கொடுக்கப்படுகிறது. ஊக்குனர்களும் ஆதரவு அமைப்புகளும் செயல்படும் முறைகளுக்கு **'**ஏற்ற சூழலை உருவாக்கி தருவதோடு**'** நின்று கொள்ள வேண்டும் என்கின்றது இந்தக் கையேடு. குழுமத்தின் நிலைத்த தொடர்ந்த மாற்றத்தை உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும் என்றால், அதன் இயக்கத்தில், குழும உறுப்பினர்கள்தான் முன்நின்று நடத்திச் செல்ல வேண்டும் என்கினறது இந்தக் கையேடு.

குழும அணிதிரட்டலைப்பற்றி இந்தக் கையேடு வாசிக்கும் எல்லோருக்கும் புரியும் வண்ணம் தெள்ளந்தெளிவாக விளக்கிச் சொல்கிறது. **'**செயல்படவேண்டிய வழிமுறை**'**, **'**உங்கள் உதவிக்கு சிறு சிறு தகவல்கள்**'**, **'**எச்சரிக்கையாக இருக்க வேண்டியவைபற்றி சில தகவல்கள்**'**, **'**நமது செயல்பாட்டு முறை வேலைசெய்கின்றது என்பதற்கான அறிகுறிகள்**'**, **'**உங்களையே மதிப்பீடு செய்து கொள்ளுங்கள்**'**, **'**சிந்திப்பதற்கும் பகிர்ந்துகொள்வதற்கும் சில கேள்விகள்**'** என்ற எளிதான பகுதிகளை உள்ளடக்கியிருக்கின்றது.

குழும அணிதிரட்டலோடு இணையாக **'**ஊக்குவித்தல்**'** என்னும் கோட்பாடும் எடுத்துச்சொல்லப்படுகின்றது. ஊக்குவித்தல் என்பது, மக்களோடு, மக்களிடையே இருக்கும் பல குழுக்களோடு, நெருக்கமாக வேலை செய்ய வேண்டியதன் தேவையை உணர்த்துகின்றது. அப்படி நெருக்கமாக வேலை செய்வதால் மக்களின் பங்கேற்பை உறுதி செய்வது, அவர்களது குழுமங்களை அவர்களே மேலாண்மை செய்வது என்பதை உள்ளடக்கியுள்ளது. அத்தோடு மட்டும் அல்லாமல் செயல்பாடுகளுக்கு ஏற்ற சூழலை உருவாக்கித் தருவது, குழுமத்திற்குள் கலந்துரையாடல்களையும் செயல்பாடுகளையும் நெறிப்படுத்துவது, உற்சாகப்படுத்துவது, விரைந்து செயல்பட உடன் இருந்து ஆர்வமூட்டி வேலைகளை முடிக்கச்செய்வது ஆகிய அத்தனையும் ஊக்குவித்தல் இருக்கின்றது. குழுமத்தின் கூட்டு அறிவாற்றல் ஒவ்வொரு தனிநபரின் குடிமைத்தன்மையை செழுமைப்படுத்துகின்றது, குழும உணர்வினை உருவாகித் தருகின்றது, விளிம்பிற்குத் தள்ளப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்படுவதை உறுதி செய்கின்றது என்கின்ற செய்தி இந்தக் கையேட்டில் சொல்லப்படுகின்ற எல்லாவற்றிலும் இழையோடிக் கிடக்கின்றது.

குழும அணிதிரட்டலுக்கான இந்த கையேடு ஒரு சிறப்பான பயன்தரக்கூடிய கருவி என்பதில் சந்தேகமில்லை. கண்காணிப்பாளர்கள், பல்வேறு அமைப்புகளின் பணியாளர்கள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் (என்.ஜி.ஓ/**NGO**) மற்றும் குடிமைச் சமூக அமைப்புகள் (**CSO**) சார்ந்த தன்னார்வலர்கள், புதிதாக வெளிக்கிளம்பும் குழுமத் தலைவர்கள் மற்றும் வளர்ச்சித் துறையில் செயல்படும் பலருக்கும் இந்தக் கையேடு பயனுள்ள வகையில் பயன்படுத்தக்கூடிய ஒன்றாக அமையும்.

திருமிகு. ரோஸ் ஜோசப்,
நிர்வாகக் குழு உறுப்பினர், காரித்தாஸ் இந்தியா.

# வாழ்த்துச் செய்தி



"நாம் தனி ஆளாகக் கனவு காணும் போது அந்தக் கனவு கனவாகவே இருந்துவிடுகின்றது. அதே வேளையில் நம்மில் பலரும் அதே கனவினை ஒன்று சேர்ந்து காண்கின்றபோது அது மெல்ல மெல்ல ஒரு புதிய செயலாக நம் கண்களுக்கு முன்னே உருவாகத் தொடங்குகின்றது"

டாம் கெல்டர் காமரா,
பிரேசில் நாட்டின் ரெசீப் மறைமாவட்டப் பேராயர்,

மக்கள் சிந்திக்க, அலசி ஆராய்ந்து பார்க்க, கனவுகாண, இணைந்து செயல்பட ஊக்குவிப்பதும், அணிதிரட்டுவதும் சமூக மாற்றப்பணியின் அச்சாணியாக விளங்குகிறது. புதிய புதிய நபர்களுடன் தொடர்புகளையும் உறவுகளையும் உருவாக்கிக்கொள்வதும், புதிய புதிய வகைகளில் உருவாக்கப்படும் மக்கள் அமைப்புகளை ஆதரிப்பதும், பிணைப்புகளை ஏற்படுத்திக்கொண்டு ஒருவரை ஒருவர் நம்பி ஒத்துழைக்கும் ஒரு புதிய பண்பாட்டை வளர்ந்தெடுப்பதும் மிகப்பெரும் வளங்களைத் திரட்டிச் சேகரித்துக்கொள்ள வழிவகுக்கின்றது. தோழமையை உருவாக்குவதுதான் காரிதாஸ் போன்ற சமூக அமைப்புகளின் இன்றியமையாத பணி.

அழுத்தமான அனுபவங்களை அடித்தளமாகக்கொண்டது இந்த வெளியீடு. மக்கள் பெருமளவு பிளவுபட்டுக் கிடக்கின்ற சூழ்நிலைகளில் அவர்களிடையே ஒத்துழைப்பை வளர்த்தெடுப்பதற்கு எதை எதை வைத்து எப்படி எப்படி செயல்படலாம் என்று களப்பணியாளர்களும், சமூக செயல்பாட்டு மேலாளர்களும் தாங்கள் கற்றுக்கொண்டவற்றை கூரைமீதேறி முழங்குவதற்கு இது உதவியாக அமையும். பல வகைகளில் வேறுபட்ட மக்களை, குடிமக்கள் என்ற அடிப்படையில் குழுக்களாக்கி, அவர்களோடு தோள்கொடுத்துத் துணைநின்று மாற்றத்தை நோக்கிய கூட்டு நடவடிக்கைகளை வெற்றிகரமாக நடத்துவதற்குத் தயாரிப்பது எப்படி? 'பகிர்ந்து வாழும் குழுமங்களை' வளர்த்தெடுப்பதும் பயன்தரும்வகையில் ஒத்துழைக்கும் பண்பாட்டை உருவாக்குவதும் எப்படி? கருத்தியல்பற்றி கலந்துரையாடி பரப்புரை செய்வதோடு நில்லாமல் அமைப்பு அளவிலான செயல்முறைகளையும் பிணைப்புகளையும் கண்கூடாய்க் காணும்வகையில் உருவாக்கிச் செயல்படுத்திடச் செய்வது எப்படி? 'உடல் உழைப்பைக் கொடுப்பது' என்பது வழிவழியாக இந்திய நிலப்பரப்பில் கூட்டுச்செயல்பாடுகளுக்கான ஒரு பண்பாட்டு உத்தியாக இருந்துவருகின்றது. இதன் வழியாக பலவேறுபட்ட மக்கள் ஒன்றுகூட்டப்படுகின்றார்கள். இவர்கள் தங்களுக்குப் பொதுவான இலக்குகளை அடையாளம் காண்கின்றார்கள். தங்கள் உழைப்பைப் பலன்எதிர்பாராது கொடுத்து தங்களது பொது இலக்கை அடைகின்றார்கள்.

கோவிட்-19 பெருந்தொற்றுச் சவாலைச் சந்திப்பதற்காக, நோய் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக அனைவரும் இணைந்தே செயல்பட்டாகவேண்டும் என்னும் சூழல் ஏற்பட்டுள்ள இன்றைய காலக்கட்டத்தில், இந்த கையேட்டில் எடுத்துவைக்கப்படும் 'வலுவூட்டும் ஊக்குவிப்பு மற்றும் குழும அணிதிரட்டல்' முறைகள் ஒட்டுமொத்த உலக மானுட குழுமத்திற்கே முக்கியமானவையாக மாறிவிட்டன.

காரிதாஸ் இந்தியாவையும், பெங்களூருவில் உள்ள இந்திய சமூக நிறுவனத்தையும், இந்த வெளியீட்டைக் கொண்டுவருவதற்காக, இந்த வெளியீடு தெற்கு ஆசியா முழுவதும் உள்ள பலவேறுபட்ட மக்களுக்கும் பயனுள்ளதாக அமையும் என்கின்ற நம்பிக்கையோடு, நாங்கள் பாராட்டுகின்றோம்!

பலவேறு செயல்பாடுகளுக்கும், அந்தச் செயல்பாட்டின் பலன்களைச் சீர்தூக்கிப்பார்க்கும் ஆய்விற்கும் அந்த ஆய்வினை நூலாக வெளியடுவதற்கும் நிதிஉதவி அளித்த ஜெர்மன் நாட்டின் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சி அமைச்சகத்திற்கும் எங்கள் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பீட்டர் செய்டல்,
ஆசிய பிரிவு அதிகாரி, ஜெர்மன் நாட்டு காரிதாஸ்.

# Abbreviations

| | |
|---|---|
| ARLP | Action, Reflection, Learning and Planning |
| B.Ed | Bachelor of Education |
| BPL | Below Poverty Line |
| CBO | Community-based Organisation |
| CBR | Community-based Rehabilitation |
| CD | Community Development |
| CM | Community Mobilisation |
| CO | Community Organisation |
| CSR | Corporate Social Responsibility |
| DPO | Disability People's Organisation |
| HR | Human Resource |
| IEC | Information, Education and Communication |
| KSWS | Kripa Social Welfare Society (Kripa) |
| NGO | Non-Government Organisation |
| PANEL | Participation, Accountability, Non-discrimination and Equality, Empowerment and Legality |
| PGSS | Purvanchal Gramin Seva Samiti |
| PLA | Participatory Learning and Action |
| PRA | Participatory Rural Appraisal |
| PWD | People with Disability |
| RTI | Right to Information |
| SHG | Self-help Group |
| SKC | Seva Kendra Calcutta |
| SMART | Specific, Measurable, Achievable, Realistic and Time-bound |
| SXSSS | St. Xavier's Social Service Society |
| UNTERM | United Nations Terminology Database |

1

# குழுமங்களின் தலைமையில் வளர்ச்சிக்கான வழிமுறைகள்



# அறிமுகம்:

# குழுமங்களின் தலைமையில் வளர்ச்சிக்கான வழிமுறைகள்

## குழுமமும் குழும வளர்ச்சியும்

குழுமம் என்பது ஒரு குறிப்பிட்ட நிலப் பகுதியில் வாழும் மக்கள், தங்களை ஒரு அலகாகக் கருதிக்கொள்பவர்கள், பொதுவான எதிர்பார்ப்புகளையும் அக்கறைகளையும் கொண்டவர்கள், அவர்களைப்பற்றி மாற்றிக்கொள்ள இயலாததாகவோ முடிந்த முடிவாகவோ எதையும் கருதாமல் செயலூக்கம் கொண்டவர்களாகவும் தங்களைப்பற்றிய கருத்தும் தாங்கள் வாழும் முறையும் என்றும் பரிணாம வளர்ச்சிபெற்றுவருவதை ஏற்றுக்கொண்டவர்கள் என்று உறுதிப்படுத்தப்பட்ட வரையறை இருக்கின்றது. குழுமம் என்பதை ஒருவர் ஒருவரைப் பராமரித்துக்கொள்ளும் ஒரு மக்கள் குழு, தாங்கள் ஒன்றாக இருப்பதாக உணர்ந்துகொண்டவர்கள் அல்லது பொதுவான செயல்பாடுகளில் ஈடுபாடு கொண்டு இணைந்து எதையாவது சாதிக்க வேண்டும் என்ற ஆர்வம் கொண்டவர்கள் என்றும் ஒரு வரையறை இருக்கின்றது.

எது எப்படி இருந்தபோதிலும், இந்திய சமுதாயத்தில் வழிவழியாக குழுமம் என்பதை சாதிவாரியாக (பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் மற்றும் தலித்) என்றோ, அல்லது இனக்குழு வாரியாக (சந்தாலர்கள், ஒரான்கள், முண்டாக்கள் அல்லது பில்கள் போன்ற ஆதிவாசிகளாகவோ) அல்லது மத வாரியாக (இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறித்தவர்கள் அல்லது பௌத்தர்கள் என்றோ) அல்லது மொழிவாரியாக (பெங்கால்காரர்கள், தமிழ்க்காரர்கள், மலையாளத்தவர்கள் அல்லது மராத்திக்காரர்கள் என்றோ)அல்லது வாழிடம் வாரியாக (சேரிக்காரர்கள், ஊர்க்காரர்கள் அதாவது ஒவ்வொரு சாதிக்கும் அதற்கென்றே ஒதுக்கப்பட்ட ஒரு குடியிருப்புப் பகுதி என்று பிரிக்கப்பட்ட ஊர்கள், குறிப்பாக தாழ்த்தப்பட்ட சாதியினர் இந்த வரையறுக்கப்பட்ட இடத்திற்குள்தான் வாழ வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்பட்ட பகுதிக்காரர்களாகவோ) அல்லது தேசத்தவர்களாக (இலங்கைக்காரர்கள், வங்காளதேசத்தவர்கள் போன்றோ) வரையறுத்து வைத்துக்கொள்கின்றார்கள். இவர்கள் சேர்ந்துவருவது என்பது தடுக்கப்படுகின்றது. பொதுக்காரியங்களுக்காக இவர்கள் இணைவதும் தடுக்கப்பட்டதாகவே இருந்துவருகின்றது. குழுமம் என்பதை இப்படிப் புரிந்துகொள்ளும்போது, நலமற்ற, உயர்வுதாழ்வு கற்பிக்கின்ற, ஒதுக்கிவைக்கின்ற, பாகுபடுத்தப்படுகின்ற அடையாளங்களே உருவாக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்படுகின்றன. குழும வளர்ச்சி

அல்லது குழும அணிதிரட்டல் பற்றிப் பேசும்போது நாம் முதலில் செய்ய வேண்டியது இதுபோன்ற குறுகிய வரையறைகளுக்குள் சிக்கிக்கொள்ளாமல் இருப்பதுதான். குழுமம் என்பது ஒன்றாக இணைந்துநிற்கும் மக்கள் குழு, அல்லது ஒன்றாக இணைந்து நிற்பதற்குத் தயாராக இருக்கும் மக்கள் குழு, பொதுவான அக்கறைகளின் அடிப்படையில், மதிப்பீடுகளின் அடிப்படையில், நிலைநாட்டப்பட்ட மனித உரிமைக்கோட்பாடுகள் மற்றும் சட்டதிட்டங்களின் அடிப்படையில் இணைந்து செயல்படத் தயாராக இருக்கும் மக்கள் குழு. ஒவ்வொருவருடையவும், எல்லோருடையவும் ஒருங்கிணைந்த மாண்புமிக்க வளர்ச்சியை நோக்கி கூட்டுசெயல்பாடுகளை முன்னெடுக்க திறந்த மனம்கொண்ட ஒரு மக்கள் குழுவாக இருந்தாக வேண்டும்.

ஒட்டுமொத்தமாகச் சுருக்கிச் சொல்வதாக இருந்தால், குழுமம் என்பதை நாம் இப்படிப் புரிந்துகொள்ளலாம்: குழுமம் என்பது சமூக அமைப்பு வகைகளான ஏழை, பணக்காரன், இந்த சாதிக்காரன் அந்த சாதிக்காரன், இந்த மதத்துக்காரன் அந்த மதத்துக்காரன் என்ற அடிப்படையில் கட்டப்பட்டதல்ல என்று புரிந்துகொள்ள வேண்டும். பாலினம் மற்றும் இனக்குழு போன்ற அடிப்படையாகத் தேவைப்படுகின்ற பண்பாட்டு அடையாளங்கள் சார்ந்ததாகவும் இருக்கக்கூடாது. மாறாக, ‘குழுமம் என்பது குறைந்தது ஒரு பொது சமூக செயல்பாட்டுக்காகக் கூடிவந்து, குறைந்தது ஒரு பொது நோக்கத்தை வைத்து தங்களது செயல்பாடுகளை முன்னெடுக்கின்ற ஆட்களிடையே உருவாகின்ற உறவுப் பின்னல்களால் ஆனது’ (Strauss, 1978) குழுமம் என்பது உறவுகளால்தான் உருவாகின்றது. குழும அமைப்பு அல்லது குழும அணிதிரட்டல் என்பது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பொதுவான காரியங்களை வைத்துக்கொண்டு இப்படிப்பட்ட உறவுகளை ஊக்குவித்து வளர்த்தெடுத்து செயல்படுவதைக் குறிக்கின்றது. செயல்முறை என்று நாம் குறிப்பிடுவது இப்படிப்பட்ட செயல்பாடுகளைத்தான். குழுமங்களைக் கட்டியெழுப்புவது என்பது ஒரு மக்கள் குழு தங்களுக்குள் பொதுவான இலக்குகளை அடைவதற்கான பொதுவான புரிதல்கள் உண்டு என்பதை தொடர்ந்து வெளிப்படுத்திக்கொள்வதற்கான வாய்ப்பு வசதிகளை முறைகளை உருவாக்கித்தருவது. அப்படிப்பட்ட செயல்பாடுகளுக்கான விதிமுறைகளையும் சட்டதிட்டங்களையும் உருவாக்கிக்கொள்வது. அதற்காக பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான சூழலை உருவாக்கித்தருவது என்று ஆகின்றது.

குழும வளர்ச்சி (CD) , குழும அணிதிரட்டல (CM), அல்லது குழும அமைப்பு (CO), என்பது முதன்மையாக எல்லோருக்கான ஒரு தேவைக்காக, எல்லோரும் ஆர்வமுடன் வந்து, சமூக உறுப்பினர்கள் ஒவ்வொருவடைய வாழ்க்கைத்தரத்தையும் மேம்படுத்திக்கொள்வதற்காக எடுத்துச்செய்யும் ஒரு தொடர் செயல்முறையாகும். சமூக வளர்ச்சி என்பது வலுப்படுத்துதல், மனித உரிமைகள், அரவணைத்துக்கொள்தல், சமூக நீதி, சுய-முடிவெடுத்தல் மற்றும் கூட்டுச்செயல்பாடு ஆகிய கோட்பாடுகளை அடித்தளமாகக் கொண்ட ஒரு ஒருங்கிணைந்த பார்வை ஆகும். (Kenny, 2007) சமூக வளர்ச்சி சமூக உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் தங்களது மற்றும் தாங்கள் வாழும் சமூகத்தின் வாழ்க்கைபற்றிய நிபுணத்துவம் பெற்றவர்களாகக் கருதுகின்றது. அது தொடர்பான அந்தக் குழுமத்தின் அறிவையும் ஞானத்தையும் மதிக்கின்றது. சமூக வளர்ச்சி செயல்பாடுகள் - குறிப்பிட்ட சிக்கல்களைப் பற்றி முடிவெடுப்பது, எந்தச் செயல்பாடுகளை முன்னெடுப்பது என்று தேர்வுசெய்வது மற்றும் செயல்பாடு நிறைவுபெற்றபின்பு ஆய்வுசெய்வது – என்று ஒவ்வொரு படிநிலையிலும் சமூக உறுப்பினர்களாலேயே நடத்தப்படுகின்றது. சமூக வளர்ச்சி, சமத்துவமின்மை மற்றும் வாய்ப்புமறுக்கப்பட்ட நிலைகளின் அடிமுடி கண்டறிந்து செயல்படுவதற்காக அவர்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பது என்பதை தெளிவான நோக்கமாகவே கொண்டுள்ளது. (https://aifs.gov.au/cfca/publications/ what-community-development).

இந்த செயல்பாட்டு முறையை குழும உறுப்பினர்கள் தங்களுடையது என்று சொந்தம் கொண்டாடி ஏற்றுக்கொண்டு, அதனை வரையறுத்துக்கொண்டு, அதில் அனைவரையும் நடத்திச்செல்ல வேண்டும். அத்தோடு தங்களுடைய மற்றும் வெளியிலிருந்து தேவையான வளங்களைத் திரட்டும் செயலிலும் ஈடுபடவேண்டும். இந்த வகையில் ஒட்டுமொத்தமான இந்த செயல்முறையே குழுமங்களின் தலைமையிலான அல்லது மக்களின் தலைமையிலான வளர்ச்சிமுறை என்று அடையாளம் காணப்படுகின்றது. அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் பிற வெளி அமைப்புகள் எல்லாமே ‘தளம் அமைத்துத் தரும் அமைப்புகளாகவும்’ அந்த அமைப்புகளின் பணியாளர்கள் அனைவருமே ‘குழும அணிதிரட்டல் செயல்பாட்டாளர்களாகவும்’ அடையாளப்படுத்தப்பட்டு அழைக்கப்படுகின்றார்கள். இந்த அமைப்புகளோ அல்லது அதன் பணியாளர்களோ குழும அணிதிரட்டல் முறையின் சொந்தக்காரர்கள் இல்லை. இவர்கள் குழுமத்திற்காக எந்த முடிவுகளையும் எடுப்பதில்லை.

குழும அணிதிரட்டல் என்பது வளர்ச்சித் துறையில் பரவலாகப் பயன்படுத்தப்படும் ஒரு வார்த்தை. ‘ஒரு குழுமத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் வந்து சேராவிட்டாலும் பெரும்பான்மையான உறுப்பினர்கள் தங்களுக்கிடையே உள்ள வேறுபாடுகளைக் கடந்து சமத்துவ உணர்வோடு சந்தித்து தங்களது குழுமத்தில்

உள்ள அனைத்து உறுப்பினர்களது வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்காக, எல்லோருடைய பங்கேற்பையும் உறுதிப்படுப்படுத்துகின்ற வகையில் முடிவுகளை எடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் முறை' என்று குழும அணிதிரட்டலை சில அமைப்புகள் வரையறுத்துக்கொண்டுள்ளன.

இந்தியச் சூழலில் குழுமங்கள் சாதிகளாகவும், சமயங்களாகவும் அல்லது இனக்குழுக்களாகவும் பிரிந்து தனித்தனியாக வேறுவேறு பகுதிகளில் வாழ்வது என்பது எழுதப்படாத சட்டமாக ஒரு ஏற்றத்தாழ்வுமிக்க பாகுபாடுமிக்க செயல்பாடாக இருக்கின்றது. எனவே இத்தனைக்கும் இடையில் உறவுகளின் அடிப்படையிலான அமைப்பு ஒன்றைக் கட்டியெழுப்புவது என்பதே முதலாவதாக மிகப்பெரிய சவாலாக இருக்கும். இந்த நிலைமையை நாம் நகர்ப்புறச் சேரிகளிலும் கிராமங்களிலும் கண்கூடாகக் காண்கின்றோம். எடுத்துக்காட்டாக கொல்கத்தா நகரில் உள்ள டாங்ரா என்ற சேரிப்பகுதியில் வாழ்பவர்கள் பீகார்க்காரர்கள், பெங்கால்காரர்கள் மற்றும் இஸ்லாமியர்கள் என்று பிரிந்துகிடக்கின்றார்கள். இந்த இன மற்றும் சமயக் குழுக்களுக்கிடையே மிகவும் குறைந்த அளவே தொடர்பும் உறவும் இருக்கின்றது. ஒவ்வொரு குழுவும் மற்ற குழுவினைத் தங்களை விடத் தாழ்ந்தவர்களாகவும் அசுத்தமானவர்களாகவும் கருதுகின்றது. கிராமங்களிலே ஒவ்வொரு சாதிக்காரரும் தனிப்பட்ட ஒரு பகுதியில் பிரிந்து தனித்தனிக் கூட்டங்களாக வாழ்வது என்பது ஏற்றுகொள்ளப்பட்ட ஒரு விதியாக இருக்கின்றது. எனவே குழும அணிதிரட்டல் என்பது எல்லோரையும் உள்ளடக்கிய உறவுகளால் பின்னப்பட்ட, சாதி, மத, இன சார்புகளைக் கடந்த எல்லோரும் ஏற்றுக்கொள்ளும், பகிர்ந்துகொள்ளும் ஒரு பொதுக்காரியத்தைப் பற்றியும், பொது மதிப்பீடுபற்றியும் அக்கரை கொண்ட ஒரு அமைப்பு என்ற சரியான புரிதலும் அணுகுமுறையும் கொண்டதாக இருந்தே ஆகவேண்டும், என்று இந்த நூலின் ஆசிரியர்கள் கருதுகின்றார்கள். வேறு வகையாகச் சொல்வதானால், இந்த குழும அணிதிரட்டலில், குழும உறுப்பினர்கள்தான் வளர்ச்சிக்கான முறைகளிலும், வலுப்படுத்துதலிலும் விளைவுகளை உருவாக்குவதிலும் முன்நின்று நடத்தும் குடிமக்களாக இருக்கின்றார்கள். குழும உறுப்பினர்கள் தங்களுக்குள்ளேயும் மற்றும் தங்களைத்தாண்டி வெளியில் இருந்தும் செயல்படுபவர்களின் ஆதரவோடு தங்களையே வலுப்படுத்திக்கொள்வதற்கான முயற்சிகளில் முனைந்து இறங்குகின்றார்கள். குழும அணிதிரட்டல் என்பது குழுமத்தின் தலைமையில் அல்லது மக்களின் தலைமையில் நடக்கின்ற ஒரு செயலாக இருந்தாக வேண்டும்.

## ஊக்குவித்தல்

குழும அணிதிரட்டல் என்பதோடு உடன்வரும் இன்னொரு கருத்து 'ஊக்குவித்தல்'. ஊக்குவித்தல் என்பது பல மக்கள் குழுக்களோடு நெருக்கமாக வேலைசெய்வதையும், அவர்கள் தங்களது குழும செயல்பாடுகளில் பங்கெடுக்கவும், நிர்வகிக்கவும் உதவுவதையும், குழுமங்களில் ஈடுபட்டு செயல்பட ஆதரவுச் சூழலை உருவாக்குவது, நெறிப்படுத்துவது மற்றும் முனைப்பை ஏற்படுத்துவதையும், விரைவாகச் செயல்படச்செய்து பலன்களைப் பார்க்கும் ஆர்வத்தை உண்டாக்குவது என்பதையும் குறித்து நிற்கின்றது. எது எப்படி இருந்தபோதிலும் ஊக்குனர்கள் என்ன செய்யலாம் என்பதற்கு ஒரு தெளிவான எல்லை குறிக்கப்பட்டிருக்கின்றது. குறிப்பாக ஊக்குனர்கள் அந்த குழுமத்திற்கு வெளியே உள்ளவர்களாக இருக்கும்போது இந்த எல்லையை மீறவே கூடாது. ஊக்குனர்கள் தாங்களே செயல்பாடுகளை முன்னெடுத்துச்செல்லக் கூடாது. செயல்பாடுகளை முன்னெடுத்துச்செல்வது என்பது குழும உறுப்பினர்களுக்கே உரிமையான ஒரு செயல் ஆகும். குழும அணிதிரட்டல் முறையில் ஈடுபட்டிருக்கின்ற அமைப்பு என்பது குழமச் செயல்பாடுகளுக்கு ஆதரவளிக்கின்ற அமைப்பாக மட்டுமே இருக்க வேண்டுமே ஒழிய குழுமச் செயல்பாடுகளை நேரடியாக எடுத்துச்செய்கின்ற அமைப்பாக இருக்கக் கூடாது, குழும அணிதிரட்டல் முறைகளின் பெரும் பலனாக நாம் எதிர்பார்க்கும் ஒன்று வலுவான, நிலைத்துநின்று செயல்படக்கூடிய, ஈடுபாடுகொண்ட ஒரு குழும அடிப்படையிலான அமைப்பை (CBO) உருவாக்குவது ஆகும். இந்தக் குழும அடிப்படையிலான அமைப்பில் அதன் உறுப்பினர்கள் அறிவைத் திரட்டிக்கொள்வதிலும், ஆய்வு மேற்கொள்ளும் ஆற்றலிலும், ஆளுமையிலும், தலைமைத் திறன்களிலும், நிர்வாகத் தகுதியிலும் தொடர்ந்து வளர்ச்சி பெற்று வருவார்கள். முறைப்படி பார்த்தால் குழும உறுப்பினர்கள் அனைவரும் முடிவுகளை எடுப்பதில் சமத்துவமான பங்களிப்பைச் செய்கின்றார்கள், சமூக சேவைகளில் தொடர்புகளையும், ஒருங்கிணைப்பையும் அதிகரித்துக்கொள்கின்றார்கள், தங்களுக்கிடையே மற்றும் வெளியிலிருந்து வரும் வளங்களை நிர்வகிப்பதிலும், சரியாகப் பயன்படுத்திக்கொள்வதிலும் மேம்பட்ட திறன் அடைகின்றார்கள், குறிப்பிட்ட சிக்கல்களைத் தீர்க்கவும், கொள்கை அளவிலான முடிவுகளில் தாக்கங்களை ஏற்படுத்தவும், வளங்களைப் பகிர்ந்துகொள்வது தொடர்பான செயல்பாடுகளுக்காகவும் உருவாக்கப்படும் கூட்டமைப்புகளிலும் கூட்டணிகளிலும் பங்களிப்புகளை அதிகப்படுத்திக் கொள்கின்றார்கள்.


Q/0106/027
DOON

# ஏழ்மையை ஒழிப்பதில் இருந்து குழுமத்தை அணிதிரட்டுதல் நோக்கி

ஏழ்மையை ஒழிக்கும் செயல்பாடு போதுமான அளவு பலன் தருவதாக இருந்தது. குழுமத்தின் வளர்ச்சியைக் கண்கூடாகப் பார்க்கும் அளவிற்கு ஒருசில வளர்ச்சிக் கூறுகள் தென்பட்டன. ‘வெளி ஆட்களின் ஆதரவு’ ஏழைகளின் வளர்ச்சிக்காக இருந்ததோடு, சில சமயங்களில் ஆதரவுக் கரம் நீட்டும் வெளி ஆட்களே ஏழைகள் சார்பாக செயல்பட்டனர், அவர்களுக்காகக் குரல்கொடுத்தனர். “அடித்தட்டு மக்களால் குரல் எழுப்ப முடியுமா?” (Spivak, 1988) என்னும் பார்வையை நாம் கண்டுகொள்வது முக்கியம். யாரைப்பற்றி நாம் ஆய்வுசெய்கின்றோமோ அவர்களைப் பற்றிய தனிப்பட்ட காரியங்களையெல்லாம் கவனத்தில் கொள்வதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். குழுமங்களின் உறுப்பினர்கள் தனித்தனியாகச் செயல்படக்கூடியவர்களாக இருப்பார்கள். இப்படிச் செயல்படுவதற்கு குழுமங்களைக் கட்டிஎழுப்பும் முறை ஆதரவாக இருக்க வேண்டும்.

‘குழும உறுப்பினர்களால் மாற்றத்தைக் கொண்டுவர இயலாது. அதே வேளையில் வெளியில் இருந்து ஆதரவுக்கரம் நீட்டும் கற்றறிந்தவர்கள் இந்தக் குழுமத்திற்கு எது நல்லது என்று தெரிந்து செய்வார்கள்’ என்னும் ஒரு யூகம் அடி ஊற்றுப் போலப் பொங்கிக்கொண்டே இருந்தது. இன்னமாதிரியான விளைவுகள் காணப்படவேண்டும் என்ற அடிப்படையிலான நிர்வாகத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி காரண காரியச் சட்டகம், திட்ட நடைமுறை வியூகம் மற்றும் செயல்பாடுகள் எல்லாம் முன்கூட்டியே அடிப்படைத் தரவுகள் தேடும் ஆய்வுகள் வழியாக தயாரிக்கப்பட்டன. என்ன மாதிரியான விளைவுகள் ஏற்பட்டாக வேண்டும் அது என்றைக்குள் நடந்தாக வேண்டும் என்பதெல்லாம் கூட தீர்மானிக்கப்பட்டிருந்தன. இந்த முறையானது எவ்வளவு பணம் செலவழிக்கின்றோம் அதற்கு என்னென்ன பலன் நமக்குக் கிடைக்கவேண்டும் என்ற கணக்கின் அடிப்படையில் நடத்தப்பட்டிருக்கின்றது. இதற்கிடையில் இவைதான் நாம் அடைந்த பலன்கள் என்று காட்டியாகவேண்டும் என்கின்ற வேகம், தனிநபர்களும், குழுமங்களும் எப்படிப் பலன் அடைந்தார்கள் என்று எடுத்துச்சொல்லியாக வேண்டிய தேவை என்பவை வெளியில் இருந்து மிகவும் அழுத்தத்தோடு செயல்படுபவர்களின் கைகளில் இந்த வேலையைக் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுகின்றது. என்ன செய்வது? எப்படிச் செய்வது? என்பது வெளியில் இருந்து ஆதரவுகொடுப்பவர்களுக்குத்தான் தெரியும் என்னும் நிலையில், குழும உறுப்பினர்கள் அவர்களைச் சார்ந்து செயல்படும் பண்பாட்டை உருவாக்கிக்கொள்கின்றார்கள். வெளியில் இருந்து வந்தவர்களை இந்தக் குழுமங்கள் வெறுமனே நிதி உதவி செய்பவர்களாக மட்டும் பார்க்காமல், பெருமளவிற்கு அறிவு புகட்டுபவர்களாக, ஆய்வுசெய்து சொல்பவர்களாக, திறன்களையும் வியூகங்களையும் அமைத்துக்கொடுப்பவர்களாகப் பார்க்கத் தொடங்கிவிட்டனர். இப்படிப்பட்ட வளர்ச்சி முறை விரைவாக நாம் விரும்பும் சில பலன்களைக் கண்முன் காட்டுகின்றது. ஆனால், குழும உறுப்பினர்கள் பலன்களைப் பெற்றுக்கொள்வதற்குத்தான் ஆசைப்பட்டார்களே ஒழிய, அவர்கள் விரும்பிய விளைவுகள் எந்த முறைகளை எப்படிப் பயன்படுத்தியதால் விளைந்தன என்று அறிந்துகொள்ளவும் ஆசைப்படவில்லை, அந்த முறைகளைப் பங்கேற்றுச் செய்துபார்க்கவும் ஆசைப்படவில்லை. எனவே அவர்கள் பெற்ற பலன்களை அவர்களால் நீண்டகாலத்திற்கு தக்கவைத்துக்கொள்ள இயலவில்லை. அப்படித் தக்க வைத்துக்கொள்ளும் ஆற்றலை அவர்கள் வளர்த்துக்கொள்ளவில்லை.

# வளர்ச்சி பற்றிய கோட்பாடு

வளர்ச்சி என்கின்ற கோட்பாடு பலவேறுபட்ட பொருள்களில் பயன்படுத்தப்படுகின்றது. பலவிதமாகப் பொருள் கொள்ளப்படுகின்றது. பலவேறு அறிஞர்களாலும் பலவேறுபட்ட கோட்பாடுகளாகக் காட்டப்படுகின்றது. வளர்ச்சி என்பது ஒரு ‘பரிணாம முறையாக’ வரையறுக்கப்படுகின்றது. இந்த முறையிலே மனிதரின் செயலாற்றல் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. மனிதர்கள் புதிய அமைப்புகளை உருவாக்கிக் கொள்கின்றார்கள். அவர்கள் சிக்கல்களை எதிர்கொள்ளப் பழகிக்கொள்கின்றார்கள். தொடர்ந்து வரும் மாற்றங்களுக்கேற்ப நெளிவுசுழிவுகளோடு வாழப் பழகிக்கொள்கின்றார்கள். படைப்பாற்றலோடு பொறுப்போடு புதிய இலக்குகளை அடையப் புறப்பட்டுவிடுகின்றார்கள். பலவேறு கோட்பாடுகளைப் பற்றி சிறு சிறு குறிப்புகளை இங்கே கொடுக்கின்றோம். மக்களின் தலைமையில் அல்லது குழுமத்தின் தலைமையில் வளர்ச்சி நடைபெறவேண்டியதன் முக்கியத்தை நாம் புரிந்துகொள்ளவும், மதிக்கவும் வேண்டும் என்பதற்காக இவை இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

## a) சார்புக் கோட்பாடு

சார்புக்கோட்பாட்டின்படி போதுமான வளர்ச்சி இல்லாத நிலை என்பது, குறிப்பிட்ட நாடுகள் உலக பொருளாதாரத்தில் ஏதோ ஒரு ஓரமாக ஒட்டிக்கெண்டிருக்கும் நிலையால் உருவாக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றது. உலகப் பொருளாதாரத்தில் வளர்ச்சி பெறாத நாடுகள் உலகச் சந்தைக்கு மலிந்த கூலித்தொழிலாளர்களையும், மூலப் பொருட்களையம் கொண்டுவந்து சேர்க்கின்றன. இந்த வளங்கள் வளர்ச்சி பெற்ற பொருளாதாரம் உள்ள நாடுகளுக்கு விற்கப்படுகின்றன. இவற்றை வாங்கிய வளர்ச்சிபெற்ற பொருளாதாரத்தை உடைய நாடுகள் இவற்றை சந்தைக்குக் கொண்டுசெல்லக்கூடிய இறுதி வடிவம் அடைந்த பொருட்களாக தங்களுடைய சக்தியால் மாற்றிக்கொள்கின்றன. வளர்ச்சியடையாத நாடுகள் வளர்ச்சியடைந்த நாடுகள் தயாரித்த இறுதிவடிவம் பெற்ற பொருட்களை தங்களுடைய முதலைப்போட்டு ஏராளமான விலைகொடுத்து வாங்கிக்கொள்ளவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றன. அவர்களுடைய உற்பத்தித் திறனைப் பெருக்கிக்கொள்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய, முதலீடுசெய்யக்கூடிய வளங்கள் எல்லாம் இறுதிவடிவம் பெற்ற பொருட்களை வாங்கிக்கொள்வதிலேயே கரைந்துபோகின்றன. இதன் விளைவாக உலகமென்னும் ஒரு வட்டத்திலே மையமாக உட்கார்ந்துகொண்ட வளர்ச்சிபெற்ற நாடுகளின் விளிம்புகளிலேயே ஓடித்திரிந்து தங்களது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள வேண்டிய நிலைமைக்கு வளர்ச்சி அடையாத நாடுகள் தப்பித்துக்கொள்ளும் வழியே இல்லாமல் தள்ளப்பட்டு விடுகின்றன.

## b) நவீனப்படுத்துதல் கோட்பாடு

நவீனப்படுத்துதல் கோட்பாட்டின்படி ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த நாடுகளின் வளர்ச்சி குறைந்த நிலைக்கு அவர்களின் வளர்ச்சிக்கு எதிரான 'பண்பாட்டுத் தடைகள்' காரணங்களாகக் காட்டப்படுகின்றன. அவர்களது பாரம்பர்ய மதிப்பீடுகள்தான் அவர்கள் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருப்பதாக இவர்கள் வாதிடுகின்றார்கள். இவர்கள் முதலாளித்துவ தொழில்மயமாக்கல் முறையை வளர்ச்சிக்கான முறையாகப் பரிந்துரைக்கின்றார்கள். முதலாளித்துவமும் வரம்பில்லாத சந்தையும் சிறப்பான உற்பத்தியை ஊக்குவிக்கும் என்று நம்புகின்றார்கள். எத்திரமயமாக்குவதன் வழியாக, தொழிற்சாலைகள் சார்ந்த உற்பத்தி முறையை ஏற்றுக்கொள்வதன் வழியாக இதை சாதிக்கலாம் என்று அதனை நோக்கி வளர்ச்சி அடையாத நாடுகளைத் தள்ளுகின்றார்கள். மேற்கத்திய நாடுகளில் இருந்தும், மேற்கத்திய நாட்டு தொழிற்சாலைகளில் இருந்தும் கடனுதவி பெற்று முதலீடுசெய்து இதை சாதித்துக்கொள்ளலாம் என்று வழிகாட்டுகின்றார்கள்.

## c) வளர்ச்சியை எட்டிப் பிடித்துக் கொள்ளும் கோட்பாடு

'வளர்ச்சியடையாத நாடுகள் வளர்ச்சிபெறச்செய்யவேண்டும்' என்கின்ற எண்ணத்தோடு 1949 வது ஆண்டில் ஹேரி எஸ். ட்ரூமென் என்னும் அமெரிக்க அதிபர் ஒரு மாபெரும் புதிய திட்டத்தை முன்வைத்தார். வளரும் நாடுகளில் முதலீடு செய்வதன் வழியாக, அந்த நாடுகளுக்கு பொருளாதார மற்றும் தொழில்நுட்ப உதவிகளைச் செய்வதன் வழியாக அந்த நாடுகளை 'செல்வச் செழிப்பை' நோக்கி விரைந்தோடிவரச் செய்ய முடியும் என்று பரிந்துரைத்தார்.

## d) சமூக வளர்ச்சிக் கோட்பாடு

சமுதாயத்தின் ஒவ்வொரு தனிநபரும் அவரது முழு பலத்தையும் அடைவதற்காக அவரது நலனை மேம்படுத்துவதற்கான செயல்பாடுகளை மேற்கொள்ளவேண்டும் என்பதுதான் சமூக வளர்ச்சிக் கோட்பாடு. சமூகத்தின் வெற்றி என்பது குடிமக்கள் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட நலனோடு பொருத்திப்பார்க்கப்பட்டது. சமூக வளர்ச்சி என்பது எல்லா பரிமாணங்களையும் வளைத்துப் பிடித்துக் கொண்டுவரும் மிகப்பெரிய ஒரு கோட்பாடாக இருக்கின்றது. இதனை நடைமுறைப்படுத்தவேண்டும் என்றால் மிகப்பெரிய அடிப்படை அமைப்பு மாற்றங்களை நாம் மேற்கொள்ள வேண்டும். அரசியல், பொருளாதாரம், பண்பாடு என்று எல்லாத் தளங்களிலும் மாற்றம் வேண்டும். தற்போதைய சமுதாயம் உள்ள இடத்தில் ஒட்டுமொத்தமாக ஒரு புதிய சமுதாயத்தை, அனைவரும் வாழ்க்கைக்கான அடிப்படைத்தேவைகள் அனைத்தும் மறுக்கப்படாத நிலைஉள்ள ஒரு சமுதாயத்தை, யாருமே பசியால் வாடாத நிலையுள்ள ஒரு சமுதாயத்தை ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் மேம்படுத்துவதன் மூலம் கொண்டுவந்து உட்காரவைப்பது இந்தக் கோட்பாடு.

## e) நிலைத்த வளர்ச்சிக் கோட்பாடு

மானுட வளர்ச்சியைப் பற்றிய எல்லா விதமான முடிவுகள் எடுப்பதிலும் சுற்றுச்சூழல், சமூகம் மற்றும்

பொருளாதாரம் பற்றிய ஒருங்கிணைந்த கண்ணோட்டத்தைக் கொண்டு செயல்படுவதையே நாம் நிலைத்த வளர்ச்சிக் கோட்பாடு என்கின்றோம். நிலைத்த வளர்ச்சிக்கான வரிச்சட்டத்தில் எல்லா அம்சங்களிலும் ஒருங்கிணைந்த முடிவெடுப்பது என்பதுதான் அதன் மையப் புள்ளியாக இருக்கின்றது. (Derbbach J.C., 2003: Stoddart, 2011) இப்படி ஆழமாகப் பதிக்கப்பட்டிருக்கின்ற ஒருங்கிணைவு என்ற புள்ளிதான் நிலைத்த வளர்ச்சிக் கோட்பாட்டை மற்றெல்லாக் கோட்பாடுகளில் இருந்தும் தனித்துக் காட்டுகின்றது.

# வளர்ச்சியின் வடிவங்கள்

இன்றைய சிக்கல்களுக்கு நேற்றைய தீர்வுகளைச் சொல்லிக்கொண்டிருக்க முடியாது. நாம் தேடிப் பணியாற்றும் மக்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை நோக்கி நாம் வேலை செய்கின்றோம். இன்றைய நவீன காலத்தின் சவால்களுக்குப் பொருத்தமான தொடர்புடைய பதிலிருப்புகளை நாம் தேடிக்கண்டடைய வேண்டும். இதற்காக வரலாற்றில் முன்னெடுக்கப்பட்ட பலவேறு வளர்ச்சிப் பாதைகளைப் பற்றிய தெளிவான புரிதல் நமக்குத் தேவை. ஒவ்வொரு குறிப்பிட்ட சூழ்நிலையிலும் நாம் காணும் எல்லா வளர்ச்சிப் பாதைகளும் ஏதாவது ஒன்றிற்குப் பொருத்தமானவையாகத்தான் இருந்திருக்கும் என்ற போதிலும், நமது சூழ்நிலையை அறிவியல்பூர்வமாக அலசி ஆராய்ந்து பார்க்கவும், கூர்ந்து கவனித்துப் பார்க்கவும், பொருத்தமான வியூகங்களை அமைத்துக்கொள்ளவும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

## a) தான தர்ம போக்கு

தான தர்ம போக்கு தேவையில் இருக்கும் தனிநபர்களுக்கோ அல்லது குழுக்களுக்கோ ஏதாவது உதவிசெய்ய வழிவகுக்கின்றது. குறிப்பாக வெள்ளம், பஞ்சம், நில நடுக்கம், பெருந்தொற்றுநோய்க் காலம் போன்ற அவசர காலங்களில் இந்தப் போக்கு உதவியாக இருக்கின்றது. இதில் பாதிக்கப்பட்டவர்களின் பங்களிப்பு என்பது மிகக் குறைவாகவே இருக்கின்றது. பாதிக்கப் பட்டவர்கள் தங்களுக்குத் தாங்களாகவே உதவிசெய்துகொள்ள முடியாத நிலையில் இருக்கும்போது அக்கம் பக்கம் இருப்பவர்கள்தான் அவர்களுக்கு ஏதாவது செய்தாகவேண்டும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இது நடத்தப்படுகின்றது. தானம் தர்மம் என்று பார்க்கின்றபோது நாம் நமது வள்ளல்தன்மையை வார்த்தைகளாலும் செயல்களாலும் காட்டி அவல நிலையில் இருக்கும் மக்களுக்கு நம்மால் இயன்ற உதவிகளைச் செய்கின்றோம். எப்போதெல்லாம் தேவைகள் எழுகின்றனவோ அப்போதெல்லாம் இவ்வாறு தான தர்மம் செய்ய வேண்டிய கட்டாயம் வருகின்றது.

அதே சமயத்தில் மக்கள் நலனில் உண்மையான அக்கறை உள்ளவர்களாக இருப்பவர்கள் ஒரு படி மேலே செல்கின்றார்கள். பேரிடர் சந்திக்கக் கூடிய சூழலில் வாழும் மக்கள் பேரிடர் வருமுன் தங்களையே ஒரு குழுமமாகக் காத்துக்கொள்வதற்கான தயாரிப்புப் பணிகளை அவர்கள் முன்னெடுக்கின்றார்கள். இப்படிச் செய்வதன் மூலம் பேரிடர்களை முன்கூட்டியே தக்க தயாரிப்போடு எதிர்கொள்ளவும், இழப்புகளை கூடுமான அளவு குறைத்திடவும், பாதிப்புகளையும் துயரங்களையும் குறைத்துக்கொள்ளவும் தயாராகிறார்கள். குழுமங்கள் அளவிலான பேரிடர் முன்தயாரிப்புப் பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருப்பவர்களுடன் இணைந்து இப்படிப்பட்ட பணிகளை நாம் முன்னெடுக்க முடியும். இப்படிச் செய்யும்போது பேரிடர் சந்தித்த மக்களுக்கு நாம் உதவி செய்தோம் என்ற தனித்த ஒரு செயலைத்தாண்டி, பேரிடர்களைச் சந்திக்க மக்களை வலுப்படுத்தும் முறைகளில் நாம் பங்கெடுத்தோம் என்ற நிலை உருவாகும்.

## b) வளர்ச்சிப் போக்கு

‘ஏழைகள் திறன்களும் வளங்களும் அற்றவர்கள். வெளியில் இருந்து யாராவது நிபுணத்துவம் பெற்றவர்கள்தான் அவர்கள் தங்கள் வாழ்க்கையை எப்படி நடத்தவேண்டும் என்று கற்றுக்கொடுத்து அவர்களிடம் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும்.’ ‘வெளியில் இருந்து வருபவர்கள்தான் ஏழைகள் எப்படி தங்கள் வாழ்க்கையை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என்று தெரிந்திருக்கின்றார்கள்.’ போன்ற நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டது இந்தப் போக்கு. எனவே நிறுவனங்கள், அவை அரசு சாரா தொண்டு நிறுவனங்களாக இருந்தாலும் சரி (NGO) களப்பணி அடிப்படையிலான அமைப்புகளாக இருந்தாலும் சரி அல்லது வளர்ச்சிக்கான அமைப்புகளாக இருந்தாலும் சரி, வளர்ச்சிப் பணிகளை முடுக்கிவிடுகின்றன. மக்களின் அன்றைய நிலையில் இருந்து அவர்களைச் சீர்திருத்தி அவர்களுக்குத் தேவையான திறன்களைக் கொடுத்து அவர்களைத் தகுதிப்படுத்தி அவர்கள் தங்கள் சொந்தக் காலில் நிற்க உதவிசெய்கின்றன. இவையெல்லாம் செய்தபோதிலும் யாரும் மக்களின் சிக்கல்களுக்கான

வேரோட்டமான காரணங்கள் என்ன, ஏன் அவர்கள் எளிதில் பாதிக்கப்படக்கூடிய நிலையில் இருக்கின்றார்கள் என்பதைப் போதுமான அளவிற்குக் கூர்ந்து கவனித்து அதற்கான தீர்வுகளை முன்வைப்பதில்லை. முதன்மையாக இந்தப் போக்கு இன்றைக்கு மக்கள் எப்படி இருக்கின்றார்கள் இந்த இடத்தில் இருந்து இவர்களை கொஞ்சமாவது முன்னேற்றத்திற்குக் கொண்டுவரமுடியுமா என்பதையே முதன்மையான நோக்கமாகக் கொண்டுள்ளது. அத்தோடு இப்படிப்பட்ட வளர்ச்சிச் செயல்பாடுகள் குழுமங்களில் யாராவது ஒருசில பயனாளிகளை மட்டுமே தெரிந்து எடுத்துக்கொண்டோ அல்லது இலக்காக சில குழுக்களை எடுத்துக்கொண்டோ செயல்படுகின்றது. இது குழுமத்தில் பிளவுகளை உருவாக்கக்கூடும். அல்லது இது குழுமத்தை அணிதிரட்டுவதற்குத் தடையாக அமையக்கூடும்.

## c) சமூக செயல்பாட்டுப் போக்கு

இந்தப் போக்கு மக்கள் போராட்டங்களில் நேரடியாகப் பங்கேற்பதை முதன்மைப்படுத்துகின்றது. ஒடுக்கப்பட்ட மற்றும் ஓரங்கட்டப்பட்ட மக்களோடு இணைந்து அமைப்பு மாற்றத்திற்காகச் செயல்படுவது மற்றும் நீதி, சமத்துவம் மற்றும் சுதந்திரம் உள்ள சமூகமாக இன்றைய சமூகத்தை மாற்றி அமைப்பதை அடிப்படை நோக்கமாகக் கொண்டது. இப்படிப்பட்ட சமூகச் செயல்பாடு களப்பணியாளர்களை அடிப்படையாகக் கொண்ட வியூகம் அமைத்துக்கொண்டு இயக்கங்களைக் கட்டியெழுப்பும் பணிகளைக் கையில் எடுத்துக்கொள்கின்றது. இயக்கப் போக்கினை அடிப்படையாகக் கொண்டு, அரசியல் நோக்கங்களோடு, மக்களாட்சிப் பண்புகளை மக்களிடையே வளர்த்தெடுத்தக்கொண்டு குழுமத்தைத் தாண்டி வெளியே உள்ள குழுக்களோடும் அமைப்புகளோடும் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு செயல்படுகின்றது.

இந்தப் போக்கில் அரசியல் செயல்பாடு என்பது மக்கள் ஆட்சி அதிகாரத்தில் பங்கெடுத்துக்கொள்வதற்கான போராட்டங்களை நோக்கி வழிநடத்துகின்றது. இது ஒரு பண்பாட்டுச் செயல்பாடாகவும் இருக்கின்றது. அடக்குமுறைக்கும் ஒடுக்குமுறைக்கும், மனிதத்தன்மையற்ற வகையில் நடத்தப்படும் பண்பாட்டு ஒடுக்குமுறைக்கும் சாவுமணி அடித்து சமத்துவமான வாய்ப்புகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டது. இது ஒரு பொருளாதார செயல்பாடு என்கின்ற வகையில் ஓரங்கட்டப்பட்ட மக்கள் எல்லோருக்குமான பொது வளங்களில் தங்கள் பங்கினை சமமாகப் பெற்றுக்கொள்வதற்கான போராட்டங்களை முன்னெடுக்கின்றது. சமுதாயம் நீதியானதாக, சமத்துவம் நிறைந்ததாக மற்றும் சகோதரத்துவமானதாக உருவாவதற்காக உழைப்பதால் இது ஒரு ஆன்மீகச் செயல்பாடும் ஆகின்றது. இதுபோன்ற ஒவ்வொரு இயக்கமும் வலிகள் நிறைந்த வரலாற்றைக் கொண்டவையாக இருக்கின்றன. அவர்களது வரலாற்றில் நீதிக்கான வேட்கையும், மாண்புடன் வாழ்வதற்கான தணியாத தாகமும் நீக்கமற நிறைந்துள்ளன.

## d) மனித உரிமைகள் போக்கு

'மக்கள் உரிமைகளோடு பிறந்தவர்கள்' என்னும் புதிய புரிதல் மனித உரிமைகள் அடிப்படையிலான பார்வைக்கு வழிவகுத்துள்ளது. மனித உரிமைகள் போக்கு என்பது அல்லது மனித உரிமைகள் அடிப்படையிலான பார்வை என்பது சமூக செயல்பாட்டுப் போக்கை அடிப்படையாக வைத்து கட்டியெழுப்பப்படுகின்றது. மனித உரிமைக் கோட்பாடுகளையும், மனித உரிமைத் தரப்படுத்தல்களையும் மையமாக வைத்து செயல்படுகின்றது. மனித உரிமைகள் பற்றிப் பேசுவதும் ஏழைகளின் உரிமைகளைப் பாதுகாப்பது பற்றிப் பேசுவதும் இன்றைக்கு அரசியலில் முதன்மையானதொரு இடத்தைப் பிடித்துக்கொண்டு இருக்கின்றது. அது பஞ்சாயத்துத் தேர்தலாக இருந்தாலும் சரி, அதுவே மாநில அளவிலானதாக, நாடு அளவினதாக அல்லது உலக அளவினதாக இருந்தாலும் சரி, மனித உரிமைகளைப் பற்றியும் ஏழைகளின் உரிமைகளைப் பாதுகாப்பது பற்றியும் பேசியே ஆக வேண்டும் என்கின்ற நிலை உருவாகிஇருக்கின்றது. மக்களுக்கு எதிராக இழைக்கப்படுகின்ற அநீதிகள் எல்லாமே மனித உரிமை மீறல்கள் என்று இன்றைக்கு வகைப்படுத்தப்படுகின்றன. மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகள் எல்லாமே அவர்களது பொருளாதார, சமூக, பண்பாட்டு, குடிமை மற்றும் அரசியல் உரிமைகளை அழித்து ஒழிப்பதற்காகவே நிகழ்த்தப்படுகின்றது. மக்கள் பிரச்சினைகளை வெளிக்கொண்டுவருவதற்கும் அதற்குரிய முக்கியத்தை உணர்த்துவதற்கும் பரந்த அளவில் அரசியல்படுத்துவதற்கும் மனித உரிமைகள் போக்கு தேவையான ஒன்றாக இருக்கின்றது.

இதைப் பொருத்தமட்டில் எல்லா வசதி வாய்ப்புகளையும் பெற்று வாழும் மக்கள் சமுதாயத்தில் ஒதுக்கி ஓரங்கட்டப்பட்ட மக்கள் படும் துயரங்களைக் கண்டுகொண்டு அவர்களது உரிமைகளுக்காகக் குரல்கொடுக்கச் செய்வது என்பதுதான் பெரும் சவாலான செயலாக இருக்கின்றது. அப்படி துயரங்கண்டு துடிக்கும் மனம் இருந்தால் அமைதியான வழியிலேயே ஏழைகள் தங்கள் உரிமைகளைக் கேட்டுப் பெற்றுக்கொள்வார்கள். அமைதி, ஒப்புரவு மற்றும் நீதி ஒன்றைவிட்டு ஒன்றாகப் பிரிக்க முடியாதவை.



# குழுமத்தின் தலைமையில் வளர்ச்சி முறை

அமர்த்தியா சென் அவர்களால் வடித்துக்கொடுக்கப்பட்ட அடிமட்டத்தில் இருந்து தலைமட்டம் நோக்கிப் புறப்படும் சமூக-பண்பாடு மற்றும் அமைப்பு மாற்றம் என்னும் முறையும், செயல்திறன் பற்றிய பார்வையும், புதிய வகைகளில் நாம் குழுமங்களில் செயல்படுவதற்கு வழிவகைகளை உருவாக்கித் தந்துள்ளன. ஒரு தனி நபர் ஏழையாக இருக்கிறார். அல்லது ஒரு குழுமம் ஏழ்மையில் உழலுகின்றது. பல வேளைகளில் இந்த ஏழ்மை என்பது சமுதாயத்தால் பாகுபடுத்தப்படுவதாலும், பொருளாதார வகைகளில் சுரண்டப்படுவதாலும், பண்பாட்டு வழியில் வாயடைக்கப்பட்டதாலும் அரசியல் தளத்தில் முடக்கப்பட்டதாலும் உருவாக்கப்படுகின்றது. ஏழைகளுக்கு முறையாகச் சென்றடையவேண்டிய பல காரியங்கள் அவர்களிடம் இருந்து தட்டிப்பறித்துக் கொள்ளப்படுகின்றது. அவர்களின் அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்படுகின்றன. அவர்களது குடியுரிமையும் அவர்களுக்குக் கொடுக்கப்படுவது கிடையாது. குழுமங்கள் சமுதாயத்தாலும் சமுதாயத்தில் இருக்கும் சமுதாயம் சார்ந்த குழுக்களாலும் சாதி, இனம், மொழி, மதம், பிறந்த இடம் மற்றும் தொழில் ஆகியற்றை வைத்து அரசியல் மற்றும் பொருளாதார லாபங்களுக்காக, மனச்சான்று இல்லாத சுயநலம் கொண்டவர்களால், பல வகைகளாகப் பிரித்துப் பாகுபடுத்தப்படுகின்றார்கள். இப்படிப்பட்ட சூழலில் 'குழுமத்தின் ஒட்டுமொத்த அறிவாற்றல்' செயல்படும் சூழலை உருவாக்கி ஆதரவளிப்பது எந்த அளவிற்கு சிறிதாகவும், மிகவும் அதிகமான நேரம் காலம் எடுத்துக்கொள்வதாக இருந்தாலும், மிகவும் சரியானதாகவும், முன்னேற்றத்திற்கானதாகவும், நிலைத்த பயன்தரக்கூடியதாகவும் இருக்கும். இந்த காரியத்தில் நாம் வெற்றி பெற்றோமா என்பதை வெறுமனே நாம் கண்ணால் காணக்கூடிய மாற்றங்களாலும் வெற்றிகளாலும் மட்டும் கணக்கெடுத்துவிட முடியாது, நாம் வெற்றி பெற்றோமா என்பது, எந்த அளவிற்கு ஒரு குழுமம் தாங்கள் முன்னெடுத்த செயல்களைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்கின்றது? எந்த அளவிற்குச் செயல்படவும் சீர்தூக்கிப் பார்க்கவும் ஒரு முறையை உருவாக்கிப் பயன்படுத்துகின்றது? என்பதனைப் பொருத்ததாக இருக்கும். குழுமத்தின் உறுப்பினர்களின் பங்கேற்பு குறிப்பிட்ட செயல்பாட்டில் எந்த அளவிற்கு இருந்தது என்பதை, வெற்றி தோல்வியைக் கணிப்பதற்கு நாம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். சாதி, மதம் மற்றும் பிற

நம்பிக்கைகளைத் தாண்டி எவ்வாறு ஒருவருக்கொருவர் மரியாதையோடு நடந்துகொள்கின்றார்கள் என்பதைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். கூட்டாகச் சேர்ந்து முடிவெடுப்பது, தங்களைத் தாங்களே நிர்வகித்துக்கொள்வது, சிக்கல்கள் வரும்போது அதனைக் கையாள்வது, கடமைகளைச் செய்ய வேண்டியவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி காரியம் சாதித்துக்கொள்வது, என்னென்ன பாடங்களைக் கற்றுக்கொண்டோம் என்று அடையாளம் கண்டுகொள்வது, மாற்றங்களைக் கொண்டாடுவது, மதிப்பீடுகளையும் பார்வைகளையம் ஆழப்படுத்திக்கொள்வது மற்றும் இறுதியாக தெளிவான கண்ணால் காணக்கூடிய உணரக்கூடிய அளவிலான வெற்றி விளைவுகளை, பயன்களைக் கொண்டாடுவது என்று எல்லாமே வெற்றி தோல்வியைக் கணக்கிடுவதற்காகக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். செயல்பாட்டால் என்ன பயன் விளைந்தது என்பதை மட்டும் கவனத்தில் எடுத்துக்கொண்டு நிர்வாகம் செய்யாமல், குழுமம் எந்த அளவிற்கு அந்த செயல்பாட்டைத் தன்னுடைய சொந்த செயல்பாடாகக் கருதி முன்னெடுத்தது, எந்த அளவிற்கு இந்த முறையினைத் தலைமையேற்று நடத்தித்தந்தது என்பதையும் கணக்கில் எடுத்துக்கொள்வதே இங்கே ஏற்பட்டிருக்கின்ற அல்லது ஏற்படவேண்டும் என்று நாம் எண்ணுகின்ற மாற்றம். இப்படிப்பட்ட முறைகள் கணக்கிடக்கூடிய காரியங்களையும் சீர்தூக்கிப்பார்க்க வேண்டிய காரியங்களையும் மிகப் பயனுள்ள வகையில் ஒன்றுசேர்க்கின்றது. தெளிவாக நாம் என்ன செய்தாக வேண்டும் என்பதற்கு அழுத்தம் கொடுக்கின்றது. அந்த அழுத்தம் 'செயல்படு – சீர்தூ க்கிப்பார் - பாடம் கற்றுக்கொள்' என்னும் அறிவாற்றல் ஆயுதம் தீட்டும் முறையாகப் பரிணமிக்கின்றது. சில அமைப்புகளுக்கு இது 'எட்டாக் கனிக்கு கொட்டாவி விடுகின்ற' கதையாக இருக்கலாம். ஆனால் காரித்தாஸ் அமைப்பின் தோழமை அமைப்புகள் இப்படித்தான் புரிந்துகொள்கின்றன – குழுமத்தின் தலைமையில் அல்லது மக்கள் தலைமையில் செயல்படும் முறை என்பது இதுதான்.

அண்மையில் ஐந்து அமைப்புகள் நடத்திவந்த குழும அணிதிரட்டல்கள் முறைகளைப் பற்றி ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. என்னென்ன முறைகள் கையாளப்பட்டன, என்னென்ன வியூகங்கள் அமைக்கப்பட்டன, என்னென்ன வழிமுறைகள் பின்பற்றப்பட்டன, என்னமாதிரியான தலையீடுகள்செய்யப்பட்டன, என்னவெல்லாம் பலனாகக் கிடைத்தது, என்னவெல்லாம் கற்றுக்கொள்ளப்பட்டது என்று ஆய்வு விரிந்தது. இந்த அமைப்புகளில் சேவா கேந்திரா கொல்கொத்தா (SKC) என்னும் அமைப்பும், சேத்தனாலயா, டெல்லி என்னும் அமைப்பும், செயின்ட் சேவியர்ஸ் சோசியல் செர்வீஸ் சொசைட்டி, அகமதாபாத் (SXSSS) என்னும் அமைப்புமாக மூன்று அமைப்புகள் நகர்ப்புறங்களிலும், கிருபா சோசியல் வெல்பர் சொசைட்டி, உஜ்ஜைனி. (KSWS) மற்றும் பூர்வாஞ்ச்சல் கிராமின் சேவா சமிதி, கோரக்பூர். (PGSS) ஆகியவை கிராமப்பகுதிகளிலும் வேலைசெய்துவந்தன. களத்தில் குழுமங்கள் மற்றும் அமைப்புகளிடம் இருந்து கற்றுக்கொண்ட காரியங்கள் இந்தக் கையேட்டில் உள்ளன. குழும உறுப்பினர்கள் மற்றும் குழுமத் தலைவர்களின் பார்வையில், குழுமங்களில் உறுப்பினர்களின் தலைமை எப்படியெல்லாம் செயல்படுகின்றது என்பதை இன்னும் கொஞ்சம் நன்றாகப் புரிந்துகொள்வதற்கு, குழுமங்களுக்கு உதவிசெய்யும் அமைப்புகள் மற்றும் களப்பணியாளர்களுக்கு உதவும் வகையில், இந்தக் கையேடு தயாரித்து வழங்கப்படுகின்றது.

இது தொடர்பான கலந்துரையாடல்களில் பன்னிரெண்டு படி செயல்பாட்டு மாதிரி ஒன்று உருவானது. 'இந்த 12 படிகள் என்பது ஒட்டுமொத்தமான தீர்வு இதற்கு மேல் எதுவும் இல்லை' என்று நாம் நினைத்துவிடக் கூடாது. இந்த 12 படிகளை இந்த இடத்தில் ஒரு மாதிரியைக் காட்டவேண்டும் என்தற்காகத்தான் கொடுத்திருக்கின்றோம்.

(1) தன்னம்பிக்கையையும் பிறர் நம்பிக்கையையும் வளர்த்தெடுத்தல்.

(2) நோக்கம், மதிப்பீடுகள், குழும அணிதிரட்டல் முறைகளை எல்லோரும் புரிந்துகொள்ளச் செய்தல்.

(3) ஒன்றுபட்டு செயல்படும் பலவேறு குழுக்களை உருவாக்கி செயல்படச்செய்தல் இதன் வழியாக குழுமத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு அமைப்பினை உருவாக்குதல்.

(4) விமர்சனக் கண்ணோட்டத்தை உருவாக்குதல்: தன்னைப்பற்றியும், குழுமத்தைப் பற்றியும், சமுதாயத்தைப் பற்றியும் அத்தோடு ஆளுமை வளர்ச்சி, தலைமைப்பண்பு வளர்ச்சி மற்றும் அறிவாற்றலை வளர்த்துக்கொள்ளுதல்.

(5) சமூகச் சிக்கல்களை அடையாளம் கண்டு முன்னுரிமை வரிசைப்படுத்துதல்.

(6) வாழ்வாதாரத்திற்கான வாய்ப்புகளை விரிவுபடுத்திக்கொள்ளுதல் மற்றும் அதற்கான கடமை உள்ளவர்களோடு தொடர்பு மற்றும் செயல்பாடுகளை மேம்படுத்துதல்.

(7) மற்ற குழுக்களுடைய செயல்பாடுகளைப் போய்ப் பார்த்தல் அவர்களிடம் இருந்து கற்றுக்கொள்ளுதல்.

(8) செயல்பட்டு – சீர்தூக்கிப் பார்த்தல் முறையைப் பின்பற்றுதல் அதன் வழியாக நடைமுறைப்படுத்தக்கூடிய செயல்பாடுகளைக் கண்டுகொள்ளுதல்

(9) ஒத்துழைப்பது, பிணைப்பை ஏற்படுத்திக்கொள்வது மற்றும் குரல்கொடுப்பதற்கான செயல்பாடுகள்

(10) தன்னார்வத்தோடு முன்வருவது, கொடுப்பது மற்றும் பகிர்ந்துகொள்வது

(11) கொண்டாடுவது, வெளிக்காட்டிக்கொள்வது மற்றும் அங்கீகரிப்பது

(12) மாற்றம்பெற்றுவரும் ‘ஆதரவு நல்கும்’ அமைப்புகளின் செயல்பாடுகள்

இந்தப் பன்னிரெண்டு படிமுறை செயல்பாடுகளை ஒரு சில குறிப்புகளைக் கொண்டு சிறிது விளக்கிச்சொல்வது முக்கியமானது. படிப்படியாக எவ்வாறு ஒரு குழுமத்தை அணிதிரட்டவேண்டும் என்ற முறையை நாம் சொல்லும்போது நமது மனதில் ஒரு புதிய பகுதியில் புதிதாகத் தொடங்குகின்ற ஒரு செயலாக இதைச்செய்கின்றோம் என்று கருதிக்கொண்டு சொல்கின்றோம். ஒரு அமைப்பு ஒரு குறிப்பிட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதியில் ஏற்கெனவே வேறு ஒரு வியூகம் அமைத்து செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது என்று சொன்னால் இந்தப் படிநிலைகளை அதற்கு ஏற்றாற்போல மாற்றியமைத்துக்கொண்டு பயன்படுத்திக்கொள்ளலாம். ஒருவேளை இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற முறை ஒரே நேர்கோட்டில் பயணிப்பது போன்ற தோற்றத்தைத் தரலாம். குழும அணிதிரட்டல் முறை என்பது ஒருபோதும் நேர்கோடாகச் செல்லாது, அது சுழன்று சுழன்றுதான் செல்லும். முதல் படிநிலை செயல்பாடுகளை ஒட்டுமொத்தமாக நிறைவுசெய்தபிறகுதான் இரண்டாவது படிநிலைக்குச் செல்லவேண்டும் என்பது கிடையாது. சுழன்று சுழன்று செயல்படும் முறையாக இருப்பதால் நாம் முன்னும் பின்னுமாக தேவைக்கேற்றவாறு சென்று செயல்படவேண்டியிருக்கும். அவ்வாறு செய்யும்போது ஒரு படிநிலைக்கும் அடுத்த படிநிலைக்குமான தொடர்பை இணக்கத்தை உறுதிப்படுத்திக்கொண்டே செல்வதுதான் சரியான பாதையில் முன்னேறிச்செல்வதாக இருக்கும்.


சூழல்கள் மாறுபட்டவையாக இருக்கும்போது சிக்கலானவையாக இருக்கும்போது இந்தப் படிநிலைகளை எதை எப்போது எப்படிச் செய்வது போன்றவற்றைக் கருத்தில்கொண்டு பொருத்திக்கொண்டு செயல்பட வேண்டியிருக்கும். ஒவ்வொரு படிநிலையாக நாம் செயல்படத்தொடங்கும் போது குழுமங்களைக் கட்டியெழுப்பும் பணியாளர்கள் அல்லது அமைப்புகளின் செயல்பாட்டாளர்கள் அந்தப் படிநிலையின் நோக்கம் போக்குபற்றிய தெளிவான வழிமுறைகளைத் தெரிந்துகொண்டு செயல்பட வழிவகை செய்ய வேண்டும். அப்படிச் செய்யும்போதுதான் இது இப்படித்தான் இருக்கும் அது அப்படித்தான் நடக்கும் என்று தான்தோன்றித்தனமாகச் செயல்படுவதை நாம் தவிர்க்க முடியும். இந்த முறைகளில் விடாப்பிடியாக சரியானது தவறானது என்று சொல்லக்கூடியவை ஒன்றும் கிடையாது. குறிப்பிட்ட சூழ்நிலையில் என்ன வேலை செய்யும் எப்படி வேலைசெய்யும் என்று இப்போது ஒன்றும் சொல்ல முடியாது. ஒன்றைச் செய்துபார்ப்பது, அதன் பயன்களை விளைவுகளை சீர்தூக்கிப் பார்ப்பது திறந்த மனதோடு உண்மைநிலையை அலசி ஆராய்ந்து அந்தச் சூழலுக்கு ஏற்ப மாற்ற வேண்டியவற்றை மாற்றிக்கொண்டு செயல்படுவது என்பதை எப்போதும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். செயல்பாட்டாளர்கள் அவ்வப்போது தொடர்ந்து கூடிவந்து ஒவ்வொரு படிநிலையிலும் என்ன செய்தோம் அதன் வழியாக என்ன பலன்களைக் கண்டோம் என்பதை அலசி ஆராய்ந்து பகிர்ந்துகொள்வதும் ஒவ்வொரு சூழ்நிலையிலும் என்ன நடக்கின்றது எப்படி நடக்கின்றது என்பதை ஒருவர் ஒருவரிடம் இருந்தும் ஒட்டுமொத்தமாகக் குழுமத்திடம் இருந்தும் கற்றுக்கொள்வதும் இன்றியமையாதது.

## காலக்கெடு வைத்துக்கொண்டு நிகழ்ச்சிகளை நடத்த ஆதரவளிப்பது

கீழே கொடுக்கப்பட்டிருக்கின்ற 8 ல் இருந்து 9 ஆண்டு காலக்கெடு மற்றும் நிகழ்ச்சிகளை நடத்த ஆதரவுச்செயல்பாடு போன்றவை நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் செயல்படும் ஐந்து குழும அணிதிரட்டல் ஆதரவுச் செயல்பாட்டு அமைப்புகளின் அனுபவங்களில் இருந்து கருத்துருவாக்கப்பட்டுள்ளன. இந்த கருத்துருவாக்கத்தைச் சூழலுக்கும் அதன் நுணுக்கங்களுக்கும் ஏற்றவாறு பொருத்தமாக மாற்றியமைத்துக்கொள்ள வேண்டியிருக்கும். வழக்கம்போல அனைத்தும் நடக்கும்போது இந்தத் திட்டங்கள் எதிர்பார்க்கும் பலனைக் கொடுக்கும். எதிரெதிர் துருவங்களாகி, சாதி, மதம், மொழி போன்ற காரணிகளால் ஆழமாகப் பிளவுபட்டுத் துண்டாடப்பட்டுக் கிடக்கும் பகுதிகளில் குழும அணிதிரட்டல்களுக்கு ஆதரவு நல்கும் அமைப்புகள் தாங்கள் தேர்ந்தெடுக்கும் குழுமங்களைக் கவனமுடன் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும். தடைச் சுவற்றிலே முட்டிக்கொண்டு மண்டையை உடைத்துக்கொள்ள வேண்டும் என்று எந்த ஒரு அமைப்பையும் நாம் எதிர்பார்க்கக்கூடாது. ஏற்கெனவே ஓராண்டு வேலைசெய்திருந்தால்கூட, குழும உறுப்பினர்கள் பொதுவான செயல்பாடுகளின் மேல் ஆர்வம். தோழமை, இணைந்து செயல்படுதல்

போன்றவற்றின் முக்கியத்தை கண்டுகொள்ளத் தயாராகவில்லை என்று சொன்னால், அந்தப் பகுதியில் வேலைசெய்வதை விட்டுவிட்டு விலகுவதுகூட நல்லதாக இருக்கும். குழும அணிதிரட்டல்களுக்கு ஆதரவு நல்கும் அமைப்புகள், தங்களுக்குள்ளேயே இணைந்த சிந்தனை, சீர்தூக்கிப்பார்த்தல், ஆழ்ந்த கருத்துக்களையும் உணர்வுகளையும் பகிர்ந்துகொள்ளுதல், ஒருவர் மற்றவர் சொல்வதைக் கூர்ந்து கவனித்தல் உற்றுக்கேட்டல் ஆகியவை மூலமாக தேவைப்படும் அத்தனை காரியங்களிலும் ஒத்த கருத்தை எட்டுவதற்கு, குழும உறுப்பினர்களை வழிநடத்த வேண்டும்.

**குழும அணிதிரட்டல் செயல்முறை - எடுத்துக்காட்டாக ஒரு காலக்கெடு**



## குழும அணிதிரட்டல் செயல்முறை - எடுத்துக்காட்டாக ஒரு காலக்கெடு

| படி 1 மற்றும் 2 | படி 3 மற்றும் 4 | படி 5 மற்றும் 6 | படி 7, 9 மற்றும் 12 |
|---|---|---|---|
| முதல் கட்டம்<br>ஏறக்குறைய 1 ஆண்டு | இரண்டாவது கட்டம்<br>ஏறக்குறைய **2 ½**<br>ஆண்டுகள் | மூன்றாவது கட்டம்<br>ஏறக்குறைய **2 ½**<br>ஆண்டுகள் | நான்காவது கட்டம்<br>ஏறக்குறைய 2 ஆண்டுகள் |

ஊக்குனர்களின் ஆதரவு: ஆனால் நிகழ்ச்சிகளை நடத்த குறைந்த அளவு ஆதரவு

ஊக்குனர்களின் ஆதரவு: நிகழ்ச்சிகளை நடத்த ஆதரவு

ஊக்குநர்களின் ஆதரவை குறைத்துக் கொள்கின்றோம். குறைந்த அளவு குடும்பத்திற்குள் பயிற்சிக்கு ஆதரவு. பிறகு குழுமங்களின் செயல்பாடுகளைப் போயப் பார்த்தல், பிணைப்புகளை ஏற்படுத்துதல் ஆதரவு. வெளிக்காட்டிக் கொள்ளுதல் 12 படி செயல்பாடுகளை இந்தக் கட்டத்தில் தொடக்கத்திலேயே ஆரம்பித்து விடுங்கள்.

**ஊடாடும் கட்டங்கள்**

படி 8 செயல்முறை சார்ந்தது - ஒட்டுமொத்த செயல்முறைக்கும் பொருந்தும்.
படி 10 ஊக்குவித்தல், சிறு செயல்பாடுகள், ஒரு குறிப்பிட்ட செயல் எதிர்பார்க்கும் பலன் தருகிறதா என்று செய்து பார்த்தல், மேற்பார்வையிடுதல்
படி 11க்கு இட்டுச் செல்லுதல். வெளிக்காட்டுதல், அங்கீகரித்தல், பரிசளித்தல் - மூன்றாவது கட்டத்தில் இருந்து தொடங்கிவிடலாம்.

2

# தன்னம்பிக்கையையும் பிறர் மீது நம்பிக்கையையும் வளர்த்தெடுத்தல்.



# தன்னம்பிக்கையையும் பிறர் மீது நம்பிக்கையையும் வளர்த்தெடுத்தல்.


## நோக்கம்

குழுமத்தின் தலைமையில் வளர்ச்சியை நோக்கிய செயல்பாட்டு முறையில் முதல் படி தன்னம்பிக்கையையும் பிறர் மீது நம்பிக்கையையும் வளர்த்தெடுப்பதுதான். இதனுடைய நோக்கம் பணியாளர்கள் மற்றும் அமைப்பின் 'நம்பகத்தன்மையை' நிலைநாட்டுவது மற்றும் குழுமத்துடன் நட்பு 'உறவுகளை' வளர்த்தெடுத்துக்கொள்வது. குழுமத்தவர்களால் 'வரவேற்கப்படுகின்றோம்' என்ற உணர்வைப் பெற்றுக்கொள்வதும், 'ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்கின்றோம்' 'அவரவர் இருப்பது போலவே அவரவரை ஏற்றுக்கொள்கின்றோம்' என்னும் நிலையை உருவாக்குவதே இந்தப் படிநிலை செயல்பாட்டின் திட்டம். குழும உறுப்பினர்கள் மெல்ல மெல்ல குழுமத்தை கட்டியெழுப்பும் செயல்பாட்டாளர்களை (எந்த ஒரு அமைப்பையும் அதன் பணியாளர்களையும்), நம்பிக்கைக்கு உரியவர்களாகவும், எல்லோரோடும் உறவாடக்கூடியவர்களாகவும், செவிகொடுப்பதற்குத் தயாராக உள்ளவர்களாகவும், பொறுமையோடும் விடாமுயற்சியோடும் மக்களோடு இணைந்து தேவைப்பட்டால் குழும நலனிற்காக என்ன வேண்டுமானாலும் செய்வதற்குத் தாராள உள்ளம் கொண்டவர்களாகவும், அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். உறவுகள் வலுப்படவேண்டும், புரிதல் அதிகரிக்க வேண்டும், ஒருவரைஒருவர் ஏற்றுக்கொள்ளும் தன்மை வேண்டும், ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கை கொள்ள வேண்டும் இவைதான் நாம் எதிர்பார்க்கும் பலன்கள்.

## காலக் கெடு

வழக்கமாக குழும உறுப்பினர்களுக்கும் ஆதரவு அளிக்கும் அமைப்பின் பணியாளர்களுக்கும் இடையில் நம்பத்தகுந்த உறவுகளை ஏற்படுத்திக்கொள்வதற்கும், ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கை கொண்டு செயல்படச்செய்வதற்கும் ஆறு மாதங்களில் இருந்து எட்டு மாதங்கள் வரை தேவைப்படலாம்.

**ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கையையும் ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொள்ளும் தன்மையையும் கட்டியெழுப்புதல்**



# செயல்பட வேண்டிய வழிமுறை

- மக்கள் வாழும் பகுதிகளுக்குள் மெல்ல நடந்து செல்ல வேண்டும். கண்ணில் படும் எல்லோரையும், எல்லாவற்றையும் கருத்தில் ஏற்றிக்கொள்ள வேண்டும். எங்கோ பார்த்ததுபோல இருக்கின்றதே என்கின்ற அளவிற்காவது இடத்தையும் ஆட்களையும் பழகிக்கொள்ள வேண்டும். இளைஞர் இளம்பெண்கள், முதியோர் - ஆண்கள், பெண்கள், தெருக்கள், சந்துகள், மக்கள் ஒன்று கூடிவருகின்ற பொது வசதிக்கான இடங்கள், குழந்தைகள் கூடி விளையாடும் இடங்கள், இளைஞர்கள் இளம்பெண்கள் கூடிவரும் இடங்கள், பள்ளிக்கூடப்பகுதிகள், கோயில்கள், ஆலயங்கள், மசூதிகள் போன்ற வழிபாட்டுத்தலங்கள். மேற்சொன்ன எல்லாவற்றையும் கண்ணால் பார்த்து கருத்தில் ஏற்றிக்கொள்ள வேண்டும்.
- எதிர்படும் எல்லோரிடமும் மட்டுமரியாதையுடன் நடந்துகொள்ள வேண்டும். யாராவது ஓரிருவர் உங்களிடம் நீங்கள் யார்? என்ன செய்கிறீர்கள்? ஏன் இந்தப் பகுதியில் நடந்துகொண்டிருக்கின்றீர்கள்? என்று கேள்விகளை எழுப்பினால், உங்களுடைய அமைப்பு, உங்களுடைய பெயர், நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கின்றீர்களோ அந்த வேலையைப் பற்றி சுருக்கமாகச் சொல்லுங்கள்.
- குழந்தைகள், பெண்கள் மற்றும் பிற மக்கள் உங்களை அடையாளம் கண்டுகொள்ளும் அளவிற்கு பழகிக்கொள்ளுங்கள். நடந்து போகும்போதே யாராவது யாருடைய பெயரையாவது சொல்லிக் கூப்பிட்டார்கள் என்று சொன்னால் அந்தப் பெயருக்கு உரியவர் யார் என்று பார்த்துவைத்துக் கொள்ளுங்கள். உங்களுடைய பெயரைச் சொல்வதை அனுமதியுங்கள்.
- உங்களோடு தொடர்பில் வருகின்ற எல்லோரிடமும் நல்லுறவைப் பேணக் கற்றுக்கொள்ளுங்கள். இவர் எல்லோருக்குமானவர் யாரோ தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சிலருக்கு மட்டுமானவர் இல்லை என்பதை வெளிக்காட்டுகின்ற அளவிற்கு இதனைச் செய்யுங்கள்.
- எப்போது களப்பணிக்காக செல்வது என்பதை சற்று இளக்கமாகவே வைத்துக்கொள்ளுங்கள். குழும உறுப்பினர்களின் வாழ்க்கையில் அதிகாலை. காலை, மதியம், மாலை, இரவு என்று எந்த நேரத்தில் என்ன மாதிரியான சவால்களை அவர்கள் எதிர்கொள்கின்றார்கள் என்று நீங்கள் தெரிந்துகொள்வது உங்களுக்கு உதவியாக இருக்கும். எனவே எப்போதாவது ஓரிருமுறை சூரியன் மறைந்த பிறகும்கூட நீங்கள் களப்பணிக்காக மக்களின் வாழிடங்களுக்குள் சென்று வருவதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.
- உங்களுடைய புலன்கள் அனைத்தின் வழியாகவும் நீங்கள் பணியாற்றும் குழும மக்களை அவர்களது வாழிடத்தைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். கண்களால் பாருங்கள், காதால் கேளுங்கள், தொட்டுப் பார்க்கக் கூடியவற்றைத் தொட்டுப்பாருங்கள், முகர்ந்து பார்க்கக் கூடியவற்றை முகர்ந்து பாருங்கள், சுவைக்கக் கூடியவற்றைச் சுவைத்துப் பாருங்கள். அந்த இடத்தின் யதார்த்தத்தை உங்களால் எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்கு தனிப்பட்ட முறையிலே சொந்த அனுபவங்களாகத் தெரிந்துகொள்ளுங்கள். குழும உறுப்பினர்களுக்கு இடையே எப்படிப்பட்ட உறவுப் பின்னல்கள் இருக்கின்றன என்பதைக் கூர்ந்து கவனித்துக் கற்றுக்கொள்ளுங்கள்.
- குழுமத்தின் வாழ்க்கை எப்படிச் சுழன்று போகின்றது என்பதை அதன் ஆழம், அகலம், நீளம் என்று எல்லாப் பரிமாணங்களிலும் கண்டு தெரிந்துகொள்ளுங்கள். வாய்ப்புக் கிடைக்கும் வகையில் எல்லாம் பங்கெடுத்துக்கொள்ளுங்கள். அவர்களது செயல்களை, எண்ணங்களை எடுத்த உடனேயே கேள்விக்கு உட்படுத்தாமல். ஏன், எதற்காக அவர்கள் இதனை, இப்படி, இப்போது செய்கின்றார்கள் என்று கற்றுக்கொள்வதற்கு முயற்சி செய்யுங்கள்.
- மும்முரமாகச் செவிகொடுங்கள். எந்த வகையிலும் அவர்களுக்கு அறிவுரைகள் கொடுக்க வேண்டாம். அவர்களுடைய செயல்கள் என்ன ஏது என்று பாருங்கள். எடுத்த உடனேயே நல்லது கெட்டது என்று தீர்ப்பளிக்கத் தொடங்கிவிடாதீர்கள்.
- உங்களுக்கு நேர்மறையாக, பயனுள்ளதாகத் தெரிகின்ற காரியங்களைப் பற்றி மட்டும் பேசி ஊக்கப்படுத்துங்கள். யாராவது பேச்சுக்கொடுக்கும்போது அவர்களிடம் நீங்கள் பார்த்த பாராட்டக்கூடிய காரியங்களைப்பற்றி மட்டும் பேசி பாராட்டக் கற்றுக்கொள்ளுங்கள். உங்களிடம் யாராவது எதைப்பற்றியாவது கேள்வி கேட்டால்கூட பாராட்டக்கூடியவைகளைப் பற்றி மட்டும் பாராட்டிப் பேசுங்கள்.
- எல்லாவிதமான தலைவர்களுடனும் ஏதாவது ஒரு வகையில் தொடர்பில் இருந்துகொள்ளுங்கள். முறையான தலைவர்கள், முறைசாராத தலைவர்கள், பாரம்பர்யத் தலைவர்கள், சமயத் தலைவர்கள் என்று எல்லாவிதமான தலைவர்களிடமும் தொடர்பில் இருந்துகொள்ளுங்கள்.
- வீடுகளில் சென்று ஆட்களைப் பார்க்கும் போது கவனத்துடன் நடந்துகொள்ளுங்கள். அவர்களுடைய தனித்திருக்கும் உரிமையை மதியுங்கள். குறிப்பாக பெண்கள் மற்றும் வளரிளம் பெண்கள் இருக்கும் இடங்களில் போகலாமா போகக்கூடாதா என்பதை யோசித்து நிதானமாகச் செயல்படுங்கள்.
- (மேலே கண்டவற்றை உங்களுடைய சூழ்நிலைக்கு ஏற்றபடி மாற்றியமைத்தோ புதிதாக உருவாக்கியோ பயன்படுத்துங்கள்)

## உங்கள் உதவிக்கு சிறு சிறு தகவல்கள்

- எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்கு நாம் பணியாற்றிக்கொண்டிருக்கும் குழுமத்தில் இருந்தோ அல்லது அருகில் உள்ள குழுமங்களில் இருந்தோ பணியாளா்களைத் தெரிந்தெடுத்துக்கொள்வது நன்று. பாலின சமநிலை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
- நாம் பணியாற்றும் குழுமத்தைப் பற்றிய நோ்மறையான எண்ணங்களை வளா்த்துக்கொள்வதற்கு பணியாளா்களை நெறிப்படுத்த வேண்டும். ஒவ்வொரு குழுமமும் தங்களுக்குள்ளேயே தங்களையே மாற்றிக்கொள்வதற்கான ஆற்றலைப் பொதிந்து வைத்துக்கொண்டுள்ளன என்பதை பணியாளா்கள் உணரச் செய்ய வேண்டும்.
- பணிகளைத் தொடங்கும் போது பெண்கள் மற்றும் குழந்தைகளை மையப்படுத்தி செயல்படுவது நல்லது. அவா்களைச் சந்திப்பதும் உரையாடுவதும் உறவாடுவதும் எளிதானதாக இருக்கும்.
- சமூக-பொருளாதார, அரசியல், பண்பாட்டு, சமய, மொழி மற்றும் சாதிய கோணங்கள் நாம் தோ்ந்தெடுத்துக்கொண்ட குழும மக்களிடையே எப்படி சொல்லாக செயலாக வெளிப்படுகின்றது என்பதை நாம் தெரிந்துகொள்வதற்கும், புரிந்துகொள்வதற்கும் ஆா்வத்துடன் முயற்சி எடுக்க வேண்டும்.
- நாம் தோ்ந்தெடுத்துக்கொண்டு குழுமத்தில் உள்ள குடும்பங்களில் நடக்கும் நல்லது கெட்டதுகளில் கலந்துகொள்ள வேண்டும். நாமாகத் தேடிப்போய் வாய்ப்புகளை உருவாக்கிக்கொள்ள வேண்டும். முதியவா்கள், நோய்வாய்பபட்டவா்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் எளிதாகப் பாதிப்புக்கு உள்ளாகக்கூடியவா்கள் ஆகியவா்களோடு நாம் நேரத்தைச் செலவிட வேண்டும். குறிப்பிட்ட பணியாளரைப் பற்றியும் அவா் எதற்காக இந்த குழுமத்தவா்கள் இடையில் இருக்கின்றாா் என்பதைப் பற்றியும் அழுத்தமான எண்ணங்களை குழுமத்தவா்கள் மத்தியில் இந்தச் செயல்பாடு ஏற்படுத்தும்.
- தனிப்பட்ட முறையில் குழுமத்தவா்கள் வாழும் பகுதி முழுவதையுமே ஒரு வரைபடம்போல நினைவில் வைத்துக்கொள்ள முயற்சி எடுக்க வேண்டும். வெவ்வேறு மதத்தவா்கள், சாதிகளைச் சோ்ந்தவா்கள், இனக்குழுக்கள் எந்தெந்தப் பகுதிகளில் வாழ்கின்றாா்கள் என்று தெரிந்துவைத்துக்கொள்ள வேண்டும். எங்கெங்கே எல்லோருக்கும் பொதுவான பள்ளி, குடிதண்ணீா் தொட்டி மற்றும் குழாய்கள், நலவாழ்வு மையங்கள் மற்றும் அரசு அலுவலகங்கள் இருக்கின்றன என்பதையும் தெரிந்துவைத்துக்கொள்ள வேண்டும்.
- (மேலே கண்டவற்றை உங்களுடைய சூழ்நிலைக்கு ஏற்றபடி மாற்றியமைத்தோ புதிதாக உருவாக்கியோ பயன்படுத்துங்கள்.)

## எச்சரிக்கையாக இருக்க வேண்டியவைபற்றி சில தகவல்கள்

- எதிா்மறையான செய்திகளையோ அல்லது அடையாளங்களையோ சொல்லாதீா்கள் அல்லது காட்டாதீா்கள். குழுமத்தவா்களுக்குப் பிடிக்காததைச் சொல்லாதீா்கள், செய்யாதீா்கள்.
- குழுமத்தவா்களது செயல்பாடுகளில் நமக்கு ஆகாததவையாக இருப்பவற்றைக்கூட எதிா்த்துக் கேட்காதீா்கள்.
- இந்தக் காலக்கட்டத்தில் குழும உறுப்பினா்களது எதிா்மறை போக்குகளை அழுத்தாதீா்கள். இவ்வாறு செயல்படுவது அவா்கள் செய்கின்றவற்றை நாம் ஏற்றுக்கொள்கின்றோம் என்று பொருள்படாது.
- தீா்ப்பிடாதீா்கள் அல்லது அறிவுரை சொல்லாதீா்கள் அல்லது ஆற்றுப்படுத்த முயலாதீா்கள். நடப்பதெல்லாம் தலைவிதிப்படிதான் நடந்துகொண்டிருக்கின்றது என்று ஞாயம் கற்பிக்காதீா்கள்.
- குழந்தைகளுக்குச் சில விளையாட்டுகளைச் சொல்லிக்கொடுப்பதைத் தவிர பிற செயல்பாடுகள் எதையும் தொடங்கிவிடாதீா்கள்.
- குழும உறுப்பினா்களோடு இருக்கிறோம் என்பதைத் தவிர வேறு எந்தவிதமான வாக்குறுதிகளையும் கொடுக்காதீா்கள்.
- யாருடனாவது பேசிக்கொண்டிருக்கும்போது உங்களது அலுவலக நேரம் முடிந்துவிட்டது என்பதற்காக உடனடியாக உரையாடலை நிறுத்திவிடாதீா்கள்.
- (மேலே கண்டவற்றை உங்களுடைய சூழ்நிலைக்கு ஏற்றபடி மாற்றியமைத்தோ புதிதாக உருவாக்கியோ பயன்படுத்துங்கள்.)

## நமது செயல்பாட்டுமுறை வேலைசெய்கின்றது என்பதற்கான அறிகுறிகள்

1. ஏறக்குறைய (இத்தனை) குழந்தைகள், (இத்தனை) இளைஞா்கள், (இத்தனை) இளம்பெண்கள், (இத்தனை) பெண்கள் மற்றும் (இத்தனை) ஆண்கள் என்னிடம் நட்போடு பழகுகின்றனா்.
2. (இத்தனை) பெண்கள், முதியவா்கள், நோய்வாய்ப்பட்டவா்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் அவா்கள் எதிா்கொள்ளும் சிக்கல்களைப் பற்றி என்னை நம்பிப் பகிா்ந்துகொண்டனா்.

3. (இத்தனை) குடும்பங்கள் எனக்கு ஒரு டம்ளர் தண்ணீர் அல்லது டீ கொடுத்தனர்.
4. (இத்தனை) இளம் ஆண்கள் மற்றும் (இத்தனை) இளம் பெண்கள் என்னுடன் (இந்த), (இந்த) காரியங்களைப் பற்றிப் பகிர்ந்துகொண்டனர்.
5. (இத்தனை) குழந்தைகள் என்னை அவர்களது வீடுகளுக்கு கூட்டிக் கொண்டு போனார்கள்.
6. ஏறக்குறைய (இத்தனை) பாரம்பர்யத் தலைவர்கள், உள்ளூர் தலைவர்கள் மற்றும் சமயத் தலைவர்கள் என்னோடு உரையாடினார்கள்.
7. (இத்தனை) பேர் என்னை அவர்களுக்குத் தேவையான உதவிசெய்யவேண்டும் என்று அல்லது வழிகாட்டவேண்டும் என்று அழைத்தார்கள்.
8. (இத்தனை) பேர் அவர்களோடு நான் நேரத்தைச் செலவிட்டதையும், அவர்கள் சொல்ல விரும்பியவற்றைக் கேட்டுக்கொண்டதையும் பற்றி மகிழ்ச்சியடைந்தார்கள்.
9. (இத்தனை) வெவ்வேறு நபர்கள் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் குழும உறுப்பினர்களுக்காக அல்லது குழும உறுப்பினர்களோடு குறிப்பிட்ட வகைகளில் செயல்படுகின்றார்கள் என்பதை அடையாளம் கண்டுகொண்டேன்.
10. குழும உறுப்பினர்களின் அன்றாட வாழ்க்கையில் வழக்கமாகச் செய்யும் செயல்களாக (இத்தனை) செயல்களை நான் அடையாளம் கண்டுகொண்டேன். (இத்தனை) வகைகளில் குழும உறுப்பினர்கள் தங்களது செயல்பாடுகளை எடுத்துச் செய்கின்றார்கள் என்பதையும் தெரிந்துகொண்டேன்.
11. (மேலே கண்டவற்றை உங்களுடைய சூழ்நிலைக்கு ஏற்றபடி மாற்றியமைத்தோ புதிதாக உருவாக்கியோ பயன்படுத்துங்கள்.)

# உங்களையே மதிப்பீடு செய்துகொள்ளுங்கள்

இது உங்களை நீங்களே மதிப்பீடுசெய்துகொள்வதற்கான ஒரு கருவி. பொருத்தமான பதில்களை சரி ✓ குறியிடுங்கள். 'உறுதியாகச் சொல்லமுடியவில்லை' என்றால் நீங்கள் அதனை ஏற்றுக்கொள்ளவும் இல்லை மறுக்கவும் இல்லை என்று பொருளாகின்றது.

| வரிசை எண். | மதிப்பீடு செய்யப்படவேண்டிய கோணங்கள் | அழுத்தமாக ஏற்றுக் கொள்கின்றேன் | ஏற்றுக்கொள்கின்றேன் | உறுதியாகச் சொல்ல முடியவில்லை | மறுக்கிறேன் | அழுத்தமாக மறுக்கிறேன் |
|---|---|---|---|---|---|---|
| 1. | குழும உறுப்பினர்கள் வாழும் பகுதியில் நடந்து சுற்றிவருவது எனக்கு நல்உணர்வைக் கொடுத்தது. | | | | | |
| 2. | குழும உறுப்பினர்கள் நான் பார்த்து வணக்கம் சொன்னால் எனக்கு பதில் வணக்கம் சொன்னார்கள். | | | | | |
| 3. | ஏறக்குறைய நூற்றுக்கு 40 குடும்பங்கள் என்னைத் தங்களது வீடுகளுக்குள் வரவேற்றார்கள். | | | | | |
| 4. | ஒருசில நபர்கள் எனக்கு இடைஞ்சல்களை உண்டாக்கியபோதும் நான் அலட்டிக்கொள்ளாமல் இருந்தேன். | | | | | |
| 5. | ஒருசில பெண்கள் என்னை நம்பித் தங்களைப்பற்றி கதைகதையாகப் பேசிப்பகிர்ந்துகொண்டார்கள். | | | | | |
| 6. | ஒருசிலருடைய பகிர்வு எனக்கு எரிச்சல் மூட்டுவதாக இருந்தது. | | | | | |
| 7. | யதார்த்தத்தைத் தெரிந்துகொண்டு அதனைக் கண்கொண்டு பார்ப்பது மனஅழுத்தத்தை உண்டுபண்ணியது. | | | | | |
| 8. | குழந்தைகள் என்னைத் தொட்டபோது எனக்குச் சங்கடமாக இருந்தது. | | | | | |
| 9. | போதைக்கு அடிமையான இளைஞர்களைக் கண்டதும் எனக்கு கோபம் வந்தது. | | | | | |
| 10. | குழும உறுப்பினர்களில் சிலர் என்னைச் சந்தேகக்கண் கொண்டு பார்த்தார்கள். | | | | | |

- உங்களுடைய மதிப்பீட்டிற்கு நீங்களே மதிப்பெண்கள் கொடுங்கள்: 1 முதல் 5 வரை உள்ள கேள்விகளுக்கு கீழ்கண்டவாறு மதிப்பெண்களைக் கொடுங்கள்: அழுத்தமாக ஏற்றுக்கொள்கின்றேன் = +2, ஏற்றுக்கொள்கின்றேன் = +1, உறுதியாகச் சொல்ல முடியவில்லை = 0, மறுக்கிறேன் = -1, அழுத்தமாக மறுக்கிறேன் = -2

- 6 முதல் 10 வரை உள்ள கேள்விகளுக்கான விடைகளுக்கு அப்படியே தலைகீழாகப் புரட்டிப்போடுங்கள் மதிப்பெண்களை: அழுத்தமாக எற்றுக்கொள்கின்றேன் = -2, ஏற்றக்கொள்கின்றேன் = -1, உறுதியாகச் சொல்ல முடியவில்லை = 0, மறுக்கிறேன் = +1, அழுத்தமாக மறுக்கிறேன் = +2
- உங்களுடைய ஒட்டுமொத்த மதிப்பெண்களையம் கூட்டுங்கள். அந்தக் கூட்டிய மதிப்பெண் 15ம் அதற்கு மேலும் இருந்தால் நீங்கள் சரியான பாதையில் சென்றுகொண்டிருக்கின்றீர்கள் என்று பொருள். அந்தக் கூட்டிய மதிப்பெண் 15க்குக் கீழே இருக்கின்றது என்றால் நீங்கள் இன்னும் முன்னேற்றம் காணவேண்டியவை உள்ளன, நீங்கள் இது தொடர்பாக இன்னும் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது என்று தெரிந்துகொள்ளுங்கள்.
- உங்களுடைய மதிப்பீட்டில் நீங்கள் பெற்ற மதிப்பெண்களையும் அதனால் உங்களது உள்ளத்தில் ஏற்பட்ட உணர்வுகளையும் உங்களது நிறுவன பணியாளர்களிடம் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## சிந்திப்பதற்கும் பகிர்ந்துகொள்வதற்கும் சில கேள்விகள்


1. நீங்கள் குழும உறுப்பினர்களோடு கலந்து பழகியபோது உங்கள் கண்களில் பட்டது என்ன? உங்களுடைய கவனத்தை கவர்ந்தது என்ன? உங்கள் காதுகளில் விழுந்தது என்ன?
2. குழும உறுபினர்களில் உங்களுக்குப் பழக்கமான முகங்கள், பாரம்பர்ய சமயத் தலைவர்கள், மக்கள் எல்லோருக்கும் பொதுவான வசதிவாய்ப்புகள் என்று ஒரு பட்டியல் தயாரியுங்கள்.
3. குழும உறுப்பினர்கள் உங்களை தங்களுள் ஒருவராக ஏற்றுக்கொண்டார்களா? உங்களை தங்கள் இல்லங்களில் வரவேற்றார்களா? ஆம் என்றால் எப்படி? எடுத்துக்காட்டுகளுடன் விளக்கிச் சொல்லுங்கள்.
4. குழும உறுப்பினர்கள் எப்படி உங்கள் மேல் தனிப்பட்ட விதத்திலும் நீங்கள் சார்ந்துள்ள அமைப்பின் மீதும் நம்பிக்கை வைத்து பழக ஆரம்பித்தார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டுகள் கொடுக்க முடியுமா?
5. உங்களைப் பற்றியும் உங்களது அமைப்பைப்பற்றியம் குழும உறுப்பினர்களிடம் இருந்து நீங்கள் கேள்விப்பட்டது என்ன?
6. தனிப்பட்ட முறையில் நீங்கள் ஏதாவது சவால்களை எதிர்கொண்டீர்களா? அவை என்ன?
7. குழும உறுப்பினர்களைச் சந்திப்பதன் மூலம் உங்களுக்குள் ஏதாவது மாற்றங்கள் நிகழ்ந்ததா? அவை என்ன?
8. (மேலே கண்டவற்றை உங்களுடைய சூழ்நிலைக்கு ஏற்றபடி மாற்றியமைத்தோ புதிதாக உருவாக்கியோ பயன்படுத்துங்கள்.)

## குழும அணிதிரட்டல்காரர்களின் மனநிலையும் நடந்துகொண்ட விதமும் என்னை மாற்றின

“தொடக்கத்தில், அந்த அமைப்பின் பணியாளர்கள் எங்களுடைய பகுதிக்குள் வந்தபோது, அவர்களை நான் சந்தேகக் கண்ணோடுதான் பார்த்தேன். கிறித்தவ அமைப்புகளைச் சேர்ந்தவர்களாக இருந்ததால் அவர்கள் என்ன நோக்கத்திற்காக இங்கே வருகின்றார்கள் என்று கேள்விகளை எழுப்பிக்கொண்டேன். ஒருமுறை நான் நேரடியாகவே ‘எங்களை மதம் மாற்றுவதற்காகத் திட்டமிட்டு வந்திருக்கிறீர்களா?’ என்று கேட்டுவிட்டேன். மெல்ல மெல்ல எங்களுடைய பகுதியில் களப்பணியாளர்களாக வந்த ஒவ்வொருவருமே எங்களுடைய குழுமத்தைச் சேர்ந்தவர்களாகவோ அல்லது அக்கம்பக்கத்தவர்களாகவோ இருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் ஒருவர்கூட கிறிஸ்தவர் இல்லை என்பதையும் கண்டுகொண்டேன். கிறித்தவத்தைப் பற்றி ஒருவர்கூட பேசவில்லை. ஆனால் அந்த அமைப்பின் பணியாளர்கள் எங்களுடைய சமய மற்றும் பண்பாட்டுக் கொண்டாட்டங்களில் கலந்துகொண்டார்கள். அவர்கள் எங்களுடைய குடும்பங்கள் ஒவ்வொன்றிலும் உட்கார்ந்து மணிக்கணக்காக நாங்கள் சொல்லும் கதைகளையெல்லாம் காதுகொடுத்துக் கேட்டார்கள். எங்களில் சிலரும் தங்களது சந்தோஷங்கள் மற்றும் போராட்டங்களைப்பற்றி பகிர்ந்துகொண்டார்கள். அவர்களது கண்ணோட்டம், அவர்களது போக்கு, அவர்கள் நடந்துகொண்ட விதம் எல்லாமே நான் எதிர்பார்த்ததைப் போல அல்லாமல் வேறுபட்டிருந்தது என்பதை உணர்ந்துகொண்டேன். அவர்கள் எளிமையானவர்களாக, நம்பக்கூடியவர்களாக, தொடர்ந்து எங்களோடு இருப்பார்கள் என்ற எதிர்நோக்கை விதைத்தவர்களாக இருந்தார்கள் என்பதையும் நான் கண்டுகொண்டேன். இது அவர்களைப் பற்றி நான் கொண்டிருந்த எண்ணத்தை மாற்றியது. அவர்கள் மீது நான் கொண்ட நம்பிக்கையை அதிகப்படுத்தியது.” என்று உஜ்ஜைன் ல் இருந்து வந்த திரு. சாம் என்பவர் குறிப்பிட்டார். இதுபோன்ற அனுபவங்களை பலவேறு பணிகள் நடைபெற்றுவந்த பகுதிகளில் இருந்து குழு உறுப்பினர்கள் எடுத்துச்சொல்லியிருக்கின்றார்கள். பலவேறு அமைப்புகளின் இயக்குனர்கள் இதுபோன்ற பகிர்வுகளை உறுதிப்படுத்தினார்கள். அத்தோடுகூட மக்களின் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்வதும் தொடர்ந்து மக்கள் இப்படித்தான் நினைப்பார்கள் இப்படித்தான் செய்வார்கள் என்ற ஒரு நம்பிக்கையோடு காரியத்தில் இறங்கும் சூழலை உருவாக்கும்வதும்தான் மிகப்பெரிய சவால்களில் ஒன்றாக இருந்தது என்றார்கள். அதற்கு நீண்டகாலம் எடுத்துக்கொள்ளவேண்டியது தேவையாக இருந்தது.

# 3

# நோக்கம், மதிப்பீடுகள், குழும அணிதிரட்டல் முறைகளை எல்லோரும் புரிந்துகொள்ளச் செய்தல்.



# நோக்கம், மதிப்பீடுகள், குழும அணிதிரட்டல் முறைகளை எல்லோரும் புரிந்துகொள்ளச் செய்தல்.


## நோக்கம்

இந்த இரண்டாவது படிதான் குழுமத்தினர்கள் தங்களது பணிகளைத் தொடங்குவதற்கான சூழலை உருவாக்குகின்றது. தங்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்வதற்காக தாங்கள் அனைவருமே வைத்திருக்கின்ற ஆசைகள் என்ன என்பதை அனைவரும் உணரச் செய்வது, குழும உறுப்பினர்கள் அனைவரையும் பிணைக்கும் அடிப்படையான பொதுவான ஆசைகள் என்ன என்பதைக்கண்டறிவது, என்ற செயல்களுக்காக குழும உறுப்பினர்கள் ஒன்று கூடவும் தங்களுக்குள் கலந்துரையாடவும் வழியமைத்துக்கொடுப்பதில்தான், இந்த இரண்டாவது படி தொடங்குகின்றது. குழும உறுப்பினர்கள் கூடிவந்து தங்களுக்குள் கலந்துரையாடுவதில்தான் அனைத்தும் அடங்கியிருக்கின்றது. இதே நேரத்தில்தான் நாம் குழுமத்தில் அடிப்படையாக அமைந்துள்ள தோழமை உணர்வு, பரிவிரக்கம், பொதுநன்மைக்காகச் செயல்படுதல், எல்லோருடைய நன்மைக்காகவும் செயல்படுதல், சகோதரத்துவம், சமூக நீதிக்கான மற்றும் ஞாய உணர்வு, அதிகமாக பாதிப்பிற்குள்ளாகக்கூடியவர்களையும் இயற்கையையும் காப்பாற்ற வேண்டும் என்கின்ற எண்ணமும் முயற்சிகளும் போன்றவற்றை அடையாளம் கண்டு ஏற்றுக்கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட செயல்பாடுகள் குழும உறுப்பினர்கள் தங்களைப் பற்றி சிந்தித்துப் பார்ப்பதற்கு இடம் தருகின்றன. அவர்களது பலம் என்ன என்பதையும் அவர்கள் கைவசம் உள்ள வளங்கள் என்ன என்பதையும் நினைத்துப் பார்க்க வைக்கின்றன. அவர்கள் தங்களது உள்ளத்தில் பொதிந்து வைத்திருக்கின்ற கனவுகளையும் ஆசைகளையம் வெளிப்படுத்துவதற்கு தளம் ஏற்படுத்திக்கொடுக்கின்றன. இந்த செயல்பாடுகளின் விளைவாக, குழும உறுப்பினர்கள் தங்களின் சமயம், சாதி, பாலினம் கடந்து அனைவருக்கும் பொதுவான செயல்பாடுகளில் தாங்கள் ஈடுபடவேண்டியதையும், அந்தச் செயல்பாடுகள் பற்றி தெளிவாக எடுத்துச்சொல்ல வேண்டியதையும், அவற்றை ஆழ்ந்து புரிந்துகொள்ளவேண்டியதையும் உணர்ந்துகொள்வார்கள். அத்தோடு அவர்களிடம் பொதிந்து கிடக்கின்ற செயல்திறன்கள், அவர்கள் அன்றாட வாழ்வில் வாழ விரும்புகின்ற மதிப்பீடுகள் ஆகியவற்றை, அனைவருடனும் இணைந்து தங்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக்கொள்ளும் வகையில் வெளிக்கொண்டுவருவது எப்படி என்றும், எல்லோருடனும் ஒரு பிணைப்பை உருவாக்கிக்கொள்வது எப்படி என்றும் உணர்ந்துகொள்வார்கள்.

# காலக்கெடு

ஒட்டுமொத்தமாக ஒருங்கிணைந்த புரிதல் ஏற்படுத்துவதற்கு நமக்கு வழக்கமாக நான்கு அல்லது ஐந்து மாதங்கள் தேவைப்படும்.

**எல்லோரும் புரிந்து கொள்ளும் நோக்கம், மதிப்பீடுகள், குழும அணிதிரட்டல் முறைகள்**




# செயல்படுவதற்கான வழிமுறைகள்

- குழும உறுப்பினர்கள் அனைவருக்கும் பயன்தரும் பொதுக் காரியங்களைப்பற்றி கலந்து உரையாடுவதற்கு முன்வரக்கூடிய தனிநபர்களையும் குடும்பங்களையும் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்.
- குழும உறுப்பினர்கள் சிறுசிறு யதார்த்தமான தன்னாலேயே வந்துசேரும் குழுக்களாக கூடுவதற்கு உதவிசெய்ய வேண்டும். இந்தக் குழுக்கள் வயதின் அடிப்படையில், செய்யும் வேலையின் அடிப்படையில் அல்லது ஒத்த ஆர்வம்கொண்டவர்களாகக் கூடலாம். இந்தக் குழுக்களில் அவர்களுடைய வாழ்க்கையைப் பற்றி, அவர்களின் வாழ்க்கை முறையைப் பற்றி அவர்களுடைய வாழ்வாதாரங்களைப் பற்றி எளிமையான கேள்விகளை எழுப்பி உரையாடல்களைத் தொடங்க வேண்டும்.
- குழும அளவில் மரியாதைக்குரிய உறுப்பினர்கள் யார் என்று கண்டுபிடிக்க வேண்டும். ஏன் அவர்களை எல்லோரும் மதிக்கின்றார்கள் என்பதையும் கண்டுகொள்ள வேண்டும்.
- குழும உறுப்பினர்கள் அனைவரும் எந்த நாட்களில் எந்த நிகழ்வுகளுக்காக ஒன்று கூடி வருகின்றார்கள் என்பதை அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். அந்த நாட்களில் எப்படிப்பட்ட காரியங்கள் செய்வதில் அவர்கள் ஆர்வம் காட்டுகின்றார்கள் என்பதையும் கண்டுபிடித்துக்கொள்ள வேண்டும்.
- குழும உறுப்பினர்கள் எப்போதாவது எங்கேயாவது அவர்கள் தனிப்பட்ட முறையிலோ அல்லது வேறு யாராவது ஒரு குழும உறுப்பினர் மற்றவர்களுக்கு உதவிசெய்ததைப்பற்றியோ அல்லது மற்றவர்களிடம் இருந்து ஏதாவது உதவியைப் பெற்றுக்கொண்டதுபற்றியோ நினைத்துப் பார்த்து பகிர்ந்துகொள்ளச் சொல்லி ஊக்கப்படுத்த வேண்டும்.
- குழும உறுப்பினர்களில் யாராவது தோழமை, பரிவிரக்கம், ஏழைகளின் நலன் நாடுதல், சமூக நீதிக்கான தாகம் கொண்டு செயல்படுதல் போன்ற செயல்பாடுகளில் தனிப்பட்ட முறையில் அனுபவம் உள்ளவர்களாக இருக்கின்றீர்களா? குழும உறுப்பினர்கள் யாராவது மேற்சொன்னவாறு செயல்படுவதைக் கண்ணால் கண்டுள்ளார்களா? குழும உறுப்பினர்கள் இப்படிச் செயல்படுவதைப்பற்றி யாராவது எடுத்துச்சொல்லக் கேள்விப்பட்டிருக்கின்றீர்களா? என்ற கேள்விகளை சிந்தனைக்கு எடுத்துக்கொண்டு தங்கள் மனதில் பட்டதை தெளிவுபட எடுத்துரைக்கச் செய்ய வேண்டும்.
- குழும உறுப்பனர்களின் ஆற்றல்களையும், சக்தியையும் பாராட்டி ஏற்றுக்கொள்ளுங்கள். அவர்களின் ஆற்றல்களை பெருக்கி எடுத்துக்கொள்ள முயற்சி எடுங்கள்.
- குழுமத்திற்கு உள்ளாகவே எத்தகைய வளங்கள் இருக்கின்றன – அதாவது ஆற்றல்கள், திறன்கள், தகவல் தெரிந்தவர்கள், எதாவது செயல்பாடுகளுக்கான உள்கட்டுமானங்கள், நிதிவளம் ஆகியவை இருக்கின்றனவா, யாரிடம் இவை உள்ளன என்று கண்டுபிடிப்பதற்கு ஏற்றவாறு கலந்துரையாடல்களை நகர்த்திச் செல்ல வேண்டும்.
- குழும உறுப்பினர்கள் தங்களது குழுமத்தில் உள்ள பலவேறு ஆட்கள் என்னவெல்லாம் செய்யக்கூடிய ஆற்றல் மிக்கவர்களாக இருக்கின்றார்கள் என்று கண்டுகொள்ளக்கூடிய சூழலை உருவாக்கிக்கொடுக்க வேண்டும். அவர்கள் எவ்வாறு தங்களது அறிவையும் செயல்திறனையும் மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள முடியும் என்பதையும் அறிந்துகொள்ளுகின்ற சூழலை உருவாக்கித் தரவேண்டும்.
- (மேலே உள்ள அனைத்தையும் உங்களது சூழலுக்கு ஏற்ப நீங்கள் மாற்றியமைத்துக்கொண்டோ தேவையானவற்றை புதிதாகச் சேர்த்துக்கொண்டோ செயல்படலாம்.)

## உங்கள் உதவிக்கு சிறு தகவல்கள்

- உங்களுடைய கூட்டங்களை எல்லாம் குழும உறுப்பினர்கள் கலந்துகொள்வதற்கு எற்ற நேரத்தில் அமைத்துக்கொள்ள வேண்டும்.
- சிறிய, நன்கு தெரிந்த நபர்களுடன் பேசுங்கள், அனைவரும் பேச்சில் கலந்துகொள்ள வகைசெய்யுங்கள்.
- குழும உறுப்பினர்களுக்கிடையே செயல்பட்டுவரும் பிற குழுக்கள் மற்றும் ஏதாவது சங்கங்கள் போன்றவற்றை அடையாளம் கண்டுகொண்டு அவர்கள் என்ன செய்கின்றார்கள், எதற்காக சேர்ந்து வந்திருக்கின்றார்கள் என்று புரிந்துகொள்ளுங்கள்.
- குழுமத் தலைவர்கள் மற்றும் பாரம்பர்யத் தலைவர்களுக்கு தகவல் சொல்லி நாம் என்ன செய்கின்றோம் ஏது செய்கின்றோம் என்று எப்போதுமே அவர்களுக்கு தகவல் இருக்க வழிவகை செய்துகொள்ளுங்கள்.
- குழுமத்தில் முதியவர்களைச் சந்திக்க முயற்சி செய்யுங்கள். அவர்களிடம் இருந்து குழுமத்தின் வரலாற்றில் மற்றவர்கள் மறந்துபோன பல கோணங்கள் மற்றும் அனுபவங்கள் வெளிச்சத்திற்கு வரலாம்.
- மாறுபட்ட மற்றும் எதிர் எதிர் துருவங்களான சிந்தனைகள் கூட வெவ்வேறு சிறு குழுக்களிடம் இருந்து கிடைக்கலாம், எதிர்பாருங்கள்.
- குழும உறுப்பினர்கள் தங்களது பன்முகத்தன்மையை, மற்றவர்களிடம் இருந்து எப்படி மாறுபட்டிருக்கின்றோம். எந்தெந்த வகைகளில் எல்லாம் வேறுபட்டிருக்கின்றோம் என்று சிந்திக்கும் வண்ணம் கலந்துரையாடல்களை வழிநடத்துங்கள்.
- (மேலே உள்ள அனைத்தையும் உங்களது சூழலுக்கு ஏற்ப நீங்கள் மாற்றியமைத்துக்கொண்டோ தேவையானவற்றை புதிதாகச் சேர்த்துக்கொண்டோ செயல்படலாம்.)

## பயனுள்ள சில எச்சரிக்கைகள்

- குழுமத்தை எந்த வகையிலும், அவர்களால் என்ன செய்ய முடியும் மற்றும் என்ன செய்ய முடியாது என்பது பற்றி குறைத்து மதிப்பிட்டுவிடாதீர்கள்.
- ஒன்றும் நடக்காது, எதுவுமே செய்ய முடியாது என்று சொல்லித் திரிகின்ற ஒருசில பேருடைய பேச்சைக்கேட்டோ அல்லது வெளிப்படையாகத் தெரிகின்ற சில காரியங்களை வைத்துக்கொண்டோ – அதாவது ஏழ்மை அல்லது அவர்கள் வாழும் இடங்களின் அசுத்தத்தை வைத்து எந்த முடிவுக்கும் வந்துவிடாதீர்கள்.
- இந்தச் சமயத்தில் குழுமத்தின் 'ஒழுக்கம்' சார்ந்த பிரச்சினைகளைப் பற்றி குறிப்பாக அதன் மோசமான கோணங்களைப்பற்றி யாரிடமும் பேச்சுக்கொடுக்காதீர்கள்.
- மோதல்களை உருவாக்கக்கூடிய குழும உறுப்பினர்களை எதிரும் புதிருமாக நிற்கவைக்கக்கூடிய சிக்கல்களை அவசர அவசரமாகக் கையில் எடுத்துக்கொள்ள வேண்டாம்.
- நீங்கள் பரிந்துரைக்கின்ற காரியங்களுக்கு எப்படியாவது 'சரி' என்ற சொல்ல வைக்கின்ற வேலையைச் செய்யாதீர்கள். அவர்கள் மனதில் பட்ட காரியங்களை தெள்ளந்தெளிவாக எடுத்துச்சொல்வதற்கான சூழ்நிலையை உருவாக்கிக்கொடுங்கள்.
- குழுமத்தைப்பற்றிய மிகவும் எளிமைப்படுத்தப்பட்ட யாரோ ஓரிருவர் மட்டும் ஏற்றுக்கொள்கின்ற வரலாறு, பண்பாடு மற்றும் சமயப் பழக்க வழக்கங்களை ஏற்றுக்கொள்வதற்கும் எடுத்துச்சொல்வதற்குமான முனைப்பைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.
- (மேலே உள்ள அனைத்தையும் உங்களது சூழலுக்கு ஏற்ப நீங்கள் மாற்றியமைத்துக்கொண்டோ தேவையானவற்றை புதிதாகச் சேர்த்துக்கொண்டோ செயல்படலாம்.)

## நமது செயல்பாட்டுமுறை வேலைசெய்கின்றது என்பதற்கான அறிகுறிகள்

1. (இத்தனை) பெண்கள், (இத்தனை) ஆண்கள், (இத்தனை) இளம்பெண்கள், (இத்தனை) இளம் ஆண்கள், மற்றும் (இத்தனை) குழந்தைகள் மத்தியில் முறைசாராத வகையில் சின்ன சின்னக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

2. இந்து சமயத்தைச் சார்ந்த (இத்தனை) குழும உறுப்பினர்கள், இஸ்லாத்தைச் சார்ந்த (இத்தனை) உறுப்பினர்கள், பிற சமயங்களைச் சார்ந்த( கிறித்தவம், சர்ணா[பழங்குடி மக்கள் மதம்], பௌத்தம்) (இத்தனை) பேரை முறைசாராத வகையிலான கூட்டங்கள் வழியாகச் சந்தித்தோம்.
3. ஏறக்குறைய (இத்தனை) தலிச் சமுதாயத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள், (இத்தனை) பிற சாதிகளைச் சேர்ந்த உறுப்பினர்களை முறைசாராக் கூட்டங்களின் மூலம் சந்தித்தோம்.
4. குறிப்பிட்ட திறன்கள் உள்ள (இத்தனை) பெண்கள், (இத்தனை) இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் தேவைப்பட்டால் தங்களது திறன்களைத் தங்களது குழும உறுப்பினர்களுடன் பகிர்ந்துகொள்ளத் தயாராக இருக்கின்றவர்களாக அடையாளம் காணப்பட்டிருக்கின்றார்கள்.
5. (இத்தனை) பெண்கள் மற்றும் (இத்தனை) இளைஞர்கள் தலைவர்களாக உருவாகுவதற்குத் தகுதியானவர்களாக அடையாளம்காணப்பட்டிருக்கின்றார்கள்.
6. (இத்தனை) சமய மற்றும் பாரம்பர்யத் தலைவர்கள் தங்களது ஆதரவையும் ஒத்துழைப்பையும் தெரிவித்துக்கொண்டிருக்கின்றார்கள்.
7. மேலே உள்ள அனைத்தையும் உங்களது சூழலுக்கு ஏற்ப நீங்கள் மாற்றியமைத்துக்கொண்டோ தேவையானவற்றை புதிதாகச் சேர்த்துக்கொண்டோ செயல்படலாம்.

**குழும உறுப்பினர்களது பொதுவான ஆசைகள், மதிப்பீடுகள் ஆர்வங்கள் பற்றிய தேடல்**

| | இவர்களை இணைக்கும் பொதுவான ஆசைகள் | | | | | மதிக்கும் மதிப்பீடுகள் | மொத்தத்தில் ஆர்வங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| | பெண்கள் | ஆண்கள் | இளம் பெண்கள் | இளம் ஆண்கள் | குழந்தைகள் | | |
| முதல் மாதம் | | | | | | | |
| இரண்டாவது மாதம் | | | | | | | |
| மூன்றாவது மாதம் | | | | | | | |
| நான்காவது மாதம் | | | | | | | |
| ஐந்தாவது மாதம் | | | | | | | |

குறிப்பு: பொதுவான ஆசைகள் என்ற சொல்லும்போது ஆளுக்கொரு பக்கமாக இருக்கும் பெண்கள், ஆண்கள், இளம் பெண்கள், இளம் ஆண்கள் மற்றும் குழந்தைகளை ஒரு குழுவாக இணைந்து வந்து நாம் இதனைச் சாதிக்க வேண்டும் என்று செயல்படச்செய்வது எது?

# சிந்தித்துப் பார்ப்பதற்கும் பகிர்ந்துகொள்வதற்குமான கேள்விகள்

1. முறைசாரா கூட்டங்களில் குழுமத்தின் பலவேறு பகுதிகளில் இருந்தும் கொஞ்சம் பேர்களாவது பங்கேற்றுக்கொண்டார்களா? அப்படிப்பட்ட பங்கேற்பு ஏதாவது ஒருசில பகுதிகளில் இருந்து இல்லை என்றால் ஏன் அப்படிப்பட்ட பங்கேற்பு இல்லை?
2. குழும உறுப்பினர்களில் ஏதாவது சில குழுக்கள் விடுபட்டுப்போயிருந்தனவா? நாம் அவர்களைப் போய் சந்திக்க முடியாத நிலை ஏற்பட்டதா? ஆம் என்றால் எப்படிப்பட்ட சிரமத்தினால் அவர்களை நாம் சந்திக்க முடியவில்லை அல்லது அவர்கள் விடுபட்டுப்போய்விட்டார்கள்?
3. தங்களது பொதுவான ஆசைகள், அவர்கள் மதிக்கும் மதிப்பீடுகள், அவர்களது பலங்கள் என்ன? அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற வாய்ப்புகள் என்ன? என்பதை அடையாளம் கண்டுகொள்வது குழும உறுப்பினர்களுக்கு எந்த அளவிற்கு கடினமானதாக அல்லது எளிதானதாக இருந்தது?
4. நாம் மேலே கூறியபடி செய்த செயல்கள் இந்த குழும உறுப்பினர்களை ஒரு குழுமமாக ஒரு பொதுவான அடையாளத்தோடு இருக்க இயங்கச் செய்வது என்ன என்பதைப்பற்றி ஏதாவது உங்களால் கண்டுகொள்ள முடிந்ததா?

5. நமது மேற்கண்ட முயற்சிகள் குழும உறுப்பினர்களுக்கு தங்களது குழும மேம்பாடு பற்றி இப்படிச் செய்யலாம் அப்படிச் செய்யலாம் என்று புதிய வாய்ப்புகளைக் கண்டுகொள்ளும் வாசலாக இருந்ததா?
6. (மேலே உள்ள அனைத்தையும் உங்களது சூழலுக்கு ஏற்ப நீங்கள் மாற்றியமைத்துக்கொண்டோ தேவையானவற்றை புதிதாகச் சேர்த்துக்கொண்டோ செயல்படலாம்.)

## பகிர்ந்துகொள்வது எனக்கு மகிழ்வையும் மனநிறைவையும் தருகின்றது

செல்வி. அமிஷா என்னும் 18 வயது இஸ்லாமிய இளம்பெண், புது சீமாபுரியில், E - 44 பிளாக்கில் இருந்தார். இவர் 12 ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தார். அவருடைய அப்பா ஒரு கண்ணாடித் தொழிற்சாலையில் கணக்கராக வேலைபார்த்துக்கொண்டிருந்தார். குடும்பத்தில் ஏற்பட்ட பண நெருக்கடியால் அவருடைய வீட்டை விற்கவேண்டியதாகிவிட்டதாம். அதனால்தான் அவருடைய குடும்பம் சீமாபூரில் E - 44 பிளாக்கில் மாறி வரவேண்டியதாகிவிட்டது. அவருக்கு அந்த இடமும் பிடிக்கவில்லை. ஆட்களையும் பிடிக்கவில்லை. அந்தப் பகுதியில் பெரும்பாலானோர் குப்பை பொறுக்குபவர்களாக இருந்தார்கள். அதனால் அந்தப் பகுதியே நாற்றமெடுப்பதாக இருந்தது. அவருக்கு இது எரிச்சல் மூட்டுவதாக இருந்தது. எனவே அவர் அவருடைய பெற்றோரிடம் இதுபற்றி சச்சரவுசெய்துவந்தார்.

அமிஷா சேத்தனாலயாவைப் பற்றித் தெரிந்துகொண்டபோது சேத்தனாலயா நடத்திவந்த ஒரு ‘ஹவுஸ்லா’ என்னும் ஒரு குறிப்பிட்ட குழுவில் உறுப்பினராகச் சேர்ந்தார். “ஒட்டுமொத்தமாக ஒரே அறையை மட்டுமே கொண்ட வீடுகளில் வாழ்ந்து வந்த இளைஞர்களும் இளம் பெண்களும் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார்கள் என்பதைக் கண்டபோது எனக்கு வியப்பாக இருந்தது. சேத்தனாலயா மையத்தில் ஏதாவது நிகழ்ச்சிகள் நடைபெற்றபோது அவர்களில் ஒருசிலர் தன்னார்வத்துடன் கொஞ்சம் உணவுகொண்டுவருவதைக் கண்டேன். எனது தோழர்கள் ஒருவரிடம் “நீங்களே ஏழையா இருக்கீங்க. இந்த மாதிரி கூட்டம் நடக்கின்றபோது கூட்டத்தில் கலந்துகொள்கின்ற எல்லோருக்கும் உணவு கொண்டுவந்து கொடுக்கின்றீர்களே! அது எப்படி?” என்று கேட்டேன். அதற்கு அந்தப் பெண் “ எங்கள் குடும்பத்தில் நாங்கள் ஒருசில செலவுகளைக் குறைத்துக்கொள்வோம். அதில் மிச்சமாகும் பணத்தை வைத்துக்கொண்டு கொஞ்சம் உணவைத் தயாரித்து கூட்டத்திற்கு வருகின்றவர்களோடு பகிர்ந்துகொள்கின்றோம். பகிர்ந்துகொள்வது எங்களுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது, திருப்தி தருகின்றது, ஆனந்தம் தருகின்றது” என்றார். என்னால் அவர் சொன்னதை ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை. இந்த உண்மை எனது மனச்சான்றை உறுத்தியது. நான் என்னைப்பற்றி பல கேள்விகளைக் கேட்கத் தொடங்கினேன். அந்தக் கேள்விகள் எனது வாழ்க்கையை மாற்றின. எனது மதிப்பீடுகளையும், ஒட்டுமொத்தமாக இந்த உலகத்தைப் பற்றிய எனது கண்ணோட்டத்தையும் மாற்றின. நான் நல்லது நடக்கும் என்று நம்புகின்றவராக, நன்றி மனம் கொண்டவராக, மற்றவர்களின் தேவைகளைப் புரிந்துகொள்ளக் கூடியவராக மாறிவிட்டேன்.

# 4

# பொருந்திப் போகக்கூடிய, பலவிதமான ஆட்களுக்கான பல குழுக்களை உருவாக்கி செயல்படச்செய்து அதன் மூலம் குழுமத்தை அடிப்படையாகக் கொண்ட அமைப்புகளை உருவாக்குவது



# பொருந்திப் போகக்கூடிய, பலவிதமான ஆட்களுக்கான பல குழுக்களை உருவாக்கி செயல்படச்செய்து அதன் மூலம் குழுமத்தை அடிப்படையாகக் கொண்ட அமைப்புகளை உருவாக்குவது

## நோக்கம்

மேலே நாம் சொன்னவற்றைச் செய்துமுடித்துவிட்டோமென்றுசொன்னால் அடுத்த கட்டமாக நாம் செய்தாகவேண்டியது பொருந்திப்போகக்கூடிய குழுக்களை உருவாக்குவதும் குழுமத்தை அடிப்படையாகக் கொண்ட அமைப்புகளை உருவாக்குவதும்தான். ஒரு குழுவை உருவாக்குவதற்காகத் தனிமனிதர்கள் ஒன்று சேர்ந்து வரும்போது அவர்கள் தோழமையையும், அடையாளத்தையும், பாதுகாப்பையும், தன் மதிப்பையும், உறவையும் ஒட்டுதலையும், புதிய சிந்தனைகளை உருவாக்குவதையும், தங்களுக்குத் தெரிந்த தகவல்களை நாலு பேரிடம் பகிர்ந்துகொள்வதற்கான வழிவகைகளையும் ஆண்டு அனுபவிக்கின்றார்கள்.

நான் இந்த குறிப்பிட்ட குழுவின் உறுப்பினர் என்னும் அடையாளம் ஒவ்வொரு உறுப்பினருக்கும், அதிலும் குறிப்பாக மிக அதிகமாகப் பாதிப்புக்கு ஆளாகக்கூடிய நபர்களுக்கு பலம் தருகின்றது. தொடர்ந்து குழுவில் ஒருவர் ஒருவருடன் தொடர்புகொண்டு பேசிப்பழகிவருகின்ற போது, ஒருவர் ஒருவரைச் சார்ந்து செயல்படத் தொடங்கும்போது எல்லோருக்குமான பொதுவான நோக்கங்களை அடைவதற்காக இணைந்து செயல்பட ஒரு உந்துதலைத் தருகின்றது. குழுக்கள் செயல்படும்போது அதன் உறுப்பினர்களுக்கு தங்களது தலைமைப் பண்புகளை வளர்த்துக்கொள்வதற்கான ஒரு இடமும் வாய்ப்பும் கிடைக்கின்றது.

குழும உறுப்பினர்களை வயது, பாலினம், தொழில் மற்றும் ஏதாவது ஒன்றைப்பற்றி ஆர்வம் மிக்கவர்கள் என்ற அடிப்படையில் ஒத்துப்போகக்கூடிய அதே வேளையில் வேறுபட்ட குழுக்களாக ஒருங்கிணைப்பதுதான் நமது நோக்கம். குழுக்கள் கொடுக்கல் வாங்கலுக்கான குழு, சுய உதவிக் குழு, கைமாற்றுக் குழு, இளைஞர் இளம்பெண்கள் குழு, பெண்கள் குழு, குழந்தைகள் குழு, விவசாயிகள் குழு என்று அடிப்படைத் தன்மையிலேயே மாறுபட்டு இருக்கின்றன. ஒவ்வொரு குழுவும் அவர்களுக்கு ஆர்வமூட்டக்கூடிய வகைகளில் செயல்படுகின்றன. அவர்களுடைய குழு உறுப்பினர்களுக்கு எந்தெந்த செயல்பாடுகளெல்லாம் உதவியாக இருக்குமோ அப்படிப்பட்ட செயல்பாடுகளில் ஈடுபடுகின்றன. குழுக்கள் ஒரு இடம் சார்ந்தோ, பாலினம் சார்ந்தோ, வயது சார்ந்தோ அல்லது தொழில் சார்ந்தோ செயல்படும்போது அவைஅவற்றிற்கே உரிய ஒரு குறுகிய வட்டத்திற்குள் செயல்படவேண்டியிருக்கின்றது. எனவே அடுத்த கட்டமாக குழும அடிப்படையிலான அமைப்பு என்று பரந்த அளவிலான செயல்பாடுகளுக்கான குழு ஒன்றை அமைக்க வேண்டிய தேவை எழுகின்றது. குழும அடிப்டையிலான


குழுவை இப்படித்தான் அமைக்கவேண்டும் என்று வரையறை ஒன்றுமில்லை. ஒரு அமைப்பு என்கின்ற வகையில் அதனுடைய உறுப்பினர் சேர்க்கை, செயல்படும் விதம், சேர்த்துக்கொள்ளப்படுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை, செயல்படுவதற்கான களம் மற்றும் குழுமத்தின் மீது அது செயல்படுத்தக்கூடிய கட்டுப்பாடு ஆகியவை ஒரு குழுவில் செயல்படுவதைவிட அகண்டதாக அமைகின்றது.

எத்தனை குழுக்கள் தேவைப்படுகின்றதோ அத்தனை குழுக்களும் அமைக்கப்பட்டு அந்தந்தக் குழுத் தலைவர்களின் வழிகாட்டுதலில் நன்றாகச் செயல்படவேண்டும். குழுமத்தின் பிற குழுக்களின் தலைவர்களோடு இயல்பான நெருக்கமான தொடர்பும் உறவும் கொண்டவர்களாக அந்தக் குழுக்களில் வேரூன்றி நிற்பவர்களாக குழும அடிப்படையிலான அமைப்புகள் செயல்படவேண்டும். இதுதான் நாம் எதிர்பார்க்கின்ற நல்விளைவுகள்.

# காலக்கெடு

வழக்கமாக ஒருங்கிணைந்த குழுக்களை உருவாக்கி செயல்படச்செய்வதற்கு குறைந்தது ஒரு வருட காலம் தேவைப்படுகின்றது. சிறிய குறிப்பிட்ட நபர்களுக்கான அல்லது செயல்பாடுகளுக்கான குழுக்கள் அமைக்கப்பட்டு செயல்படத் தொடங்கிய பிறகு குழும அடிப்படையிலான அமைப்பை உருவாக்குவதற்கான வேலைகளைத் தொடங்குவது சரியானதாக இருக்கும்.

**குழும அடிப்படையிலான குழுக்களை அமைத்துக் கொள்ளுங்கள்**




# நடைமுறைப்படுத்தும் விதம்

- உருவாக்குவது, முட்டி மோதிக்கொண்டு செயல்படுவது, நெறிமுறைகளை வகுத்துக்கொள்வது, ஆற்றவேண்டிய கடமைகளை ஆற்றுவது, இடைவேளை கொடுப்பது என்னும் வழிவகையை உள்வாங்கிக்கொண்டு நடைமுறைப்படுத்துவது மிக அதிகமான பயன்களைத் தருவதாக இருக்கும்.

   a. உருவாக்குவது – ஒருவர் ஒருவரோடு கலந்து பேசிப்பழகச்செய்வது, தேவையான அளவிற்குக் கேள்விகளை எழுப்பி அதற்கான பதில்களைக் கண்டுகொள்வது, குழுவின் அடையாளத்தையும் நோக்கத்தையும் வரையறுத்துக்கொள்வது, எல்லோரும் சுமுகமாகப் பேசிக்கொள்ளக்கூடிய காரியங்களைப்பற்றி கலந்துரையாடச்செய்து ஏதாவது ஒருசில செயல்கள் பற்றி எல்லோரும் குறைந்த பட்சமாக ஏற்றுக்கொள்ளும் நிலையை வளர்த்தெடுப்பது - இந்த நிலையை எட்டுவதற்கு ஏற்ற சூழ்நிலையை அமைத்துக்கொடுப்பதும் வழிநடத்துவதும் அதிகமான கவனமும், நேரமும் உழைப்பும் கொடுக்க வேண்டிய ஒன்றாகும்.

   b. முட்டி மோதிக்கொண்டு செயல்படுவது – குழு செயல்பாட்டிற்கு எதிர்ப்புக்கள் எழும், பங்கேற்பு போதுமானதாக இருக்காது, யார் சொல்வதை யார் கேட்பது என்ற இழுபறி உருவாகும், சண்டை சச்சரவு வரும், நீயா நானா என்று போட்டி எழும், இந்தக் குழு இப்படித்தான் செயல்பட வேண்டும் என்று ஏதாவது விதிகள் இருக்கின்றதா என்கின்ற கேள்விகள் உருவாகும், குழு உறுப்பினர்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை குழுவினர் அங்கீகரித்தாக வேண்டிய நிலை வரும் - இந்த நிலைமைக்கு கொண்டுவர சமரசம் பேசி, பயிற்சி கொடுத்து தட்டிக்கொடுத்து ஊக்கப்படுத்தி செயல்படச்செய்யக்கூடிய தலைமை தேவைப்படும்.

   c. நெறிமுறைகளை வகுத்துக்கொள்வது – விட்டுக்கொடுத்து ஒப்புரவாவது, பதட்டங்களைக் குறைப்பது, எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் செயல்படுவது, ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய வேலை என்ன அவர்களது பொறுப்பு என்ன என்று வரையறுப்பது, ஒத்துப்போகக்கூடிய தன்மையை உருவாக்குவது, குழு எடுக்கின்ற முயற்சிகளை அங்கீகரிப்பது, கற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு வசதிகளைச் செய்து தருவது எந்த அளவிற்குக் கற்றுக்கொண்டிருக்கின்றார்கள் இன்னும் என்ன செய்யவேண்டும் என்ற தகவல்களைப் பகிர்ந்துகொள்வது, சின்னச் சின்னச் செயல்களைச் செய்ய வைத்து குழுவால் எந்த அளவிற்கு ஒன்றுபட்டு செயல்படமுடிகின்றது என்பதை கண்காணிப்பது - இந்த நிலையை அடைவதற்காக பொருத்தமான சூழலை உருவாக்கிக் கொடுப்பதும், வழிகாட்டுவதும் தேவைப்படுகின்றது.

d. ஆற்ற வேண்டிய கடமைகளை ஆற்று – குழுவில் ஒருவருக்கொருவர் நல்ல உறவு, தெளிவான நோக்கம் மற்றும் கண்ணோட்டம், செயல்பாடுகளின் பலன்களை முன்வைத்து காரியங்களை முன்னெடுத்தல், ஒரு குழுவாக ஒருங்கிணைந்து செயல்படும் ஆற்றல் - இந்த நிலையை அடைய பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்ளவேண்டும், அவர்கள் தாங்களாகவே சிந்தித்துச் செயல்படச்செய்ய வெளி தலையீடுகளை குறைத்துக்கொள்ள வேண்டும், அவ்வப்போது என்ன நடக்கின்றது ஏது நடக்கின்றது என்று ஒரு பார்வை பார்த்துக்கொள்ள வேண்டும்.

e. இடைவேளை கொடுப்பது – புதுப்பித்துக் கொள்வதற்காக புத்துணர்வு பெற்றுக் கொள்வதற்காக சற்று நேரம் சும்மா இருக்க வேண்டும், என்ன செய்வது எப்படிச் செய்வது என்கின்ற முறைகளை வலுப்படுத்த வழிகாட்டவேண்டும், எடுத்துகொண்ட வேலைகளைச் செய்து முடித்துவிடவேண்டும், மேற்கொண்ட செயல்பாடுகளின் வழியாக என்ன கற்றுக்கொண்டோம் என்ன மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பது பற்றிப் பகிர்ந்துகொள்ளச்செய்ய வேண்டும், அவரவர் பங்களிப்புகளை ஏற்றுக்கொள்ளவும், அங்கீகரிக்கவும், பாராட்டுவதற்கும் வாய்ப்புகளை உருவாக்கித் தரவேண்டும் - இந்த நிலையை அடைய கொஞ்ச நேரம் சும்மா இருக்க வேண்டும். குழு வேலைதவிர பிற வேலைகளில் கவனம் செலுத்தி உள்ளத்தைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும், பொறுப்புகளை பிறரிடம் ஒப்படைக்கவேண்டிய தேவையிருந்தால் பொறுப்புகளை முறையாக ஒப்படைக்கச் செய்யவேண்டும்.

- ☐ குழந்தைகள், பெண்கள், இளைஞர்கள், இளம்பெண்கள் மற்றும் ஆண்களைத் திரட்டி ஏதாவது கதைபேசிக்கொண்டிருங்கள், நமக்கு புத்தெழுச்சி கொடுக்கக்கூடிய மாமனிதர்களின் வாழ்க்கைக் கதைகளைப் பேசுங்கள், குழுமங்களில் நீங்கள் கவனித்த நல்ல நிகழ்வுகளைப்பற்றிப் பேசுங்கள், ஒற்றுமையின் முக்கியத்தையும் ஒன்று சேர்ந்து வருவதன் முக்கியத்தையும் விளக்குவதற்காக பிற குழும உறுப்பினர்களிடம் நீங்கள் கேட்டுத் தெரிந்துகொண்ட செய்திகளை யார் சொன்னார் என்கின்ற தகவல் இல்லாமல் பகிர்ந்துகொள்ளுங்கள்.
- ☐ குழும உறுப்பினர்கள் தங்களோடு ஒருமித்த ஆர்வம் கொண்டவர்களோடு சேர்ந்து குழுக்களை தொடங்குவதற்கு ஊக்குவியுங்கள். வழக்கமாக குழும உறுப்பினர்கள் தங்களுக்கிடையே வயது, பாலினம் மற்றும் தொழில் போன்றவற்றை அடிப்படையாக வைத்து குழுக்களை உருவாக்குவதற்கு விரும்புவார்கள்.
- ☐ குழந்தைகள் மற்றும் பெண்களுக்காக குழுக்களைத் தொடங்குவது ஒருவகையில் எளிதாக இருக்கலாம். குழந்தைகளும் பெண்களும் ஒன்று சேர்ந்து வருவதற்கு ஆர்வத்துடன் நேரம் ஒதுக்கி வந்துசேர்வார்கள். எது எப்படி இருந்தபோதிலும் இளைஞர்கள் மற்றும் ஆண்களை நாம் ஒதுக்கி விட்டுவிடக் கூடாது. அவர்களையும் இழுத்துப் பிடித்து கொண்டுவந்து சேர்க்க முயற்சி எடுக்கவேண்டும்.
- ☐ சாதி, சமயம் மற்றும் இனங்களைக் கடந்த உறுப்பினர்களைக் கொண்ட குழுக்களாகச் செயல்படுவது எவ்வளவு அருமையானது விரும்பத்தகுந்தது என்று பரிந்துரை செய்யுங்கள், வலியுறுத்துங்கள், ஏதாவது செய்து ஏற்றுக்கொள்ளும்படி செய்யுங்கள்.
- ☐ குழும உறுப்பினர்கள் ஒன்றுகூடி இந்தக் குழுவில் யார் யாரையெல்லாம் உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளலாம் என்பதையும், குழுவிற்கு என்ன பெயர் வைக்கலாம் என்பதையும், குழுவின் நோக்கங்கள் என்ன என்பதையும், குழவிற்கு யார் தலைமையேற்று நடத்தலாம் என்பதையும் முடிவுசெய்வதற்கான சூழலை உருவாக்கிக்கொடுங்கள்.
- ☐ ஒருவரோடு ஒருவர் பேசிப்பழகச் செய்வதற்காகவும், ஒருவர் மற்றவரிடமிருந்து கற்றுக்கொள்ளச்செய்வதற்காகவும், தங்களது மற்றும் பிறரது செயல்பாடுகளை விமர்சனக் கண்ணோட்டத்தோடு அலசி ஆராயத் தெரிந்துகொள்வதற்காகவும் சண்டை சச்சரவை உருவாக்காத வகையில் பயிற்சிவிளையாட்டுகளை ஏறபாடுசெய்யுங்கள்.
- ☐ நாம் முன்னெடுக்கின்ற எல்லாச் செயல்பாடுகளும் குழும உறுப்பினர்கள் விருப்பத்துடன் கலந்துகொண்டு நினைத்து மகிழக்கூடியதாகவும், பயனுள்ளதாக இருந்தது, பொருளுள்ளதாக இருந்தது, நல் மதிப்பீடுகளையும் கொள்கை கோட்பாடுகளையும் கற்றுக்கொடுக்கக் கூடியதாக இருந்தது என்று உணரக்கூடியதாகவும் அமைத்துக்கொள்ள வேண்டும்.
- ☐ எல்லோரும் கலந்துகொள்ள வழிவகைசெய்யுங்கள். தலைமையேற்பதற்கு ஊக்கப்படுத்துங்கள். சண்டை சச்சரவுகள் ஏற்படுகின்றபோது மென்மையாக பேச்சுவார்த்தை நடத்தி முடித்து வையுங்கள்.
- ☐ குழும உறுப்பினர்கள் தங்களுக்குள் எழுகின்ற மாறுபட்ட கருத்துக்கள், கண்ணோட்டங்கள் மற்றும் புரிதல்களை அடையாளம் கண்டுகொள்ளவும் அதனை ஏற்றுக்கொள்ளவும் வகைசெய்யுங்கள்.
- ☐ அனைவரும் உடன்படுகின்ற நிலையை நோக்கி உந்தித்தள்ளுங்கள். அவரவர் செய்ய வேண்டியது என்ன? அவரவர் பொறுப்புக்கள் என்ன? என்பதை வரையறுத்து ஒன்றித்து செயல்படும் நிலையை உருவாக்குங்கள்.
- ☐ குழுக்களை ஈடுபடுத்தி சிறு சிறு செயல்களை முன்னெடுக்கும் சூழ்நிலையை உருவாக்கிக்கொடுங்கள். அல்லது குழுவினரின் ஆர்வத்திற்கு ஏற்ப அவர்களுக்கு ஈடுபாடு உள்ள ஏதாவது ஒரு நிகழ்சியை



நடத்துவதற்கு ஒவ்வொரு குழுவிற்கும் ஏற்பாடு செய்துகொடுங்கள். சுய உதவிக் குழுக்களை அமைப்பது, குழந்தைகள் பாராளுமன்றம் அமைப்பது, இளைஞர்களைக் கொண்ட அமைதிப் படை அமைப்பது, சுற்றுப் புறச் சூழல் பாதுகாப்புப் படை கட்டுவது போன்றவற்றை நினைத்துப் பார்க்கலாம்.

- ☐ கொடுத்த வேலையை எடுத்து முடிப்பதற்கும் அந்த வெற்றியைக் கொண்டாடுவதற்கும் கற்றுக்கொடுங்கள். பெற்ற வெற்றிகளை அனைவருக்கும் முன்பாக அங்கீகரித்து பாராட்டக் கற்றுக்கொடுங்கள்.
- ☐ எடுத்துக்கொண்ட வேலையை முடிப்பது பெரும் போராட்டமாக மாறிவிட்டபோதும், வேலையைக் கைவிட்டுவிடாமல் அதனை நிறைவுசெய்வதற்காகப் பொறுப்பேற்றுச் செயல்படும் தன்மையை வளர்த்தெடுங்கள்.
- ☐ மேலே கண்ட காரியங்களையெல்லாம் முன்னெடுத்துக்கொண்டே குழும அடிப்படையிலான அமைப்பு ஒன்றையோ அமைப்புகளையோ உருவாக்கத் தொடங்குங்கள். இந்த அமைப்பு ஏற்கெனவே உருவாக்கப்பட்ட பல குழுக்களின் உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கலாம். கிராமப் பெரியவர்களான பெண்கள் மற்றும் ஆண்களைக் கொண்டதாக இருக்கலாம். அல்லது கிராம சபை மாதிரியைப் பின்பற்றி ஒட்டுமொத்த கிராமத்தையே உள்ளடக்கியதாக இருக்கலாம்.
- ☐ குழும அடிப்படையிலான அமைப்பு பிற குழுக்களின் உறுப்பினர்களோடும் அவர்கள் திட்டங்களோடும் நன்கு பொருந்தியுள்ளது என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.
- ☐ எல்லோருக்கும் பொதுவான அல்லது குறிப்பிட்ட குழும உறுப்பினர்கள் அனைவருக்குமான குடிதண்ணீர், குளித்தல் மற்றும் கழிப்பிட வசதிகள், மயானப் பாதை, மேம்பட்ட குடிமைப் பொருட்கள் வழங்கல் அமைப்பு, நலவாழ்விற்கான அடிப்படை வசதிகள், பிற பொதுவேலைகள் ஆகியவற்றிக்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்படுவதற்கு குழும அடிப்படையிலான அமைப்புகளுக்கு சூழ்நிலைகளை உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.
- ☐ (மேலே உள்ள அனைத்தையும் உங்களது சூழலுக்கு ஏற்ப நீங்கள் மாற்றியமைத்துக்கொண்டோ தேவையானவற்றை புதிதாகச் சேர்த்துக்கொண்டோ செயல்படலாம்.)

## உதவக்கூடிய சிறுதகவல்கள்

- ☐ ஒவ்வொரு குழுவிற்கும் தனித் தனியாக பெயர் வைப்பது முக்கியம். பெயர்கள் அடையாளத்தையும், செயல் முனைப்பையும், ஊக்கத்தையும் கொடுக்கின்றன.
- ☐ ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் தலைமைப் பொருப்புகளை மாற்றிக்கொள்ள ஊக்குவிக்க வேண்டும். அப்படிச் செய்யும்போதுதான் பலருக்கும் குழுமத்தை தலைமையேற்று நடத்துகின்ற வாய்ப்பு கிடைக்கும், குழுமத்தவர்கள் தங்களை அங்கீகரித்து மதிக்கின்றார்கள் என்கின்ற உணர்வு கிடைக்கும். கல்வியறிவு பெற்றவர்கள் மட்டுமே தலைமைப்பொறுப்பினை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது கிடையாது. குழுமத்திற்காக வேலைசெய்ய வேண்டும் என்கின்ற வேகமும் அர்ப்பணமும் இருக்கின்ற யார் வேண்டுமானாலும் தலைமைப் பொறுப்பில் அமர்த்தப்படலாம்.
- ☐ குழும உறுப்பினர்கள் தங்களது ஆளுமையை வளர்த்துக்கொள்ளவும், தலைமைப் பண்புகளைப் பெருக்கிக்கொள்ளவும், ஒருவரோடு ஒருவர் உறவாடும் மற்றும் தொடர்கொள்ளும் திறன்களை அதிகப்படுத்திக்கொள்ளவும் சிறு குழுக்களில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுங்கள்.
- ☐ குழுக்களில் உறுப்பினர்கள் கலந்துரையாடவும், வாதிடவும், குழுக்கள் அளவில் என்ன செயல்பாடுகளை அவர்கள் எடுத்துச்செய்வார்கள் என்று ஒரு மனதாக ஒரு முடிவுக்கு வரவும் வழியமைத்துக்கொடுக்க வேண்டும். சிறியதாக, சமாளித்துச் செய்து முடிக்கக்கூடியதான செயல்பாடுகளைக் கையில் எடுத்துச் செய்துமுடிக்க ஊக்கப்படுத்த வேண்டும்.
- ☐ செயல்பாட்டிற்கான சூழலை உருவாக்கிக் கொடுத்தல், வழிகாட்டி நெறிப்படுத்துதல், பயிற்றுவித்தல், பேச்சுவார்த்தை நடத்தி சரிசெய்துகொடுத்தல் போன்ற பலவிதமான வியூகங்களை நாம் பயன்படுத்திப் பார்க்கலாம்.
- ☐ புதிது புதிதாக, படைப்பாற்றலோடு, பொருளுள்ள வகையில் பயிற்சி விளையாட்டுகளையும் ஊக்கப்படுத்தும் அமர்வுகளையும் நடத்திக்கொடுங்கள். அந்தந்த வயதிற்கு ஏற்றாற்போன்ற விளையாட்டுக்களையும் குழுப் பயிற்சிகளையும் தெரிந்தெடுத்து நடத்த வேண்டும்.
- ☐ குழு உறுப்பினர்களை புதுப்புது கருத்துக்களை வெளிக்கொண்டுவரச்சொல்லி ஊக்குவிக்க வேண்டும். ஒவ்வொரு கருத்தாக எடுத்துக்கொண்டு எப்படி மெல்ல மெல்ல செயல்படுத்துவது என்று ஊக்குவிக்க வேண்டும். ஒவ்வொரு கருத்தையும் எந்த அளவிற்குத் தேவையோ அந்த அளவிற்கு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.
- ☐ சண்டை சச்சரவுகள் வரும்போது மென்மையாக பேசித்தீர்த்துக்கொள்ள வழிகாட்ட வேண்டும்.
- ☐ பலவேறு சிந்தனைகளை செயல்படுத்திய அனுபவங்களைக் குறிவைத்து நாம் செயல்படவேண்டும். மண்ணின் மைந்தர்களாக மக்களின் ஞானம் மற்றும் கூட்டு அறிவாற்றல் என்ன சொல்கின்றது என்பதை நாம் குறிவைத்து செயல்பட வேண்டும்.
- ☐ (மேலே உள்ள அனைத்தையும் உங்களது சூழலுக்கு ஏற்ப நீங்கள் மாற்றியமைத்துக்கொண்டோ தேவையானவற்றை புதிதாகச் சேர்த்துக்கொண்டோ செயல்படலாம்.)

## பயனுள்ள எச்சரிக்கைகள்

- ☐ ஊக்குனராகிய உங்களுடைய திறமைகளையும் தகுதிகளையும் ஊரறிய எடுத்துக்காட்டும் தளமாக குழுக்களைப் பயன்படுத்தாதீர்கள்.
- ☐ குழு உறுப்பினர்களை ஒன்றும் தெரியாதவர்களாக நினைத்துக்கொண்டு ஊக்குனராகிய உங்களுக்கு எல்லாம் தெரிந்ததுபோல அறிவுரைகளை அள்ளி வீசாதீர்கள்.
- ☐ ஒருபோதும் குழு உறுப்பினர்கள் செய்யும் தவறுகளைக் கொண்டு அவர்களைக் கேலிசெய்து இழிவுபடுத்தாதீர்கள். அவர்கள் மீது எரிச்சல் படாதீர்கள்.
- ☐ பலவேறு விதமான சிந்தனைகளையும், பலவேறு திட்டங்களையும் முன்மொழிவதை அனுமதியுங்கள். பிறகு குழவினர் ஒருமித்த கருத்துடன் ஏதாவது ஒரு சிந்தனையை அல்லது திட்டத்தை தெரிந்தெடுக்கும்படி அவர்களை வழிநடத்துங்கள்.
- ☐ குழு உறுப்பினர்களுக்கு ஏதாவது தெரியாதுபோனால் அதற்கு அவர்களின் படிப்பு அல்லது அவர்கள் சார்ந்த சமய பின்புலம் தான் காரணம் என்று கூறாதீர்கள்.
- ☐ ஒருங்கிணைப்பதற்கு எளிதாக இருக்கின்றது என்பதற்காக ஒரே சமயத்தவர்கள், ஒரே சாதிக்காரர்கள் அல்லது ஒரே இனத்தவர்கள் என்று தனித்த குழுக்களாக மக்களைக் கட்டாதீர்கள்.

- ☐ எந்த ஒரு குழுவையும் கூடி வரச்சொல்லி கட்டாயப்படுத்தாதீர்கள். எடுத்துச் சொல்லி ஊக்குவியுங்கள். என்ன நடக்கின்றது என்பதை கண்ணாறக் கண்டபிறகு மற்றவர்கள் வழிக்கு வருவார்கள்.
- ☐ மேலே உள்ள அனைத்தையும் உங்களது சூழலுக்கு ஏற்ப நீங்கள் மாற்றியமைத்துக்கொண்டோ தேவையானவற்றை புதிதாகச் சேர்த்துக்கொண்டோ செயல்படலாம்.

# நமது செயல்பாட்டுமுறை வேலைசெய்கின்றது என்பதற்கான அறிகுறிகள்

1. (இத்தனை) பெண்கள் குழுக்கள், (இத்தனை) குழந்தைகள் குழுக்கள், (இத்தனை) ஆண்கள் குழுக்கள், (இத்தனை) இளைஞர் மற்றும் இளம் பெண்கள் குழுக்கள் தொடர்ந்து கூட்டங்களில் பங்கேற்று அவர்களுக்குள் கலந்து பேசி வருகின்றார்கள்.
2. (இத்தனை) தொழில் சார்ந்த குழுக்கள், அதாவது குப்பை பொறுக்குபவர்கள், விவசாயிகள் மற்றும் கைவினைஞர்கள் போன்ற குழுக்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றனர்.
3. (இத்தனை) உறுப்பினர்கள் தலைமைப் பொறுப்பேற்கத் திறன்கள் உள்ளவர்கள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
4. (இத்தனை) குழுக்களில் தலைவர்கள் பிற சாதிகளையோ மதங்களையோ சார்ந்தவர்களாக உள்ளனர்.
5. நூற்றுக்கு (இத்தனை) குழுக்கள் சாதி சமயங்களைக் கடந்து இணைந்து பணியாற்றி வருகின்றனர்.
6. தலைவர்களில் நூற்றுக்கு (இத்தனை) பேர் வேகமும் அர்ப்பணமும் உள்ளவர்களாக இருக்கின்றனர்.
7. குழு உறுப்பினர்களில் நூற்றுக்கு (இத்தனை) பேர் குழுவாக இணைந்து வருவதன் நோக்கத்தைப் புரிந்துகொண்டிருக்கின்றோம் என்று உணர்ந்துள்ளார்கள்.
8. நூற்றுக்கு (இத்தனை) குழுக்கள் சிறிய சிறிய கூட்டுச்செயல்பாடுகளைத் தொடங்கியிருக்கின்றார்கள்.
9. நூற்றுக்கு (இத்தனை) குழுக்களில் தலைமைப்பொருப்பு சுழற்சி முறையில் மாற்றிக் கொடுக்கப்பட்டு வருகின்றது.
10. (இத்தனை) குழும அடிப்படையிலான அமைப்புகள் உருவாக்கப்பட்டு பணிகளைத் தொடங்கியுள்ளனர்.
11. (மேலே உள்ள அனைத்தையும் உங்களது சூழலுக்கு ஏற்ப நீங்கள் மாற்றியமைத்துக்கொண்டோ தேவையானவற்றை புதிதாகச் சேர்த்துக்கொண்டோ செயல்படலாம்.)

**குழுக்களின் உருவாக்கமும் செயலாக்கமும் - ஒரு மாதிரி**

| மகளிர் குழுக்களின் உருவாக்கமும் செயலாக்கமும் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | உருவாக்கப்பட்ட குழுக்களின் எண்ணிக்கை | உறுப்பினர்களின் எண்ணிக்கை | நூற்றுக்கு எத்தனை நாள் கூட்டங்களில் பங்கேற்றனர் | கலந்துரையாடிய சி-க்கல்களின் எண்ணி-ண்கை | முடிவு எடுக்கப்பட்ட செயல்பாடுகள் | நடைமுறைப்படுத்-தப்பட்ட செயல்பாடுகள் | கருத்து மோதல்களும் மறுப்புகளும் | தலித் மக்கள் பழ-ங்குடி மக்கள் மற்றும் சிறுபான்மையின தலை-லவர்களின் எண்ணி-க்கை | குறிப்புகள் |
| முதல் மாதம் | | | | | | | | | |
| இரண்ட-ாவது மாதம் | | | | | | | | | |
| மூன்றாவது மாதம் | | | | | | | | | |
| நான்காவது மாதம் | | | | | | | | | |
| ஐந்தாவது மாதம் | | | | | | | | | |

## சிந்திக்க சில கேள்விகளும் பகிர்வும்

1. பெண்கள், இளம் பெண்கள், இளம் ஆண்கள், ஆண்கள், குழந்தைகள் ஆகியோரில் யார் யார் குழு அமைப்பதைப்பற்றி ஆர்வமாக இருந்தனர்? ஏன்? யார் யார் தயக்கம் காட்டினார்கள்? ஏன்?
2. குழு அமைப்பது தொடர்பாக உறுப்பினர்களுக்கு மிகவும் அதிகமாக பிடித்திருந்தது என்ன? தாங்கள் ஒன்றுகூடி வருவதற்காக ஏதாவது ஒரு காரணத்தை அவர்கள் எடுத்துச் சொன்னார்களா? அந்தக் காரணம் என்ன?
3. மாறுபட்ட சாதி, சமய, இன, மொழி மற்றும் பண்பாட்டு பின்புலங்களில் இருந்து குழு உறுப்பினர்களை ஒன்று படுத்துவது எந்த அளவிற்கு எளிதாக இருந்தது அல்லது எந்த அளவிற்கு கடினமாக இருந்தது. ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொண்டார்களா? அல்லது ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டுக்கொண்டார்களா? ஒன்று சேர்ந்து வருவதற்குத் தடைகள் இருந்திருந்தால் அவற்றை ஒவ்வொரு குழுவும் எவ்வாறு தகர்த்து வெளிவந்தார்கள்.
4. குழு உறுப்பினர்கள் குழு கூட்டங்களை மகிழ்ச்சியானவையாகவும் பயனுள்ளனவாகவும் கண்டுகொண்டார்களா? எப்படி?
5. குழு உறுப்பினர்கள் ஒன்றுசேர்ந்து வருவதில் கஷ்ட்டங்களாகவும் சவாலானதாகவும் இருப்பதாக அவர்கள் சொன்னது அல்லது அவர்கள் அனுபவித்தது என்ன?
6. குழு உறுப்பினர்களால் என்னென்ன குழுச் செயல்பாடுகள் செய்ய வேண்டியவை என்று முடிவு எடுக்கப்பட்டன? குழு உறுப்பினர்கள் எந்தெந்த வகைகளில் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றினர்.
7. தலைமைப் பொருப்பை சுழற்சி முறையில் எடுத்துக்கொள்வதை குழு உறுப்பினர்கள் பாராட்டினார்களா? இப்படிச் செய்வதில் உள்ள பலங்கள் பலவீனங்கள் என்ன?
8. மேலே உள்ள அனைத்தையும் உங்களது சூழலுக்கு ஏற்ப நீங்கள் மாற்றியமைத்துக்கொண்டோ தேவையானவற்றை புதிதாகச் சேர்த்துக்கொண்டோ செயல்படலாம்.

## மாற்றுத்திறனாளிகளை சுய உதவிக் குழுக்களாக உருவாக்குவதில் வந்த பயன்கள்


திரு. ஜித்தேந்திரா உத்திரபிரதேசத்தின், கோரக்பூர் மாவட்டத்தில் ஒரு கிராமத்தில் வாழ்ந்துவருகின்றார். அவர் தனது உயர்கல்வியை நிறைவுசெய்வதற்கு இயலாமல் தவித்துப் போனார். அவரது சிக்கல்களை மாற்றுத்திறனாளி மக்கள் அமைப்பின் வழக்கமான ஒரு கூட்டத்தில் பகிர்ந்துகொண்டார். பூர்வாஞ்சல் கிராமின் சேவா சமிதியின் (PGSS) வழிகாட்டுதலின்படி பெங்களூருவில் உள்ள குழும அடிப்படையிலான மறுவாழ்வு மன்றம் (CBR) ஆதரவுடன் ஜித்தேந்திரா நிதி உதவி பெற்று தனது டிப்ளமோ இன் கம்ப்யூட்டர் அப்ளிகேசன் படிப்பை 2016 ல் நிறைவுசெய்கின்றார். அவர் 2017 ல் அவர் உறுப்பினராக இருந்த ஒரு சுய உதவிக் குழுவில் கடன்பெற்று தனது பி. எட் பட்டப்படிப்பை முடிக்கின்றார்.

இன்றுவரை திரு.ஜித்தேந்திரா அவர்கள் 75 மாற்றுத்திறனாளிகள் கழிப்பறை கட்டிக்கொள்வதற்கான அரசு நிதி உதவியைப் பெற்றுகொள்ள உதவிசெய்திருக்கின்றார். 10 பேர் மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு உதவித்தொகையைப் பெற்றுக்கொள்ள வழிசெய்திருக்கின்றார். 40 பேருக்கு மாற்றுத்திறனாளிகள் என்னும் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள உதவிசெய்திருக்கின்றார். 15 மாற்றுத் திறனாளிகள் ரயிலில் குறைந்த செலவில் பயணம் செய்வதற்கான அனுமதி அட்டையைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்களை நிரப்பி அனுப்பி வைப்பதற்கு உதவியிருக்கின்றார். திரு. ஜித்தேந்திரா அவர்கள் 2017 ம் ஆண்டு உலக மாற்றுத் திறனாளிகள் நாள் அன்று உதான் நிகழ்ச்சியில் சிறப்பான நிகழ்ச்சி தொகுப்பாளர் என்ற பரிசினைப் பெற்றுள்ளார்.

இதேபோல கல்கத்தாவின் டோங்ராவில் உள்ள சமூக செயல்பாட்டுக் குழு ஒன்றின் உறுப்பினர் ஒருவர் “நான் இப்போதெல்லாம் தொண்டு நிறுவன ஊக்குனர்களே வரவில்லை என்றாலும் சிறப்பாக கூட்டங்களை நடத்துகின்றேன். என்னையே நான் மதிக்கக் கற்றுக்கொண்டிருக்கின்றேன். குழுவினரிடையே நான் என்ன நினைக்கிறேன் என்பதை என்னால் எடுத்துச் சொல்ல முடிகின்றது. என்னைச் சூழ்ந்துள்ள எல்லோரும் என்னை மதிக்கின்றார்கள். என்னுடைய தேவைகளுக்கு எங்கே செல்ல வேண்டும், யாரைப் பார்க்க வேண்டும் என்பதை நான் தெரிந்துவைத்திருக்கின்றேன்.” என்கிறார்.

# 5

# விமர்சனக் கண்ணோட்டத்தைக் கட்டி எழுப்புவோம்



# விமர்சனக் கண்ணோட்டத்தைக் கட்டி எழுப்புவோம்:

## நான், எனது குழுமம், எனது சமூகம் இவற்றோடு எனது ஆளுமை, எனது தலைமைப்பண்பு மற்றும் எனது அறிவாற்றல் வளர்ச்சி

### நோக்கம்

இந்தப் படிநிலையின் நோக்கம் குழுக்களை தங்களது தனிப்பட்ட வாழ்வு, குடும்ப வாழ்வு, தாங்கள் வாழும் குழுமம், மற்றும் தனது சமூக அளவில் என்ன நடக்கின்றது ஏது நடக்கின்றது என்று நுணுக்கமாக ஆழமாகக் கூர்ந்து கவனிக்கும் முறையைக் கற்றுக்கொடுப்பதும் அதைச் செய்வதற்கு வழிநடத்துவதும் ஆகும். குழுக்கள் என்ன செய்ய வேண்டும்? சற்று நிற்க வேண்டும். அனைத்துச் செயல்பாடுகளையும் நிறுத்த வேண்டும். தங்களைச் சூழ்ந்து நிலவும் யதார்த்தத்தை, அது எப்படி அனைத்துவிதமான அபாரமான ஒருங்கிணைவுகளுடன் செயல்படுகின்றது என்பதை நிதானமாக உற்று நோக்க வேண்டும். இப்படிச் செய்யும்போது, குழுக்கள் தங்களைச் சுற்றி நடக்கக்கூடிய நல்லவையாகப் படுகின்றவற்றையெல்லாம், பொருளுள்ளதாகப் படுகின்றவற்றையெல்லாம் வியந்து பாராட்டுவார்கள். அதே போல அவர்களுடைய தனிப்பட்ட வாழ்விலும் அவர்களைச் சூழ்ந்து நிலவும் அனைத்திலும் இதுவரை மாற்ற முடியாதவை என்று அவர்களாகவே ஏற்றுக்கொண்டிருந்த சிலவற்றைக் கேள்விக்கு உட்படுத்துவார்கள். ஏன் இது இப்படி என்றும், ஏன் இப்படிச் செய்யக் கூடாது என்றும் கேள்விகளை எழுப்பி அவற்றிற்கான பதில்களைத் தேடிக்கண்டுபிடிப்பதற்கான ஆற்றலை வளர்த்தெடுப்பது இந்தக் கட்டத்தில் முதன்மையான செயல்பாடு ஆகும். குழுக்களின் உறுப்பினர்கள் தன்னைப் பற்றியும் அதாவது ‘ஒரு ஆளாக’ ‘ஒரு தலைவராக’ தான் எப்படி இருப்பது, இயங்குவது என்பதைப் பற்றிய புரிதலைப் பெற்றுக்கொள்ள வேண்டும். எப்படிப்பட்ட தலைவர்கள் ஒரு குழுமத்தின் வலிமையையும், ஒற்றுமையையும் வளர்த்தெடுக்கக்கூடியவர்களாக இருக்கின்றார்கள் என்பதையும் புரிந்துகொள்ளும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். தொடர்ச்சியாக குழு கூட்டங்களில் கலந்துகொள்ளும் குழு உறுப்பினர்கள் அவர்களுக்கு என்ன நடந்துகொண்டிருக்கின்றது என்பதை உறுதிப்படுத்திக்கொண்டு, தெளிவாக எடுத்துச்சொல்வதற்கு நாம் உதவி செய்ய வேண்டும். அத்தோடு மட்டும் அல்லாமல் நடக்கின்ற செயல்கள் எல்லாம் என்ன காரணங்களினால் இவ்வாறு நடந்துகொண்டிருக்கின்றன என்பதையும் கவனிக்கவும் எடுத்துச்சொல்லவும் அவர்களுக்கு நாம் உதவி செய்ய வேண்டும். கூடிப் பேசிப்பழகும் முறைகள் பற்றியும், எவ்வாறு யதார்த்தம் என்பது இந்த சமூகத்தால் உருவாக்கப்படுகின்றது என்பதைப் பற்றியும், குடும்பம், குழுமம் மற்றும் சமூகம் என்பது இன்றைய மாறிவரும் உலகில் என்னென்ன விதமாகச் செயல்படவேண்டும் என்று வகுக்கப்பட்டிருக்கின்றது, இது

என்னென்ன விதமான பயன்களை உருவாக்குகின்றது என்பதைப் பற்றியும் விமர்சனக் கண்ணோட்டத்தோடு தெரிந்துவைத்துக்கொள்வதற்கு நாம் அவர்களை வழிநடத்த வேண்டும்.

இந்தக் குறிப்பிட்ட கட்டத்தில் மேற்கண்ட செயல்முறைகளின் விளைவுகள் என்பது பலவாக இருக்கின்றன. அவை தனிப்பட்ட முறையில் ஆளுமை வளர்ச்சியில் இருந்து குழுமம் என்கின்ற அளவில் கூட்டு ஞானத்தைக் கட்டியெழுப்புவது வரை நீள்கின்றன. இந்த முறையில் குழும உறுப்பினர்கள் குடிமக்கள் என்கின்ற வகையில் தங்களது உரிமைகள் என்னென்ன என்பதைப்பற்றி தங்களது அறிவை வளர்த்துக்கொள்கின்றார்கள். அத்தோடு மட்டும் அல்லாமல் ஆய்வுக் கண்ணோட்டம் கொண்டும், விமர்சனக் கண்ணோட்டம் கொண்டும் தன்னையும் பிறரையும் தன்னைச் சுற்றி நடக்கும் அத்தனை காரியங்களையும் கூர்ந்து கவனித்துக் கண்டறிந்துகொள்வதற்கான ஆற்றலைப் பெற்றவர்களாகின்றார்கள்.

## காலக்கெடு

இது மிகவும் நுணுக்கமான ஒரு செயல்முறை. இந்தப் படிநிலையில் தன்னைப் பற்றிய ஆய்வும் சிந்தனையும் நிறைய தேவைப்படுகின்றது. இந்தப் படிநிலையை 'பொருந்திப் போகக்கூடிய, பலவிதமான ஆட்களுக்கான பல குழுக்களை உருவாக்கி செயல்படச்செய்து அதன் மூலம் குழுமத்தை அடிப்படையாகக் கொண்ட அமைப்புகளை உருவாக்குவது' என்னும் 3 ம் படிநிலையோடு இணைத்தே செயல்படுத்த வேண்டும். குழும அடிப்படையிலான அமைப்புகளை உருவாக்கும் செயல்பாடு என்பது குழுக்களாலேயே நடத்தப்பட வேண்டும். வெளியில் இருந்து அழுத்தங்கள் இல்லாமல் அது நடைபெற்றாக வேண்டும். மூன்றாவது படி மற்றும் நான்காவது படி ஆகிய இரண்டும் சேர்ந்து ஏறக்குறைய இரண்டு ஆண்டுகள் மற்றும் ஆறுமாதங்கள் ஆகலாம்.



# முன் நடத்திச் செல்லும் வழி

- தன்னையே கூர்ந்து உற்றுநோக்குவதில் தொடங்குங்கள். தனி ஆளாக தங்களையே இன்னும் சற்று ஆழமாகப் புரிந்துகொள்வதற்கு முயற்சிகளை மேற்கொள்ளுங்கள்.
- குழும உறுப்பினர்கள் தங்களைப் பற்றி என்ன சொல்கின்றார்கள், அவர்களுடைய பலம் என்ன, பயங்கள் என்ன, தடுமாற்றங்கள் என்ன, நம்பிக்கைகள் என்ன, கனவுகள் என்ன என்பதையும் அவர்கள் எந்த வகைகளில் எல்லாம் வளர ஆசைப்படுகின்றார்கள் என்பதைப் பற்றியும், பிற உறுப்பினர்களோடு கலந்துபேச வழிவகை அமைத்துக்கொடுங்கள்.
- தங்களது பலவேறு சிக்கல்களுக்கிடையில், பலவேறு சவால்களை எதிர்கொண்டு மக்களுக்காக சாதித்த, மற்றவர்களையும் சாதிக்கத் தூண்டுகோலாக இருக்கும் தனிநபர்களின் வாழ்க்கை வரலாற்று ஒளிப்பதிவுகளையோ அல்லது அவர்களின் கதைகளையோ குழும உறுப்பினர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.
- குழும உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும், பலவேறுவிதமான பாதகமான சூழல்களுக்கிடையில் தனிநபர்கள் வளரக்கூடிய, சாதனைகளைப் புரியக்கூடிய எண்ணற்ற வாய்ப்புகள் எப்படியெல்லாம் இருக்கின்றன என்பதை, அறிமுகப்படுத்த வேண்டும்.
- குடும்பம் மற்றும் பாலின அடிப்படையிலான பங்களிப்புகள் பற்றிய கலந்துரையாடல்களை அடுத்த கட்டமாகத் தொடங்கி நடத்த வேண்டும்.
- குடும்பங்களின் அமைப்புகளை மாற்றுவதன் நன்மை தீமைகளைப் பற்றி பலவிதமான கேள்விகளை எழுப்பி அதற்கான பதில்களைத் தேடலாம்.
- விமர்சனக் கண்ணோட்டத்துடன் புரிந்துகொள்வதற்கு குழும உறுப்பினர்களை பயிற்றுவிக்க வேண்டும். அதற்காக குடும்பத்தில் வெவ்வேறு குடும்ப உறுப்பினர்களுக்கிடையில் சமத்துவமான மற்றும் சமத்துவமற்ற நிலை இருப்பதைப் பற்றிய அவர்களது கண்ணோட்டத்தைப் பகிர்ந்துகொள்ளச் செய்யலாம். (ஆண்களும் பெண்களும், வேலைசெய்து பொருள் ஈட்டுபவர்களும் வேலை இல்லாததால் பொருள் ஈட்ட இயலாதவர்களும், ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும், மற்றும் குடும்பங்களுக்கு உள்ளேயே பெரும்பாலான சமயங்களில் ஒதுக்கப்பட்டு புறக்கணிக்கப்படுகின்ற மாற்றுத்திறனாளிகள், மனநிலை பாதிப்பிற்கு ஆளானவர்கள், விதவைகள், குடும்பத்தின் முதிய உறுப்பினர்கள்) ஏன் இப்படிப்பட்ட ஒரு நிலைமை இருக்கின்றது என்பதைப்பற்றி பேசச் சொல்லலாம்.
- குழும உறுப்பினர்களுக்கு பாலின பார்வையில் பாரம்பர்யமாக அல்லது வழக்கமாக இவர்கள்தான் இதைச் செய்தாக வேண்டும் என்றும் நிலை உள்ளதே! அதைப்பற்றி என்ன நினைக்கின்றீர்கள்? இந்த நிலை ஞாயமானது என்று கருதுகின்றீர்களா? அல்லது இது பாகுபடுத்தும் நிலை என்று கருதுகின்றீர்களா? இதில் எதையாவது மாற்றி அமைக்க வேண்டிய தேவை இருக்கின்றது என்று உணர்கின்றீர்களா? என்று கருத்துரை ஆற்ற வைக்கலாம்.
- குழுமம் மற்றும் சமுதாயத்தைப் பற்றிய கலந்துரையாடல்களை அடுத்த கட்டமாக குழும உறுப்பினர்களை மேற்கொள்ளச் செய்யலாம்.
- பாதிப்பிற்கு உள்ளாகக்கூடிய நிலை, வாய்ப்பு வசதி மறுக்கப்படும் நிலை, பாகுபடுத்தப்படுவது, ஒதுக்கித் தள்ளப்படுவது போன்ற அனுபவங்களை குழும உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் புரிந்துகொள்ளும் வகையில் நாம் ஏதாவது சூழ்நிலைகளை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். ஏன் குறிப்பிட்ட சில தனிநபர்கள் அல்லது குறிப்பிட்ட சில குழுக்கள் மட்டும் மற்றவர்களைவிட அதிகமான அளவிற்கு பாதிப்பிற்கு ஆளாகக்கூடியவர்களாக இருக்கின்றார்கள் என்று சண்டை சச்சரவு ஆகிவிடாத வகையில் கலந்துரையாடச் செய்ய வேண்டும்.
- குழுமத்திற்கு உள்ளேயே வாழுகின்ற, வசதி வாய்ப்பில்லாத மக்களைப்பற்றி நமது சிந்தனைகளைத் திருப்ப வேண்டும். குழு உறுப்பினர்கள் அவர்களது நிலைமையை மாற்றுவதற்காக, மேம்படுத்துவதற்காக இந்தக் குழவினால் ஏதாவது செய்ய முடியும் என்று நினைக்கின்றார்களா என்று பகிர்ந்துகொள்ளச் செய்து அலசி ஆராய்ந்து ஏதாவது முடிவுகளை எடுக்கலாம்.
- கல்வி, பணிசெய்யும் இடத்தில் எதிர்கொள்ளும் ஆபத்துக்கள், நலவாழ்வு, தண்ணீர், சுத்தம் சுகாதாரம், தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களின் வேலை பற்றிய தகவல்கள், குழுமத்தில் வேலை வாய்ப்புகள் ஆகியவைபற்றி எவையெல்லாம் நன்முறையில் செயல்பட்டு வருகின்றன என்பதைப் பற்றியும், எவையெல்லாம் மேம்படுத்தப்படவேண்டியதாக உள்ளன என்பதைப்பற்றியும் கலந்துரையாடலாம்.
- ஆளுமை வளர்ச்சி, தலைமைப் பயிற்சி, குழு உருவாக்கம் மற்றும் நோக்கம், குடும்ப வாழ்க்கை, சமூக உறவுகள், சமூக பண்பாட்டு ஆய்வுகள், பாலின ஆய்வு, சமூக, அரசியல் மற்றும் ஆட்சி அமைப்புகளைப் புரிந்துகொள்ளுதல் போன்ற தலைப்புகளில் குழு உறுப்பினர்களுக்கு அவர்களுக்கு போதுமான தகவல் கொடுத்து அவர்களது பொது அறிவை மேம்படுத்துவதற்காக கருத்தமர்வுகளை ஏற்பாடு செய்ய வேண்டும்.
- அரசியலமைப்புச் சட்டம் என்ன சொல்கின்றது, அடிப்படைச் சட்டங்கள், மனித உரிமைகள்( குடிமை, அரசியல், சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டு உரிமைகள்), மனித மாண்பு பற்றிய கருத்தமர்வுகளை ஏற்பாடு செய்து இவை பற்றிய கலந்துரையாடலை ஊக்குவிக்க வேண்டும். அது மட்டும் அல்லாமல்

குழும உறுப்பினர்கள் அவர்களது மனித உரிமைகள் மதிக்கப்படுகின்றனவா? அவர்களது மனித உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றனவா? அவர்களது மனித உரிமைகளை அவர்கள் நிறைவாக அனுபவிக்கின்றார்களா? என்று தங்களுக்குள் கலந்து பேசி தேவையான முடிவுகளை எடுத்துச் செயல்பட வழிவகை செய்தல் வேண்டும்.

- (மேலே உள்ள அனைத்தையும் உங்களது சூழலுக்கு ஏற்ப நீங்கள் மாற்றியமைத்துக்கொண்டோ தேவையானவற்றை புதிதாகச் சேர்த்துக்கொண்டோ செயல்படலாம்.)

# உதவக்கூடிய சில சிறு தகவல்கள்

- ஒவ்வொருவரும் தங்களைப்பற்றி சிந்திக்கவும் பேசிக்கொள்ளவும் கொடுக்கப்படும் வாய்ப்பு அவர்களது தன் மதிப்பையும் தன்னம்பிக்கையையும் அதிகப்படுத்த வேண்டும். அத்தோடு அவர்களது பயத்தை குறிப்பாக பத்து பேருக்கு முன்னால் எழுந்து நின்று பேசுவதற்கு இருக்கும் பயத்தை, புதிய ஆட்களைச் சந்திப்பதில் இருக்கும் பயத்தை மேற்கொள்ள உதவியாக இருக்க வேண்டும்.
- புதிதாகவும், படைப்பாற்றலோடு கூடியதாகவும் இந்த அமர்வுகள் அமையட்டும். பயிற்சிகள் அவர்களது மூளைக்கு மட்டும் வேலை கொடுக்கக்கூடியதாக இருக்கக் கூடாது. அவர்களது இதயத்தையும் தொடும் அளவிற்கு பயிற்சிகளை அமைத்துக்கொள்ள வேண்டும். அவர்களது உணர்வுகளையும் மனதையும் தொடுகின்ற அளவிற்கு பயிற்சிகளை அமைத்துக்கொள்ள வேண்டும். குழு உறுப்பினர்களை படங்களை வரைவதற்கும், குறு நாடகங்கள், பெரு நாடகங்களை நடத்திக்காட்டுவதற்கும் கேட்டுக்கொள்ளலாம். ஊக்கமூட்டும் ஒளிப்படங்களைப் போட்டுக்காட்டி அவர்களது உணர்வுகளையும் கண்ணோட்டங்களையும் வெளிக்கொண்டுவர உதவலாம்.
- அந்தக் குழுமத்திற்கு உள்ளே இருந்தோ அல்லது குழுமத்திற்கு வெளியில் இருந்தோ கருத்துரையாளர்களை அழைத்து பலவேறு தலைப்புகளில் அவர்களது கண்ணோட்டத்தைப் பகிர்ந்துகொள்ளச் செய்யலாம்.
- குழுமத்திற்குள் உறுப்பினர்களுக்கு இடையே பல படிநிலையான மரியாதைக்குரிய தன்மை இருக்கின்றது என்பதை நாம் தெரிந்துகொண்டிருக்க வேண்டும். அது தொடர்பாக என்ன பேசுகின்றார்கள், என்ன உணர்கின்றார்கள் என்று நாம் விழிப்பாயிருக்க வேண்டும்.
- எல்லா கலந்துரையாடல்களையும் குழு உறுப்பினர்களின் வாழ்க்கை அனுபவங்களை வைத்துக்கொண்டு பொருத்திப் பார்க்கலாம். அத்தோடு உளவியல் பார்வையும் உளவியல் அனுபவங்களையும் நோக்கியதாக இந்தக் கலந்துரையாடல்கள் இருக்கலாம்.
- பங்கேற்பவர்கள் என்ன சொல்ல வருகின்றார்கள் என்பதைக் கணித்து 'இதைத்தான் சொல்ல வருகின்றீர்களா?' என்று நாம் கேட்டுக்கொள்ளலாம்.
- நமது பணியில் பராக்கை உருவாக்குபவர்கள், வேறு பக்கமாக திசை திருப்புபவர்கள், எந்தக் காரியத்தையும் நடக்க விடாமல் சூழ்ச்சியாக வீழ்த்த முனைபவர்கள் ஆகியோர்களை தனித்தனியாகப் பார்த்துப் பேசி சரிக்கட்ட வேண்டும். அவர்களை குழுவில் வைத்துக்கொண்டு கடிந்துகொள்ளக் கூடாது.
- நாம் ஈடுபடும் ஒவ்வொரு பயிற்சியும் ஏன் இந்தக் குழுமத்தில் இன்னின்ன செயல்கள் எல்லாம் இப்படி இப்படி இருக்கின்றன என்று நமது கவனத்தை ஒருங்கிணைத்து செயல்பட வேண்டும்.
- (மேலே உள்ள அனைத்தையும் உங்களது சூழலுக்கு ஏற்ப நீங்கள் மாற்றியமைத்துக்கொண்டோ தேவையானவற்றை புதிதாகச் சேர்த்துக்கொண்டோ செயல்படலாம்.)

# பயனுள்ள சில எச்சரிக்கைகள்

- சிக்கல்கள் எழும்போது யாருக்கும் சார்பாகப் பேசாதீர்கள். யாரையும் தீர்ப்பிடாதீர்கள். உறுப்பினர்களை இன்னும் சற்று ஆழமாகச் சிக்கலை அலசி ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று ஊக்குவியுங்கள்.
- தங்களிடையே இருக்கின்ற வேறுபாடுகளை அவர்கள் எடுத்துக்கூற முற்படும்போது அதனைத் தடுக்காதீர்கள் அல்லது புறக்கணிக்காதீர்கள்.
- வாதங்கள் சண்டை சச்சரவாக மாறிவிடாமல் பார்த்துக்கொள்ளுங்கள். ஒட்டுமொத்த குழுவும் அந்த சிக்கலைப்பற்றி இன்னும் கொஞ்சம் யோசித்து முடிவெடுக்கலாம் என்று கிடப்பில் போட்டுவைக்கலாம். பின்னர் அந்தக் கலந்துரையாடலைத் தொடரலாம்.
- எல்லா காரியங்களிலும் குழு உடன்பட்டே செல்ல வேண்டும் என்பது கிடையாது. ஒருசில வேளைகளில் இந்த காரியத்தில் நாங்கள் உடன்படவில்லை என்று நிறுத்திக்கொள்ளலாம்.
- 'சூழ்நிலையை உருவாக்கிக்கொடுப்பதும்' 'ஊக்குவிப்பதும்' தான் என்னுடைய வேலை என்று உணர்ந்தபடி செயலாற்றுங்கள். அறிவையும், ஆய்வையும் கொடுப்பது அல்லது திணிப்பது உங்களுடைய வேலை இல்லை.
- கலந்துரையாடல்கள் வழக்கமாக தலைமையேற்று செயல்படும் சிலராலோ அல்லது ஒருசில வாய்ப்பும்

வசதியும் பெற்ற உறுப்பினர்களாலோ ஒரு பக்கமாகத் தள்ளிக்கொண்டு போய்விடாதபடி அல்லது அமுக்கப்பட்டுவிடாதபடி உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

- பங்கேற்பாளர்கள் மேல் கருத்து மழை பொழிந்து அவர்களை மூழ்கடித்துவிடாதீர்கள். கருத்துக்களை திணிக்காதீர்கள்.
- ஒருபோதும் ‘செய்ய வேண்டியவை’ என்று ஒரு பட்டியல் தயாரிப்பதையோ, ‘புகார்’ பட்டியல் தயாரிப்பதையோ செய்யாதீர்கள
- (மேலே உள்ள அனைத்தையும் உங்களது சூழலுக்கு ஏற்ப நீங்கள் மாற்றியமைத்துக்கொண்டோ தேவையானவற்றை புதிதாகச் சேர்த்துக்கொண்டோ செயல்படலாம்.)

# நமது செயல்பாட்டு முறை வேலை செய்கின்றது என்பதற்கான எடுத்துக் காட்டுகள்

1. (இத்தனை) உறுப்பினர்கள் முன்பு இருந்ததைவிடக் கூடுதலாகத் தன்னம்பிக்கையும் சுய மதிப்பும் உள்ளவர்களாக இருக்கின்றார்கள்.
2. நூற்றுக்கு (இத்தனை) உறுப்பினர்கள் தங்களையும் தாங்கள் வாழும் குழுமத்தையும் பற்றி விமர்சனக் கண்ணோட்டத்துடன் கூடிய புரிதலைக் கொண்டிருக்கின்றார்கள்.
3. நூற்றுக்கு (இத்தனை) உறுப்பினர்கள் தங்களது கண்ணோட்டத்தை எந்தவிதமான அச்சமோ, கூச்சமோ இன்றி தத்தம் குழுக்களில் வெளிப்படுத்தும் ஆற்றல் பெற்றவர்களாக இருக்கின்றார்கள்.
4. (இத்தனை) குழு உறுப்பினர்கள் தங்களது குடும்பங்களில் குடும்ப உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற இடத்தையும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற பணியையும் மறு ஆய்வு செய்கின்றார்கள்.
5. (இத்தனை) குழுக்கள் தங்களுடைய குழுமத்தில் பாதிப்பிற்கு உள்ளாகக்கூடிய உறுப்பினர்களை அடையாளம் கண்டுபிடித்துக் கொடுத்திருக்கின்றார்கள்.
6. (இத்தனை) குழுக்கள் தங்கள் குழுமங்களில் கட்டாயமாக உடனடியாகத் தீர்க்க வேண்டிய சிக்கல்களை அடையாளம் கண்டு பட்டியலிட்டு வைத்திருக்கின்றார்கள்.
7. நூற்றுக்கு (இத்தனை) உறுப்பினர்கள் தங்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக்கொள்ள தாங்கள் ஏதாவது செய்தே ஆகவேண்டும் என்று உணர்ந்திருக்கின்றார்கள்.
8. நூற்றுக்கு (இத்தனை) உறுப்பினர்கள் குழுமத்தை அடிப்படையாகக் கொண்ட அமைப்பினை வலுப்படுத்திக்கொள்வதன் முக்கியத்தையும், குழுமத்தை வழிநடத்துதலில் குழுமத்தை அடிப்படையாகக் கொண்ட அமைப்பின் பங்கு என்ன என்பதையும் புரிந்துகொண்டவர்களாக இருக்கின்றார்கள்.
9. (இத்தனை) உறுப்பினர்கள் குழுக்களை அமைக்கும்போது பலவிதமான ஆட்களையும் கலந்து குழுக்களை அமைப்பதைத்தான் சரியான பாதையில் போவதாகக் கருதுகின்றார்கள். அப்படிச் செய்வது சாதி மற்றும் மதத்தை கடந்த செயலாகக் கருதுகின்றார்கள்.
10. (மேலே உள்ள அனைத்தையும் உங்களது சூழலுக்கு ஏற்ப நீங்கள் மாற்றியமைத்துக்கொண்டோ தேவையானவற்றை புதிதாகச் சேர்த்துக்கொண்டோ செயல்படலாம்.)

**தங்கள் உள்மனதை கூர்ந்து கவனிப்பதும், ஆய்வுசெய்வதும்**

| வரிசை எண் | சமத்துவம் இல்லாத தன்மை/பாதிப்படையக்கூடியவர்கள்/பாகுபடுத்தப்படுகின்றவர் என்று அடையாளப்படுத்தப்படுகின்றார்கள் கீழ்கண்ட காரணிகளின் அடிப்படையில் | | | | மாற்றத்தைக் காண்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்று உறுப்பினர்கள் நினைக்கின்றார்கள்? |
|---|---|---|---|---|---|
| | சாதி | சமயம் | பாலினம் | மாற்றுத் திறன்கள் | |
| பெண்கள் | | | | | |
| இளம் பெண்கள் | | | | | |
| இளம் ஆண்கள் | | | | | |
| குழந்தைகள் | | | | | |
| ஆண்கள் | | | | | |
| குழும அடிப்படையிலான அமைப்பு | | | | | |



**சிக்கல்களை எடுத்துச்சொல்**

| வரிசை எண் | சிக்கல்களை எடுத்துச்சொல் | | |
|---|---|---|---|
| | தனி நபர்களின் சிக்கல்கள் | குழுமத்திற்கு பொதுவான சிக்கல்கள் | உறுப்பினர்கள் எடுத்தச்சொல்ல சிரமப்பட்ட சிக்கல்கள் |
| பெண்கள் | | | |
| இளம் பெண்கள் | | | |
| இளம் ஆண்கள் | | | |
| குழந்தைகள் | | | |
| ஆண்கள் | | | |
| குழும அடிப்படையிலான அமைப்புகள் | | | |

## சிந்திக்க சில கேள்விகளும் பகிர்வும்

1. குழுவில் அமைதியாகவும் கூச்சத்துடனும் இருக்கின்ற உறுப்பினர்கள் குடும்பத்தில் அல்லது குழுமத்தில் என்ன நிலையில் இருக்கின்றார்கள். அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றார்கள்?
2. குழுமத்தின் அனைத்து உறுப்பினர்களையும் பங்கெடுத்துச்கொள்ளச் செய்வதற்காக நீங்கள் பயன்படுத்திய வியூகம் என்ன?

3. தங்களைச் சூழ்ந்துள்ள காரியங்களை குழும உறுப்பினர்கள் விமர்சனக் கண்ணோட்டத்தோடு உற்று நோக்கச் செய்வதற்கு நீங்கள் ஏதாவது தடைகளைச் சந்தித்தீர்களா? ஆம் என்றால், அந்தத் தடைகளை எப்படி மேற்கொண்டீர்கள்?
4. ஆளுமை வளர்ச்சிப் பயிற்சியின் எந்த அம்சங்கள் தனி நபர்களின் மற்றும் குழுக்களின் தலைமைப் பண்பு வளர்ச்சிக்கு இட்டுச்சென்றன ? இது எப்படி நடக்கின்றது?
5. குழும உறுப்பினர்கள் பலவேறு தலைப்புகளில் கருத்துரைகள் வழங்கப்பட்டதை எப்படி எடுத்துக்கொண்டார்கள்? அவர்கள் கையாலாகாதவர்களாக உணர்ந்தார்களா? கோபப்பட்டார்களா? இன்றைய நிலவரத்தை மாற்றியே ஆகவேண்டும் என்று உறுதி பூண்டார்களா?
6. குழுக்கள் தங்களுக்குள் தொடர்ந்து குறிப்பிட்ட இடைவெளியில் சந்திக்கத் தொடங்கியதைப்பார்த்த பின்பு குழும உறுப்பினர்கள் மத்தியில் என்ன பேசிக்கொண்டார்கள்?
7. மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்பதை அடையாளம் கண்டுகொள்ளும் அளவிற்கு தங்களது பணிச் சூழலில் நடந்தது என்ன?
8. (மேலே உள்ள அனைத்தையும் உங்களது சூழலுக்கு ஏற்ப நீங்கள் மாற்றியமைத்துக்கொண்டோ தேவையானவற்றை புதிதாகச் சேர்த்துக்கொண்டோ செயல்படலாம்.)

## கடத்திச்செல்லப்பட்ட எனது உடன்பிறந்தவளை நான் காப்பாற்றினேன்.

செல்வி. நபீசா காத்தூண் என்னும் 13 வயது கடந்த மாணவர். குழந்தைகள் குழுவில் உறுப்பினராக இருந்தவர் இவ்வாறு எடுத்துச்சொல்கின்றார்.

என்னுடைய தந்தையும் ரபீக் என்பவரும் நேருக்கு நேராக மோதிக்கொண்டார்கள். அதில் கடுப்பாகிப்போன ரபீக் 16 வயதான என்னுடைய அக்காளைக் கடத்திச் சென்றுவிட்டார். இது எனது அக்கா ரயில்வே லைனின் அடுத்த பகுதிக்கு குடிதண்ணீர் பிடிப்பதற்காகப் போய் இருந்தபோது கடத்தப்பட்டார். அவரை மயக்கம் போட வைத்துவிட்டார்கள். அவரை பர்கா போட்டு மறைத்துவிட்டார்கள். உத்திரப்பிரதேசத்திற்குக் கொண்டுபோய் மூன்று லட்சம் ரூபாய்களுக்கு விலைபேசி விற்றுவிட்டார்கள். அந்தப் பகுதியில் இருந்த குடிப்பவர்களுக்கான விடுதியில் எனது அக்காளை கொடுமைப்படுத்தி, சிகரெட்டை வைத்து அவருடைய உடலெங்கும் சூடு வைத்து அரைகுறை ஆடைகளை அணிந்துகொண்டு பாருக்கு குடிக்க வரும் கூட்டத்திற்கு முன்பாக நடனம் ஆட வற்புறுத்தினார்கள். இதற்கிடையில் ரபீக் குழும உறுப்பினர்களிடம் எனது அக்கா யாரோ ஒருவனுடன் ஓடிப்போய்விட்டதாக கதைசொல்லி அவர்களை நம்ப வைக்க முயற்சிசெய்துகொண்டிருந்தார்.

உள்ளூர் காவல் நிலையத்தில் ரபீக் அவர்கள் மீது எந்தக் குற்றச்சாட்டையும் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள். நான் என்னுடைய குழுக் கூட்டம் ஒன்றில் கேள்விப்பட்டிருந்த, நாம் உதவி கேட்கக்கூடிய, குழந்தைகள் பாதுகாப்பிற்காக நாம் உதவி கேட்டுப் பேசக்கூடிய உதவி எண்( 1098) ஒன்றை எனது அம்மாவிடம் கொடுத்தேன். அவர் துணிவோடு அந்த எண்ணை அழைத்தார், எதிர்முனையில் இருந்த யாரோ ஒருவருடன் அவர் பேசிக்கொண்டிருந்தார். ஒருசில பேர் உடனடியாக எங்களது வீட்டிற்கு வந்தார்கள். எனது அம்மா தன்னுடைய புகார் ஒன்றை எழுதி அனுப்புவதற்கு அவர்கள் உதவிசெய்தார்கள். இதற்கிடையில் என்னுடைய சகோதரி எப்படியோ ஒரு அலைபேசியைக் கண்டு அதனை எடுத்துக்கொண்டு தன்னை யாரெல்லாம் கடத்திச்சென்றார்கள் என்று அவர்களை அடையாளம் காட்டிவிட்டார். குழந்தைகள் பாதுகாப்பு சேவை மையமும் உள்ளூர் காவல்துறையினரும் என்னுடைய அக்கா இருந்த இடத்தை எப்படியோ கண்டுபிடித்துவிட்டார்கள். அது நாங்கள் இருந்த இடத்தில் இருந்து 800 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கின்ற லக்னோ என்னும் ஒரு நகரம். அவர்கள் உத்திரப்பிரதேச காவல்துறையினரைத் தொடர்புகொண்டார்கள். எல்லோருமாகச் சேர்ந்து எப்படியோ என்னுடைய அக்கா இருந்த இடத்தைக் கண்டுபிடித்து அவரை பத்திரமாக எங்கள் வீட்டிற்கு அனுப்பிவைத்துவிட்டார்கள். என்னுடைய அக்காவைக் கடத்திக்கொண்டு போனவனைப் பிடித்து என்னுடைய அக்கா கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் சிறையில் அடைத்துவிட்டார்கள்.

6

# சமூகச் சிக்கல்களை அடையாளம் காண்பதும் முன்னுரிமைப்படுத்துவதும்



# சமூகச் சிக்கல்களை அடையாளம் காண்பதும் முன்னுரிமைப்படுத்துவதும்

## நோக்கம்

குழுமத்தின் எதிர்கால முடிவுகள் எல்லாவற்றிற்கும் அடித்தளமாக அமைவது அந்தக் குழுமம் சமூகச் சிக்கல்களை எப்படி கணக்கில் எடுத்துக்கொள்கின்றது என்பதுதான். சமூகச் சிக்கல்களைக் கணக்கில் எடுத்துக்கொள்வது என்பது அந்தச் சமூகத்தில் எவையெல்லாம் மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்று அடையாளம் கண்டுகொள்வதோடு மட்டும் அல்லாமல் அந்தச் சமூகத்தின் ஒட்டுமொத்த வளங்களையும் அடையாளம் கண்டுகொண்டு அவை எங்கே யாரிடம் எப்போதெல்லாம் கிடைக்கும் என்பதையும் கண்டுபிடித்துக் குறித்து வைத்துக்கொள்வதும் ஆகும். ஒரு சிக்கல் தனிநபர் ஒருவராலோ, ஒரு குழுவினாலோ அல்லது ஒட்டுமொத்த குழுமத்தாலோ உணரப்படலாம். அப்படி உணரப்படுகின்ற சிக்கல் உணவு, தண்ணீர், சுத்தம் சுகாதாரம் என்ற தேவைகளாகவோ அல்லது சாதி மற்றும் சமய பண்மைச் சூழலில் அமைதியுடன் அக்கம்பக்கமாக வாழ்வது என்ற சூழலமைவாகவோ இருக்கலாம். வளங்கள் என்று நாம் சொல்லும்போது தனிநபர்கள், அமைப்புகள், நிறுவனங்கள், கட்டிடங்கள், பொதுச் சொத்துக்கள் போன்றவைகளையும், தொழில்முனைவோர், நிதிஉதவிசெய்வோர் போன்றவர்களையும், உள்ளடக்கியதாக இருக்கலாம்.

நாம் மேற்கண்டவாறு செயல்படுவதன் நோக்கம் குழுமத்தைப் பற்றிய ஒட்டுமொத்தமான யதார்த்தமான ஒரு பார்வையை நாம் பெற்றுக்கொள்வற்காகத்தான். சமூக சிக்கல்களை அடையாளம் கண்டுகொள்வது என்பது இன்றைக்கு இந்தக் குழுமம் எப்படி இருக்கின்றது? இது எதிர்காலத்தில் எப்படி இருக்க வேண்டும்? இந்த இரண்டு நிலைகளுக்கும் இடைவெளி எந்த அளவிற்கு இருக்கின்றது? என்பதை நாம் புரிந்துகொள்வதற்கு துணையாக இருக்கின்றது. இதற்கான நடைமுறை பரந்த அளவில் தரவுகளைச் சேகரிப்பது, நடந்தது என்ன என்பதைத் துல்லியமாகத் தெரிந்து ஆவணப்படுத்திக்கொள்வது, எத்தனை பேர், எவ்வளவு பணம், எத்தனை முறை ஒரு குறிப்பிட்ட செயல் நடந்தது போன்ற எண்ணிக்கைகளை சேகரித்துக்கொள்வது. யதார்த்த நிலையைப் படம்பிடித்து வைத்துக்கொள்வது, பாதிப்பிற்குள்ளாகக்கூடியவர்கள் யார், பாதிப்பிற்குள்ளாகக்கூடியவை என்ன என்று பட்டியலிட்டுக்கொள்வது. குழுமத்தின் நினைவு உள்ள காலம் வரை நடந்தது என்ன ஏது என்ற வரலாற்றை எடுத்து வைத்துக்கொள்வது, குழுமத்தின் அனுபவங்களைத் தொகுத்துக்கொள்வது என்பதோடு இவை எல்லாவற்றையும் ஆய்வுக்கு உட்படுத்தி எல்லோருமாகச் சேர்ந்து இந்தக் குறிப்பிட்ட காரியங்கள்தான் நமது குழுமத்திற்கு இன்றைக்குத் தேவை என்ற ஒரு பொதுவான புரிதலை அடைவது. ஊக்குனர்கள் குழும உறுப்பினர்களுக்கு இந்த நடைமுறையில் குழுமத்தினரிடம் இல்லாத பொருத்தமான செய்திகளையும் தரவுகளையும் பரிந்துரைத்து உதவிசெய்யலாம்.

எல்லா சமூக சிக்கல்களையும் ஒரே நேரத்தில் கையில் எடுத்துக்கொண்டு செயல்படுவது என்பது நடைமுறைச் சாத்தியமாகாது, யாராலும் செய்யமுடியாது. எனவே சமூகச் சிக்கல்களை அடையாளம் கண்டுகொண்ட பிறகு, குழும உறுப்பினர்கள் கூடி ஒரு முன்னுரிமைப் பட்டியலைத் தயாரிக்க வேண்டும். எந்தச் சிக்கல்கள் அவசரமானவை, பாதிப்பிற்கு உள்ளாகக்கூடிய தனிநபர்கள், குழுக்கள் அல்லது ஒட்டுமொத்த குழுமத்திற்காக உடனடியாகக் கவனிக்கப்படவேண்டியவை என்று வரிசைப்படுத்திக்கொள்ள வேண்டும். இப்படி சமூகச் சிக்கல்களை முன்னுரிமை வரிசைப்படுத்திக்கொள்கின்றபோது குழும உறுப்பினர்கள் ஒவ்வொரு சிக்கலையும் எப்படி கையாளப்போகின்றோம் என்கின்ற திட்டம் ஒன்றைப் போட்டுக்கொள்ளவும், சிக்கல்களின் போக்கினைக் கணக்கில் எடுத்துக்கொண்டு குழும உறுப்பினர்களின் திறன்கள் மற்றும் அனுபவங்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டு குறிப்பிட்ட சிக்கல்களை குறிப்பிட்ட உறுப்பினர்கள் கையாள வேண்டும் என்று பொறுப்புகளையும் பகிர்ந்துகொள்ளவும் வழிகாட்ட வேண்டும்.

இந்தப் படிநிலையின் ஒட்டுமொத்தமான பயன்கள் என்ன? இன்னின்ன சமூக சிக்கல்கள் எங்களது குழுமத்தில் இன்னின்ன வடிவத்தில் இன்னின்ன இடத்தில் இப்படிஇப்படி இருக்கின்றன என்று தேடிப்பார்த்து கண்டுபிடித்து எடுத்து வைத்துக்கொள்கின்றோம். அப்படி குழுமத்தினர் எடுத்து வைத்துக்கொண்டுள்ள சிக்கல்களை முன்னுரிமை வரிசைப்படுத்தி அதனை குழுமத்தின் வளங்களோடு பொருத்திப் பார்க்கின்றோம். பின்னர் எதிர்காலத்தில் நாம் இந்தச் சிக்கல்களை எப்படிக் கையாளப்போகின்றோம், என்னென்ன திட்டங்கள் வைத்திருக்கின்றோம் என்பதை கவனத்தில் எடுத்துக்கொண்டு குழும உறுப்பினர்களிடம் அப்படிப்பட்ட செயல்பாடுகளுக்கான பொறுப்புகளைப் பகிர்ந்து கொடுக்கின்றோம்.

# காலக்கெடு

சமூகச் சிக்கல்களை அடையாளம் காண்பது என்பது ஒரேமுறையில் செய்துமுடித்துவிடக்கூடிய ஒரு செயல் அல்ல. குழும உறுப்பினர்கள் சமூக யதார்த்தத்தை ஆழமாகப் புரிந்துகொள்கின்றபோது, எவ்வாறு மாற்றத்தை மற்றும் முன்னேற்றத்தை நோக்கி குழுமத்தை மெல்ல மெல்ல சரியான பாதையில் நடத்திச் செல்லவேண்டும் என்று கண்டுகொள்கின்றபோது மீண்டும் ஒருமுறை செய்ய வேண்டி இருக்கும். சமூகச் சிக்கல்களைப் பட்டியலிட்டு அவற்றில் எவையெல்லாம் முன்னுரிமை அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று ஒத்த கருத்தை எட்டுவதற்கான இந்தச் செயல்முறையைத் தொடங்குவதற்கு மூன்று அல்லது நான்கு முறையாவது குழும உறுப்பினர்கள் கூடி வரவேண்டியிருக்கும்.

**'வேண்டும்' 'வேண்டாம்' என்று சொல்ல கற்றுக் கொள்வோம்**

| ✗ | ✓ |
|---|---|
| இலவசங்கள் - தொலைக்காட்சிப் பெட்டி, கிரைண்டர், மிக்ஸி, ஊழல், தரகர்கள் | குழந்தைகளுக்கு கல்வி சுத்தம் சுகாதாரம் குடிதண்ணீர்/தண்ணீர் மின்சாரம் கழிப்பிட வசதி சாலைகள் பாதுகாப்பு காவல் |

# செயல்பாட்டு வழிமுறைகள்

- குழும உறுப்பினர்களைக் கூட்டி அவர்கள் சமூகச் சிக்கல்களாகக் கருதுபவை என்ன? ஏன் அவற்றை சமூகச் சிக்கல்களாகக் கருதுகின்றார்கள்? என்று வெளிப்படையாக உரையாட அழைப்பு விடுக்க வேண்டும். தரவுகள், உண்மை நிகழ்வுகள், எண்ணிச்சொல்லக்கூடியவை, யதார்த்த நிலைகள், பாதிப்பிற்குள்ளாகக்கூடிய பொருட்கள் மற்றும் ஆட்கள், வரலாறு மற்றும் அனுபவம் என்று ஒவ்வொருவரும் அவர்களின் உள்ளங்களில் உள்ளவற்றை வெளியே எடுத்துக் கொட்டினால் குழுமத்தின் பெரும்பாலான உறுப்பினர்கள் சிக்கல்கள், யதார்த்தநிலை, புரிதல் ஆகியவற்றில் ஒரே நிலைக்கு வந்துசேர வாய்ப்பாக இருக்கும்.
- சிக்கல்களை கையில் எடுத்து அலசி ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதில் கிடைக்கும் செய்திகளை கலந்துரையாடலுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். வெளியில் இருந்து கண்ணோட்டங்களைத் திணிக்காமல், செயல்முறை – ஆய்வு வழிமுறையைப் பின்பற்ற வேண்டும். செயல்முறை – ஆய்வு என்பது அறிவுத்தளத்தில் இருந்துமட்டும் கோட்பாடுகளை உருவாக்காமல் செயல்முறைகளில் இருந்து கோட்பாடுகளை உருவாக்குவதை அடித்தளமாகக் கொண்டது. இந்த அணுகுமுறை ஆய்வு வழிமுறை, கள ஆய்வு, செயல்முறை அனுபவம் ஆகியவற்றைப் பொருத்தியதாக அமைகின்றது. ஆவணப்படுத்துதல், நமது செயல்கள் என்ன விதமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன என்பதற்கான ஆதாரங்களைக்

கொண்டு தொடர்ந்து செயல்படுவது என்பது இன்றைக்கு சமூகப் பணியில் நமது செயல்பாடுகளின் பயன்களை அளவிடுவதற்கான அன்றாடச் செயல்பாடாக இருந்துவருகின்றன. (Osborne 2002; Heinrich 2002).

- பங்கேற்பு முறைக் கற்றலும் செயல்பாடுகளும் (PLA) மற்றும் பங்கேற்பு முறை கிராம மதிப்பீடு(PRA) போன்ற தொழில் நுட்பங்கள், குறிப்பிட்ட நபர்களைக் கொண்ட குழு கலந்துரையாடல், குறுக்குமறுக்கு நடை போன்றவை குழுமத்தைப் பற்றிய 'பரந்த அளவிலான பார்வையைப்' பெற்றுக்கொள்ளவும் முக்கியமான சிக்கல்களை அடையாளம் கண்டுகொள்ளவும் நன்கு பயன்தரும் வகையில் பயன்படுத்தப்படலாம். பங்கேற்பு முறைக் கற்றலும் செயல்பாடுகளும் (PLA) மற்றும் பங்கேற்பு முறை கிராம மதிப்பீடு(PRA) போன்றவை குழுமங்களைப் பற்றித் தெரிந்துகொள்வதற்கும், குழுமங்களில் ஈடுபட்டு செயல்படுவதற்கும் பங்கேற்பு மற்றும் காட்சிப்படுத்துதல் மற்றும் இயல்பான நேர்காணல் முறைகளை உள்ளடக்கிய அணுகுமுறைகள். இப்படிப்பட்ட முறைகள் கூட்டாக அலசி ஆராய்ந்து பார்ப்பதற்கும் கற்றுக்கொள்வதற்கும் சூழ்நிலையை அமைத்துக்கொடுக்கின்றன. இப்படிப்பட்ட அணுகுமுறைகளை, சிக்கல்களை அடையாளம் கண்டுகொள்ளவும், திட்டமிடவும், திட்டச் செயல்பாடுகளை மேற்பார்வையிடவும், ஒட்டுமொத்த செயல்பாடுகளையும் நிகழ்ச்சிகளையும் மதிப்பீடுசெய்யவும் பயன்படுத்திக் கொள்ளலாம். கலந்து ஆலோசிப்பது என்கின்ற நிலையைத் தாண்டி இந்த அணுகுமுறைகள் தங்களது வாழ்க்கையையே மாற்றியமைக்கக்கூடிய வகையில் தலையீடுசெய்து சிக்கல்களைக் கையாள்வதில் மும்முரமாகப் பங்கேற்பதை ஆதரித்து ஊக்குவிக்கின்றன.
- எங்கிருந்து என்னென்ன வளங்களை நாம் ஏற்கெனவே கண்டறிந்த சிக்கல்களை மேற்கொள்வதற்காகப் பெற்றுப் பயன்படுத்த முடியும் என்று வளங்களைக் கண்டறியும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.
- நாம் முன்னுரிமை கொடுத்து செயல்படுத்த வேண்டிய சிக்கல்களை வரிசைப்படுத்துவதற்கு முன்னதாக என்னென்ன காரண காரியங்களைக் கொண்டு இப்படிப்பட்ட வரிசைப்படுத்துதலைச் செய்யப்போகின்றோம் என்று ஒரு பட்டியலை தயாரித்துக்கொள்வது சரியானதாக இருக்கும். குழுமத்தில் அதிகமான உறுப்பினர்களைப் பாதிக்கும் ஒரு சிக்கல், குழுமத்தில் பாதிப்பிற்கு உள்ளாகக்கூடியவர்களுக்கு முக்கியமாகப் படுகின்ற ஒரு தேவை, குழுமத்தின் திறன்களையும், குழுமத்திடம் உள்ள வளங்களையும் வைத்துக்கொண்டு கண்டிப்பாகச் சரிசெய்து முடிக்கக்கூடிய ஒரு சிக்கல். குழும உறுப்பினர்களில் பெரும்பாலான பேரை இணைந்து பணியாற்றச்செய்யக்கூடிய ஒரு சிக்கல். அல்லது குழுமத்திற்கு வெளியே போய் உதவி தேடாமல் நம்மிடம் உள்ளதை வைத்தே கடுமையான போராட்டம் இன்றி செய்து முடிக்கக்கூடிய ஒரு சிக்கல். இப்படிப்பட்ட காரண காரியங்களை வைத்துக்கொண்டு வரிசைப்படுத்த முயற்சி செய்யுங்கள்.
- மேற்கண்ட சிக்கல்களை எப்படிக் கையாள்வது? நம்மிடம் உள்ள வளங்கள் போதுமானதாக இருக்கின்றதா? ஒரு மாற்றத்தைக் கொண்டுவருவதற்கு நாம் அடுத்தடுத்து செய்ய வேண்டியவை என்ன? என்ற கேள்விகளை எழுப்பி ஒரு கலந்துரையாடலை உருவாக்க வேண்டும். இப்படி சிக்கலை அலசி ஆராய்ந்து பார்ப்பதை வெளிப்படையானதாக பங்கேற்பு உடையதாக மாற்றிக்கொள்ள முடியும். செய்து முடித்து விடலாம் என்னும் நேர்மறை எண்ணத்தை உருவாக்க முயற்சி எடுங்கள்.
- குழும செயல்பாடுகளுக்கு ஒரு அட்டவணையைத் தயார் செய்யுங்கள். குறிப்பிட்ட செயல்பாடு, அளந்து பார்க்கக்கூடிய வகையிலானது, செய்து முடிக்கக்கூடியது, பொருத்தமானது, ஒரு காலக்கெடுவிற்குள் செய்யக் கூடியது என்கின்ற (SMART) கோட்பாடுகளை மனதில் வைத்துக்கொண்டு அந்தப் பட்டியலைத் தயார் செய்யுங்கள். ஒவ்வொரு செயலுக்கும் யார் பொறுப்பு என்பதையும் தெளிவுபடுத்துங்கள். யார் இந்தச் செயல்பாட்டை மேற்பார்வையிடுவார் இந்த குறிப்பிட்ட செயல்பாடு நடந்துகொண்டிருக்கின்றது என்பதை உறுதிப்படுத்திக்கொள்வதற்கான வழிமுறை என்ன என்பதையும் குறித்துக்கொள்ளுங்கள். நாம் போட்ட திட்டங்கள் திட்டமிட்டபடி நடக்கின்றன என்பதை எப்போது எப்படி திருப்பிப் பார்க்கப் போகின்றோம் என்பதையும் குறித்துக்கொள்ளுங்கள்.
- உறுப்பினர்கள் எவ்வெப்போது என்னென்ன செய்யவேண்டியிருக்கின்றது என்ற ஒரு பட்டியலைத் தயாரித்துக்கொள்வதற்கு உதவிசெய்யுங்கள். அப்படி ஒரு பட்டியல் இருந்தால் எல்லோருக்கும் தொடக்கத்தில் இருந்து என்ன நடந்துகொண்டிருக்கின்றது அது எப்படிப் போகும், எந்தப் படிநிலைகளையெல்லாம் கடந்துபோகும் என்பதையும், ஒரு படியில் இருந்து அடுத்த படிநிலைக்கு என்ன தொடர்பு இருக்கின்றது என்பதையும் தெரிந்துகொண்டு புரிந்துகொண்டு தாங்கள் செய்ய வேண்டியது என்ன என்பதை கணக்கில் எடுத்துக்கொண்டு செயல்பட உதவியாக இருக்கும். இப்படிச் செய்யும்போது இந்தவிதமான திட்டமிடும் வழிமுறையை நான் செய்தேன், நாங்கள் செய்தோம் இது எங்களுடைய திட்டமிடும் வழிமுறை என்று உரிமை கொண்டாடும் நிலைமையை உருவாக்கித் தர முடியும்.
- செயல்பாடுகளுக்கு பொறுப்பு ஏற்றுக்கொள்ள முன்வரும்போது, உறுப்பினர்கள் தத்தம் திறன்களுக்கும் செயலாற்றல்களுக்கும் செய்ய வேண்டிய செயல்பாட்டிற்கும் எந்த அளவு பொருத்தம் இருக்கின்றது என்பதை உறுதிப்படுத்திக்கொண்டு அந்தப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள வழிநடத்துங்கள்.




- செயல்பாடுகளை முன்னெடுத்துச்செல்ல பொறுப்பேற்றுக்கொண்டவர்களுக்கு தொடர்ந்து வழிகாட்டுங்கள், ஊக்குவித்து ஆதரவு கொடுங்கள், தொழில்நுட்ப அளவில் அவர்களுக்கு தேவையானதை செய்துகொடுத்து, சுட்டிக்காட்டி ஆதரவாக இருங்கள்.
- இந்தக் குழுக்கள் தோல்வி அடையும் போது துவண்டுவிடாமல் இருக்க தோல்விகளை வளர்ச்சிப் பாதையில் தவிர்க்க இயலாதவைகளாக ஏற்றுக்கொள்ள ஊக்கப்படுத்துங்கள். தேவையற்ற பதட்டம் தவிர்க்கப்பட வேண்டும். வெற்றியடைவதும் செய்து முடிப்பதும் நல்லதுதான். அதே வேளையில் நாம் போதுமான அளவு பயிற்சி பெற்றுக்கொண்டோமா? போதுமான அளவு திட்டமிட்டோமா? ஒரு குழுவாக நாம் மேற்கொள்ளும் சிக்கல்களைக் கையாள்வதற்குப் புதுப்புது வழிவகைகளைக் கற்றுக்கொண்டோமா? என்பவைகளைத்தான் முதன்மைப்படுத்த வேண்டும்.
- (மேற்கண்டவைகளை உங்களுடைய சூழ்நிலைக்கேற்ற மாற்றியோ, புதிதாக உருவாக்கியோ பயன்படுத்திக்கொள்ளுங்கள்.)

## உதவக்கூடிய சிறு தகவல்கள்

- ஒவ்வொரு குழுமமும் அதற்கே உரித்தான தேவைகளையும், அதற்கே சொந்தமான வளங்களையும் கொண்டது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். அத்தோடு ஒவ்வொரு குழுமமும் அதற்கே உரித்தான பண்பாடும், அதற்கே உரித்தான ஒரு சமூக அமைப்பையும், வரலாற்றையும், வலுவையும், மோதல்களையும் கொண்டதாக அமைந்து மேற்கூறிய அனைத்தும் இணைந்து வரையறுக்கும் ஒரு உறவுப் பின்னலைக் கொண்டது என்பதை நாம் புரிந்துகொண்டே ஆக வேண்டும். அவர்களுடைய அடையாளத்தைப் பற்றி கவனமாக இருங்கள். அவர்களுடைய தனிப்பட்ட அடையாளம் அவர்களுடைய சமூக உறவுகளிலும் சமூக அமைப்புகளிலும் வெளிப்படுகின்றது என்பதைப்பற்றி கவனமாக இருங்கள்.
- குழுமங்களின் சூழ்நிலைகளை நன்கு தெரிந்த அதுபற்றி போதுமான தகவல்கள் வைத்திருக்கும் அரசு அதிகாரிகள், அனுபவம் உள்ளவர்கள், உள்ளூர் தலைவர்கள் போன்றவர்களைக் கொண்டுவந்து குழும உறுப்பினர்களிடையே பேச வைக்கலாம். குழும உறுப்பினர்களுக்கு பொதுவாக இந்தச் சிக்கல்களில் ஈடுபடாதவர்கள் என்ன சொல்கின்றார்கள் என்கின்ற பார்வை கிடைக்கும். உண்மை நிலை என்ன,

என்ன மாதிரியான வாய்ப்புகள் நமக்கு உள்ளன என்பதை விருப்பு வெறுப்பு இல்லாமல் புரிந்துகொள்ள முடியும். எது எப்படி இருந்தாலும், யார் என்ன சொன்னாலும் இறுதி முடிவு குழும உறுப்பினர்கள் மட்டுமே கூடி எடுத்தாக வேண்டும்.

- குழுமத்தின் ஒட்டுமொத்தமான நிலை என்ன, குழுமத்திற்கு உள்ளும், குழுமத்தைச் சுற்றிலும் என்ன சிக்கல்கள் நடந்துகொண்டிருக்கின்றன என்பதைப் பெரும்பாலான குழும உறுப்பினர்கள் புரிந்துகொண்டார்கள் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். இப்படிச் செய்துவிட்டால் தேவையற்ற சண்டை சச்சரவுகளைத் தவிர்த்துக்கொள்ளலாம்.
- முன்னுரிமை வரிசைப்படுத்துவது என்பது மிக முக்கியமான சிக்கல்களை அடையாளம் காண்பதோடு மட்டும் நின்றுவிடாது. அது குழுமத்தின் செயலாற்றல், திறன்கள், ஆர்வம், குழுமத்தினருக்கு இந்தச் சிக்கல்களை எதிர்கொள்வதற்கு அதை மேற்கொள்ள செயல்படுவதற்கு தேவையான நேரமும் ஆற்றலும் இருக்கின்றதா என்பதையெல்லாம் பொருத்திப் பார்ப்பதனையும் உள்ளடக்கும்.
- குழுமத்தில் கலந்துபேசும்போது எல்லோரும் சொல்ல வேண்டிய சொல்ல விரும்புகிற எல்லாவற்றையும் எடுத்துச் சொல்வதற்கும் எல்லோரும் மற்றவர்கள் சொல்வதைக் காதில் போட்டுக்கொள்வதற்கும் நாம் வழிவகை செய்ய வேண்டும்.
- ஒருசில குழும உறுப்பினர்களுக்கு குழுமத்திற்குள் என்னென்ன வளங்கள் இருக்கின்றது என்பதும், குழுமத்திற்கு வெளியே நாம் பெற்றுப் பயன்படுத்தக்கூடிய அளவில் என்னென்ன வளங்கள் இருக்கின்றன, என்னென்ன வாய்ப்பு வசதிகள் இருக்கின்றன என்பதும் தெரிந்திருக்கும். இந்தத் தகவல்களை குழும உறுப்பினர்கள் அனைவருக்கும் முன்பாக எடுத்து வைக்க ஆவண செய்ய வேண்டும்.
- புதிதாக தலைமைப்பொறுப்பேற்பதற்கு யாரெல்லாம் தயாராகி வருகின்றார்கள் என்பதை கவனமுடன் பார்த்துத் தெரிந்துகொண்டு அவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு தலைமையேற்றுச் செயல்படுவதற்கான வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்து ஒவ்வொருவரும் அவர்களால் எந்த அளவிற்கு சிறப்பாகச் செயல்பட முடியுமோ அந்த அளவிற்கு சிறப்பாகச் செயல்பட வழிவகை செய்ய வேண்டும்.
- ஓவ்வொரு குழுவும் அவர்களது ஆர்வத்திற்கும் அவர்களது செயல்திறனிற்கும் எற்றபடி அவர்களுக்கே உரிய செயல்திட்டங்களைப் வகுத்துக்கொள்வதற்கு ஊக்குவிக்கப்பட வேண்டும்.
- திட்டம் தீட்டுவதற்கான ஒரு செயல்முறை குழும உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களையும், ஆசைகளையும், அவர்களது பயங்களையும் எல்லோருக்கும் முன்பாக எடுத்துச்சொல்வதற்கு ஒரு வாய்ப்பை அமைத்துத் தருகின்றது. அதற்கு மேலாக ஒரு நல்ல திட்டம் நாம் எளிதாக தொடர்ந்து செயல்படுவதற்கான வழி வகைகளை அமைத்துக் கொடுக்கின்றது.
- (மேலே உள்ளவைகளை உங்களுடைய சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றியோ அல்லது புதிதாக உருவாக்கியோ பயன்படுத்திக்கொள்ளுங்கள்.)

# பயனுள்ள சில எச்சரிக்கைகள்

- ஒரே நேரத்தில் பல சிக்கல்களைக் கையில் எடுத்துக்கொண்டு செயல்படுவதை ஊக்குவிக்காதீர்கள்.
- குழும உறுப்பினர்களின் வேகத்திற்கேற்ப காரியங்களை நகர்த்திக்கொண்டு போகவேண்டும். அவசரப்படுத்தாதீர்கள். சில குழுக்கள் மற்ற குழுக்களைவிட சற்று கூடுதல் நேரம் எடுத்துக்கொண்டு செயல்படுவார்கள்.
- மிகவும் முக்கியமான சிக்கல் என்று நீங்கள் நினைப்பதையோ அல்லது வழிகாட்டும் அமைப்பு கருதுவதையோ குழும உறுப்பினர்கள் முன்னுரிமை கொடுத்துக் கையாள வேண்டிய சிக்கல் என்று கருதாமல் போக வாய்ப்பு இருக்கின்றது . குழுமத்தினரின் முடிவுகளை மதித்து ஏற்றுக்கொள்ளுங்கள்.
- ஊக்குனர்களாக இருப்பவர்கள், மக்களை ஊக்குவிக்க வேண்டும், வழிநடத்த வேண்டும், அவர்களுக்குத் தேவையான தொழில்நுட்ப ஆதரவைக் கொடுக்க வேண்டும், என்ன செய்வது எப்படிச் செய்வது என்று சொல்லிக்கொடுக்க வேண்டும். அதே நேரத்தில் குழுமத்தினரிடம் இருந்து வெளிப்படாத சிந்தனைகளை அவர்கள் மீது திணிக்கக் கூடாது. அவர்களை இந்தச் செயல்பாட்டு முறையில் இழுத்துக்கொண்டு போகக் கூடாது. அவர்கள் அவர்களுக்கே உரிய வேகத்தில், நேரத்தில் செயல்பட அனுமதிக்க வேண்டும்.
- மக்களுக்குப் புரியும் வண்ணம் பேச வேண்டும். வல்லுனர்களின் வார்த்தைகளைப் போட்டுத் தாக்கக்கூடாது. அது குழும உறுப்பினர்களிடையே சங்கடங்களை உருவாக்கிவிடும்.
- (மேலே கொடுக்கப்பட்ட காரியங்களை குழுமத்தின் சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றியோ அல்லது புதிதாக உருவாக்கியோ பயன்படுத்திக்கொள்ளுங்கள்.)

# நமது செயல்பாட்டு முறை வேலைசெய்கின்றது என்பதற்கான எடுத்துக்காட்டுகள்

1. நூற்றுக்கு (இத்தனை) குழுக்கள் குழுமத்தின் ஒட்டுமொத்தமான சூழ்நிலையைப் பற்றிய ஆய்வையும் அதன் யதார்த்தங்களையும் ஏற்றுக்கொள்கின்றார்கள்.
2. நூற்றுக்கு (இத்தனை) குழுக்கள் சிக்கல்களை அடையாளம் கண்டுகொண்டார்கள். நூற்றுக்கு (இத்தனை) குழுக்கள் சிக்கல்களின் முன்னுரிமைச் செயல்பாட்டுப் பட்டியலைத் தயார்செய்துவிட்டார்கள்.
3. நூற்றுக்கு (இத்தனை) உறுப்பினர்கள் குழுமங்களின் வளங்களைக் கண்டறிந்து கணக்கில் எடுத்துக்கொள்வது தாங்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களை எப்படி எதிர்கொள்ளலாம் என்கின்ற தெளிவினைத் தங்களுக்குக் கொடுத்ததாகச் சொன்னார்கள்.
4. சிக்கல்களை செயல்பாட்டு முன்னுரிமை வரிசைப்படுத்தியதும், வளங்களைக் கண்டுபிடித்து கணக்கில் எடுத்துக்கொண்டதும் குழுக்களுக்குப் புதுத் தெம்மைக் கொடுத்திருக்கின்றது, கூட்டு அர்ப்பணத்தை அதிகப்படுத்தியிருக்கின்றது.
5. நூற்றுக்கு (இத்தனை) குழுக்களில் உறுப்பினர்கள் சமூகச் சிக்கல்க்ளை அடையாளம் கண்டு முன்னுரிமைப்படுத்தும் செயல்முறையில் முழுமையாகப் பங்கேற்றார்கள்
6. நூற்றுக்கு (இத்தனை) குழுக்களில் சிக்கல்களை முன்னுரிமை வரிசைப்படுத்துதலில் சண்டை சச்சரவுகள் இருந்தன. அப்படிச் சண்டை சச்சரவு ஏற்பட்ட இடங்களில் நூற்றுக்கு (இத்தனை) குழுக்கள் சுமுகமாக, எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் சச்சரவுகளைத் தீர்த்துக்கொண்டார்கள்.
7. நூற்றுக்கு (இத்தனை) குழுக்கள் தங்களது செயல்பாட்டு அட்டவணைகளைத் தயாரித்துவிட்டார்கள்.
8. (மேலே சொன்னவைகளில் உங்கள் குழுமத்தின் சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றியமைத்தோ புதிதாக உருவாக்கியோ பயன்படுத்திக்கொள்ளுங்கள்.)

**சிக்கல்களை அடையாளம் கண்டுகொள்ளுதலும், முன்னுரிமை வரிசைப்படுத்துதலும்**

| வரிசை எண் | சிக்கல்களை அடையாளம் கண்டுகொள்ளுதல் | | சிக்கல்களை முன்னுரிமை வரிசைப்படுத்துதல் | |
|---|---|---|---|---|
| | தனிநபர் அளவிலான சிக்கல்கள் | முன்னுரிமைப் படுத்தப்பட்ட மூன்று சிக்கல்கள் | குழும அளவிலான சிக்கல்கள் | முன்னுரிமைப் படுத்தப்பட்ட மூன்று சிக்கல்கள் |
| பெண்கள் | | | | |
| இளம் பெண்கள் | | | | |
| இளம் ஆண்கள் | | | | |
| குழந்தைகள் | | | | |
| ஆண்கள் | | | | |
| குழுமம் சார்ந்த அமைப்புகள் | | | | |

**செயல்பாட்டு திட்ட அட்டவணை**

| செயல்பாட்டு திட்ட அட்டவணை | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வரிசை எண் | செயல்கள் விபரம் (SMART) | நம்மிடம் இருக்கும் திட்டசெயல்பாட்டிற்குத் தேவையான வளங்கள் | திட்ட செயல்பாட்டிற்குப் பொறுப்பாளர்கள் | எப்போது திட்டச் செயல்பாடு நிறைவடையும்? எப்போதெல்லாம் வேலை நடைபெறும். | திட்ட செயல்பாட்டு மேற்பார்வை | ஆய்வு |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

**செயல்பாடுகளின் கால அட்டவணை**

| செயல்பாடுகளின் கால அட்டவணை | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வரிசை எண் | செயல்பாடுகள் பற்றிய தகவல்கள் (**SMART**) | சனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜுன் |
| 1 | xxx | xxx | | | | | |
| 2 | xxx | xxx | xxx | | | | |
| 3 | xxx | | xxx | | | | |
| 4 | xxx | | xxx | xxx | xxx | | |
| 5 | xxx | | | | | xxx | xxx |

# சிந்திக்க சில கேள்விகளும் பகிர்வும்

1. குழும உறுப்பினர்கள் சமூகச் சிக்கல்களை அடையாளம் காண முற்பட்டபோது அவர்களுக்குக் கிடைத்த அனுபவங்கள் என்ன? அது சவாலாக இருந்ததா அல்லது சந்தோசமானதாக இருந்ததா? எடுத்துக்காட்டுகளுடன் விளக்கிச் சொல்லுங்கள்.
2. ஒரு சாராருக்கு நன்மையானது வேறொரு சாராருக்கு தீமையானது என்னும் நிலை இருந்ததா? ஒரு சாரார் மற்றொரு சாராரை மேலாதிக்கம் செய்யும் நிலை இருந்ததா? ஒருசிலர் மற்ற எல்லோராலும் ஒதுக்கப்படும் நிலை இருந்ததா? ஆம் என்றால் இந்த நிலைமைகள் எப்படி கையாளப்பட்டன?
3. சிக்கல்களை முன்னுரிமை வரிசைப்படுத்துவதற்காக உருவாக்கிக்கொண்ட பலவேறு அம்சங்கள் கொண்ட பட்டியலில் என்னவெல்லாம் இருந்தது?
4. குழும உறுப்பினர்கள் வழக்கத்தைவிட அதிகமான நேரம் பேசுவதற்காக எடுத்துக்கொண்ட போது உங்களுக்கு எப்படி இருந்தது? அதனை எப்படி கையாண்டீர்கள்?
5. தாங்கள் எதிர்கொள்ள வேண்டிய சிக்கல்களை அடையாளம் கண்டு முன்னுரிமை வரிசைப்படுத்தியபோது குழுமத்தின் ஒட்டுமொத்த மனநிலை எப்படி இருந்தது.
6. (மேலே கண்டவற்றை உங்களுடைய சூழ்நிலைக்கு ஏற்றவாறு மாற்றியோ புதிதாக அமைத்துகொண்டோ வேலைசெய்யலாம்.)

# நுணுகித் திட்டமிடுவது என்பது ஒட்டுமொத்தமாக மாற்றி யோசிக்க வைத்தது

கிருபா என்னும் ஒரு அமைப்பின் பணியாளரான திரு. சந்தோஷ் அவர்கள் "நுணுகித் திட்டமிடுவதும், குழுமத்தினர் தாங்களே முன்னின்று இந்தத் திட்டங்களை இறுதி செய்வதும், உறுதி செய்வதும் உஜ்ஜைன் பகுதியில் மக்கள் மாத்தி யோசிக்கும் ஒரு அற்புதமான சூழலை உருவாக்கியது. ஒவ்வொரு கிராமக் குழுமமும் அவர்களுக்கென்ற திட்டங்களை அவர்களே உருவாக்கிக்கொள்ளும் சூழ்நிலை உருவாக்கிக் கொடுக்கப்பட்டது. திட்டங்களின் பட்டியல் ஒன்றைத் தயாரித்த பிறகு, குழும உறுப்பினர்கள் மிகவும் அவரசரமான சிக்கல்கள் என்னென்ன என்று அடையாளம் காட்டினார்கள். பல நேரங்களில் இந்த அவசரமான சிக்கல் என்பது கிராமத்தில் தலித் குடியிருப்புகளுக்குப் போய்வர சரியான பாதை இல்லாததாக இருக்கும். அல்லது அவர்களது சுடுகாட்டுக்குப் பாதை இல்லாததாக இருக்கும். ஒட்டுமொத்த கிராமத்திற்கான தண்ணீர் ஒரு சிக்கலாக இருக்கும்.

ஒட்டுமொத்த குழுமமும் இணைந்து இந்தத் திட்டங்களைத் தீட்டிய காரணத்தால், பல கிராமங்களில், ராஜ்புத் பெண்கள் தலித் பெண்களோடு இணைந்து தலித் மக்கள் வாழும் பகுதிக்கு சரியான சாலை வசதி வேண்டும் என்று போராட முன்வந்தார்கள். தலித் பெண்களை உயர் சாதிப் பெண்கள் ஆதரிப்பார்கள் என்பது நாங்கள் வாழ்ந்த பகுதியில் சில ஆண்டுகளுக்கு முன்னால் கற்பனையில் கூட காணமுடியாத ஒன்றாக இருந்தது." என்று நெஞ்சை நிமிர்த்திச் சொன்னார். கிராமங்களில் பெண்கள், அவர்கள் போட்ட 16 திட்டங்களில் 6 திட்டங்களை ஏற்கெனவே செய்துமுடித்துவிட்டோம் என்று பெருமிதத்தோடு பேசிக்கொண்டார்கள். நகர்ப்புறங்களிலும் இதே போன்ற அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்கள். அங்கே சமயங்களைக் கடந்து குழும உறுப்பினர்களைப் பிற சமய உறுப்பினர்கள் ஆதரித்தார்கள் என்கின்றது ஆய்வு. குழுமங்களில் கூடி கூட்டாக திட்டங்களை முன்னுரிமை வரிசைப்படுத்தியது குழும உறுப்பினர்கள் இணைந்து வேலைசெய்வதில் ஒரு பெரும் தாக்கத்தை உண்டாக்கியிருப்பதாக பலரும் பகிர்ந்துகொண்டார்கள்.

7

# வாழ்வாதாரத்திற்கான வாய்ப்புகளை விரிவுபடுத்திக் கொள்ளுதல் மற்றும் அதற்கான கடமை உள்ளவர்களோடு தொடர்பு மற்றும் செயல்பாடுகளை மேம்படுத்துதல்.



# வாழ்வாதாரத்திற்கான வாய்ப்புகளை விரிவுபடுத்திக்கொள்ளுதல் மற்றும் அதற்கான கடமை உள்ளவர்களோடு தொடர்பு மற்றும் செயல்பாடுகளை மேம்படுத்துதல்.

## நோக்கம்

இந்த நடவடிக்கையின் நோக்கம் 'வளர்ச்சி முறையில்' இருந்து 'உரிமை அடிப்படையிலான சமூக செயல்பாட்டு முறைக்கு', தெளிவாக ஒரு புதிய போக்கிற்கு மாறிக்கொள்வது ஆகும். மனித உரிமைகள் அடிப்படையிலான ஒரு போக்கு மக்கள் தங்கள் உரிமைகளைத் தெரிந்துகொண்டு அவற்றை கேட்டுப்பெற்றுக்கொள்ள அவர்களுக்கு வலுவூட்டுகின்றது. இப்படிச் செய்வதால் குழுக்களும், குழும அடிப்படையிலான அமைப்புகளும் 'வாய்மூடி கைபொத்தி என்ன சொன்னாலும் ஏற்று வாழும் பண்பாட்டை' உடைத்தெறிந்து தங்களை வழிநடத்தும் நிறுவனங்களின் பிடியில் இருந்தும்கூட வெளிவருகின்றன. குடிமக்கள் என்கின்ற அடையாளத்தை வலியுறுத்தி அதனால் வரும் உரிமையை நிலைநாட்டி அவர்களுக்கே உரியதைப் பெற்றுக்கொள்வதற்காக தங்களுக்கு இத்தகைய உரிமைகள் கிடைப்பதை உறுசெய்ய வேண்டிய கடமை உள்ளவர்களை அழுத்திப் பிடித்து காரியத்தைச் சாதித்துக்கொள்கின்றனர். உரிமை அடிப்படையிலான செயல்பாடுகள் ஐந்து கோட்பாடுகளின் வழியில்தான் நடக்கின்றன. பங்கேற்பு, பொறுப்பு ஏற்பு, பாகுபடுத்தாமையும் சமத்துவமும், வலுவூட்டுதல் மற்றும் சட்டப்பூர்வமாகச் செயல்படல் (PANEL) – நமது அரசமைப்பு சட்டத்தின்படியும் உலகளாவிய சட்டங்களின்படியும் நமக்கு வழங்கப்பட்டிருக்கின்ற சட்ட உரிமைகள் ஆகிய இவையெல்லாம் PANEL கோட்பாடுகள் என்று இந்தக் கோட்பாடுகளின் ஆங்கிலப் பெயர்களைக்கொண்டு **P**articipation, **A**ccountability, **N**on-discrimininination and Equality, **E**mpowerment and **L**egality ஒரு கூட்டுச்சொல்லாக அழைக்கப்படுகின்றன. PANEL கோட்பாடுகள் என்பவை நடைமுறையில் மனித உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட போக்கு என்பது எப்படி இருக்கும் என்பதனை அக்கு வேறு ஆணி வேராக அலசிப்பார்ப்பதற்கான அருமையான முறையாகும். உரிமைகள் அரசாங்கங்களால் கொடுக்கப்படுபவை அல்ல. அவை நம் ஒவ்வொருவருக்கும் மானுடப் பிறவியினாலேயே கிடைக்கப்பெற்றவை. நாட்டின் குடிமக்கள் ஒவ்வொருவரும் இந்த உரிமைகளைப் பெற்றுக் கொள்வதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டிய கடமை அரசிற்கு இருக்கின்றது. எது

எப்படி இருந்தபோதிலும் அனுபவப்பூர்வமாகப் பார்க்கும்போது ‘உரிமைகள் கொடுக்கப்படுபவை அல்ல, அவை எடுத்துக்கொள்ளப்படுபவை.’ குழும உறுப்பினர்கள் உரிமைகள் அடிப்படையிலான செயல்பாடுகள் என்ன விதமான விளைவுகளைக் கொண்டுவரும் என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள நாம் வழிவகை செய்துதர வேண்டும். அரசு அதிகாரிகளோடும், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளோடும், பிற பொது நிறுவனங்கள் மற்றும் காவல்துறையினரோடும் பேச்சு வார்த்தை நடத்தும்போது, அரசின் மேலாதிக்கச் செயல்பாடுகளால் குழும உறுப்பினர்களிடையிலும் மற்றவர்களோடும் உள்ள உறவுகள் உடைந்துபோக வாய்ப்பிருக்கின்றது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் குழும உறுப்பினர்களை நாம் வலுப்படுத்தியாக வேண்டும். அவர்களுடைய மனித வளங்களை, பொருத்தமான திறன்களை, செயலாற்றல்களை, சட்டங்கள் பற்றிய விழிப்புணர்வை, வளர்த்தெடுக்க வேண்டும். குழும உறுப்பினர்களுக்கு, நாம் தேவைப்படும் நபர்கள் மற்றும் அமைப்புகளுடன் எப்படி உரையாட வேண்டும், அவர்களோடு எப்படி பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்பதில் தெளிவு வேண்டும். அமைதியான போராட்ட வியூகங்களைத் தேவைக்கேற்ப பொருத்தமாக வடிவமைத்து செயல்படுத்தி அவர்களது உரிமைகளைப் பெற்றுக்கொள்ளும் ஆற்றலை வளர்த்தெடுக்க வேண்டும்.

இந்தப் படிநிலையில்தான் வாழ்வாதார வாய்ப்புகளை உறுதிப்படுத்திக்கொள்வதற்காகவும், வேலைவாய்ப்புக்களுக்குத் தகுதிப்படுத்தும் வகையிலான திறன் வளர்த்தல், தொழில் முனைவோருக்கான திறன் வளர்த்துக்கொள்ள வங்கிக் கடன் உதவி வாய்ப்புக்கள் போன்றவற்றை மேம்படுத்தவும் நாம் என்ன செய்ய முடியும் எப்படிச் செய்ய முடியும் என்று ஓடி ஆடி தேடிப் பார்க்க வேண்டும். இந்தப் படிநிலையின் வழியாக நமக்கு என்ன பயன்கள் கிடைக்கின்றன? மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு கடமை உள்ளவர்களோடு தொடர்புகளை அதிகப்படுத்திக்கொள்கின்றோம். அவர்களோடு பேச்சுவார்த்தைகளை நடத்துகின்றோம். நம்முடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக்கொள்வதற்காக குடிமக்கள் என்கின்ற முறையில் நமக்குள்ள உரிமைகள் என்ன? நாம் கேட்டுப் பெற்றுக்கொள்ளக்கூடிய நமக்குரிய பங்கு என்ன? என்பதை உறுதியாகத் தெரிந்துகொள்கின்றோம்.

# காலக்கெடு

இந்தப் படிநிலையில்தான், நாம் ஏற்கெனவே உருவாக்கிய குழுக்கள், அவர்களுடைய தேவைகள் என்ன? அவர்களுடைய உரிமைகள் என்ன? அவர்களுக்கே உரித்தான பங்கு என்ன? என்பதைத் தெரிந்துகொண்டு வலியுறுத்திக் கேட்கவும், தெளிவாக எடுத்துச்சொல்லவும் தொடங்குகின்றார்கள். இவற்றை குடிமக்களாகிய குழும உறுப்பினர்களுக்குச் செய்துதரக் கடமைப்பட்டவர்களோடு பேரம் பேசவும், பேச்சுவார்த்தை நடத்தவும் தொடங்குகின்றார்கள். புதிய வகைகளில் தங்களுடைய குடியுரிமையை நிலைநாட்டும் வழிவகைகளைத் ஓடி ஆடித் தேடத் தொடங்குகின்றார்கள். நம்முடைய நிர்வாக, அதிகார வர்க்க ஆட்சியமைப்பு முறையில், நமக்கே உரித்தான வளர்ச்சித்திட்ட பங்குகளைக் கேட்டுப்பெற்றுக்கொள்வதற்கும், நமது பகுதிக்கான வளர்ச்சித் திட்டங்களையோ அல்லது வாழ்வாதார மேம்பாட்டு வாய்ப்புகளையோ பெற்றுக்கொள்வற்கும், விடாப்பிடியாக தொடர் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கு இரண்டு அல்லது மூன்று வருடங்கள் ஆகலாம்.

**பேச்சுவார்த்தை நடத்துவதற்கான அறிவாற்றலும் திறன்களும்**




# செயல்பாட்டிற்கான வழிமுறை

- உறுப்பினர்களுக்கு உரிமைகள் பற்றியும் வளர்ச்சிப் பணிகளில் அவர்களுக்கான பங்கு என்ன என்பதைப்பற்றியும் தெரிந்துகொள்ளவும், புரிந்துகொள்ளவும் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.



- தகவல் பெறும் உரிமைச் சட்டம். கல்வி உரிமைச் சட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம், உணவுரிமைச் சட்டம் போன்ற சமூகச் சட்டங்களையும், பொது விநியோகத் துறை மூலம் வழங்கப்படும் குடிமைப்பொருட்களைப் பெற்றுக்கொள்ள, இலவச சட்ட உதவி பெற்றுக்கொள்ள, தாய்மைப் பேறு உதவிகள், ஓய்வூதியங்கள், மாற்றுத் திறனாளிகளுக்கான ஆதரவு, தலித், பழங்குடி மற்றும் சிறுபான்மை மக்களின் குழந்தைகளுக்கான கல்வி உதவி, ஆகியவற்றில் தங்களுக்கு உரிய பங்கினைப் பெற்றுக்கொள்ளவும், வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை, நூறு நாள் வேலை அட்டை, வறுமைக்கோடு அட்டை, போன்றவற்றையும், பிறப்பு, இறப்பு மற்றும் வருமானச் சான்றிதழ் பொன்ற சான்றிதழ்களையும் பெற்றுக்கொள்வதற்கு அவர்கள் என்ன செய்ய வேண்டும்? எங்கே போக வேண்டும்? யாரைப் பார்க்க வேண்டும்? எப்படிச் செயல்பட வேண்டும்? என்று தெரிந்து செயல்படுவதற்காக குழும உறுப்பினர்களுக்கு சிறப்பு பயிற்சி வகுப்புக்களை ஏற்பாடுசெய்து நடத்த வேண்டும்.
- இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் பொதிந்துள்ள மதிப்பீடுகளை குழும உறுப்பினர்கள் அறிந்துகொள்ளும் வகையில் பயிற்சி வகுப்புகளை நடத்த வேண்டும். அத்தோடு, பல வகையான சட்டங்கள், அரசின் கொள்கை முடிவுகள், திட்டங்கள் குறிப்பாக கடன் பெற்றுக்கொள்வதற்கானவை, மானியங்கள் தொடர்பானவை மற்றும் அவரவருக்குப் பொருத்தமான நலத் திட்டங்கள் பற்றியும் குழும உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.
- நாம் கொடுக்கும் பயிற்சிகள் இரண்டு விதமாக இருக்க வேண்டும். அதாவது பயிற்சி பெறுபவர்கள் கோட்பாடுகளைத் தெரிந்துகொள்வதோடு நடைமுறைப்படுத்துவதற்கும் தெரிந்தவர்களாக மாறவேண்டும். எனவே படிவங்களை நிரப்புவது, இணைய தளத்தில்

தேவையானவற்றை அணுகுவது, குறிப்பிட்ட செயல்பாடுகளுக்கான மைய அலுவலகங்களைத் தெரிந்து வைத்துக்கொள்வது, அரசின் ஆட்சி அமைப்புகளை குறிப்பாக பஞ்சாயத்து, பலவிதமான துறைகள், உள்ளூரில், வட்டார அளவில், மாவட்ட அளவில் மற்றும் மாநில அளவிலான ஆட்சி அலுவலகங்களைத் தெரிந்து வைத்துக்கொள்வதை உறுதிப்படுத்தும் வகையில் பயிற்சிகள் அமைய வேண்டும்.

- பலவேறு அரசு திட்டங்கள், நிகழ்ச்சிகள், வசதி வாய்ப்புகள், வேலைவாய்ப்பை உறுதிப்படுத்தும் திறன்பயிற்சிகள் போன்றவற்றைக் கொண்டும் தனியார் நிறுவனங்கள் கொடுக்கும் மேலே சொன்னவை போன்ற பயிற்சிகளைக் கொண்டும் பெருமுதலீட்டு நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு செயல்பாட்டு முன்னெடுப்புகளைக் கொண்டும் தங்களது வாழ்வாதார வாய்ப்புக்களை உறுதிப்படுத்திக்கொள்ளும் வகையில் ஓடி, ஆடி, தேட குழும உறுப்பினர்களை முடுக்கிவிட வேண்டும்.
- எப்படி விண்ணப்பப் படிவங்களை எழுதித் தயாரிப்பது என்றும் குறிப்பிட்ட அதிகாரிகளிடம் எப்படி தேவையான செய்திகளை எழுத்து மூலமாகவோ அல்லது நேரடி பேச்சுவார்த்தையிலோ எடுத்துரைப்பது என்றும் குழும உறுப்பினர்களுக்கு வழி காட்ட வேண்டும்.
- இடைத் தரகர்களையும், தரகையும் தவிர்த்துக்கொள்வதற்காக குழும உறுப்பினர்களுக்குப் பயிற்சி தர வேண்டும். அதற்காக தன்னார்வமுள்ள இளைஞர் இளம்பெண்களைக்கொண்டு மாதிரி வழிகாட்டு மையங்களை அமைத்துச் செயல்படுத்த வேண்டும்.
- என்னால் செய்ய முடியும் என்று முன்வரச் செய்வது, இது இதனால் இப்படி நடந்துகொண்டிருக்கின்றது என்று உணர்ந்துகொள்ளச் செய்வது, என்ன செய்வது, எப்படிச் செய்வது என்று செயல்பட எழுச்சி ஊட்டச் செய்வது ஆகியவற்றை உள்ளடக்கிய வலுப்படுத்தும் செயல்முறையைத் தொடர்ந்து ‘வாய்ப்பூட்டுப் பண்பாட்டை’ உடைத்து சார்புத் தன்மையை அகற்றி வெளிவருவதற்கான ஆற்றலை குழும உறுப்பினர்களிடம் ஏற்படுத்த வேண்டும்.
- பல்வேறு விதமான வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளக் கடமைப்பட்டவர்களுடன் நாம் தொடர்புகொள்ள வேண்டிய தேவை வரும்போது, நம்முடைய பங்காக நமக்குக் கிடைக்க வேண்டியது என்ன என்பதைத் தெளிவாக எடுத்துச்சொல்லும் ஆற்றல் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். மற்றும் எந்தெந்த செயல்பாடுகள் எந்தெந்த விதத்தில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற முறையை அறிந்திருக்கச் செய்ய வேண்டும். அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தத் தெரிந்திருக்க வேண்டும். அவர்களோடு உரையாடத் தெரிந்திருக்க வேண்டும். இவையெல்லாம் தான் நாம் எடுத்துக்கொண்ட செயலைச் செய்துமுடிக்க இன்றியமையாதவையாக இருக்கும்.
- PANEL (பங்கேற்பு, பொறுப்பு ஏற்பு, பாகுபடுத்தாமையும் சமத்துவமும், வலுவூட்டுதல் மற்றும் சட்டப்பூர்வமாகச் செயல்படல்) கோட்பாடுகளை குழும உறுப்பினர்களுக்கு அறிமுகப்படுத்தி அவற்றின் பயன்பாட்டை மெல்ல மெல்ல வளர்த்தெடுத்து குழுமச் செயல்பாடுகள் இந்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் நடைபெறச் செய்ய வேண்டும்.
- மக்களிடம் கருத்துருவாக்கம் செய்வது, பொதுக்கூட்டங்கள் மூலம் நாம் கையில் எடுத்துள்ள காரியங்களுக்கு ஆதரவைத் திரட்டுவது, சுவரொட்டிகள் மூலம் தகவல் பரப்புவது, சமூக வலைத்தளங்களில் பரப்புவது, பத்திரிக்கையாளர் சந்திப்பு நடத்துவது, பத்திரிக்கைகளில் நேர்காணல்கள் வரச்செய்வது, அரசாங்கம் நடத்தும் மக்கள் குறைதீர்ப்பு நாள் நிகழ்வுகளில் பங்கேற்பது போன்ற எடுத்துக்கொண்ட சிக்கல்கள்களைக் கையாள்வதற்காக பாதிக்கப்பட்டவர்களுக்காகக் குரல் எழுப்பும் செயல்பாடுகளை குழும உறுப்பினர்களிடையே அறிமுகம் செய்ய வேண்டும்.
- ஒரு சில நேரங்களிலும் இடங்களிலும் வேலை நிறுத்தம், உள்ளிருப்பு போராட்டம், ஊர்வலம் அல்லது வேறு விதமான அமைதிவழி போராட்டங்கள் குழுமத்தின் மிக அவசரமான அவசியமான தேவைகளை அரசு தரப்பினர் புரிந்துகொள்ளச் செய்வதற்கான ஒரு வழியாக இருக்கலாம். குழுமத்தினருக்கு இதுபோன்ற போராட்ட வடிவங்களைப் பற்றி கொஞ்சம் சொல்லி வையுங்கள்.
- காவல் நிலையம், நீதி மன்றங்கள் மற்றும் அரசு அலுவலகங்களைப் போய்ப் பார்த்துவருவது குழும உறுப்பினர்கள் நாலும் தெரிந்தவர்களாக நம்பிக்கையோடு நடைபோடச்செய்ய உதவியாக இருக்கும்.
- (மேலே உள்ள அனைத்தையும் உங்களது சூழ்நிலைக்குத் தகுந்தவாறு மாற்றி அமைத்தோ புதிதாக உருவாக்கியோ பயன்படுத்திக்கொள்ளுங்கள்.)

# உதவக்கூடிய சில தகவல்கள்

- வளர்ச்சியை மையப்படுத்திய செயல்பாடுகளில் இருந்து உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட செயல்பாடுகளுக்கு மாறுவது கொஞ்சம் நாள் எடுக்கும். ஒரு சில குழுக்களுக்கு அரசு அமைப்புகளைப் பற்றித் தெரிந்துகொள்வதற்கும், அரசாங்க செயல்பாடுகள் எப்படி இருக்கும் என்பதைப் புரிந்துகொள்வதற்கும் கையைப் பிடித்துக் கூட்டிச்செல்வதுபோல கொஞ்சம் உடன் நடக்க வேண்டி இருக்கும். சில நேரங்களில் குழும உறுப்பினர்கள் தொண்டு அமைப்புகளின் பணியாளர்களைத் தங்களுடன் அரசு அலுவலகங்களுக்கும் பிற தேவையான இடங்களுக்கும் வரவேண்டும் என்று அழைக்கலாம். இதனை ஒரு பயிற்சிக்கான வாய்ப்பாகக் கருதிச்செய்ய வேண்டும். காலப்போக்கில் குழும உறுப்பினர்கள் தாங்களாகவே தங்களுக்குத் தேவையான அனைத்துச் செயல்பாடுகளையும் மேற்கொள்ளச் செய்தாக வேண்டும்.
- மக்களுக்குப் பலவேறு வகையில் செயல்பாடுகளைச் செய்துதரக் கடமைப்பட்டவர்களுடன் உறவும் தொடர்பும் கொள்வதற்கு தொண்டு அமைப்புகளின் நம்பகத்தன்மை பெருமளவு உதவியாக இருக்கும். இது இப்படி இருந்தபோதிலும் அந்த அமைப்புகள் மக்களையே முன்னிருத்தி காரியங்களைச் செய்யச்சொல்வதில் கருத்தாய் இருக்க வேண்டும்.
- சும்மா கூட இருந்தால் போதும் என்கின்ற நிலையில் இருந்து, ஏதாவது எழுத வேண்டியிருந்தால் எழுதித் தர வேண்டும் அத்தோடு ஏதாவது தொழில் நுட்பம் பயன்படுத்தியாக வேண்டும் என்பது உட்பட குழும உறுப்பினர்களுக்கு நமது ஆதரவு தேவைப்படலாம். எங்கேயெல்லாம் சாத்தியமோ அங்கேயெல்லாம் குழும உறுப்பினர்களையோ அல்லது அவர்களது குழந்தைகளையோ இத்தகைய செயல்களை முன்னெடுக்கத் தயாராக இருக்கச் செய்ய வேண்டும். எழுதுவது அல்லது ஏதாவது தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவது போன்ற செயல்பாடுகளில் இளைஞர்கள் எளிதாகத் தங்களையே நுழைத்துக்கொள்வாகள். அவர்களுடைய திறன்களை முழுமையாக நாம் பயன்படுத்திக்கொள்ளலாம்.
- அரசின் மக்கள் நலத் திட்டங்கள், சமூகப் பாதுகாப்பு பற்றிய நடவடிக்கைகள் மற்றும் பலவேறு மத்திய அரசு மற்றும் மாநில அரசு சார்ந்த ஏழைகளுக்கான செயல்பாடுகளை எங்கே போய், யாரைப் பார்த்து, எப்படிப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற தகவல்கள் நிறைந்த கையேடு ஒன்றைத் தயாரித்து வைத்துக்கொள்ள வேண்டும்.
- குழுமத்தினர்கள் கூடி வாசித்து பிறரோடு பகிர்ந்துகொள்வதற்காக பலவேறு விதமான கருத்துக்களையும் தகவல்களையும் கொண்ட ஒரு நூலகத்தை உருவாக்கி நடத்தச் செய்ய வேண்டும்.
- குழும உறுப்பினர்கள் தனிப்பட்ட விதத்திலும், கூட்டாகவும் ஊக்கம் பெற்று, வேகம் பெற்று, அர்ப்பணத்தையும் பெற்றுக்கொண்டார்கள் என்று சொன்னால் அவர்கள் கூடி தாங்கள் மேற்கொள்ள வேண்டிய சிக்கல்களை முன்னுரிமை தரவரிசைப்படுத்தினார்கள் என்றால், முன்னுரிமைப்படுத்திய சிக்கல்களை மேற்கொள்வதற்கான செயல்திட்டங்களைத் தீட்டினார்கள் என்றால் அவர்களே முன்வந்து அதிகாரிகளைப் போய்ப் பார்ப்பார்கள். குழும உறுப்பினர்களின் வேகத்திற்கு ஈடுகொடுத்து அவர்களுடன் நாம் நடக்க வேண்டும்.
- அவ்வப்போது குழும உறுப்பினர்கள் தங்களது சொந்த அனுபவங்களில் இருந்து ஏதாவது பாடங்களைக் கற்றுக்கொள்வதற்காக, தங்களைச் சூழ்ந்து என்ன நடந்துகொண்டிருக்கின்றது, ஏது நடந்துகொண்டிருக்கின்றது என்று சீர்தூக்கிப் பார்க்கவும், குழும உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து சிந்தித்துப் பார்க்கவும் செய்வது முக்கியம்.
- ‘அழுத பிள்ளைதான் பால் குடிக்கும்’ என்னும் குரல் எழுப்புதல் தொடர்பான முழக்கத்தை மறந்துவிட வேண்டாம். குழும உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் இது எனது சிக்கல் நான்தான் இதற்காக ஏதாவது செய்தாக வேண்டும் என்று கிளம்ப வேண்டும்.
- பொதுச் செயல்பாடுகளில் ஈடுபடுகின்றபோது அறிவுப்பூர்வமாகச் செயல்படுவதை, உணர்வுப்பூர்மான செயல்பாடுகள் தூக்கித் தூரஎறிந்துவிடுகின்றன என்பதை நாம் அனுபவ ரீதியாக அறிந்திருக்கின்றோம். எனவே நன்கு திட்டமிட வேண்டும் என்பதை வலியுறுத்துங்கள். தெளிவாக, யார் என்ன செய்ய வேண்டும் என்று, ஒவ்வொருவருடைய செயல்பாடுகளையும் பொறுப்புகளையும் வரையறுத்துக்கொள்ளும்படி , வலியுறுத்துங்கள். கூட்டத்தைச் சமாளிப்பது எப்படி என்பதையும். பேச்சுவார்த்தை நடத்துவதற்கான குழு யார் யார் என்பதையும் அவர்கள் என்னென்ன செய்ய வேண்டும் என்பதையும், நமது கோரிக்கைகள் என்ன என்பதையும் பொதுச்செயல்பாடுகளை முன்னெடுக்கும் முன்னரே எல்லோருக்கும் முன் தெளிவாக எடுத்துச்சொல்ல வேண்டும் என்பதையும் வலியுறுத்துங்கள்.

- கோரிக்கைகளை வலியுறுத்தி அமைதி வழி போராட்ட ஊர்வலமோ அல்லது பேரணியோ நடத்துவதாக இருந்தால் முறையாக யார் யாரிடம் சொல்ல வேண்டும் யார் யாரிடம் உத்தரவு பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதையெல்லாம் முறையாக் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஊக்கப்படுத்துங்கள்.
- (மேலே சொன்ன அத்தனையையும் உங்களுடைய சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றியோ புதிதாக உருவாக்கியோ பயன்படுத்திக்கொள்ளுங்கள்.)

## பயனுள்ள சில எச்சரிக்கைகள்

- குழும உறுப்பினர்கள் வளர்ச்சிப் பணிகளுக்குக் கடமைப்பட்டுள்ளவர்களை நேருக்கு நேராக எதிர்த்து நிற்கவோ அல்லது அவர்களுக்கு சவால் விடவோ கட்டாயப்படுத்தாதீர்கள்.
- மக்களை போராடுவதற்கும், கடையடைப்பு செய்வதற்கும் தள்ளாதீர்கள். போராட்டம் செய்வது தொடர்பான எந்த முடிவுகளாக இருந்தாலும் அவை குழும உறுப்பினர்களால் மட்டுமே எடுக்கப்பட வேண்டும்.
- பொதுச் செயல்பாடுகளை மேற்கொள்ளும் போது, அதாவது கடையடைப்பு, போராட்டம் போன்றவற்றில் ஈடுபடும்போது என்னவெல்லாம் நடக்கலாம் என்பதை மக்களுக்குப் புரியவைக்க வேண்டும். ஏனென்றால் இப்படிப்பட்ட போராட்டங்களின் போது சில சமயங்களில் அரசாங்கம் குடிமக்களை போட்டுத் தாக்கக்கூடும்.
- மக்கள் போராட்டங்களின்போது எந்தஒரு வகையிலும் வன்முறையைக் கையாளக்கூடாது என்றும், சட்டத்திற்கு எதிராக பொதுச் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தக்கூடாது என்றும் அறிவுறுத்துங்கள்.
- மக்களுக்கான வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் பொறுப்புள்ளவர்களோடு தொடர்புகொண்டு அவர்கள் தங்கள் கடமைகளைச் செய்ய வைப்பது என்பது தலைவர்கள் மற்றும் கற்றறிந்த குழும உறுப்பினர்களுக்கு மட்டுமே உரிய பணி கிடையாது. அனைத்து மக்களும் இத்தகைய செயல்பாடுகளில் ஈடுபடுவதற்கு ஊக்குவிக்கப்படவேண்டும்.
- (மேலே சொல்லப்பட்ட யாவற்றையும் சூழ்நிலைக்கு எற்ப மாற்றியோ புதிதாக உருவாக்கியோ பயன்படுத்திக்கொள்ளவும்.)

## செயல்பாடுகள் சரியான பாதையில் போய்க் கொண்டிருக்கின்றது என்பதைக் காட்டும் காரணிகள்

1. (இத்தனை) பெண்கள் (இத்தனை) ஆண்கள் (இத்தனை) இளைஞர்கள், (இத்தனை) குழந்தைகள் விண்ணப்பப் படிவங்களை நிரப்பவும், கோரிக்கை மனுக்களை தயாரிக்கவும் கற்றுக்கொண்டிருக்கின்றார்கள்.
2. (இத்தனை) தனிப்பட்ட விண்ணப்பங்கள் குடிமைப் பொருள் வழங்கல் அட்டைக்காகவும், வாக்காளர் அடையாள அட்டைக்காகவும், ஆதார் அட்டைக்காகவும் கொடுக்கப்பட்டிருக்கின்றன, (இத்தனை) விதவைகள் உதவித் தொகைக்கான விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.
3. (இத்தனை) தனிநபர்கள் தங்களுக்கான அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொண்டிருக்கின்றார்கள், (இத்தனை) மாணவர்கள் கல்வி உதவித்தொகையைப் பெற்றுக்கொண்டிருக்கின்றார்கள்.
4. (இத்தனை) குடும்பங்கள் நூறு நாள் வேலை வாய்ப்பு அட்டையைப் பெற்றுக்கொண்டிருக்கின்றார்கள், (இத்தனை) குடும்பங்கள் தேவையான சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டிருக்கின்றார்கள்.
5. (இத்தனை) குழுக்கள் பொருத்தமான அதிகாரிகளிடம் குழுமத்தின் பொதுச் சிக்கல்கள் தொடர்பான கோரிக்கை மனுக்களை சமர்ப்பித்திருக்கின்றார்கள்.
6. நூற்றுக்கு (இத்தனை) தலைவர்கள் தேவைப்படும் அதிகாரிகளுடன் உரையாடவும், சமாதானம் செய்யவும், பேச்சுவார்த்தை நடத்தவும், செய்யப்படவேண்டிய பணிகள் முறையாகச் செய்யப்படுகின்றனவா என்று மேற்பார்வையிடவும் தேவையான திறன்களைப் பெற்றுக்கொண்டிருக்கின்றார்கள்.

7. (இத்தனை) குழும உறுப்பினர்கள் அரசு அலுவங்களுக்குள் சென்று வரப் பழகிக்கொண்டுள்ளனர். அவர்கள் பிற வெளி நபர்கள் துணையின்றி தாங்களாகவே அரசு அதிகாரிகளைச் சந்திக்கத் தொடங்கிவிட்டார்கள்.
8. (இத்தனை) குழும உறுப்பினர்கள் பலவேறு அரசு மற்றும் தனியார் வளர்ச்சித் திட்டங்களிலும் பணிகளிலும் ஏதோ ஒரு வகையில் தங்களுக்கான பயனைப் பெற்றுக்கொள்கின்றார்கள்.
9. நூற்றுக்கு (இத்தனை) இளைஞர்கள், குடும்பத்தவர்கள் தங்களது பல தேவைகளுக்காக கோரிக்கை மனுக்களை தயாரிக்க தன்னார்வத்துடன் உதவிசெய்கின்றார்கள்.
10. (இத்தனை) உறுப்பினர்கள் மக்கள் பணிக்கென கடமையுள்ளவர்கள் குடிமக்களின் கேள்விகளுக்குப் பதில்சொல்லப் பொறுப்புள்ளவர்கள் என்று புரிந்துகொண்டிருக்கின்றார்கள்.
11. குழுக்கள் தனிநபர்களுக்காகவோ அல்லது குழுமத்தின் சிக்கல்களுக்காகவோ அந்தந்தச் சிக்கல்களுக்குப் பார்க்கவேண்டிய அரசு அதிகாரிகளை (இத்தனை) முறை அதிகாரப்பூர்வமாக நேருக்கு நேர் சந்தித்துப் பேசியிருக்கின்றார்கள்.
12. (இத்தனை) பேர் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் படி விண்ணப்பங்களைத் தயார் செய்து பொதுத் தகவல் அதிகாரிகளிடம் சமர்ப்பிப்பதற்குக் கற்றுக்கொண்டிருக்கின்றார்கள்.
13. (மேலே உள்ளவற்றை உங்கள் சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றியோ அல்லது புதிதாகச் சேர்த்தோ பயன்படுத்திக்கொள்ளுங்கள்.)

# தன் மதிப்பீடு படிவம்

1 என்று குறிப்பிட்டால் மிகக் குறைந்த அளவு என்றும், 2 என்றால் குறைந்த அளவு, 3 என்றால் பரவாயில்லை, 4 என்றால் அதிகம் 5 என்று குறிப்பிட்டால் மிக அதிக அளவு என்றும் பொருள்படும் இந்தப் படிவத்தில் உங்களுடைய முன்னேற்றத்தை நீங்கள் எப்படி மதிப்பீடுசெய்வீர்கள்?

| வரிசை எண் | வளர்ச்சி பெற்ற பகுதிகள் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | நான் விண்ப்பங்களையும் மனுக்களையும் எழுதுவதற்குக் கற்றுக்கொண்டேன். | |
| 2 | உள்ளூர் அரசு அலுவலகங்கள் எங்கெங்கே இருக்கின்றன என்பது எனக்குத் தெரியும் | |
| 3 | நான் தனி ஆளாக அரசு அலுவலகங்களுக்குச் சென்று கோரிக்கை மனுக்களை சமர்ப்பிக்கும் அளவிற்குத் துணிச்சல் உள்ளவராக மாறியிருக்கின்றேன். | |
| 4 | அரசு அதிகாரிகளுடன் பேச்சு வர்த்தை நடத்துவதற்கு நான் கற்றுக்கொண்டிருக்கின்றேன். | |
| 5 | வளர்ச்சி பணிகளில் எனக்கென உரியதைப் பெற்றுக் கொள்வதற்காக நான் தொடர்ந்து செயல்படக் கற்றுக்கொண்டிருக்கின்றேன். | |
| 6 | கோரிக்கை மனுக்களை எழுதுவதற்கும் அதிகாரிகளைச் சந்திப்பதற்கும் மற்றவர்களுக்கு என்னால் உதவ முடியும். | |
| 7 | நான் இந்த நாட்டின் குடிமகன் என்னும் உணர்வு வலுவாக வளர்ந்துள்ளது. | |
| 8 | தொண்டு அமைப்பு ஏற்பாடு செய்த பயிற்சிகளின் வழியாக எனக்கு அரசு திட்டங்களைப் பற்றியும், வளர்ச்சிப் பணிகளில் எனக்குச் சேரவேண்டிய பங்கு என்ன என்பதைப் பற்றியும், எங்கு சென்று யாரைப் பார்த்து என்ன செய்தால் எனக்குரிய பங்கினைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் தெரிந்துகொண்டேன். | |
| 9 | அரசு அதிகாரிகள் எங்களது பகுதிக்கு வரும்போது எங்களுடைய கோரிக்கைகளைப் பற்றி அவர்களிடம் அச்சமோ கூச்சமோ இன்றி நான் பேசுகின்றேன். | |
| 10 | குழு உறுப்பினர்கள் உள்ளூர் அரசு அதிகாரிகளை பலவேறு சிக்கல்களைத் தீர்த்துக்கொள்வதற்காகப் பார்க்கச் செல்லும்போது ஒற்றுமையாகச் செல்கின்றார்கள். | |



| | | |
|---|---|---|
| 11 | குழு உறுப்பினர்கள் துணிவுடனும், தெளிவுடனும் நம்பிக்கையுடனும் அரசு அதிகாரிகளைச் சத்தித்துப் பேசுகின்றார்கள். | |
| 12 | குழு உறுப்பினர்கள் தங்களது திறன்களுக்கும் ஆற்றல்களுக்கும் தகுந்த வகையில் பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்கின்றார்கள். | |
| 13 | குழு உறுப்பினர்கள் எங்களது பகுதியில் பணியாற்றும் தொண்டு நிறுவனங்களையும் பிற அமைப்புகளையும் தாங்கள் செய்ய வேண்டிய செயல்களைப் பொறுத்தமட்டில் பொருப்புடன் நடந்துகொள்ள வேண்டும் என்ற கேட்டுக்கொள்கின்றார்கள். | |
| 14 | நாங்கள் ஒரு குழுமமாகத் திட்டமிடுகிறோம், வியூகம் அமைக்கிறோம் அவற்றை நடைமுறைப்படுத்துகின்றோம். | |
| 15 | குழுத் தலைவர்கள் திட்டமிடுவதற்கும், மதிப்பீடு செய்வதற்கும் கூட்டங்களை சரியான நேரத்திற்குக் கூட்டுகின்றார்கள். | |
| 16 | ............................................. (சூழ்நிலைக்கு எற்றவாறு ஏதாவது வளர்ச்சி தொடர்பான காரியங்களைச் சேர்க்க வேண்டும் என்றால் சேர்த்துக் கொள்ளுங்கள்.). | |

குறிப்பு: அனைத்து தலைவர்களையும் தன்மதிப்பீடு செய்து அவர்களது மதிப்பெண்களைக் கூட்டிப்போடச் சொல்லுங்கள். அவர்கள் பெற்ற மொத்த மதிப்பெண்கள் அடிப்படையில் கலந்துபேசச் சொல்லுங்கள். முதல் எட்டு பகுதிகள் தனிப்பட்ட வளர்ச்சியைப் எடுத்துச் சொல்லுகின்றன. உங்களுடைய பலங்களைத் தெரிந்துகொள்ளுங்கள். உங்களுக்கு சவாலாக இருப்பவற்றையும் கண்டுகொள்ளுங்கள். இதேபோல குழுவின் வளர்ச்சி மற்றும் தலைவர்களின் வளர்ச்சி பற்றி பிற கலந்துரையாடல்களும் வைத்துக்கொள்ளலாம்.

# சிந்திக்கவும் பகிர்ந்துகொள்ளவும் சில கேள்விகள்

1. குழும உறுப்பினர்களுக்கு மனித உரிமைகள் அடிப்படையிலான தலையீடுகளைப் புரிந்துகொண்டு அதனை அன்றாடச் செயல்பாடுகளாக அமைத்துக்கொள்வதில் கிடைத்த அனுபவங்கள் என்ன? ஏற்பட்ட போராட்டங்கள் என்ன? சந்தித்த சவால்கள் என்ன?
2. குழுக உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்ட பலவேறு பயிற்சிகளையும் பயனுள்ளதாக இருந்ததாக கண்டுணர்ந்துகொண்டார்களா? ஆம் என்றால் எந்தப் பயிற்சியை மிக அதிகமான பயன்தரும் பயிற்சியாகக் கண்டுகொண்டார்கள்? பயிற்சிகளில் சொல்லப்பட்ட கருத்துக்களையும் பயிற்சிகள் நடத்தப்பட்ட விதத்தையும் பற்றி என்ன சொன்னார்கள்?
3. குழும உறுப்பினர்கள் அரசு அதிகாரிகளை நேரில் சந்திப்பதற்கு துணிவுடன் செல்ல முடிந்ததாக உணர்ந்தார்களா? ஆம் என்றால் அதில் இருந்து அவர்கள் கற்றுக்கொண்டது என்ன? அவர்களுக்கு சவாலாக அமைந்தது என்ன?
4. பல வேறு உரிமை உடையவர்களையும், அந்த உரிமைகளை அவர்கள் பெற்றுக்கொள்ள வழிவகைசெய்ய கடமைப்பட்டவர்களையும் நேரடியாகச் சந்தித்துச் செயல்படச்செய்ய வழிவகுத்துக் கொடுத்ததில் உங்களுக்கு எந்த அளவிற்கு திருப்தி கிடைத்தது? எடுத்துக்காட்டுக்களோடு உங்களுக்கு எந்த அளவிற்கு திருப்தி கிடைத்தது என்று எடுத்துச் சொல்லுங்கள்.
5. எந்தச் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக குழும உறுப்பினர்கள் பரப்புரை செய்தார்கள், போராட்டம் நடத்தினார்கள், கடையடைப்பு செய்தார்கள்? அதன் மூலம் அவர்கள் கற்றுக்கொண்டது என்ன?
6. (மேலே சொல்லப்பட்டவற்றை உங்களுடைய சூழ்நிலைக்கு ஏற்ப நீங்கள் மாற்றி அமைத்துக்கொண்டோ அல்லது புதிதாக உருவாக்கிக்கொண்டோ செயல்படுத்தலாம்.)

# வளர்ச்சிப் பணிகளில் உங்களது பங்கினைப் பெற்றுக்கொள்வதற்கான ‘விலை’

செல்வி. மைனா தேவி என்னும் PGSS அமைப்பைச் சேர்ந்தவர் ஒரு நிகழ்வை விவரிக்கிறார். “நிறைமாத கர்ப்பிணிப்பெண் ஒருவரை, ஆண்கள், மருத்துவமனைக்குத் தூக்கிச் செல்கின்றார்கள், அந்தப் பெண் இறந்துவிடுகின்றார். சாலை மிக மோசமாக இருந்ததால்தான் அவரை சரியான நேரத்திற்குள் மருத்துவமனைக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கமுடியவில்லை. கர்ப்பிணித் தாய் இறந்துபோனது கிராமத்தவர்களின் கோபத்தைக் கிளறிவிட்டது எனவே தன்னெழுச்சியாக அவர்கள் சாலையை மறித்து உட்கார்ந்துவிட்டார்கள். காவல் துறையினர் வந்தார்கள், சாலைமறியல் செய்தவர்களை தடியடி நடத்தி விரட்டினார்கள். அப்போதும்கூட பெண்கள் சாலையைவிட்டு நகரவேயில்லை. சிறிது நேரத்திற்குப் பின்னர் வட்டார வளர்ச்சி அதிகாரி வந்தார், பெண்களைச் சந்தித்தார், சாலையை சீரமைத்துத் தருவதாக வாக்குறுதி கொடுத்தார். இந்த நிகழ்ச்சியைப் பற்றி சிந்திக்கும்போது பெண்கள் குழு உறுப்பினர்கள் எப்படி தங்களுக்கு சாலையை மறிக்கும் ஆற்றல் வந்தது, தடியடி நடத்திய போதும்கூட தளராமல் இருந்து அதிகாரிகளைச் சந்திக்கும் துணிவு கிடைத்தது என்று வியந்து பேசிக்கொண்டார்கள். மக்களின் கூட்டு ஆற்றலை இந்த நிகழ்வு வெளிக்காட்டியது.”

திருமதி. சய்ஃபுன் என்னும் 58 வயது கணவரை இழந்த பெண் டாங்ராவின் இஸ்லாமியர் முகாமிட்டுள்ள பகுதியில் 45 ஆண்டுகளாக வாழ்ந்துவந்திருக்கின்றார். அவருடைய குடும்பங்களில் பல சோக சம்பவங்களை எதிர்கொண்ட போதிலும், அவர் கணவரை இழந்த நிலையிலும் பெண்கள் குழுவில் மும்முரமாகச் செயல்படும் ஒருவராகவும் அந்தப் பகுதியின் துடிப்பான ஒரு தலைவராகவும் இருந்திருக்கின்றார். அவர் வாழ்ந்துவந்த பகுதியில் - சாக்கடை நிரம்பி வழிவது, தெருவிளக்குகளே இல்லாதது அல்லது இருக்கும் தெருவிளக்குகள் உடைந்து கிடப்பது – போன்ற நிறைய சிக்கல்கள் இருந்தன. சாய்ஃபுன் அந்தப்பகுதியில் வாழ்ந்த பெண்களுக்கு ஊக்கமூட்டினார். அவர்கள் மாநகராட்சி அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினார்கள். பெரும்பாலான சிக்கல்கள் தீர்க்கப்பட்டன. சய்ஃபுன் அவர்களுக்கு ஒவ்வொரு சிக்கலுக்கும் யாரைப் பார்ப்பது, எங்கு போய் சந்திப்பது, என்ன கேட்பது, எப்படிக் கேட்பது நமது கோரிக்கை நிறைவேறும் வரை எப்படியெல்லாம் செயல்படவேண்டும் என்னும் முறை அத்தப்படி ஆகிப்போனது. பலவேறு துறைகளிலும் உள்ள முக்கியமான அதிகாரிகளைத் தேவையான அளவிற்குத் தெரிந்துவைத்திருந்தார். இப்போது அரசு அலுவலகத்திற்குள் துணிவோடு நுழைந்து வெளியே வருகின்றார். சிக்கல்களை மின்னல் வேகத்தில் சரிசெய்துகொள்ள முடிகின்றது.

# 8

# மற்ற குழுக்களுடைய செயல்பாடுகளைப் போய்ப் பார்த்தல் அவர்களிடம் இருந்து கற்றுக்கொள்ளுதல்.



# மற்ற குழுக்களுடைய செயல்பாடுகளைப் போய்ப் பார்த்தல் அவர்களிடம் இருந்து கற்றுக்கொள்ளுதல்.

## நோக்கம்

குழுமத் தலைவர்களுக்கும் உறுப்பினர்களுக்கும், அவரவர் இடங்களில் செயல்பட்டுக்கொண்டிருக்கும் குழும அணிதிரட்டல்களைப்போன்ற செயல்முறைகள், மற்ற இடங்களில் எப்படி நடந்துகொண்டிருக்கின்றன, அங்கே அதனுடைய விளைவுகள் என்ன, என்பதை பிற இடங்களுக்கோ அல்லது பிற தொண்டு நிறுவனங்களுக்கோ போய்ப் பார்த்துக் கேட்டுத் தெரிந்துகொள்வதற்கான வாய்ப்புகளை எற்படுத்திக்கொடுப்பதுதான், இந்தப் படிநிலையின் நோக்கம். இதன் மூலம் அவர்கள் கற்றுக்கொள்கின்றார்கள். தங்களுக்குத் தெரிந்ததைப் பகிர்ந்துகொள்கின்றார்கள். ஒருவர் ஒருவரிடம் இருந்து கற்றுக்கொள்ளும் சூழலை வலுப்படுத்துவதும் நமது நோக்கமாக இருக்கின்றது. இதுபோன்று வெளியில் போய்ப் பார்த்துவருவது – பார்ப்பது, தீர்மானம் செய்வது, செயல்படுவது என்னும் ஒரு சுழலை உருவாக்குகின்றது. குழும அணிதிரட்டல் என்பது ‘செய்து பார்த்துக் கற்றுக்கொள்வது’ என்பதில் அழுத்தம் கொடுப்பதாக இருக்கின்றது. ‘கண்ணால் பார்த்து தெரிந்துகொள்வது’ ‘நம்மைப் போன்ற அல்லது மாறுபட்ட சூழல்களில் முனைப்போடு செயல்படும் பிற குழும உறுப்பினர்களோடு கலந்துபேசித் தெரிந்துகொள்வது’ தேவையில்லை என்று ஒதுக்கிவிட முடியாது. மற்றவர்கள் என்ன செய்கின்றார்கள், எப்படிச் செய்கின்றார்கள் என்று தெரிந்துகொள்ள நாம்தாம் அவர்களுடைய இடத்திற்குப் போகவேண்டும் என்பது அல்ல. வெளியில் இருந்து ஒருசிலரை நம் இடத்திற்கு வரவழைத்தும் கலந்துரையாடிக் கற்றுக்கொள்ளலாம். நாமே வெளியில் போனாலும், மற்றவர்களை நமது இடத்திற்கு வரவழைத்தாலும் இரண்டு வகைகளிலுமே நாம் கற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு நமக்குக் கிடைக்கின்றது.

தற்போதைக்கு வெளியில் என்ன நடக்கின்றது என்பதைப் பார்ப்பது என்பது, நமது குழுமத்தைப்போன்ற ஒரு குழுமம், ஆனால் வேறு ஒரு அமைப்பின் வழிகாட்டுதலில் அணிதிரட்டப்பட்டுவருகின்றார்கள், அவர்களைப் போய்ப்பார்ப்பது என்று எடுத்துக்கொள்ள வேண்டும். பிறருடைய செயல்களில் இருந்து கற்றுக்கொள்வது என்று சொல்கின்றபோது, ஒரே நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்பட்டுவந்தாலும்

நமது பகுதியில் இருந்து வேறு ஒரு பகுதிக்குச் சென்று என்ன நடக்கின்றது எப்படி நடக்கின்றது என்று தெரிந்துகொள்வது. மற்றவர்களிடம் இருந்து கற்றுக்கொள்வது அல்லது போய்ப் பார்த்துக் கற்றுக்கொள்வது, குழும உறுப்பினர்களின் பார்வையை விரிவானதாக்குகின்றது. சிக்கல்களைச் சந்திப்பதற்கு, குறிப்பாக எதிர்கொள்வதற்குக் கடினமான சிக்கல்களை மேற்கொள்வதற்கு, மாறுபட்ட அணுகுமுறைகளை நமக்குக் காட்டுகின்றது. குழுக்கள் ஒருவர் ஒருவரிடம் இருந்து குழும அணிதிரட்டல் தொடர்பான செயல்பாட்டு முறைகளையோ, அணுகுமுறைகளையோ கற்றுக்கொள்கின்றபோது, புதிதாக சிந்திப்பதற்கும், இப்படிச் செய்து பார்க்கலாமே என்று துணிந்து செயல்படுவதற்கும் திறந்த மனப்பான்மையைப் பெற்றுக்கொள்கின்றார்கள். மற்றவர்கள் இப்படிச் செய்து வெற்றி பெற்றிருக்கின்றார்கள், என்று பார்க்கின்ற போது குழுவினருக்கு உற்சாகம் பிறக்கின்றது, ஊக்கம் கிடைக்கின்றது. இப்படிப்பட்ட செயல்பாடுகள் குழுக்களுக்கு ஊக்கம் ஊட்டுவதற்கும், வேகப்படுத்துவதற்கும் உதவியாக இருக்கின்றன. இந்தப் படிநிலையில் இருந்து நமக்கு கிடைக்க வேண்டிய பலன்கள் என்ன? வழக்கமாக சிந்திப்பதில் இருந்து மாறுபட்டு சிந்திக்கக் கற்றுக்கொள்கின்றோம். புதிய செயல்பாட்டு முறைகளை உள்வாங்கிக்கொள்கின்றோம். தலைமையேற்பதற்கான வியூகங்களைக் கற்றுக்கொள்கின்றோம். ஒருவர் ஒருவரிடம் இருந்து கற்றுக்கொள்ளவும் இணைந்து செயல்படவும் வாய்ப்புகளைத் தேடிப்பிடித்துக்கொள்கின்றோம்.

## காலக்கெடு

கோட்பாட்டு ரீதியாக குழும அணிதிரட்டலின் எந்த படிநிலையிலும், எப்போது வேண்டுமானாலும் நாம் மற்றவர்கள் என்ன செய்கின்றார்கள், எப்படிச் செய்கின்றார்கள் என்பதைப் போய்ப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். அதே வேளையில் இப்படிப்பட்ட செயல்பாடுகள் மிக அதிகமான பலனைக் காண வேண்டும் என்றால், முந்தைய ஆறு படிநிலைகளையும் ஓரளவிற்குக் கடந்தபின்னர் செய்வதுதான் சரியானது. ஏனென்றால் அப்போதுதான் குழுக்கள் ஓரளவிற்கு முதிர்ச்சி பெற்றிருப்பார்கள். கொஞ்சம் விஷயம் தெரிந்திருப்பார்கள். கொஞ்சம் அனுபவம் கிடைத்திருக்கும். அதனால் அவர்கள் பார்க்கின்ற காரியங்களை தங்களது சொந்த காரியங்களுக்கும், சூழ்நிலைக்கும் பொருத்திப்பார்க்க வாய்ப்பாக இருக்கும். இப்படிப்பட்ட செயல்பாடுகள் ஒரு நாளைக்கு அல்லது அடுத்தடுத்த நாட்களாக இரண்டு நாட்களுக்கோ ஏற்பாடு செய்யப்படலாம். போய்ப் பார்த்துக் கேட்டுத் தெரிந்துகொண்டு வரலாம் என்பதை -எப்போது போய்வரலாம்? எப்படிப் போய்வரலாம்? யார் யாரெல்லாம் போய்வரலாம்? எத்தனை பேர் போய்வரலாம்? – என்பதை சூழ்நிலைதான் முழுமையாக முடிவுசெய்யும்.

## செயல்பாட்டு வழிமுறைகள்

- குழுக்களிடம் கலந்துபேசுங்கள். வெளியில் சென்று பார்க்கும்போது எந்தெந்த சிக்கல்களைப் பற்றி, எந்தந்த அம்சங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள அலசிப் பார்க்க விரும்புகின்றார்கள் என்று ஒரு பட்டியலைத் தயார்செய்துகொள்ளுங்கள்.
- பார்வையிட வெளிக்கிளம்பும் முன், குழுவோடு ஒரு திட்டமிடல் கூட்டம் நடத்துங்கள். அந்தக் கூட்டத்தில் நாம் பார்க்கச் செல்வதன் நோக்கங்கள் என்ன? அதனை எப்படிச் செய்யப்போகின்றோம்? பார்வையிடுவதற்கான காலஅட்டவணை என்ன? குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் என்னனென்ன செய்ய வேண்டும் அதாவது அவர்களது தனிப்பட்ட பொருப்புகள் என்ன? என்பதைத் தெளிவுபடுத்திக்கொள்ளுங்கள். ஒட்டுமொத்தமாக பார்வையிடச் செல்லும் குழு முழுவதுமே ஒரே புரிதலோடு செயல்படுவது முக்கியம். அனைவரும் எந்த நோக்கத்திற்காக நாம் பார்வையிடச் செல்கின்றோம் என்பதைப்பற்றி தெளிவுடன் இருக்க வேண்டும்.
- குறிப்பிட்ட சில நபர்களை ஊக்குவித்து இந்த பார்வையிடல் செயல்பாட்டிற்கு ஆகும் செலவுகளை ஏற்றுக்கொள்ளச் செய்ய முடியுமா என்று பாருங்கள்.
- பார்வையிடச் சென்ற இடத்தில் ஏதாவது கூச்சம் போக்கும் செயல்பாடுகளைச் செய்து, பார்க்க வந்தவர்களும் புது இடத்துக்காரர்களும் ஒருவரோடு ஒருவர் ஆள் பெயர் தெரிந்துகொண்டு இயல்பாகப் பேசிப்பழகும் சூழ்நிலையை உருவாக்கிக்கொடுத்து, பார்வையிடலைத் தொடங்குங்கள்.
- தன்னார்வலர்களோ, தொண்டு நிறுவன ஊக்குனர்களோ இரண்டு குழுக்களும் ஒருவரோடு ஒருவர் பேசிப்பழகும் சூழ்நிலையை உருவாக்கிக்கொடுப்பதை மட்டுமே செய்ய வேண்டும். தொடர்ந்து ஒருவரோடுஒருவர் பேசி விஷயங்களைத் தெரிந்துகொள்வது அல்லது கற்றுக்கொள்வது என்பதை தாங்களாகவே செய்வதற்கு ஊக்குவியுங்கள்.
- பார்வையிடல் என்பது தொண்டுநிறுவனத்தின் நிர்வாக அலுவலகம் அல்லது கள அலுவலகத்தோடு




நின்றுவிடக்கூடாது. கண்டிப்பாக குழுமத்தினரைச் சந்திப்பதாக இருக்க வேண்டும். குழும உறுப்பினா்களோடு நேரடியாகப் பேசித் தெரிந்துகொள்வதாக அமைக்க வேண்டும்.

- இரண்டு குழுவினரையும் தேவையான அளவிற்கு ஒருவரிடம் மற்றவா் கேள்விகளைக் கேட்டு சந்தேகங்களில் தெளிவுபெற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள். பார்வையிடலில் இரண்டு குழுக்களுக்கும் பலன் கிடைக்க வேண்டும்.
- இரண்டு குழுக்களுமே புதுமையான செயல்முறைகள், தலையீட்டு வியூகங்கள் மற்றும் அவா்கள் கற்றுக்கொண்டவை பற்றி கருத்தாய் இருக்க ஊக்குவியுங்கள்.
- பார்வையிடல் நிறைவு பெறும்போது பார்க்க வந்தவா்கள் உள்ளூர்க்காரா்களிடம் அன்றைய நாளில் நீங்கள் என்ன பார்த்தீா்கள், உங்களது ஒட்டுமொத்த அனுபவம் எப்படி இருந்தது, பார்வையிடல் மூலமாக நீங்கள் என்ன கற்றுக்கொண்டீா்கள் என்று பகிர்ந்துகொள்ளச் செய்வது நல்லது.
- மற்ற குழுக்களைச் சென்று பார்வையிடுவதையும், நமது குழுவினைப் பார்வையிட்டு எதையாவது கற்றுக்கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகின்ற மற்றவா்களை அழைப்பதையும் ஊக்குவியுங்கள்.
- பார்வையிடல் முடிந்து அவரவா் இடங்களுக்குத் திரும்பிய பிறகு, தொண்டு நிறுவனத்தின் அல்லது அமைப்பின் பணியாளா்கள் பார்வையிடச் சென்ற குழுவினரோடு அமா்ந்து கலந்துரையாடுவது நல்லது. என்ன பார்த்தார்கள், என்ன கேட்டார்கள், என்ன தெரிந்துகொண்டார்கள் என்றும் அப்படிப் பார்த்து, கேட்டு, தெரிந்துகொண்டவற்றை அடிப்படையாக வைத்து எவ்வெவற்றையெலலாம் நடைமுறைப்படுத்தப் போகின்றார்கள், தங்கள் செயல்பாடுகளில் எவற்றை மாற்றி அமைத்துக்கொள்ளப் போகின்றார்கள் என்று கேட்டுத் தெரிந்துகொண்டு எதிர்காலத்திற்காகத் திட்டமிடலாம்.
- (மேலே கண்டவற்றில் உங்கள் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற்றியோ, புதிதாக உருவாக்கியோ பயன்படுத்திக்கொள்ளுங்கள்.)

## உதவக்கூடிய சிறு தகவல்கள்

- பார்வையிடச் செல்வதற்கு முன்னதாகவே தாங்கள் பார்வையிடச் செல்லும் இடத்தில் உள்ள குழுமத்தைப் பற்றி சில அடிப்படைத் தகவல்களைத் தெரிந்துகொண்டு புரிந்துகொண்டு செல்வது நல்லது. அந்தக் குழுமத்தின் தன்மை என்ன? அவா்களது செயல்பாடுகள் என்ன? அவா்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் என்ன? போன்றவற்றைப் பற்றிய கொஞ்சம் புரிதலோடு செல்வது நல்லது.

- பார்வையிடச் செல்லும்போது சிறு சிறு குழுக்களாகவும், வயது, பாலினம், தொழில், சமயம் மற்றும் சாதி என்று எல்லா வகையிலும் கலந்த குழுக்களாகவும் அனுப்புவது முழுமையாகக் கற்றுத் தெரிந்துகொள்ளத் துணையாக இருக்கும்.
- எதற்காக பார்வையிடச் செல்கின்றோம், பார்வையிடும்போது என்னென்ன செய்யப்போகின்றோம் என்பவற்றை, பார்வையிடச் செல்லும் அனைவரது பங்கேற்புடனும் முன்கூட்டியே தயாரித்துக்கொண்டு போவது நல்லது. எல்லோருடைய கருத்துக்களையும் கேட்டுப்பார்த்து ஒரு முடிவுக்கு வரவேண்டும்.
- பார்வையிடச் செல்லும்போது அது பார்வையிடப் போகிறவர்களுக்கும், நாம் பார்க்கப்போகும் குழுமத்தினருக்கும் வசதியான நேரமாக இருக்கிறது என்பதை உறுதிப்படுத்திக்கொண்டு திட்டமிட வேண்டும்.
- பார்வையிடச் செல்லும் குழு உறுப்பினர்களுக்கிடையில் அவாகள் எதைத் தேடிச் செல்கின்றார்கள் என்பது தொடர்பாக தெளிவும் ஒரே மாதிரியான புரிதலும் இருப்பது முக்கியம்.
- பார்வையிடச் செல்லும் குழுவினரின் பலவிதமான ஆற்றல்களையும், நமக்கு ஒட்டுமொத்தமாக எவ்வளவு நேரம் பார்வையிடுவதற்காக இருக்கின்றது என்பதையும் கருத்தில் கொண்டு, நமது நோக்கங்களை அடையக்கூடியதாக பார்வையிடலை அமைத்துக்கொள்ள வேண்டும்.
- பார்வையிடச் செல்லும்போதே, தாங்கள் பார்த்து, கேட்டுத் தெரிந்து கற்றுக்கொண்டவற்றை, எப்படி தங்களது ஊருக்குத் திரும்பிச்சென்ற பிறகு தங்களது குழும உறுப்பினர்களிடம் பகிர்ந்துகொள்வது, என்ற தெளிவான திட்டத்தோடு செல்ல வேண்டும்.
- குழும உறுப்பினர்கள் இந்தப் பார்வையிடல் நிகழ்வினையும், கலந்துரையாடல்களையும் ஒருங்கிணைப்பதில் தலைமையேற்றுச் செயல்படும்படி சூழ்நிலையை அமைத்துக்கொடுக்க வேண்டும்.
- (மேலே கண்டவற்றை உங்கள் சூழ்நிலைக்கு ஏற்றவாறு மாற்றி அமைத்தோ அல்லது புதிதாக உருவாக்கியோ செயல்படுத்துங்கள்.)

## பயனுள்ள சில எச்சரிக்கைகள்

- வழிகாட்டும் நிறுவனத்தின் பணியாளர்களோ அல்லது ஒருசில தலைவர்களோ ஒட்டுமொத்தமான செயல்முறையையும், கலந்துரையாடல்களையும் மேலாதிக்கம் செய்யாதவாறு கவனமாயிருங்கள்.
- பார்வையிடல் ஒட்டுமொத்தமாக எந்தவொரு வரைமுறையும் இல்லாததாக இருந்தால், அதை ஒட்டிசிந்திக்கவும் அதிலிருந்து கற்றுக்கொள்ளவும் முடியாமல் போகும்.
- பார்வையிடச் செல்லும் குழு முடிந்தவரை ஒரே விதமான நபர்களைக் கொண்டதாக இருந்துவிடக்கூடாது. குழும உறுப்பினர்களிடையே எல்லாத் தரப்புகளிலிருந்தும் ஆட்கள் பார்வையிடும் குழுவில் இருந்தால்தான், அவர்கள் என்ன கற்றுக்கொண்டார்கள் என்பதை எல்லோருக்கும் பரவலாக்கம் செய்யத் துணையாக இருக்கும்.
- ஒருவர் மற்றவரிடம் இருந்து கற்றுக்கொள்வது என்பதுதான் நமது நோக்கம். இரண்டு குழுக்களின் சூழலும் நிச்சயமாக மாறுபட்டதாகத்தான் இருக்கும். எனவே தேவையில்லாத ஒப்பீடு, மற்றும் இரண்டு குழுமங்க்ளுக்கு இடையே போட்டி மனப்பான்மை போன்றவை நிச்சயமாகத் தவிர்க்கப்பட வேண்டும்.
- (மேலே கண்டவற்றை உங்களது சூழ்நிலைக்குத் தகுந்தவாறு மாற்றி அமைத்தோ, அல்லது புதிதாக உருவாக்கியோ பயன்படுத்திக்கொள்ளுங்கள்.)

## செயல்பாடுகள் சரியான பாதையில் செல்கின்றனவா என்பதைச் சுட்டிக்காட்டுபவை

1. (இத்தனை) வெளி நிறுவனங்கள் அல்லது வெளியிடங்கள் பார்வையிடச் சென்று வந்தோம்.
2. (இத்தனை) குழுத் தலைவர்கள் மற்றும் (இத்தனை) உறுப்பினர்கள் இந்தப் பார்வையிடல் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார்கள்.
3. (இத்தனை) குழுக்கள் பார்வையிடுவதற்காக எங்களுடைய குழுமத்திற்கு வந்துபோனார்கள்.
4. (இத்தனை) குழும உறுப்பினர்களிடம் பார்வையிடல் அனுபவங்களையும் பார்வையிடல் மூலம் கற்றுக்கொண்ட பாடங்களையும் பகிர்ந்துகொண்டுள்ளோம்.

5. பார்வையிடல் மூலமாக --------------------------. -------------------------- என்பவை செய்முறைகளாகவும் ------------------, -------------------- என்பவை தலையீட்டு வியூகங்களாகவும் புதிதாக கற்றுக்கொண்டோம்.
6. (இத்தனை) திட்டங்கள் பிற குழுக்களைப் பார்வையிட்டுக் கற்றுக்கொண்டவைகளை அடிப்படையாகக் கொண்டு, மாற்றி அமைத்துக்கொள்ளப்பட்டன.
7. (இத்தனை) உறுப்பினர்கள் தொடர்ந்து நாங்கள் போய்ப் பார்வையிட்டு வந்த குழுமத்தின் உறுப்பினர்களுடனும் நாங்கள் போய்ப் பார்த்து வந்த அமைப்பின் பணியாளர்களுடனும் பேச்சுப் பழக்கம் வைத்துக்கொண்டு இருக்கின்றார்கள்.
8. (மேலே கண்டவற்றில் உங்களுடைய சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு மாற்றியோ அல்லது புதிதாக உருவாக்கியோ பயன்படுத்துங்கள்.)



# பார்வையிடல் ஆய்வுப் படிவம்

| வரிசை எண் | திருப்பிப் பார்க்க வேண்டிய அம்சங்கள் | எவையெல்லாம நன்றாக அமைந்திருந்தன? எப்படி? | எவையெல்லாம் இன்னும் நன்றாக அமைந்திருக்க வேண்டும்? ஏன்? |
|---|---|---|---|
| 1 | குழுமம் அல்லது திட்டம் செயல்படுத்-தப்படும் பகுதி, மற்றும் பார்வையிடுவ-தற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு | | |
| 2 | பார்வையிடச் செல்வதற்காகத் தேர்ந்தெ-தடுக்கப்பட்ட குழு | | |
| 3 | பார்வையிடலுக்குத் தயாரிப்பு வேலைகள் மற்றும் பார்வையிடலுக்கான திட்டத்தின் பொருத்தம் | | |
| 4 | பார்வையிடுவதற்காகத் தேர்ந்தெடுக்க-ப்பட்ட நாளும் நேரமும் | | |
| 5 | திட்ட செயல்பாட்டிற்காகத் தேர்ந்தெ-தடுக்கப்பட்ட காரணமும் அதன் பொரு-த்தமும் | | |
| 6 | குழும உறுப்பினர்களோடு கலந்து பேச போதுமான நேரம் வழங்கப்பட்டதா? | | |
| 7 | பார்வையடச் சென்றவர்கள் மற்றும் பார்-வையிடப் பட்டவர்களின் திருப்தி | | |
| 8 | எல்லா அம்சங்களையும் பற்றித் தெரிந்-துகொள்வதற்குப் போதுமானதாக நேரம் இருந்ததா? | | |
| 9 | ஒருங்கிணைவு செய்த பணியாளர் சா-ியான சூழ்நிலையை அமைத்துக்கொடு-த்தார் | | |
| 10 | பார்வையிடல் முடிந்ததும் பார்வைய-ிடப்பட்ட குழுமத்தவர்களிடம் நீங்கள் பகிர்ந்துகொண்டது பயனுள்ளதாக இருந்ததா? | | |
| 11 | நீங்கள் கற்றுக்கொண்டு வந்ததை ஒட்டுமொத்த குழுமத்தவர்களிடம் பகிர்ந்-துகெண்டதைப் பற்றி | | |
| 12 | பார்வையிடலில் கற்றுக்கொண்டு வந்-தவற்றை எதிர்கால குழும வளர்ச்சித் திட்டங்களைக் கூர்மைப்படுத்தப் பயன்படுத்துவது பற்றி | | |

# சிந்திக்கவும் பகிர்ந்துகொள்ளவும் சில கேள்விகள்

1. திட்டமிடுதல், செயல்படுத்துதல் மற்றும் கற்றுக்கொள்ளுதல் போன்ற கோணங்களில் பார்வையிடுதலின் முக்கியமான பலங்கள் என்ன? பலவீனங்கள் என்ன?
2. உறுப்பினர்கள் பார்வையிடுதலின் நோக்கத்தை அடைந்தார்களா? ஆம் என்றால் எந்தெந்த அம்சங்களில் பயனடைந்தார்கள்? இல்லை என்றால் அவர்கள் சந்தித்த சவால்கள் என்ன?

3. குழும தலைவர்கள் உறுப்பினர்களை வழிநடத்த முடிந்ததா?
4. உறுப்பினர்கள் புதிய குழு மக்களிடமும் அவர்களை வழிநடத்தும் அமைப்பின் பணியாளர்களுடனும் துணிவுடன் கலந்துபேச முடிந்ததா?
5. பார்வையிடுதலுக்கும் பிற பயிற்சிகள் மற்றும் திறன் வளர்த்தல் அமர்வுகளுக்கும் இடையில் கற்றல் எந்த அளவிற்கு வேறுபடுகின்றது?
6. பார்வையிடுதலுக்குப் பின்பு பார்வையிடப்பட்ட குழுவினரிடம் நீங்கள் கற்றுக்கொண்டவற்றைப் பகிர்ந்துகொண்டதனால் என்ன பலன்கள் கிடைத்தன?
7. (மேலே கூறப்பட்ட அனைத்தையும் உங்கள் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற்றியோ அல்லது புதிதாக உருவாக்கியோ பயன்படுத்திக்கொள்ளுங்கள்.)

## குழந்தைகள் பாராளுமன்றம் மூலம் கற்றுக்கொண்டவை

சேதனாலயாவின் களப்பணி ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றும் திரு. விகாஸ் அவர்கள் இப்படிக் கூறுகின்றார்

"'சேத்தனாலயா' குழந்தைகள் பார்வையிடல் நிகழ்ச்சிகள் மூலமாக பயன்பெற்றவர்களில் முதன்மையானவர்கள். சேத்தனாலயா, குழந்தைகளுக்காக பார்வையிடல் நிகழ்ச்சிகளை ஏற்பாடுசெய்தது. குழந்தைகள் பாராளுமன்றம் நடத்த வழிகாட்டிவருகின்ற பிற அமைப்புகளைப் பார்வையிட, குழந்தைகள் அழைத்துச் செல்லப்பட்டார்கள். குழந்தைகள் மிகவும் ஆற்றல் பெற்றவர்களாகத் திரும்பி வந்தனர். விறுவிறுப்புடன் செயல்பட்டனர். பிற நிறுவனங்களில் இருந்து கற்றுக்கொண்ட சேத்தனாலயா குழந்தைகள் இணைந்து செயல்படவும், தீர்க்கமாக செயல்படவும் முடிவெடுத்தனர். அதன் மூலம் தாங்கள் வாழும் குழுமத்திற்கு ஏதாவது பங்களிப்பை செய்ய வேண்டும் என்று விரும்பினார்கள். குழந்தைகளிடம் மாற்றங்களைக் கொண்டுவரக்கூடிய ஆற்றல் இருக்கின்றது என்பதை, அவர்கள் உணர்ந்துகொண்டார்கள். இப்படி அவர்கள் பெற்றுக்கொண்ட ஊக்கம்தான், சீமாபுரியைச் சேர்ந்த குழந்தைகள் அவர்களது பகுதியில் முன்னர் செயல்பட்டு வந்த நடமாடும் குழந்தைகள் காப்பகத்தை மீட்டெடுப்பதற்காக இணைந்து வருவதற்குக் காரணமாக அமைந்தது."

9

செயல்பட்டு - சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்த்தல் முறையைப் பின்பற்றுதல்

# அதன் வழியாக நடை முறைப்படுத்தக்கூடிய செயல்பாடுகளைக் கண்டுகொள்ளுதல்



# செயல்பட்டு - சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்த்தல் முறையைப் பின்பற்றுதல் அதன் வழியாக நடைமுறைப்படுத்-தக்கூடிய செயல்பாடுகளைக் கண்டு-கொள்ளுதல்

## நோக்கம்

குழும அணிதிரட்டல் என்பது குழுமங்கள் ஒரு பொதுச் செயல்பாட்டிற்காக ஒன்றுகூடி வருவதில் தொடங்குகின்றது. குழுக்களும் அமைப்புகளும் தங்களுடைய குறிப்பிட்ட சிக்கல்களுக்காக, பிரச்சினைகளுக்காக, தேவைகளுக்காக திட்டமிட்டு செயல்பாடுகளை முன்னெடுக்கின்ற போது அது வளர்கின்றது. இந்தச் செயல்முறை குழுமங்கள் தங்களது அனுபவங்களை அசைபோட்டு அவற்றில் இருந்து கற்றுக்கொண்டு, எந்தெந்தச் சிக்கல்களை எப்படி எதிர்கொள்வது என்ற விவரங்களை ஒட்டுமொத்த குழுமத்தின் அறிவுக் களஞ்சியத்தில் கொண்டு சேர்க்கின்றபோதுதான், குழும அணிதிரட்டல் என்பது ஆழமுள்ளதாகவும், பொருளுள்ளதாகவும் வலுவடைகின்றது. பரபரப்பான அன்றாட வாழ்வுச் சூழ்நிலையில், சிந்தித்துச் சீர்தூ க்கிப் பார்ப்பது என்கின்ற ஒரு பண்பாட்டை வளர்த்துக்கொள்வது, ஒவ்வொரு உறுப்பினரும் தனக்குள் என்ன நடக்கின்றது என்பதைத் தெரிந்து புரிந்து செயல்படவும், குழும உறுப்பினர்களின் உள்ளக் கிடக்கைகளை தெரிந்து, அறிந்து செயல்படவும் உதவியாக இருக்கின்றது. சிந்திப்பதற்காக நேரம் ஒதுக்கும்போது, ஒருவரோடு ஒருவர் நெருக்கமாக உரையாடுவதற்கு உதவியாக இருக்கின்றது. ‘என்ன நடந்தது? என்ன செய்தோம்? என்கின்ற கேள்விகளைத் தாண்டி சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்க்கும் செயல்பாட்டு முறை ‘எப்படி’ மற்றும் ‘ஏன்’ என்னும் கேள்விகளை முன்னிருத்துகின்றது. தனிநபரோ அல்லது குழுவோ எப்படி ஒரு செயலைச் முன்னெடுத்தார்கள்? ஏன் அப்படிச் செய்வதென்று முடிவெடுத்தார்கள்? என்று அலசுகின்றது. செய்முறையையும் அதன் விளைவுகளையும் மதிப்பீடு செய்வதைத் தாண்டி இதன் தாக்கம் இருக்கின்றது. இப்படிச் சிந்தித்துத் சீர்தூக்கிப் பார்க்கும் முறையில் எண்ணங்கள், உணர்வுகள், இந்த உடல் மற்றும் உள்ளம் எல்லாம் ஈடுபட்டிருக்கின்றது. இது நமது மதிப்பீடுகளையும் நாம் கொண்டிருக்கின்ற நம்பிக்கைகளையும் விமர்சனக் கண்ணோட்டத்தோடு உற்று நோக்க உதவுகின்றது. இந்தச் செயல்முறையில் நாம் நமது அனுபவங்களை உள்ளேயே ஊறவைக்கின்றோம், பின்னர் அதனை அசைபோட்டு செரிமானம் செய்கின்றோம், அதன் பின்னர் அந்த அனுபவங்களைக் கொண்டு வாழ்வின் அர்த்தங்களையே கண்டுகொள்கின்றோம். அதனால் வாழ்வு – சாவு என்னும் உயிர்ச் சுழற்சியில் வந்தது வரட்டும், போனது போகட்டும் என்ற மனநிலையில் அனைத்தையும்



எதிர்கொள்ளத் தயாராகின்றோம். செயல்பாடு – சிந்தனை சீர்தூக்கிப்பார்த்தல் என்னும் செயல்முறை, குழுக்கள் தங்களது முந்தைய திட்டமிடுதலிலும் செயல்படுத்துதலிலும் தவறவிட்ட சில உள்ளொளிகளை, வாய்ப்புகளை, செயல்பாடுகளை வெளிக்கொண்டுவரக்கூடும். நடைமுறைப்படுத்தக்கூடிய செயல்பாடுகள் என்பவை அறிவின் அடிப்படையிலான, கோட்பாடுகளின் அடிப்படையிலான அனுபவங்களை அசைபோட்டதாலும், செயல்பாட்டிற்கான சிறப்பு ஆய்வுகளை மேற்கொண்டதாலும் பிறப்பெடுத்து வருகின்றன. இவை குழும உறுப்பினர்கள் தங்களது குழும சமூக செயல்பாட்டு ஆன்மீகத்தை ஆழப்படுத்துவதற்கு உதவுகின்றன.

## பொருத்தமான நேரம்

செயல்பட்டு - சிந்தித்து சீர்தூக்கிப்பார்க்கும் முறையைப் பயன்படுத்தி நடைமுறைப்படுத்தப்படக்கூடிய செயல்பாடுகளைக் கண்டறிதல் என்பது எல்லாப் படிநிலைகளுக்கும் பொருத்தமானதாக இருக்கின்றது. எனவே இதனை ஒட்டுமொத்தமாக குழும அணிதிரட்டல்செயல்பாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் நாம் செய்யலாம். ஒவ்வொரு படிநிலையைக் கடக்கின்ற போதும் செயல்பட்டு-சிந்தித்தல் செயல்முறையைக் கையாள்வது மிகவும் சிறப்பானதாக இருக்கும். இந்த வகையில் உணர்வுகள், சிந்தனைகள், செயல்முறைபற்றிய பதிலிருப்புகள் பங்கேற்பாளர்களின் நினைவில் பசுமையாக இருக்கும், எனவே நினைவூட்டிக்கொள்ளும்போதும் அவற்றில் இருந்து கிடைத்த அனுபவ அறிவை சிந்தாமல் சிதறாமல் சேகரித்து வைத்துக்கொள்ள முடியும்.

## செயல்படும் வழிமுறை

- குழுவில் கலந்துரையாடலுக்கு வழிவகை செய்கின்றபோது ஏதாவது ஒரு முடிவை அல்லது ஏதாவது ஒரு செயல்பாட்டை அடையாளம் கண்டு அதன்மீது சிந்தித்து சீர்தூக்கிப் பார்க்கச் செய்ய வேண்டும்.
- நினைவூட்டிக்கொள்வதற்கும், அந்த நினைவுகளை சிந்தித்து சீர்தூக்கிப் பார்ப்பதற்கும் என்ன முறையில் செய்யலாம், எவற்றைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று முடிவெடுத்துச் செயல்பட குழுவிற்கு ஊக்கம் கொடுங்கள்.
- பங்கேற்பாளர்களுக்கு பழக்கமான ஏதாவது ஒரு பொருத்தமான மாதிரியை கீழே கொடுக்கப்படும் பட்டியலில் இருந்து தேர்ந்தெடுத்துக்கொண்டு அவற்றை உங்களுடைய சூழ்நிலைக்கு ஏற்ப சரிசெய்து பயன்படுத்துங்கள்.
- பங்கேற்பாளர்களின் ஆர்வத்திற்கு ஏற்ப, சார்ட்டுகள், படங்கள், கொலாஜ் எனப்படும் கலவைப்படங்கள், குறுநாடகங்கள் போன்ற கருவிகளைப் பயன்படுத்தி புதுமையான விதங்களில் குழும உறுப்பினர்கள் தங்களது உணர்வுகளையும், மனநிலைகளையும், சிந்தனைகளையும் தெளிவாக எடுத்துச் சொல்வதற்கு உதவி செய்யுங்கள்.

- பங்கேற்பவர்கள் அவர்களது எண்ணங்களைக் கடந்து தங்கள் உணர்வுகளையும், உணர்ச்சிகளையும் தெளிவாக வெளிப்படுத்த சூழ்நிலையை அமைத்துக்கொடுங்கள். அவர்களது உடல்மொழியை உற்றுக் கவனியுங்கள்.
- முறைப்படுத்தல் பலவேறு நுட்பங்களைப் பயன்படுத்துகின்றது. இது மிகவும் பயனுள்ள வகையில் குழு உறுப்பினர்கள் தங்களது சிந்தனைகளையும் உணர்வுகளையும் ஆழ்ந்து அலசிப்பார்க்கச்செய்கின்றது. அவர்கள் அனுபவத்தில் என்ன கற்றுக்கொண்டார்கள் என்பதை நுணுகி அறிந்துகொள்ளச் செய்து அந்த அனுபவ அறிவை குழுமத்தில் அனைவருக்கும் கிடைக்கும் அறிவாக சேர்த்து வைத்துக்கொள்ள வழிவகுக்கின்றது.
- பங்கேற்பு கிராம ஆய்வு, பங்கேற்பு கற்றல் மற்றும் செயல்படல் முறைகள் மக்களுக்கு ஏற்கெனவே தெரிந்திருப்பதால் அவற்றையும் பயன்படுத்தி செயல்பட்டு-சிந்தித்து சீர்தூக்கிப் பார்க்கச் செய்யலாம். அடுத்தடுத்து குழுக்கள் தாங்கள் பலவகையான வேலைகளை எடுத்துச் செய்வதன் மூலமாகப் பெற்றுக்கொண்ட அனுபவ அறிவை வடித்தெடுத்து வைத்துக்கொள்வதற்காக புதிய முறைகளைக் கண்டுபிடித்துச் செயல்படுத்த ஊக்கப்படுத்தலாம்.
- நாம் ஈடுபட்ட ஒரு நிகழ்வையோ அல்லது நாம் எடுத்துச் செய்த ஒரு செயலையோ பலரும் பல விதமாக பலகோணங்களில் விவரித்துச் சொல்வார்கள். இந்த வேறுபட்ட பார்வைகளில் இருந்தும் நாம் பல காரியங்களைக் கற்றுக்கொள்ள முடியும்.
- இது போன்ற சிந்தனைகளை நாம் நமது குழுவின் உறுப்பினர்கள் ஏற்கெனவே எடுத்துச் செய்த ஒரு வேலையை மீண்டும் செய்தால் என்ன செய்வார்கள் எப்படிச் செய்வார்கள் என்கின்ற கேள்விகளோடு நிறைவுசெய்யலாம். ஏற்கெனவே செய்தது போலவே எதையெல்லாம் செய்வார்கள்? ஏற்கெனவே செய்ததில் இருந்து வேறுபட்டு எவற்றையெல்லாம் செய்வார்கள்? இப்படி இரண்டு விதமாகச் செயல்படுவதற்கும் காரணங்கள் என்ன? என்று பேசும்போது நாம் நிறையக் கற்றுக்கொள்வோம்.
- (மேலே சொன்னவற்றை உங்கள் சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றியோ அல்லது புதிதாக உருவாக்கியோ பயன்படுத்திக்கொள்ளுங்கள்.)

# உதவியாக சில சிறு தகவல்கள்

- ஆரம்ப காலக்கட்டத்தில் சவாலாக இருந்தாலும். சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்க்கும் முறையை ஒரு பண்பாடாக வளர்த்தெடுங்கள்.
- நாம் சிந்தித்துப் பார்ப்பதற்காக எடுத்துக்கொள்ளும் காரியங்கள் ஒரு குறிப்பிட்ட அளவிற்குள் வைத்துக்கொண்டால் நாம் அதிக பலன் காண முடியும். கொஞ்சமாக எடுத்துக்கொண்டு அதைப்பற்றி சிந்திக்கும் போது நாம் ஆழமாகச் சிந்திக்கலாம், தெள்ளந் தெளிவாக எடுத்துச் சொல்ல முடியும்.
- இந்தக் கையேட்டின் ஒவ்வொரு சிந்தனைத் தொகுதியிலும் நமது செயல்பாட்டின் விளைவுகள் என்ன நாம் கண்ட பலன்கள் என்ன என்று மதிப்பீடு செய்வதற்கான ஒரு பகுதி இருக்கின்றது. சிந்திக்க பகிர்ந்துகொள்ள சில கேள்விகள் என்கின்ற பகுதியும் இருக்கின்றது. எனவே செயல்பட்டு- சிந்தித்து சீர்தூக்கிப் பார்க்கும் செயல்பாடுகளை, கலந்துரையாடல்களை இந்தப் பகுதிகளில் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டே நீங்கள் விறுவிறுப்பாகத் தொடங்கலாம்.
- நாம் கலந்துரையாடும்போது நாம் செய்த காரியங்கள் எத்தனை காரியங்கள் வெற்றிகரமாக முடிந்தது என்கின்ற பட்டியலை மட்டும் போட்டால் போதாது. நாம் கையில் எடுத்துக்கொண்ட செயல்களை 'எப்படி' செய்து முடித்தோம்? 'ஏன்' அவற்றை அப்படிச் செய்து முடித்தோம்? அதனைச் செய்துகெண்டிருக்கும் போது மக்களின் உணர்வுகள் எப்படி இருந்தன? என்பவற்றைத் தெரிந்துகொள்ள நாம் குறியாக இருக்க வேண்டும்.
- சில நேரங்களில் நாம் செயல்படும் இடங்களில் இருந்து வேறு பகுதிக்கு சென்றுள்ளவர்கள், அன்றாட வேலைகளில் இருந்து ஓய்வாக இருப்பவர்கள் ஆழமான சிந்திக்கும் வழிமுறைக்கு உதவியாக இருப்பார்கள். அதாவது உட்கார்ந்து யோசிக்க அவர்களுக்கு நேரம் இருக்கின்றது இல்லையா? ரூம் போட்டு யோசிக்கிறாங்க என்றுகூட வைத்துக்கொள்ளலாம்.
- வருடத்திற்கு ஒருமுறை இரண்டு அல்லது மூன்று நாட்கள் இவ்வாறு சிந்திப்பதற்கு என்றே ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்வது உதவியாக இருக்கும்.
- சில சமயங்களில் இப்படி சிந்திக்கும் முறை நமது காயங்களை ஆற்றிக்கொள்வதற்கு, நமது வேறுபாடுகளைக் களைந்துகொள்ள. நமது குறைகளை ஏற்றுக்கொள்ள மற்றும் மற்றவர்களின் பங்களிப்பை அங்கீகரிக்க உதவியாக இருக்கின்றது.

- இந்த சிந்திக்கும் முறை குழும உறுப்பினர்களுக்கு இடையில் ஒருவரை ஒருவர் நம்பி, ஒருவரோடு ஒருவர் இயல்பாகப் பேசிப் பழகும் விதத்தில் பந்தங்களை கட்டியெழுப்ப உதவுகின்றது.
- குழும அணிதிரட்டல் பரவலாக செயல்படுத்தப்படும் இடங்களில், மற்றவர்களைவிடச் சிறப்பாகச் செயல்படும் சிறு பகுதிகளில் நாம் சிந்தித்துச் சீர்தூக்கிக் கற்றுக்கொண்டவற்றை பிற பகுதிகளில் நமது செயல்முறைகளை வழிநடத்துவதற்குப் பயன்படுத்திக்கொள்ளலாம்.
- (மேலே சொன்ன அத்தனை காரியங்களையும் உங்களுடைய சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றியோ அல்லது புதிதாக உருவாக்கியோ பயன்படுத்திக்கொள்ளுங்கள்.)

## பயனுள்ள சில எச்சரிக்கைகள்

- உட்கார்ந்து யோசித்தே ஆக வேண்டும் என்று கட்டாயப்படுத்த வேண்டாம். தன்னார்வத்துடன் கூடிவந்து சிந்தித்து சீர்தூக்கிப் பார்க்கும் ஆர்வத்தைத் தூண்டிச் செயல்படுத்த வழிவகை செய்யுங்கள்.
- தொடக்கத்தில் பங்கேற்பவர்கள் தங்களைப் பற்றியே பெருமையாகப் பேசிக்கொள்வதில், சாதனைகளைப் பட்டியல் இடுவதில், மற்றவர்களைப் பற்றி தீர்ப்பிடுவதில், வாக்குவாதம் செய்வதில், விவாதிப்பதில் மற்றும் சண்டை சச்சரவில் இறங்கிவிடலாம். சிலருக்கு ஆழமாக உணர்வுகளை வெளிப்படுத்துவது என்பது கடினமாக இருக்கலாம். மென்மையாக இவர்களை வழிநடத்துங்கள்.
- செயல்படுதல் -சிந்தித்து சீர்தூக்கிப் பார்த்தல் என்னும் முறை உள்ளார்ந்த ஆழமான உரையாடலுக்கு இட்டுச்செல்ல வேண்டும். அதைச் செய்துவிட்டோம், இதைச் செய்துவிட்டோம் என்னும் பட்டியல் போடுவதோடு நின்றுவிடக்கூடாது. அல்லது இதை நீ செய்ய வில்லை, அவன் அல்லது அவள் செய்யவில்லை என்று குற்றம் சாட்டும் வேலையாக மாறிவிடக்கூடாது. ஆழமான உரையாடல் நாம் மேற்கொண்ட செயல்முறைகளில் எவையெல்லாம் இன்னின்ன காரணங்களால் மாற்றங்களைக் கொண்டுவந்தன, அல்லது எவையெல்லாம் இன்னின்ன காரணங்களால் மாற்றங்களைக் கொண்டுவந்து சேர்த்தே தீரும் என்று நமது அனுபவ அறிவனைத்தையும் நுணுக்கமாக சிந்தாமல் சிதறாமல் சேகரித்துக்கொள்ள வழிவகை செய்யும்.
- மாறுபட்ட சிந்தனைகளையும் எதிர்ப்புகளையும் நாம் அமுக்கிவிடக்கூடாது. ஆனால் ஏன் குறிப்பிட்ட நபர்கள் அப்படி நினைக்கின்றார்கள் அல்லது இந்த விதமாக உணர்க்கின்றார்கள் என்று பகிர்ந்துகொள்வதற்கு ஊக்குவிக்கப்பட வேண்டும்.
- (மேற்கண்ட அனைத்தையும் உங்களுடைய சூழ்நிலைக்கு ஏற்றவாறு மாற்றியோ அல்லது புதியதாக உருவாக்கியோ பயன்படுத்திக்கொள்ளுங்கள்.)




# நமது செயல்பாடுகள் சரியான பாதையில் சென்றுகொண்டிப்பதைச் சுட்டிக்காட்டுபவைகள்


1. (இத்தனை) குழுக்கள் அல்லது குழுமங்கள் அடிப்படையிலான அமைப்புகள் (இத்தனை) முறை செயல்பட்டு-சிந்தித்து சீர்தூக்கிப் பார்க்கும் முறையைப் பயன்படுத்தியிருக்கின்றன.
2. (இத்தனை) பங்கேற்பாளர்கள் தாங்கள் தங்களது எண்ணங்களையும் உணர்வுகளையும் சுதந்தரமாக எடுத்துச்சொன்னோம் என்கின்றார்கள். (இத்தனை) பங்கேற்பாளர்கள் தாங்கள் மற்றவர்கள் சொன்னதை ஈடுபாட்டுடன் காதுகொடுத்து கேட்டோம் என்று உணர்ந்ததாகச் சொல்கின்றார்கள்.
3. (இத்தனை) பங்கேற்பாளர்கள் அல்லது குழுக்கள் மற்றவர்கள் சொன்னதைக் கேட்டபிறகு தங்களது கருத்துக்களை அல்லது பார்வைகளை மாற்றிக்கொண்டதாக உணர்ந்ததாகச் சொல்கின்றார்கள்.
4. (இத்தனை) பங்கேற்பாளர்கள் அல்லது குழுக்கள் வழக்கமாகக் கொடுக்கப்பட்ட அறிக்கைகளில் பிடிபடாத மற்ற காரியங்களையும் கற்றுக்கொண்டிருந்ததாக உணர்கின்றார்கள்.
5. (இத்தனை) பங்கேற்பாளர்கள் அல்லது குழுக்கள் தங்களது சிந்திக்கும் முறை அவர்கள் ஒருவரோடு ஒருவர் ஐக்கியமாவதை வலுப்படுத்தியதாக உணர்ந்துள்ளார்கள்.
6. (இத்தனை) பங்கேற்பாளர்கள் அல்லது குழுக்கள் சிந்திக்க வைக்கின்ற இந்த அமர்வுகளில் கலந்துகொண்டது தங்களது பலங்களையும் பலவீனங்களையும் கண்டுகொள்வதற்குத் தங்களுக்கு வாய்ப்பு கொடுத்ததாக உணர்ந்து வெளிப்படுத்தியுள்ளார்கள்.
7. (இத்தனை) பங்கேற்பாகளர்கள் அல்லது குழுக்கள் தாங்கள் ஏற்கெனவே திட்டமிட்டிருந்த செயல்பாடுகளை, இந்தச் சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்க்கும் முறையில் கற்றுக்கொண்டவற்றின் அடிப்படையில் மாற்றி அமைத்துக்கொண்டார்கள்.
8. (மேலே கண்டவற்றில் உங்களுடைய சூழ்நிலைக்குத் தகுந்தபடி மாற்றி அமைத்துக்கொண்டோ அல்லது புதிதாக உருவாக்கிக்கொண்டோ பயன்படுத்துங்கள்.)

# செயல்பாடு- சிந்தித்தல் - சீர்தூக்கிப் பார்த்தல் முறை மாதிரிகள்


**மாதிரி 1: செயல்பாடு – சிந்தனை – கற்றுக்கொள்தல் - திட்டமிடல் (ARLP)**




**மாதிரி 2: கிப்ஸ் சிந்தித்தல் சூழற்சி (Gibbs G, 1988)**




**மாதிரி 3: ஒழுங்கமைவுசெய்தல் கருவி**



**மாதிரி 4: இஞ்ஞாசியார் காட்டும் ஆழ்ந்த உரையாடல் - தனிப்பட்ட மற்றும் குழும அளவிலான தேர்ந்துதெளிதல**





# சிந்திக்கவும் பகிர்ந்துகொள்ளவும் சில கேள்விகள்

1. குழுக்கள் செயல்பாடு – சிந்தித்து சீர்தூக்கிப் பார்த்தல் முறையில் ஈடுபட்டிருந்தபோது அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்கள் என்ன?
2. உறுப்பினர்கள் முழுமையாக இந்த காரியத்தில் ஈடுபட முடிந்ததா? முடிந்தது என்றால் எப்படி? முடியவில்லை என்றால் ஏன்?
3. பங்கேற்பாளர்கள் அனுபவித்த சங்கடங்கள் மற்றும் சவால்கள் என்ன?
4. சிந்தித்து சீர்தூக்கும் செயல்முறையை நிறைவுசெய்யும்போது பங்கேற்பாளர்கள் மிகவும் உற்சாகமாக இருப்பதில் இருந்து மிகவும் சோர்ந்து போயிருப்பது என்பதற்கிடையில் எந்த ஆற்றல் நிலையில் இருந்தார்கள்.
5. மேற்கண்ட செயல்முறையில் பங்கேற்பாளர்கள் பெற்றுக்கொண்ட புதிய உள்ளொளிகள்/ தெளிவுகள் என்ன?
6. (மேற்கண்டவற்றில் உங்கள் சூழ்நிலைக்கேற்ப நீங்கள் மாற்றியமைத்தோ அல்லது புதிதாகச் சேர்த்துக்கெண்டோ பயன்படுத்தலாம்.)

# 10

# ஒத்துழைப்பது, பிணைப்பை ஏற்படுத்திக்கொள்வது மற்றும் குரல்கொடுப்பதற்கான செயல்பாடுகள்



# ஒத்துழைப்பது, பிணைப்பை ஏற்படுத்திக்கொள்வது மற்றும் குரல்கொடுப்பதற்கான செயல்பாடுகள்

## நோக்கம்

ஒத்துழைப்பது, பிணைப்பை ஏற்படுத்திக்கொள்வது மற்றும் குரல் கொடுத்து செயல்படுவது, குழுமத்தின் தலைமையிலான செயல்முறைகளின் மதிப்பை கணிசமான அளவு கூட்டுகின்றது. ஒட்டுமொத்தமான வளர்ச்சியும், உரிமைகளை அடைவதும், அவர்களுக்கே உரித்தான வளர்ச்சித் திட்டப் பங்குகளைப் பெற்றுக்கொள்வதும், குழும உறுப்பினர்களால் மட்டுமே தனித்தோ அல்லது ஏதாவது ஒரு தொண்டு நிறுவனத்தின் துணையை மட்டும் கொண்டோ வென்றெடுக்கக்கூடிய காரியம் அல்ல. ஒத்துழைப்பது என்பது ‘இணைந்து வேலைசெய்வது’ என்று பொருள்படுகின்றது. எல்லோருக்கும் ஆர்வத்தைத் தூண்டும் ஒரு பொதுக்காரியத்தைச் செய்து முடிப்பதற்காக, தரவுகளைப் பகிர்ந்துகொள்வது, நிகழ்ச்சிகளை ஒருங்கிணைந்து நடத்துவது, இணைந்து திட்டமிடுவது மற்றும் செயல்படுவதைத்தான் நாம் ஒத்துழைப்பது என்கின்றோம். பலவேறு விதமான உறவுப் பின்னல்களைக் கொண்ட, பலவேறு பலங்களைக் கொண்ட, பலவேறு அளவில் ஒருவர் மீது மற்றவர் நம்பிக்கைகொண்ட அமைப்புகள் ஒரு குழுவாக இயங்கி, ஒரு குறிப்பிட்ட இலக்கை அடைய வேலைசெய்யும்போது, அதனைப் பிணைப்பு என்கிறோம். அல்லது ஒரு குறிப்பிட்ட இலக்கை அடைவதற்காக வேலைசெய்யும் போது, பரந்த அளவில் ஆதரவுகொடுக்கும் அமைப்புகளைக்கொண்ட குழவினை, பிணைப்பு என்கின்றோம். இது ஒரு சூழலைப் போன்றது. அந்தச் சூழலில் பலவேறு விதமான செயல்பாட்டாளர்கள் இணைந்து வேலைசெய்கின்றார்கள். இது தொடர்பாக கூட்டணி அமைப்பது மற்றும் பங்குதாரர்தளைக் கட்டியெழுப்புவது போன்ற பிற கருத்துருக்களையும் நாம் காணலாம். சட்டங்கள், கோட்பாடுகள், அமைப்புகள் மற்றும் நிறுவனங்களின் நிகழ்ச்சிகளை மாற்றியமைப்பதற்காக, திட்டமிட்டு எடுக்கப்படும் செயல்களையே நாம் குரல் எழுப்புதல் என்கின்றோம். அடித்தட்டு மக்கள் மத்தியில் இருந்து சமுதாயத்தின் மேல்தட்டுவரை, சமுதாயத்தின் அடித்தள அமைப்புகளில் இருந்து உச்சாணிக்கொம்பு

அமைப்புகள் வரை, எங்கிருந்து வேண்டுமானாலும் இந்தக் குரல்எழுப்பும் செயல்பாடுகளைத் தொடங்கமுடியும். ஆதரவுதிரட்டல் என்பது, குறிப்பிட்ட முடிவுகளை எடுக்கின்றவர்களை, தனிப்பட்ட முறைசாரா வகையான சந்திப்புகள் வழியாக, நம்முடைய சிந்தனை ஓட்டத்தின்பக்கம் வளைத்துக்கொண்டுவந்து சேர்ப்பது எனலாம்.

உரிமைகள் அடிப்படையிலான வளர்ச்சி செயல்முறை மிகப்பெரும் வீச்சானது. நுணுக்கமான பின்னல்களாலானது. எனவே குழும உறுப்பினர்கள் ‘வச்சா குடுமி சிரச்சா மொட்டை’ என்ற போக்கில் போகக்கூடாது. மற்ற அமைப்புகள், ஊடகங்கள், தனிநபர்கள், செயல்பாட்டாளர்கள், கல்வியாளர்கள், உள்ளாட்சி அமைப்புகள் போன்றவற்றுடன் ஒத்துழைக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். பயனுள்ள வகையில் செயல்பாடுகளை முன்னெடுத்துச்செல்வதற்காக, பலவேறு அமைப்புகளுடன் பிண்ணிப் பிணைந்து, நமது தேவைகளுக்காக குரல் எழுப்பும் செயல்பாடுகளைத் தொடங்க வேண்டும். நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரையில், கூட்டாகச் சேர்ந்து, குறைந்த அளவில் நாம் என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்று, திட்டமிட்டு செயல்படுத்தி மதிப்பீடுசெய்து தொடர வேண்டும். ஒத்துழைப்பதும் பிணைப்புகளை ஏற்படுத்திக்கொள்வதும் நமக்கு பலவேறுவிதமான திறன்கள், நிபுணத்துவம், அனுபவங்கள் மற்றும் சில சமயங்களில் நமது செயல்பாடுகளுக்குத் தேவையான வளங்கள், ஆகியவற்றைக் கொண்டுவந்து சேர்க்கின்றன. மேலும் பரந்த அளவில் செயல்படுவதற்கு ஒரு பட்டாளத்தையே உருவாக்கிக் கையில் கொடுத்துவிடும் வாய்ப்பும் கொடுக்கின்றன. நுணுக்கமான சிக்கல்கள், குறிப்பாக கோட்பாடு தொடர்பான செயல்பாடுகளை எதிர்கொள்ள, ஒன்றுபட்ட வலுவும் செயல்பாடுகளும் தேவைப்படுகின்றன. பொதுவான இலக்கும் ஈடுபாடும் கொண்ட பலவேறுபட்டவர்களோடும், அமைப்புகளோடும், குழுமங்களோடும், பிணையங்களோடும் இணைந்து பணியாற்றும் ஒரு பண்பாட்டை வளர்த்தெடுப்பதே ஒட்டுமொத்தமாக இந்தப் படிநிலையின் விளைவாக இருக்க வேண்டும்.

## பொருத்தமான காலக்கெடு

இந்தப் படிநிலைக்கு வந்து சேர்ந்துவிட்டோம் என்றால் குழுக்களும், குழுக்களை அடிப்படையாகக் கொண்ட அமைப்புகளும் வலுவாக வளர்ந்துவிட்டன, தங்களுக்கான அடையாளத்தையும், செயல்பாடுகளையும் தெளிந்துகொண்டு விட்டன என்று பொருள். இப்படி அவர்கள் தயாராகவில்லை என்றால் தங்களது சுயலாபத்திற்காக பிற குழுக்கள் இவர்களைப் பயன்படுத்திக்கொள்ள நேரிடலாம். ஒத்துழைப்பும், பிணையமும் நாம் எப்படி செயல்படப்போகின்றோம் என்பதை வரையறுக்கின்றன. எனவே இந்தப படிநிலை மற்ற படிநிலைகளோடு ஒன்றுபட்டு வளர்த்தெடுக்கப்பட வேண்டும். குழுமத்தின் தலைவர்கள் மக்களுக்கு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்திக்கொடுக்கவேண்டிய பொறுப்பில் உள்ளவர்களோடு தொடர்பும் உறவும்கொள்ள வேண்டிய நிலையில் இந்தப் படிநிலை மிகவும் முக்கியமானது ஆகும்.

## செயல்பாட்டு வழிமுறைகள்

- ஒத்த சிந்தனையை உடைய அமைப்புகளை, பிணையங்களை, இயக்கங்களை, தனிநபர்களை, செயல்பாட்டாளர்களை மற்றும் ஊடகங்களை ( இனிவரும் இடங்களில் ‘தோழமை தரக்கூடியவர்கள்’ என்று அழைப்போம்) அடையாளம் கண்டுகொள்ளுங்கள், அவர்களைப் பற்றிய தரவுகள் அனைத்தையும் சேகரித்து வைத்துக்கொள்ளுங்கள். இவர்கள் உள்ளூர் அளவில், வட்டார அளவில், மாவட்ட அளவில் அல்லது மாநில அளவில் இருக்கலாம். இப்படி அடையாளம் கண்டுகொள்ளப்பட்டவர்களோடு குழுக்களும், குழும அடிப்படையிலான அமைப்புகளும் இணைந்து வேலைசெய்யலாம். வெற்றிகரமான செயல்பாடுகளைப் பற்றிப் பகிர்ந்துகொள்ளலாம். இணைந்து செயல்பாடுகளில் ஈடுபடலாம்.
- இப்படி தோழமை தரக்கூடியவர்களோடு மின்அஞ்சல், தொலைபேசி, மாநாடுகள், பயிற்சிப்பட்டறைகள், கூட்டங்கள் போன்றவை வழியாகத் தொடர்புகொண்டு உங்களுடைய வேலைகளைப் பற்றிப் பகிர்ந்துகொள்ளுங்கள். அவர்களுடைய வேலைகளைப் பற்றிக் கேட்டுத்தெரிந்துகொள்ளுங்கள்.
- குழும அடிப்படையிலான அமைப்புகளில் தலைவர்களை பலவேறு ஆய்வு மற்றும் செயற்குழுக்களில் தன்னார்வமுடன் பங்கேற்பதற்கு ஊக்குவியுங்கள். பிற குழுக்களோடு தோள்கொடுத்து வேலைசெய்ய ஊக்குவியுங்கள்.
- குழும உறுப்பினர்கள் ஒத்த சிந்தனையுள்ள நண்பர்களை மற்றும் ஒத்த சிந்தனையுள்ள தோழமை அமைப்புகளை அடையாளம் கண்டுகொள்வதற்கு உதவி செய்யுங்கள். இவர்களோடு கலந்துபேசி பொதுவாக எல்லோரும் இணைந்து செய்யக்கூடிய செயல்திட்டம் ஒன்றை நாம் உருவாக்கலாம்.
- பலவேறு சிக்கல்களுக்காக குரல் எழுப்புகின்ற குழுக்களைத் தேடிக்கண்டுபிடித்து குழும உறுப்பினர்கள் அவற்றில் இணைந்து செயல்படுவதற்கு வழிவகை செய்யுங்கள்.



- ஏழை மக்களுக்கான கொள்கை முடிவுகளை எடுக்க வைக்க பிணையங்களால் மற்றும் பிற அமைப்புகளால் மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் நடத்தப்படும் பரப்புரைகளிலும் பிற நிகழ்வுகளிலும் உறுப்பினர்கள் கலந்துகொள்வதற்கு வழிவகை செய்யுங்கள். இப்படி வெளியில் நடக்கும் நிகழ்வுகளில் கலந்துகொள்வது குழும உறுப்பினர்கள் தங்களது பகுதிகளில் நடத்த வேண்டிய குரல் எழுப்பும் செயல்பாடுகளுக்கு, அவர்களது உரிமைகளுக்காக குரல் கொடுப்பதற்கு, அந்தப் பகுதியின் வளர்ச்சித் திட்டங்களில் அவர்களுக்கு உரிய பங்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக அரசு அதிகாரிகளைச் சந்தித்துப் பேசுவதற்குத் தேவையான திறன்களை பெற்றுக்கொள்வதற்கு வழிவகுக்கும்.
- உறுப்பினர்கள் பள்ளிக் கல்விக் குழு, நலவாழ்வுக் குழு, வளர்ச்சிக் குழு என்று பலவிதமான குழுக்களிலும் உறுப்பினர்களாக இருந்து பணிசெய்ய ஊக்குவியுங்கள். இப்படி இருப்பதால் அவர்களுக்கு தங்களது கருத்துக்களை எடுத்துச்சொல்வதற்கு ஒரு இடம் கிடைக்கும். அவர்களுக்கு முடிவு எடுக்கும் வழிமுறைகளில் பங்கேற்பதற்கும் அவர்களால் செய்யக்கூடியவற்றைச் செய்வதற்கும் வாய்ப்புகள் கிடைக்கும்.
- குழுக்களுக்கும் குழும அடிப்படையிலான அமைப்புகளுக்கும் உள்ளூர் நிர்வாகத்தில் பஞ்சாயத்து அமைப்புகளின் முக்கியத்துவத்தையும் அதில் பங்கேற்பதற்கு அவர்களுக்கு உள்ள உரிமைகளையும் எடுத்துச் சொல்ல வேண்டும். குழும உறுப்பினர்கள், குறிப்பாக பெண் உறுப்பினர்கள் தேர்தல்களில் போட்டியிட ஊக்குவியுங்கள்.
- குழும அடிப்படையிலான அமைப்புகளின் தலைவர்களை வள்ளல் தன்மையுள்ள அமைப்புகளுக்கும், பெருமுதலீட்டு நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு மையங்களுக்கும் அறிமுகம் செய்துவையுங்கள். குழும அடிப்படையிலான அமைப்புகளின் தலைவர்களுக்கு பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களை உருவாக்குவதற்குக் கற்றுக்கொடுங்கள். அதன் வழியாக அவர்கள் குழுமத்தின் நலனிற்காக முறையான ஒப்பந்தங்களை ஏற்படுத்திக்கொண்டு கூட்டாளிகளாக செயல்படக்கூடியவர்களுடன் இணைந்து செயல்பட வாய்ப்பு அமையும்.
- உள்ளூர் அரசு அதிகாரிகள் தங்களது பகுதிகளில் நடைமுறைப்படுத்தும் அரசுத் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் முறையாக நடக்கின்றனவா என்பதை கண்காணிக்க உறுப்பினர்களுக்கு வழிகாட்டுங்கள். ஏதாவது முறைகேடுகள் அல்லது தவறுகள் நடந்தால் அரசு அதிகாரிகள் அதற்கு பொறுப்பேற்று சரிசெய்துதரச் செய்வது எப்படி என்றும் கற்றுக்கொடுங்கள்.
- (மேலே சொல்லப்பட்ட எல்லாவற்றையும் உங்கள் சூழ்நிலைக்கு ஏற்ற மாற்றியோ அலலது புதிதாக உருவாக்கியோ பயன்படுத்திக்கொள்ளுங்கள்.)

# பயனுள்ள சில சிறுதகவல்கள்

- செய்கின்ற வேலையை சிறப்பாகச் செய்து முடிப்பதற்காக பகிர்ந்து வேலைசெய்யும் பண்பை அதாவது ஒருவரால் முடியாததை மற்றவர் செய்வார்கள் என்பதை ஏற்றுக்கொண்டு செயல்படவேண்டிய தேவையை வலியுறுத்துஙகள்.
- எல்லோரும் ஒரே காரியத்தில் தங்களது ஆர்வத்தை ஒருங்கிணைப்பது மற்றும் யாரால் எதைச்செய்ய முடியும் என்பதை புரிந்து ஏற்றுக்கொண்டு செயல்படுவது நீடித்து நிலைத்து நிற்கும் மாற்றங்களை உருவாக்குவதற்கு மிகவும் தேவையான ஒன்றாக இருக்கின்றது.
- ஒத்துழைப்பது, தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வது, பிணையத்தில் இருப்பது நாம் வளர்ச்சிக்கான செயல்பாடுகளில் ஈடுபட்டிருக்கின்றோம் என்பதோடு மட்டும் அல்லாமல், முடிவுஎடுக்கின்ற செயல்முறையிலும் பங்கேற்கின்றோம் என்கின்ற நிலையை நமக்கு உருவாக்கித் தருகின்றது.
- இணைந்து வேலைசெய்யும் போது, செய்ததையே செய்துகொண்டிருப்பதைத் தவிர்க்கலாம், வளங்கள் வீணாவதைக் குறைக்கலாம், ஒவ்வொருவரிடம் இருந்தும் சிறப்பான காரியங்களை ஒன்றுசேர்ப்பதையும், ஒருவர் ஒருவரிடம் இருந்து கற்றுக்கொள்வதையும் அதிகப்படுத்திக்கொள்ளலாம்.
- ஒருசில இடங்களில் பல அமைப்புகள் பலவிதமான அம்சங்களை எடுத்துச்கொண்டு அதாவது கல்வி, நலவாழ்வு, சுற்றப்புறத் தூய்மை, நமக்கான நலத்திட்டப் பங்கு, ஆள்கடத்தல், வீட்டுவேலை செய்பவர்கள், குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் என்று எடுத்துக்கொண்டு வேலை செய்யும் வாய்ப்பு இருக்கின்றது. இந்தப் பிணையத்தில் உள்ளவர்கள் தோழமையோடு செயல்பட்டால் குழுமத்தின் ஒட்டுமொத்தமான ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு அது உதவியாக அமையும்.
- பிணையங்கள் பெரும் கொள்கை முடிவுகளை எடுப்பதற்காக குரல் எழுப்புவதற்கும் அடிப்படையில் என்ன சிக்கல்கள் என்று அலசி ஆராய்ந்து தீர்த்துக்கொள்வதற்கும் நமக்கு வாய்ப்புகளை வழங்குகின்றன.

# பயனுள்ள சில எச்சரிக்கைகள்

- ‘வச்சா குடுமி சிரச்சா மொட்டை’ மனப்பான்மையையும், மற்றவர்களோடு இணைந்து செயல்படுவதற்குத் தயங்கும் மனப்பாங்கையும் விட்டொழிக்கச் சொல்லுங்கள்.
- பலவிதமான காரியங்களில் ஆர்வம் உள்ளவர்களை ஒருங்கிணைத்துச் செயல்பட வேண்டியிருப்பதால், தோழமையுடன் செயல்படச்செய்வதும், பிணைய வியூகங்கள் அமைத்துச் செயல்படுவதும் கூடுதலான நேரம் எடுத்துக்கொள்ளும்.
- சில சமயங்களில் சில குழுக்கள் தாங்கள் ஏற்கெனவே திட்டமிட்டு வைத்திருப்பவற்றை விட்டுக்கொடுத்து பொது வியூகத்திற்காகவும் பொது திட்டத்திற்காகவும் செயல்பட வேண்டியிருக்கும்.
- சில பங்கேற்பாளர்கள் அல்லது சில அமைப்புகள் பொது வெளியில் அவர்களது பங்களிப்பிற்கு அதிகமாகவே நாங்கள்தான் இவ்வளவு செய்தோம் அவ்வளவு செய்தோம் என்று பெயர் வாங்கிக்கொள்வார்கள், ஒளிப்படங்களில் முண்டியடித்துக்கொண்டு இடம்பிடித்துக்கொள்வார்கள்.
- பலவேறு அமைப்புகளுக்கு இடையே போட்டி மனப்பான்மை இருந்தால் நாம் எடுத்த காரியத்தை முடிப்பதற்கு பெரும் சிரமங்கள் உண்டாகும்.
- அமைப்புகளையும், குழும உறுப்பினர்களையும் மட்டும் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்த்தால் அமைப்புகள்தான் செயல்படுவதற்கு கடமையுள்ளவர்களாகவும், குழும உறுப்பினர்கள் பலன் பெறுவதற்கு உரிமை உடையவர்களாகவும் ஆகின்றது. எனவே மக்கள் அமைப்புகளோடு பலன்தரும் வகைகளில் தோழமையுடன் செயல்படுவதற்கும், தேவைப்பட்டால் வழிகாட்டும் அமைப்புகளை தட்டிக் கேட்டு செயல்படச் செய்வதற்கும் தயாராக இருக்கவேண்டும்.

# நமது செயல்பாட்டுமுறை வேலைசெய்கின்றது என்பதற்கான அறிகுறிகள்

- குழும அடிப்படையிலான அமைப்புகள் அக்கம் பக்கமாக உள்ள கிராமங்களில் (இத்தனை) தோழமை அமைப்புகளையும் (இத்தனை) ஒத்த சிந்தனையுள்ள அமைப்புகளையும் அடையாளம் கண்டுள்ளன.
- (இத்தனை) குழும அடிப்படையிலான அமைப்புகள் தங்களது வேலைகள் மற்றும் தங்களைப்பற்றி மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்ளக்கூடிய அனைத்துத் தகவல்களும் அடங்கிய, தாங்கள் குழுமங்களில் கொண்டுவந்த மாற்றங்களைப் பற்றிய விவரணைகளைத் தாங்கிய சிற்றேடுகளைத் தயாரித்து வைத்துள்ளன.
- (இத்தனை) கூட்டங்கள் குழும அடிப்படையிலான அமைப்புகளுக்கும் ஒத்த கருத்துடைய அமைப்புகளுக்கும் இடையே நடந்துள்ளன. மேலும் (இன்னின்ன) சிக்கல்கள் பற்றி கலந்துரையாடல் நடந்தது.
- (இத்தனை) குழும அடிப்படையிலான அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் குழும உறுப்பினர்கள் (இத்தனை) மாவட்ட அளவில், (இத்தனை) மாநில அளவில் ( (இத்தனை) தேசிய அளவில் பிணையங்களால் ஒருங்கிணைக்கப்பட்ட நிகழ்ச்சிகள் மற்றும் பரப்புதல்களில் பங்கேற்றுள்ளனர்.
- (இத்தனை) அடித்தட்டு குரல் கொடுக்கும் செயல்பாடுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன.
- (இத்தனை) குழும உறுப்பினர்கள் பள்ளிக் கல்விக் குழு, நலவாழ்வுக் குழு, வளர்ச்சிப் பணிகள் குழு என பலவேறு குழுக்களில் உறுப்பினர்களாகியுள்ளனர்.
- (இத்தனை) குழுத் தலைவர்கள் பஞ்சாயத்துத் தேர்தலில் போட்டியிட்டுள்ளனர் அதில் (இத்தனை) பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- (இத்தனை) வள்ளல்தன்மை கொண்ட அமைப்புகள் மற்றும் பெருமுதலீட்டாளர்களின் சமூகப் பொறுப்புணர்வு அமைப்புகள் தொடர்புகொள்ளப்பட்டு குழும அடிப்படையிலான அமைப்புகள் பற்றிய அடிப்படைத் தகவல்கள் பகிர்ந்துகொள்ளப்பட்டிருக்கின்றன.
- மேலே கண்ட அனைத்தையும் உங்கள் சூழ்நிலைக்கேற்ற மாற்றி அமைத்தோ அல்லது புதிதாக உருவாக்கியோ பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

### தோழமையோடு செயல்படும் கூட்டாளிகள் விபரங்கள்

| தோழமையோடு செயல்படும் கூட்டாளிகள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | தனிநபர்கள் | | அமைப்புகள் அல்லது இயக்கங்கள் | | நிறுவன அளவிலான ஆதரவு | |
| குழு அடிப்படையிலான அமைப்புகளின் பெயர்கள் | பெயரும் தொடர்புக்கான தகவல்களும் | கையாளக்கூடிய கருத்துக்களும் சிக்கல்களும் | பெயரும் தொடர்புக்கான தகவல்களும் | கையாளக்கூடிய கருத்துக்களும் சிக்கல்களும் | பெயரும் தொடர்புக்கான தகவல்களும் | கையாளக்கூடிய கருத்துக்களும் சிக்கல்களும் |
| CBO 1 | | | | | | |
| CBO 2 | | | | | | |
| CBO 3 | | | | | | |
| CBO 4 | | | | | | |
| CBO 5 | | | | | | |

## வளங்களுக்கான கூட்டாளிகள் விபரங்கள்

| வளங்களுக்கான கூட்டாளிகள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | தனிநபர்கள் | | பெருமுதலீட்டாளர் சமூக பொறுப்பு அல்லது அரசு வளங்கள் | | நிறுவன ஆதரவு | |
| குழும அடிப்படையிலான அமைப்புகளின் பெயர்கள் | பெயரும் தொடர்புக்கான தகவல்களும் | ஆர்வம் காட்டும் செயல்பாடுகள்: மனித வளம் அல்லது நிதி ஆதரவு | பெயரும் தொடர்புக்கான தகவல்களும் | ஆர்வம் காட்டும் செயல்பாடுகள்: மனித வளம் அல்லது நிதி ஆதரவு | பெயரும் தொடர்புக்கான தகவல்களும் | ஆர்வம் காட்டும் செயல்பாடுகள்: மனித வளம் அல்லது நிதி ஆதரவு |
| CBO 1 | | | | | | |
| CBO 2 | | | | | | |
| CBO 3 | | | | | | |
| CBO 4 | | | | | | |
| CBO 5 | | | | | | |



குறிப்பு: இதே போன்ற அட்டவணைகள் பிணையங்களுக்கும் குரல் எழுப்பும் சிக்கல்களுக்கும் கூட உதவியாக இருக்கும்.

## சிந்திக்கவும் பகிர்ந்துகொள்ளவும் சில கேள்விகள்

1. ஒத்துழைப்பு, பிணைப்பு, மற்றும் குரல் எழுப்பும் முயற்சிகள் பற்றிய குழும அடிப்படையிலான அமைப்புகளின் அனுபவங்கள் என்ன? அவர்களின் பலங்கள் என்ன? அவர்கள் என்ன கற்றுக்கொண்டார்கள்? அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன?
2. குழும அடிப்படையிலான அமைப்புகளின் தலைவர்கள் மற்றவர்களோடு ஒத்துழைக்கும் பண்பாட்டில் வளர்ந்துள்ளார்களா? இப்படி ஒத்துழைப்பது தொடர்பாக அவர்கள் சந்தோசப்படுவது என்ன? சங்கடப்படுவது என்ன?
3. உரிமைகள் அடிப்படையிலான வளர்ச்சி செயல்முறைக்கு ஒத்துழைப்பு மற்றும் பிணைய முயற்சிகள் எந்த அளவிற்கு மதிப்பு கூட்டியுள்ளன?
4. குழும அடிப்படையிலான அமைப்புகள் ஒத்துழைப்புடன் கூடிய செயல்பாடுகளை முன்னெடுப்பதற்கு எந்தெந்தக் கருத்துக்கள் உதவியாக இருந்தன? அவை எந்தெந்த வகைகளில் உதவியாக இருந்தன?
5. மேற்கண்டவற்றில் உங்கள் சூழ்நிலைக்கு ஏற்ப எவற்றையெல்லாம் மாற்றியோ அல்லது புதிதாக உருவாக்கியோ பயன்படுத்த வேண்டுமோ அவ்வாறே பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

## அரசியல் அதிகார அமைப்புகளுடன் சேர்ந்துகொள்ளுங்கள் உங்கள் குரலை எழுப்புங்கள்

வழிநடத்தும் அமைப்புக்கள் களத்தில் மாவட்ட அளவில் அரசுசாரா தொண்டு நிறுவனங்களுடன் ஒத்துழைத்தும் பிணைப்பை ஏற்படுத்தியும் செயல்படுவதாக ஒரு சில அடையாளங்களைக் காண முடிந்தது. எது எப்படி இருந்தபோதிலும், வழிநடத்தும் அமைப்புகளின் பணியாளர்கள் குழும தலைவர்களைவிட முக்கியமான பங்கு ஆற்றினார்கள். குழுமங்களின் மற்றும் குழுக்களின் தலைவர்கள் உள்ளூர் அரசு அமைப்புகளில் பங்காற்றினார்கள் என்பது இந்த முயற்சிக்கு கிடைத்த ஒரு வெற்றியாகும். ஒருசிலர் பள்ளிக் கல்விக் குழுவிலும், மற்ற சிலர் கிராம வளர்ச்சிக் குழுவிலும், மேலும் சிலர் நலவாழ்வுக் குழுவிலும் உறுப்பினர்களாக இணைந்து உள்ளூர் அரசு அமைப்புகளோடு ஒத்துழைத்து செயல்பட்டார்கள். இப்படிப்பட்ட கூட்டங்கள் குழுமங்களின் தேவைகளுக்காக குரல் எழுப்பும் வாய்ப்பை உருவாக்கிக்கொடுத்தன. இப்படிப்பட்ட உறவுகள் மக்களுக்கான பொது நிறுவனங்கள் பயன்தரக்கூடியனவாக இருக்கவேண்டும் என்பதை உறுதிப்படுத்தி நிற்கின்றன.

11

# தன்னார்வத்தோடு முன்வருவது, கொடுப்பது மற்றும் பகிர்ந்துகொள்வது



# தன்னார்வத்தோடு முன்வருவது, கொடுப்பது மற்றும் பகிர்ந்துகொள்வது

## நோக்கம்

சமூக அணிதிரட்டலின் மற்றொரு முக்கியமான அம்சம் உறுப்பினர்களிடையே தன்னார்வ உணர்வு, கொடுத்தல் மற்றும் பகிர்வுமனப்பான்மையை வளர்ப்பது. தன்னார்வம் என்பது சமூகம் மற்றும் குழுமத்தின் நலனிற்காக நமது நேரம் மற்றும் ஆற்றலை அர்ப்பணிப்பது. இந்த அர்ப்பணிப்பு எந்தவிதமான நிதிசார்ந்த அல்லது வேறு எதிர்பார்ப்பும் பலனும் தேடும் சுவடே இல்லாமல் தானாக விரும்பித் தேர்ந்தெடுத்து மேற்கொள்வதாகும். சுதந்திரமான மற்றும் நேர்மையான மக்களாட்சி சமுதாயத்திற்கு இது இன்றியமையாதது. தங்களுடைய நேரத்தையும் திறன்களையும், தகுதிகளையும் உறுப்பினர்கள் பயனுள்ள வகையில் தேவையில் இருப்பவர்களுக்கு அல்லது குழுமத்தின் பொதுத் தேவைகளுக்கு எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் செலவழிப்பதை ஊக்குவிப்பதன் மூலம் தன்னார்வத்தை வளர்க்கலாம்.

ஒருவரை ஒருவர் சார்ந்து இருத்தல் என்பது மனிதருக்கே உரித்தான ஒரு பண்பாகும். அப்பண்பே, மனிதர்களாகிய நம்மை, ஒருவரோடு ஒருவர் தொடர்புகொண்டிருப்பது, சார்ந்து இருப்பது மற்றும் உறவுகளால் பிண்ணிப் பிணைந்து இருப்பது என்னும் நிலைக்கு உந்தித் தள்ளுகின்றது. பகிர்தல் என்பது ஒரு வெற்றுச் செயல் அல்ல, அது ஒரு பண்பாடு மற்றும் ஒரு வாழ்க்கை முறை என்றாகி இறுதியில் தவிர்க்கமுடியாத யதார்த்தமாகி நிற்கின்றது. இயற்கைப் பேரழிவுகளின் போதும், பெருந்துயர் நிகழ்வுகளின்போதும் பலர் தாமாகவே முன்வந்து உதவிக்கரம் நீட்டுவதை நாம் இன்றும் காணமுடிகின்றது. கிராமப்புறங்களிலும், பழங்குடி மக்களிடையேயும் இன்றும்கூட, தோழமைச் சமூகங்களையும் அல்லது பகிர்ந்துவாழும் குழுமங்களையும் காணமுடிகின்றது. நுகர்வுப் பண்பாடு மேற்கண்ட வாழ்க்கை அம்சத்தை அழித்துஒழித்துவிட்டது. ஏழைகள் மற்றும் தேவையில் இருப்போருக்கு அக்கறை காட்டுவது என்பது மனிதர்களுக்குள் உறைந்துநிற்கும் தெய்வீகப்பண்பாகும். மனித நேயம் உள்ளவர்கள், இரக்கம் கொள்ளவும் பரிவுகாட்டவும் பழகிக் கொண்டவர்கள், தங்களுக்கே மிகக் குறைந்த வசதிகளே இருந்தால்கூட மற்றவர்களுக்கு உதவ முன்வருகின்றார்கள். ஒவ்வொரு தனிமனிதனும்



தான் மரியாதையோடும் மாண்போடும் நடத்தப்படுகின்றோம் என்று எங்கே உணர்கின்றானோ அந்தக் குழுமமே உண்மையிலேயே நலமான குழுமமாகும். அந்தக் குழுமம் பொதுநலன், ஒற்றுமை மற்றும் சகோதரத்துவத்தை அடிப்படையாகக் கொண்டியங்குகின்றது.

பகிர்ந்து வாழும் சமூகம் முதிர்ச்சி மற்றும் வளர்ச்சியின் அடையாளம். கொடுப்பது அல்லது பகிர்வது எனபதை வெறும் காசென்று கருதிச் சுருக்கிவிட முடியாது. தகவல்களை, திறன்களை, அறிவை, திறமைகளைப் பகிர்ந்து கொள்வது, தங்கள் உழைப்பாலும் சேவையாலும் பங்களிக்க முன்வருவது அல்லது எதுவும் முடியாத போது தனது நேரத்தையாவது கொடுப்பது என்று அது விரிந்துகொண்டே போகின்றது. குழும உறுப்பினர்கள் தங்களது இல்லாமையையும் இயலாமையையும் தாண்டி பகிர்ந்துகொள்வதற்கென்று ஏராளமான காரியங்களை வைத்திருக்கின்றார்கள். இப்பகுதியில் உள்ள குழுக்கள் மற்றும் குழும அடிப்படையிலான அமைப்புகள் பலவேறு கொடையாளர்களிடம் இருந்தும், பெருநிறுவன சமூக அக்கறை அமைப்புகளில் இருந்தும் நிதி திரட்டி அப்பகுதியில் வாழும் ஏழை எளிய மற்றும் வசதி வாய்ப்பற்ற மக்களுக்கு உதவி புரிய முடியும். ஏழைகளுக்கு உதவுவதற்காக மற்றும் அனைவருக்குமான பொது வளர்ச்சித் திட்டத்திற்காக மற்றவர்களிடம் உதவி கோருவதும், கையேந்துவதும் பகிர்வின் மேன்மையான ஒரு வகையாகும்.

## பொருத்தமான காலக்கெடு

இந்தச் செயல்பாட்டுக்கென்று ஒரு குறிப்பிட்ட கால அளவு கிடையாது. பிறருக்கு உதவுதல் என்பது நமது பண்பாட்டின் ஒரு அங்கமாக துவக்கத்தில் இருந்தே சிறுசிறு அளவுகளில் வளர்த்தெடுக்கப்படவேண்டும்.

## செயல்பாட்டு வழிமுறைகள்

- பிறருக்கு உதவுவது தொடர்பான ஊக்கமூட்டும் கதைகள், நிகழ்வுகள் மற்றும் தனிநபர் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதன் வழியாக குழும உறுப்பினர்கள் தன்னார்வ செயல்பாடு, கொடுத்தல் மற்றும் பகிர்ந்துகொள்தல் ஆகியவற்றின் நலன்களை உணர்ந்துகொள்ளவும், கொண்டாடவும் தூண்ட வேண்டும்.
- மனித வாழ்க்கை, மாண்பு, சமத்துவம், சமபங்கீடு, சமூக நீதி, சகோதரத்துவம், பொதுநலன், தோழமை, ஏழைகள் மற்றும் எளிதில் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு முன்னுரிமை, பாதுகாத்து பராமரித்தல் மற்றும் பங்கேற்றல் போன்றவற்றை மதித்துப் போற்றிப் பாதுகாத்துச் செயல்பட குழும உறுப்பினர்களைப் பயிற்றுவிக்க வேண்டும்.

- இளைஞர்கள், குழந்தைகள், பெண்கள் மற்றும் ஆண்கள் தன்னார்வமுடன் தங்கள் நேரம், திறன்கள், தகுதிகள் போன்றவற்றை தேவையில் இருப்போருக்கு காசுபணம் எதிர்பார்க்காமல் பயன்படுத்தி உதவிட ஊக்குவிக்க வேண்டும்.
- 'ஒருவர் மற்றவருக்கு' உதவுதல் என்பது சரியான வியூகமாகும். எடுத்துக்காட்டாக இளைஞர்கள் பிற இளைஞர்களைப் பயிற்றுவிக்கலாம், குழந்தைகள் பிற குழந்தைகளுக்கு படிப்பு நேரத்தை ஒருங்கிணைத்து மெல்லக் கற்கும் குழந்தைகளுக்கு உதவலாம்.
- குழுமத்தில் பல்வேறு தகுதிகள் மற்றும் திறன்கள் உள்ள தன்னார்வலர்களுக்கும், குழுமத்திலேயே பல்வேறு உதவிகள் தேவைப்படுவோருக்கும் தொடர்புகளை ஏற்படுத்திக்கொடுக்கலாம்.
- இப்பகுதியில் உள்ள குழுக்கள் மற்றும் குழும அடிப்படையிலான அமைப்புகள் பலவேறு கொடையாளர்கள், பெருநிறுவன சமூக அக்கறை அமைப்புகளில் இருந்தும் நிதி திரட்டி அப்பகுதியில் வாழும் ஏழை எளிய மற்றும் வசதி வாய்ப்பற்ற மக்களுக்கு உதவி புரிய வேண்டும்.
- அனைத்துப் பொதுவேலைகளிலும் ஏதாவது ஒரு வகையில் தங்களது பங்களிப்பைச் செய்ய ஊக்குவிப்பது பகிர்ந்துகொள்ளும் பண்பாட்டை வளர்த்தெடுக்கும் ஒரு வழியாக அமையும். எடுத்துக்காட்டாக பங்கேற்பாளர்கள் தாங்கள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிக்கான உணவு செலவுகளைப் பகிர்ந்துகொள்ளக் கேட்டுக்கொள்ளலாம். பொருளாகவோ அல்லது பணமாகவோ அந்த உதவிகளைச் செய்யச் சொல்லலாம்.
- பொதுவாக குழும உறுப்பினர்கள் எடுத்துக்கொண்ட ஒரு செயலை முடிப்பதற்காக நாம் எதிர்பார்ப்பதற்கு மேலாகவே தாராள மனதுடன் நடந்துகொள்வார்கள். இவ்வாறு செய்வது தங்களுக்கு நல்லது என்று அவர்கள் நினைக்கின்றார்கள். இப்படி இயல்பாக குழுமத்தின் தாராள மனதினைத் திறந்துவிடுகின்ற சரியான தலையீட்டு செயல்பாடு எது என்றும், எப்படிக் கேட்டால் குழும உறுப்பினர்கள் தாராள மனதோடு தருவார்கள் என்றும் ஒரு வியூகத்தினை நாம் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்.
- (சூழலுக்கு ஏற்ப சேர்க்கவும் அல்லது மாற்றவும்)

# பயனுள்ள சில சிறு தகவல்கள்

- தங்களது நேரம், திறமைகள் மற்றும் தகுதிகள் போன்றவற்றை, ஒரு சிறிய அளவிலாவது பகிர்ந்துகொள்ளத் தயாராக இருக்கும் உறுப்பினர்களை ஊக்குவிக்க வேண்டும்.
- ஒவ்வொரு ஆண்டும் தன்னார்வலர்களை அங்கீகரிக்கும் வகையில் விருது வழங்கும் நிகழ்வுகளை ஏற்பாடு செய்ய வேண்டும். தன்னார்வத் தொண்டர்களுக்கு இப்படி எல்லோருக்கும் முன் அங்கீகரித்து விருதுகள் அளித்து பிற குழும உறுப்பினர்களும் தன்னார்வலர்கள் ஆவதற்கு ஊக்குவிக்க வேண்டும்.
- தன்னார்வத்துடன் கொடுப்பவர்கள் மற்றும் பகிர்ந்துகொள்பவர்களின் நல்லெண்ணத்தை தாராளமாகப் பாராட்டி உறுதிப்படுத்துங்கள். தன்னார்வலர்களைப் பெயர்சொல்லிப் பாராட்டுவதற்குக் கிடைக்கின்ற ஒவ்வொரு வாய்ப்பையும் தவறாமல் பயன்படுத்திக்கொள்ளுங்கள். இப்படிச் செய்வது பிற உறுப்பினர்களும் தன்னார்வத்துடன் செயல்படவும் பகிர்ந்துகொள்ளவும் ஊக்குவிப்பதாக அமையும்.
- தங்களது இயலாமையிலும் தங்களால் இயன்ற அளவு கொடுத்தவர்களையும் நாம் ஊக்குவிக்க வேண்டும்.
- (சூழலுக்கு ஏற்ப சேர்க்கவும் அல்லது மாற்றவும்.)

## பயனுள்ள சில எச்சரிக்கைகள்

- குழும உறுப்பினர்களை அவர்களது விருப்பத்திற்கு மாறாகத் தன்னார்வத் தொண்டு செய்யவும் பகிர்ந்துகொள்ளவும் நிர்பந்திக்கக்கூடாது.
- நாம் மேற்கொள்ளும் சில முயற்சிகள் குழுமத்தின் தாராள மனதை வெளிக்கொண்டுவரவில்லை என்றாலும் நாம் சோர்வடைந்து மனம் தளர்ந்துவிடக்கூடாது.
- வெற்றி தோல்விகளில் உங்கள் கவனத்தைச் செலுத்தாதீர்கள். உங்கள் முயற்சிகள் நீங்கள் எதிர்பார்த்த விளைவுகளை அல்லது நீங்கள் விரும்பிய தாக்கத்தை உடனடியாக ஏற்படுத்தாமல் போகலாம். எது எப்படி இருந்தபோதிலும் உங்களது முயற்சிகள் நாளடைவில் நல்ல பயனைத் தரும்.
- (சூழலுக்கு ஏற்ப சேர்க்கவம் அல்லது மாற்றவும்)

## நமது செயல்பாட்டுமுறை வேலைசெய்கின்றது என்பதற்கான அறிகுறிகள்

1. (இத்தனை) இளைஞர்கள், (இத்தனை) குழந்தைகள், (இத்தனை) பெண்கள் மற்றும் குழுமத்தில் உள்ள (இத்தனை) ஆண்கள் தங்கள் நேரம் மற்றும் திறன்களைப் பகிர்ந்துகொள்ள முன்வந்து, தேவைப்படும் உறுப்பினர்களுக்கு உதவி வழங்குகிறார்கள்.
2. (இத்தனை) இளைஞர்கள் பிற இளைஞர்களுக்கு பல்வேறு திறன்களைப் பயிற்றுவிக்க தன்னார்வமுடன் முன்வந்துள்ளனர்.
3. மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு உதவ (இத்தனை) குழந்தைகள் படிப்பு நேரங்களை ஏற்பாடு செய்துள்ளனர்.
4. (இத்தனை) பெண்கள் குழுக்கள் அல்லது சுய உதவிக் குழுக்கள் மிகவும் கடும் தேவையில் இருப்பவர்களுக்கு தங்களது சேமிப்புப் பொது நிதியில் இருந்து உதவி செய்துள்ளனர்.
5. குழுமத்தின் (இத்தனை) உறுப்பினர்களின் தன்னார்வ சேவையுடன் அவர்கள் வாழும் பகுதி சுத்தம்செய்யப்பட்டுள்ளது.
6. (இத்தனை) உறுப்பினர்கள் நோய்வாய்ப்பட்ட மற்றும் மாற்றுத்திறனாளிகளைப் பார்வையிட்டு அவர்களுடன் நேரத்தைச் செலவிட்டுள்ளனர்.
7. (இத்தனை) இளைஞர்கள், (இத்தனை) பெண்கள் மற்றும் (இத்தனை) ஆண்கள் குழுமத்தில் அரசாங்கத்தால் தங்கள் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சிப்பணிகளைக் கண்காணித்து தொடர்படைய அரசுத் துறைகளுக்கு தங்களது ஆலோசனைகளைத் தெரிவித்துள்ளார்கள்.
8. ஒரு பொது நிகழ்ச்சிக்காக குழுமத்தில் இருந்து (இத்தனை) ரூபாய்கள் சேகரிக்கப்பட்டது.
9. பயிற்சிக்கான உணவு செலவில் நூற்றுக்கு ( இத்தனை) ரூபாய்கள் பயிற்சியில் பங்கேற்ற குழும உறுப்பினர்களின் பங்களிப்பால் ஈடுகட்டப்பட்டது.
10. (சூழலுக்கு ஏற்ப சேர்க்கவும் அல்லது மாற்றவும்)

# தன் மதிப்பீட்டுக் கருவி

1 முதல் 5 வரையிலான அளவில் 1 குறைந்த அளவு என்றும் 5 அதிக அளவு என்றும் வைத்துக்கொண்டால் உங்களது முன்னேற்றத்தை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்?

| வரிசை எண் | வளர்ச்சிப் பகுதிகள் | மதிப்பீட்டளவு (1-5) |
|---|---|---|
| 1 | நான் தன்னார்வச் செயல்பாட்டிலும், கொடுப்பதிலும், பகிர்வதிலும் வளர்ந்திருக்கின்றேன். | |
| 2 | ஏழைகளுக்கும், தேவையில் உள்ளோருக்கும் சேவை செய்வதில் பெருமைப்படுகின்றேன். | |
| 3 | நான் எனது நேரத்தையும், திறன்களையும், தகுதிகளையும் தேவையில் இருப்பவர்களுடன் பகிர்ந்துகெள்கின்றேன். | |
| 4 | தன்னார்வ அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சிகளிலிருந்து நான் கற்றுக்கொண்டவற்றை நண்பர்களுடன் உறுதியாக பகிர்ந்துகொள்கிறேன். | |
| 5 | நான் எனது செலவுகளைக் குறைத்துக்கொண்டு சேமிக்கும் தொகையில் இருந்து குழுமத்தின் பொதுவேலைகளுக்காகப் பகிர்ந்துகொள்கின்றேன். | |
| 6 | தன்னார்வப் பணிகளுக்காக எல்லாருக்கும் முன்பாக எனக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. | |
| 7 | குழும உறுப்பினர்கள் தன்னார்வப் பணி மற்றும் பகிர்தலில் வளர்ந்துள்ளனர். | |
| 8 | பல குழும உறுப்பினர்கள் தங்கள் நேரத்தையும், திறமைகளையும், சேவையையும் பகிர்ந்துகொள்கின்றார்கள். அத்தோடு பதிலுக்கு எதையும் எதிர்பார்க்காமல் தேவையில் இருப்பவர்களுக்கு பண உதவியும் கொடுக்கிறார்கள். | |
| 9 | பல உறுபபினர்கள் பொதுச் செயல்பாடுகளுக்காக தாராள மனதுடன் தங்கள் பங்களிப்பைச் செய்யத் தயாராக உள்ளனர். | |
| 10 | தன்னார்வச் செயல்பாடுகள், கொடுப்பது மற்றும் பகிர்ந்துகொள்வது என்னும் பண்பாடு குழும உறுப்பினர்களால் போற்றிப் பாதுகாக்கப்படுகின்றது. | |

குறிப்பு: அனைத்து குழும உறுப்பினர்களையும் தன்மதிப்பீடு செய்துகொள்ளச் சொல்லுங்கள். ஒட்டுமொத்த மதிப்பெண்களையும் கூட்டிப்போட்டுக்கொள்ளுங்கள். அந்த ஒட்டுமொத்தமான மதிப்பெண்களை மட்டும் எடுத்துக்கொண்டு ஒரு உரையாடலை நிகழ்த்துங்கள்.

# சிந்திக்கவும் பகிர்ந்துகொள்ளவும் சில கேள்விகள்

1. எந்தவிதமான தன்னார்வ பணிகளில் குழும உறுப்பினர்கள் ஈடுபட்டார்கள்?
2. குழும உறுப்பினர்கள் எவ்வாறு ஒருவர் மற்றவர் மேலுள்ள அக்கறையை வெளிப்படுத்துகின்றார்கள்?
3. குழும உறுப்பினர்கள் எந்தவிதமான செயல்பாடுகளுக்காக தங்கள் வளங்களைப் பகிர்ந்துகொள்வதில் ஆர்வத்தை வெளிப்படுத்தினார்கள்?
4. குழும உறுப்பினர்கள் தன்னார்வ செயல்பாடுகளையும், கொடுப்பதையும், பகிர்ந்துகொள்வதையும் தங்கள் இயல்போடு ஒன்றியதாக எந்த வகைகளில் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்?
5. குழும உறுப்பினர்கள் சாதி மதங்களைத்தாண்டி கொடுப்பதிலும், பகிர்ந்துகொள்வதிலும் செயல்படமுடிந்துள்ளதா? சில நிகழ்வுகளை முதன்மைப்படுத்தி விரித்துச்சொல்லுங்கள்.
6. (சூழலுக்கு ஏற்ப சேர்க்கவும் அல்லது மாற்றவும்)


उद्यान विभाग में संचालित योजनायें वर्ष 2014-15
आँगनबाड़ी केन्द्र-मिर्जापुर
वि.सं.-चरगावाँ
जनपद-गोरखपुर
कुपोषण को मात, है अपने हाथ

# இறுதிச் சடங்கு நடத்த உதவி

திருமதி முன்னாபாய் அவர்கள் மத்தியபிரதேசம் மாநிலம் ஷாஜாபூர் மாவட்டத்தில் உள்ள சக்ஜாஜிபூர் கிராமத்தில் ஒரு சுய உதவிக் குழுவைச் சேர்ந்தவர். அவருடைய கணவர் தினக்கூலியாக வேலைசெய்து கொண்டிருந்தார். முன்னாபாய் அவர்களுடைய மாமியார் இறந்த போது இறந்தவருடைய உடலை எரியூட்டுவதற்கு அவரிடம் வசதியில்லை. இதனை உணர்ந்த குழு உறுப்பினர்கள் தன்னார்வமுடன் அவர்களால் இயன்றதைக் பகிர்ந்துகொடுத்து முன்னாபாய் தனது மாமியாரின் இறுதிச் சடங்குகளை நடத்த துணைநின்றனர். ‘இதனை பண உதவி செய்ததாக மட்டும் நாம் எடுத்துக்கொள்ள முடியாது. நாங்கள் எல்லோரும் முன்னாபாய் அவர்களுடைய துயரத்தில் அவருடன் தோள்கொடுத்து இருந்தோம்’ என்று அவருடைய குழுவின் உறுப்பினர்களுள் ஒருவரான தாரா பாய் கூறுகின்றார்.

# கொல்கத்தாவிலுள்ள சோலோ பிக்ஹாவில் நாங்கள் கட்டிய பள்ளி

சோலோ பிக்ஹா ஒரு சேரி. அத்தோடு அது கொல்கத்தாவில் அங்கீகரிக்கப்படாத ஒரு காலனியாக இருந்தது. அங்கே ஏராளமான ஏழைக் குடும்பங்கள் வசிக்கின்றன. பல குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதை நிறுத்திதவிட்டு குப்பைகளில் மறுசுழற்சிக்கான பொருட்களைப் பொறுக்குவதில் ஈடுபட்டிருந்தனர். குழந்தைகள் பல தேவையற்ற செயல்களிலும், குற்றச் செயல்களிலும் கூட ஈடுபட்டிருந்தனர். இந்த நிலைமையை எதிர்கொள்வது எங்களுக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. எந்தவொரு அரசுசாராத தொண்டு நிறுவனங்களும் உதவிசெய்ய முன்வராத நிலையில் நாங்களே ஒரு பள்ளிக்கூடத்தைக் கட்டியெழுப்புவது என்று முடிவுசெய்துவிட்டோம். ஒருசில குழும உறுப்பினர்கள் இந்த யோசனையை எதிர்த்தார்கள். இந்தச் செயல்பாட்டில் பங்கேற்க மறுத்தார்கள். ஒவ்வொரு குடும்பத்திலும் ஐம்பது ரூபாய் வாங்கினோம். சில குழுக்கள் தாங்கள் சேமித்து வைத்திருந்த பணத்தைக் கொடுத்தார்கள். வெளியில் இருந்து எந்த நிபுணர்களும் அழைக்கப்படவில்லை. குழும உறுப்பினர்கள்தான் பொறியியல் நிபுணர்கள், கொத்தனார்கள் மற்றும் சித்தாள்கள். குழும உறுப்பினர்கள் சுழற்சி முறையில் கூலி வாங்காமல் வேலைசெய்துகொடுத்தார்கள். ஒட்டுமொத்தமாக நாங்கள் மூன்று இலட்சம் ரூபாய்களைச் செலவழித்தோம். அது மிகப் பெரிய தொகை. இவ்வளவு பணம் செலவாகுமென்று நாங்கள் நினைக்கவே இல்லை. இவ்வளவு பணத்தையும் எங்களால் திரட்ட முடியும் என்றும் நாங்கள் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. ஒவ்வொரு அடியாக நாங்கள் முன்னோக்கி எடுத்துவைத்துக்கொண்டே இருந்தோம். கட்டிடம் எழுப்பப்படுவதைப் பார்த்துவிட்டு பலரும் கொஞ்சம் பணம் கொடுக்க முன்வந்தனர். வரவு செலவு பார்ப்பது, அழகுற வடிவமைப்பது, திட்டம் தீட்டுவது மற்றும் செயல்படுத்துவது போன்ற கருத்துருக்கள் பற்றியெல்லாம் எங்களுக்கு ஒன்றும் தெரியாது. எங்களைப் பொறுத்தவரையில் ‘குழுமத்தின் கூட்டுமுடிவுகளும் முயற்சிகளும் மற்றும் தாராளமனமும்’ தான் முக்கியமானதாக இருந்தது. இறுதியாக பள்ளி கட்டிமுடிக்கப்பட்டபோது ‘இவர்கள் எப்படி இதைச் செய்து முடித்தார்கள் என்று’ எல்லோரும் எங்களை வியந்து பார்த்தார்கள்!

# 12

# கொண்டாடுவது, வெளிக்காட்டிக்கொள்வது மற்றும் அங்கீகரிப்பது



# கொண்டாடுவது, வெளிக்காட்டிக்கொள்வது மற்றும் அங்கீகரிப்பது

## நோக்கம்

மிகவும் ஏழ்மையான குழுமங்களாக இருந்தாலும், நகர்ப்புற சேரிகளில் அல்லது உள்காடு கிராமங்களில் வாழ்ந்தாலும் சமுதாய கொண்டாட்டங்கள் அவர்களுடைய வாழ்க்கையில் ஒருங்கிணைந்த ஒரு பகுதியாக விளங்குகின்றன. அக்கொண்டாட்டங்கள் மதம் அல்லது பண்பாடு சார்ந்ததாக இருக்கின்றன. அவை திட்டமிட்டு ஒழுங்கமைத்து மகிழ்ச்சியாக நேரத்தை செலவிட மக்களைக் கூட்டிச் சேர்க்கின்றன.

இந்தப் படிநிலையின் நோக்கம் குழுமத்தில் உள்ள குழுக்கள் அவர்களின் சாதனைகள், வெற்றிகள் மற்றும் குழும அணிதிரட்டல் செயல்பாட்டால் அவர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்களைக் கொண்டாடச் செய்வது ஆகும். இப்படிக் கொண்டாடுவதால் தாங்கள் தடைகளை உடைத்துத் தகர்த்த நிகழ்வுகளையும், செய்து முடித்த வேலைகளையும், திரும்பிப் பார்ப்பதற்கான ஒரு வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்கின்றது. அத்தோடு மேற்கண்ட அத்தனை காரியங்களையும் சாத்தியமாக்கியவர்களை அங்கீகரிக்கவும், இவ்வுலகத்திற்கு வெளிச்சம் போட்டு காட்டவும் முடிகின்றது.

நமது செயல்பாடுகள் மற்றவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்றால் அதற்கான பொருத்தமான தகவல் தொடர்பு வழிமுறைகள் வேண்டும். அதாவது குழுமத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் தொடர்பில் இருக்க வேண்டும். குழுமத்திற்கு வெளியே கிடைக்கின்ற பல்வேறு வாய்ப்புகளையும் பற்றிய தகவல்கள் அவர்களைச் சென்றடைய வேண்டும். ஒட்டுமொத்த சமுதாயத்தோடும் நாம் உறவோடு இருக்க வேண்டும். பொதுவெளியில் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற அங்கீகாரம் மற்றும் விருதுகள் குழும உறுப்பினர்கள் தங்கள் மீதும், கூட்டு முயற்சியின் வலிமை மீதும் கொண்டுள்ள நம்பிக்கைக்கு வலுவூட்டும். மேலும் இது போன்ற உத்திகளை இன்னும் பலர் பின்பற்றுவதற்கும் ஊக்குவிக்கும். இதுபோன்ற நிகழ்வுகளை ஏற்பாடு செய்வது, நெடுங் காலமாக ஏழைகள் மற்றும் எளிதில் பாதிப்புக்குள்ளாகக்கூடியவர்கள் குறித்து வழங்கிவரும் சொல்லாடல்களுக்கு மாற்றாக அமையும். அவர்களுடைய உண்மையான திறமைகளைப் பறைசாற்றி அவர்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் காண ஒரு வழியாக இவை அமையும். இப்படிப்பட்ட செயல்பாடுகள் குழுமத்தின் கூட்டு அறிவாற்றலில் இருந்து நிலைத்த பயன்தரும் ஆற்றலை உருவாக்குகின்றன. அந்த ஆற்றலை பிற குழுமங்களோடு மகிழ்வோடு பகிர்ந்து கொள்ளச் செய்கின்றன.

# பொருத்தமான காலக்கெடு

கொண்டாடுவது, வெளிக்காட்டிக்கொள்வது மற்றும் அங்கீகரிப்பது என்பது நாம் அவ்வப்போது தொடர்ந்து செய்துகொண்டே இருக்கவேண்டிய ஒரு செயல்பாடு ஆகும். எனவே இந்தச் செயல்பாட்டினை 'ஒன்றுபட்டு செயல்படும் பலவேறு குழக்களை உருவாக்கி செயல்படச்செய்தல் இதன் வழியாக குழுமத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு அமைப்பினை உருவாக்குதல்.' என்னும் மூன்றாவது படிநிலையிலேயே, குழுக்களும், குழுமத்தை அடிப்படையாகக் கொண்ட அமைப்புகளும் நிலைத்து செயல்படும்போதே தொடங்கிவிடலாம்.

# தொடர்வதற்கான வழிமுறைகள்

- என்னென்னவெல்லாம் கொண்டாடப்படவேண்டும், அங்கீகரிக்கபடவேண்டும், மற்றும் விளம்பரபடுத்தப்பட வேண்டும் என்பதை முதலில் அடையாளம் கண்டு பட்டியலிட வேண்டும். இப்படி அடையாளம் கண்டு பட்டியலிடுவதற்காக குழும அணிதிரட்டல் பயணத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் குழுக்களும், குழும அடிப்படையிலான அமைப்புகளும் தங்களது மூளையைக் கசக்கிப் பிழிந்து கண்டு எடுக்க வேண்டும். இவைகள் தாங்கள் கடந்து வந்த பாதையை அடையாளம் காட்டும் மைல்கல்போன்ற ஒரு செயலாக, குறிப்பிட்ட சில நிகழ்ச்சிகளாக, தலைவர்கள் அல்லது குழும உறுப்பினர்களின் பங்களிப்பாக, குழுமத்திற்கு வெளியில் இருந்து செயல் ஊக்கம் கொடுத்ததாக, அல்லது இந்தச் செயல்பாடு குறிபிடத்தக்கது என்று குழு கருதும் எதுவாகவும் இருக்கலாம்.
- தனிநபர் பங்களிப்புகள் மட்டும் அல்லாமல் குழுக்களின் பங்களிப்பும் முறையாக அங்கீகரிக்கபடவேண்டும்.
- தனிநபர்கள் அல்லது குழுக்களின் பெயர்களை பற்றி விவாதிப்பதற்கு முன், என்னென்ன காரணத்திற்காக நாம் தனிநபர்களை அல்லது குழுக்களைத் தேர்ந்தெடுக்கப்போகின்றோம் என்ற வழிகாட்டு விதிமுறை தொகுப்பை உருவாக்கிக் கொள்ள வேண்டும். அப்படி அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விதிமுறைளை உருவாக்கிக் கொள்வது வெளிப்படைத்தன்மையையும் பாரபட்சம் இல்லாத தன்மையையும் அடைய உதவும்.
- குழுக்கள் மற்றும் குழும அடிப்படையிலான அமைப்புகள் ஏற்கெனவே நாம் எடுத்து வைத்திருக்கின்ற ஒட்டுமொத்தமான பட்டியலிலிருந்து எல்லாராலும் ஏற்றுக்கொள்ளபட்ட செயல்பாடுகளைத் தேர்தெடுக்க நெறிப்படுத்தப்படவேண்டும்.
- குழுக்கள் மற்றும் குழும அடிப்படையிலான அமைப்புகள் ஒரு ஒருங்கிணைப்புக்குழுவை அமைத்து செயல்படுவது சரியானதாக இருக்கும். அந்த குழு கொண்டாட்ட நிகழ்ச்சியைத் திட்டமிடவும் செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மற்றும் மதிப்பீடு செய்யவும் பொறுப்பாக இருக்கவேண்டும். ஒருங்கிணைப்புக்குழு தேவைக்கேற்ப நிகழ்ச்சியின் பல அம்சங்களையும் நடைமுறைப்படுத்த பலவேறு துணைக்குழுக்களை உருவாக்கி கொள்ளலாம்.
- எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமான குழும உறுப்பினர்களின் பங்கேற்பை உறுதி செய்ய முடியுமோ அவ்வளவுக்கு அதிகமான பங்கேற்பை உறுதிசெய்யவேண்டும்.
- நிகழ்வின் ஒரு பகுதியாக, குழும உறுப்பினர்களின் திறமைகளை குறிப்பாக இளைஞர்கள் மற்றும் குழந்தைகளின் திறமைகளை பார்வையாளர்களுக்கு முன்னால் ஒரு மேடையில் நிகழ்த்தச் செய்ய வேண்டும். அப்படிச் செய்வது அவர்களில் பலருக்கும் அவர்களின் வாழ்க்கையையே ஒட்டுமொத்தமாக புரட்டிபபோட்டுவிடக்கூடிய ஒரு அனுபவமாக அமையலாம்.
- இந்த நிகழ்ச்சியை, பிணைப்பை ஏற்படுத்திக்கொள்ளக்கூடிய அமைப்புகள், மற்றும் ஆதரவுக் குரல்தரும் கூட்டாளிகள் போன்றவர்களுக்கு இந்தக் குழுமத்தின் வெற்றிச் செயல்பாடுகளை எடுத்துச்சொல்வதற்கான ஒரு தளமாக பயன்படுத்திக்கொள்ளலாம். இது எதிர்காலத்தில் பிணைப்புகளை ஏற்படுத்திக்கொள்ளவும், ஒத்துழைக்கவும் வாய்ப்புக்களை உருவாக்கும்.
- உள்ளூர் தலைவர்கள் அல்லது உறுப்பினர்களை அங்கீகரிக்க அல்லது அவர்களுக்கு பரிசுகள் வழங்க அதிகமான பணம் செலவிடுவது அல்லது விலை உயர்ந்த பொருட்களை கொடுப்பது தேவையில்லை. அனைவர் முன்னிலையிலும் பாராட்டி அங்கீகரிப்பது அல்லது ஏதாவது ஒரு அடையாளப் பரிசு வழங்குவது பெரு மதிப்பிற்குரியதாக இருக்கும். அது ஒரு பாராட்டுச் சான்றிதழாக இருக்கலாம். அல்லது அனைவரின் முன்னிலையில் மேடையில் சிறப்பு விருந்தினர்களோடு அமர வைப்பதாக இருக்கலாம். அல்லது அவர்களின் அனுபவத்தை பார்வையாளர்கள் முன்னிலையில் பேசுவதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதாக இருக்கலாம்.

- நிகழ்ச்சிகளை உள்ளூர் ஊடகங்களில் – செய்தித்தாள்களில், தொலைக்காட்சியில், வானொலியில் இடம்பெற செய்வது உள்ளூர் தலைமைக்கு பலருடைய கண்ணில் படக்கூடிய அளவிற்கு விளம்பரமாக அமையும்.
- ஒரு நிகழ்ச்சிக்கு பின் , ஒருங்கிணைப்பு குழு உடனடியாக ஒரு ஆய்வுக்கூட்டத்தை - குழுக்கள் மற்றும் குழும அடிப்படையிலான அமைப்புகளுடன் - நடத்தவேண்டும். அவர்கள் கொடுக்கும் ஆக்கப்பூர்வமான கருத்துக்களை கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும். – என்ன சிறப்பாக நடத்தது? மற்றும் எது இன்னும் சிறப்பாக நடந்திருக்கலாம்? இது எதிர்வரும் காலங்களில் சமூக நிகழ்ச்சிகளை இன்னும் சிறப்பாக திட்டமிட உதவியாக இருக்கும்.
- காட்சிப்படுத்துதல் என்பது குழும செயல்பாடுகளின் வெற்றிக்கதைகள் அடங்கிய சுவரொட்டிகள், துண்டறிக்கைகள், சிற்றேடுகள், கையேடுகள் மற்றும் வெளி உலகத்திற்குப் பகிரவும் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளவும் தேவையான சமூக ஊடகத் தயாரிப்புகள் போன்ற தகவல், கல்வி மற்றும் தொடர்பியல் சார்ந்த பொருட்களை தயாரித்தலாகும். அதுபோன்ற பொருட்களை குழும உறுப்பினாகள் அவ்வப்போது அவர்களாகவே தயாரிக்க வேண்டும். இளைஞர்களை இதுபோன்ற தயாரிப்பு வேலைகளுக்கு பயிற்றுவிக்க வேண்டும்.
- பொதுமக்களின் அங்கீகரிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதற்கான வாய்ப்புகளை தேடிக் கண்டறிந்து நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும்.
- கொண்டாட்டங்கள் மற்றும் பொது நிகழ்ச்சிகளுக்காகத் தங்கள் பங்களிப்பை செய்ய மக்கள் விரும்புவார்கள். அதனால் அதிகபட்ச குழும உறுப்பினர்களின் பங்கேற்பை உறுதிசெய்யவேண்டும்.
- (சூழ்நிலைக்கேற்ப சேர்க்கவும் அல்லது மாற்றி அமைத்துக்கொள்ளவும்)

# உதவக்கூடிய சிறுதகவல்கள்

- ஒருங்கிணைக்கும் குழுக்கள் மற்றும் உதவிக் குழுக்களில் குழுமத்தின் உறுப்பினர்களில் ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், இளம்பெண்கள் குழந்தைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் என்று அனைத்துப் வகையினருக்கும் இடம்கொடுக்கப்பட வேண்டும்.
- குழும உறுப்பினர்கள் அனைவரும் தாங்கள் சொல்ல விரும்புவதைச் சொல்வதற்கு வழிவகை செய்ய வேண்டும். அத்தோடு அவர்கள் ஒவ்வொருவரின் கருத்துக்களையும் பரிந்துரைகளையும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.
- நிகழ்ச்சியை நடத்துவதற்காக குழும உறுப்பினர்கள் தங்கள் நேரத்தைக் கொடுத்து, முயற்சிகளை மேற்கொண்டு, தங்களால் இயன்றதை வழங்கி பங்களிக்க ஊக்கப்படுத்த வேண்டும். இது தங்களுடைய நிகழ்வு என்று அவர்கள் உரிமை கொண்டாடும்போதுதான் அந்த நிகழ்ச்சியின் நோக்கத்தை நாம் அடைந்ததாகக் கருதலாம்.
- பல நிகழ்ச்சிகளை நாம் நடத்தும்போது, ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் வெவ்வேறு ஒருங்கிணைப்புக் குழவினை அமைத்துக்கொள்ளலாம். அப்படி செய்யும்போது குழும உறுப்பினர்கள் அனைவருக்கும் ஒரு நிகழ்வினை ஒருங்கிணைப்பதற்கும் மேலாண்மை செய்வதற்குமான திறன் வளர்த்துக்கொள்ள வாய்ப்பு கிடைக்கும்.
- குழுமத்தின் சாதனைகளை பறைசாற்றிக்கொள்ள கூடிய தகவல், கல்வி மற்றும் தொலைதொடர்பு மற்றும் சமூகவலைதள தயாரிப்பு ஆவணங்கள் உருவாக்க இளைஞர்களைக் கொண்ட ஒரு ஒருங்கிணைப்புக் குழுவை உருவாக்க வேண்டும்.
- ஒரு குழுமத்தின் வெற்றி கதைகள் உலகளவில் பலரது பார்வைக்குச் சென்றடைவதற்கும், அதன் வழியாக குழுமத்தின் செயல்பாடுகளுக்கு உதவிகளையும் ஒத்துழைப்பையும் பெறவும் பயனுள்ள வகையில் ஒரு வலைதளத்தை அமைக்க வேண்டும்.
- குழுமத்திற்காக ஒரு சின்னத்தை உருவாக்க அதற்கான திறன்படைத்த இளைஞர்களை ஊக்குவிக்க வேண்டும். அப்படி உருவாக்கப்படும் சின்னம் குழுமத்திற்கு ஒரு தனி அடையாளத்தைக் கொடுக்கும். குழுமம் உருவாக்கப்பட்டதன் நோக்கத்தையும் வெளிப்படுத்தி நிற்கும். குழுமத்தின் சின்னத்தைப் பயன்படுத்தி இது இந்தக் குழுவின் அடையாளம் என்று எல்லோருக்கும் தெரியச்செய்ய வேண்டும்.
- (சூழலுக்கு ஏற்ப மாற்றவோ சேர்க்கவோ செய்யலாம்)

## பயனுள்ள எச்சரிக்கைகள்

- நெறிபடுத்தும் நிறுவனங்களோ அல்லது அதன் பணியாளர்களோ குழுவின் சிறந்த நடைமுறை அல்லது குழுவின் சிறந்த தனிநபர்களைத் தேர்ந்தெடுப்பவர்களாக செயல்படக்கூடாது. குழும உறுப்பினர்கள்தான் தங்களுக்குள் கலந்துபேசி சிறந்த நடைமுறை மற்றும் சிறந்த நபர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.
- நிகழ்ச்சிகளில் உள்ளூர் தலைவர்கள் மற்றும் மாற்றத்தை உருவாக்கும் குழும உறுப்பினர்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். நெறிப்படுத்தும் நிறுவனத்தையோ அல்லது ஊக்குனர்களையோ அல்லது அரசு அதிகாரிகளையோ அல்லது சிறப்பு விருந்தினர்களையோ தூக்கி வைத்துக் கொண்டாடுவதாக நிகழ்ச்சி அமைந்துவிடக் கூடாது.
- (சூழலுக்கு ஏற்ப மாற்றவோ சேர்க்கவோ செய்யலாம்)

## நமது செயல்பாட்டுமுறை வேலைசெய்கின்றது என்பதற்கான அறிகுறிகள்

1. (இத்தனை) கொண்டாட்ட நிகழ்வுகள் நடத்தப்பட்டன.
2. ஒரு நிகழ்வை தயாரித்து ஒருங்கிணைப்பதில் (இத்தனை) குழுக்கள் மற்றும் தனிநபர்களின் பங்களிப்பு இருந்தது.
3. ஒரு நிகழ்வை நடத்துவதற்கு (இத்தனை) குழும உறுப்பினர்கள் தங்களது நேரம், உடல் உழைப்பு, பொருள் மற்றும் பணத்தைக் கொடுத்து உதவிசெய்தார்கள்.
4. நிகழ்வில் (இத்தனை) குழும உறுப்பினர்கள் கலந்துகொண்டு பங்கேற்றனர்.
5. நிகழ்வின் மூலம் (இத்தனை) நிறுவனங்கள் மற்றும் (இத்தனை) குழும செயல்பாடுகளினால் பயன்பெற வேண்டியவர்கள் தொடர்பில் கொண்டுவரப்பட்டனர்.
6. (இத்தனை) உள்ளூர் தலைவர்களுக்கு பாராட்டும் அங்கீகாரமும் அளிக்கப்பட்டது.
7. நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் (இத்தனை) புதிய குழும குழுக்கள் தங்கள் பகுதியில் இதே போன்ற செயல் முறைகளை செயல்படுத்த முனைந்தனர்.
8. இந்தக் கொண்டாட்டங்களின் விளைவாக (இத்தனை) புதிய தொடர்புகள் பிணைப்பு மற்றும் ஒத்துழைப்பிற்காக கிடைத்துள்ளன.
9. (சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றவோ அல்லது சேர்க்கவோ செய்யலாம்)

**சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பரிசளிக்கப்பட்ட தனிநபர்கள் பட்டியல்.**

| வரிசை எண்கள் | பெயர் | தனிநபர் விவரம் பாலினம், வயது, இடம், தொழில் மற்றும் குழு | குறிப்பிட்ட பங்களிப்பு | தாக்கம் |
|---|---|---|---|---|
| | | | | |
| 1 | | | | |
| 2 | | | | |
| 3 | | | | |
| 4 | | | | |
| 5 | | | | |

**சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பரிசளிக்கப்பட்ட குழுக்களின் பட்டியல்**

| வரிசை எண் | குழுவின் பெயர | மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை, எப்பொழுது குழு உருவாக்கப்பட்டது, செயல்பாடுகள் | குறிப்பிட்ட பங்களிப்பு | தாக்கம் |
|---|---|---|---|---|
| 1 | | | | |
| 2 | | | | |
| 3 | | | | |
| 4 | | | | |
| 5 | | | | |

# சிந்திக்கவும் பகிரந்துகொள்வதற்கும் சில கேள்விகள்

1. தனிநபர்களை அல்லது குழுக்களை அங்கீகரிப்பதற்கும் பரிசு வழங்குவதற்கும் தேர்ந்தெடுப்பதற்கு என்னென்ன வழிமுறைகள் என்னென்ன தகுதி அடிப்படையை வைத்து குழும உறுப்பினர்களால் பின்பற்றப்பட்டது?
2. ஒரு நிகழ்ச்சியை திட்டமிடவும் மற்றும் நடத்தவும் ஏறக்குறைய எல்லா குழும உறுப்பினர்களையும் குழுக்களையும் பங்கேற்கச் செய்ய உங்களது குழுமத்தால் முடிந்ததா? ஆம் என்றால் எப்படி உங்கள் குழுமம் இதைச் செய்ய முடிந்தது?
3. ஒரு குழும நிகழ்வை ஒருங்கிணைப்பதில் நீங்கள் எதிர்கொண்ட முக்கியமான தடைகள் என்ன? அந்தத் தடைகளை எவ்வாறு எதிர்கொண்டீர்கள்?
4. நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள் எந்த விதமான தாக்கத்தை குழுமத் தலைவர்கள் மற்றும் குழும உறுப்பினர்கள் மீது ஏற்படுத்தியது?
5. மேற்கண்ட கொண்டாட்டங்களை மற்றும் நிகழ்வுகளை ஒருங்கிணைப்பதன் மூலம் உங்களது குழுமம் கற்றுக்கொண்டது என்ன?
6. குழுமத்தின் சாதனைகளை எல்லோருக்கும் எடுத்துச்சொல்வதற்கும் மற்றவர்களின் கவனத்தைக் கவர்வதற்கும் என்னென்ன தகவல், விளம்பரம் மற்றும் சமூக ஊடகப் பயன்பாட்டுப் பொருட்களை உருவாக்கினீர்கள்.
7. குழுமத்தால் ஒருங்கிணைக்கப்பட்ட நிகழ்வில் கலந்துகொண்ட அரசு அதிகாரிகள் உள்ளூர் அரசியல் தலைவர்கள் மற்றும் விருந்தினர்கள் நிகழ்ச்சியல் கலந்துகொண்டதன் பின்னர் அல்லது நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்ததன் பின்னர் குழுமத்தைப்பற்றி என்ன சொல்கின்றார்கள்?
8. (சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றவோ சேர்க்கவோ செய்யலாம்)

13

# மாற்றம்பெற்றுவரும் “ஆதரவு நல்கும்” அமைப்புகளின் செயல்பாடுகள்



# மாற்றம் பெற்றுவரும் “ஆதரவு நல்கும்” அமைப்புகளின் செயல்பாடுகள்

## நோக்கம்

குழும உறுப்பினர்களை திறன் மற்றும் வலு பெற்றவர்களாக ஆக்குவதுதான் குழும அணிதிரட்டல் செயல்முறையின் அடிப்படை நோக்கம். அப்படி ஆகின்ற போது குழுமத்தின் உறுப்பினர்கள் தனித்தனியாகவும் மற்றும் கூட்டாகவும் நீடித்த வளர்ச்சிக்கான பொருப்பினை ஒருங்கமைக்கப்பட்ட மற்றும் முறையான வகையில் ஏற்றுக்கொள்கின்றனா். தொடக்கத்திலிருந்து பல்வேறு நிலைகளில் இந்த கையேட்டில் விவரிக்கப்பட்டுள்ள படி, வழிகாட்டும் நிறுவனம் “வழிகாட்டுதல்” வேலையை மட்டும் தான் செய்ய வேண்டும் என்பது மீண்டும் மீண்டும் வலியுறுத்தபட்டுள்ளது. குழுக்கள் மற்றும் குழும அடிப்படையிலான அமைப்புகள் மற்றும் குழும உறுப்பினர்கள்தான், என்ன செய்வது எப்படிச் செய்வது என்று சிந்திப்பது, கலந்துரையாடுவது முடிவெடுப்பது நடைமுறைப்படுத்துவது என எல்லாவித செயல்முறைகளையும் மேற்கொள்ள வேண்டும். குழும உறுப்பினர்கள் படிபடியாக வளர்ந்து குழுமத்தை தன்நம்பிக்கையோடு வழிநடத்தத் தொடங்கும்போது, வழிநடத்தும் அமைப்புகள் குழுமத்தை வழிநடத்துவதில் தாங்கள் செய்யவேண்டியது என்ன என்பதை மறுவரையரை செய்துகொள்ள வேண்டும். அப்படிச் செய்யும்போதுதான் அவர்கள் குழும உறுப்பினர்களின் வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் அங்கீகரிக்கின்றார்கள் மற்றும் பாராட்டுகின்றார்கள் என்று பொருள்படும். வளர்ச்சிப்பணியின் வழக்கில் இதை ‘நிறைவுசெய்து வெளியேறுவது’ அல்லது ‘படிப்படியாகப் பொறுப்பை ஒப்படைப்பது’ என்னும் உத்தியாக சொல்லப்படுகின்றது.

‘நிறைவுசெய்து வெளியேறுவது’ அல்லது ‘படிப்படியாகப் பொறுப்பை ஒப்படைப்பது’ என்னும் உத்தியை ‘செயல்முறையின் வளர்ச்சியின் இயல்பான ஒரு கட்டமாக செயல்பாடுகளை மாற்றிக்கொள்வதாக’ எடுத்துக்கொள்ள முடியாது. எனவேதான் நுணுக்கமாகப் பொருள் கொள்வதற்கு முனையாமல் இந்த புத்தகத்தின் நோக்கத்தை மனதில் வைத்துக்கெண்டு இந்தக் கையேட்டின் ஆசிரியா் ‘நிறைவுசெய்து வெளியேறுவது’ அல்லது ‘படிப்படியாகப் பொறுப்பை ஒப்படைப்பது’ என்னும் வார்த்தைகளைப் பயன்படுத்தாமல் ‘மாற்றம்பெற்றுவரும் ‘ஆதரவு நல்கும்’ அமைப்புகளின் செயல்பாடுகள்’ என்ற

வார்த்தைகளைப் பயன்படுத்துகின்றார். அமைப்பு தன்னுடைய பணியில் புதியபரிமாணத்தை அடைவது என்பதை ‘வெளியேற்றம்’ அல்லது ‘முடிவுக்கும் வரும் கட்டம்’ என்று இந்த வார்த்தைகளை பயன்படுத்த விரும்புகிறார்.

குழுமத்தின் பார்வையில் இந்த படிநிலை ‘நிலைத்த நீடித்த தன்மைக்கான திட்டங்கள் மற்றும் வழிமுறைகளைக்’ குழும உறுப்பினர்கள் முழுமையாகச் செயல்படுத்தக் கற்றுக்கொண்ட நிலையாகப் புரிந்துகொள்ளப்படுகின்றது. குழுமத்திற்கும் வழிகாட்டும் அமைப்புக்கும் தங்களுடைய செயல்முறைகளை மாற்றம் பெற்றிருக்கும் சூழலுக்கு ஏற்ப மறுவரையரை செய்துகொண்டு செயல்படுவதற்கான அழைப்பாக இது அமைகின்றது. குழுமத்தை விட்டு வழிநடத்தும் அமைப்பு ஒட்டுமொத்தமாக விலகிக்கொள்கின்றது என்று நினைத்துவிடக் கூடாது. அது நல்லதுகிடையாது. அத்தோடு மனிதத்தன்மையுள்ள யாரும் அப்படிச் செய்யவும் முடியாது. குழுமங்களுக்கும் வழிகாட்டும் அமைப்புகளுக்குமான இந்த உறவுகள் வேறுநிலையில் வேறு வகையில் தொடரும். அதே வேளையில் வழிகாட்டும் அமைப்பு படிப்படியாக குழுமங்களுடனான தனது மும்முரமான செயல்பாடுகளைக் குறைத்துக்கொண்டே வரும். வழிகாட்டும் அமைப்பு கரங்களைப் பிடித்து வழிநடத்தும் ஒரு மும்முரமான நிலையில் இருந்து சற்று தள்ளி நின்று உடன் நடக்கும் நிலையில் தொடரும். சற்று தள்ளி நின்று உடன்நடப்பது என்றால் என்ன என்பது குழுமத்திற்கும் வழிநடத்தும் அமைப்பிற்கும் இடையே பேச்சுவார்த்தைகளின் வழியாக இறுதிசெய்யப்படும், புரிந்துகொள்ளப்படும், நடைமுறைப்படுத்தப்படும். இது சூழலுக்கு ஏற்றாற் போல் மாறியே ஆக வேண்டும். எனவே இது இப்படித்தான் நடக்க வேண்டும் என்று பொதுமைப்படுத்த முடியாது.

# திட்டமிடல் மற்றும் செயல்படுத்துதல்

குழுமமும் வழிகாட்டும் அமைப்பும் தங்களது பணியின் தன்மையை மாற்றிக்கொள்ளுதல் என்ற உத்தி ஒட்டுமொத்த திட்டத்தின் ஒருபகுதியாக இருந்தாக வேண்டும். தொடக்கத்திலேயே இதைப்பற்றி நாம் யோசித்து இந்த நிலையை அடையும் போது நாம் எப்படிச் செயல்படுவோம் என்ன செய்வோம் என்பதையெல்லாம் வடிவமைத்து வைத்திருக்க வேண்டும். அதே நேரத்தில் தொடக்கத்திலேயே வெளிப்படையாக இப்படித்தான் இருக்கும் என்பதை எல்லோருக்கும் அறிவிப்பது ஒட்டுமொத்தமான குழும அணிதிரட்டலுக்கு உதவியாக இருக்காது. இருந்தபோதிலும் அதற்கான வேலையை தொடக்கத்திலிருந்தே நடைமுறைப்படுத்துவதில் நாம் முனைப்பாக இருக்க வேண்டும். குழும அணிதிரட்டல் உச்ச கட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற போதே, குழுக்கள் மற்றும் குழும அடிப்படையிலான அமைப்புகள் இணைந்து செயல்படுவதற்குக் கற்றுக் கொண்ட நிலையிலேயே தள்ளி நின்று உடன்நடக்கும் செயல்முறை வழக்கத்திற்குக் கொண்டுவரப்படவேண்டும்.

வழக்கமாக வழிநடத்தும் அமைப்பின் கைகளை பற்றிக்கொள்வதை விடுத்து குழுமங்கள் தாங்களாகவே தங்களுக்கான எல்லா செயல்பாடுகளையும் முன்னெடுக்கவும் நிறைவுசெய்யவும் கற்றுக்கொள்வதற்கு குறைந்தது மூன்றுஆண்டுகள் எடுக்கும்.

# தொடர்வதற்கான வழிமுறைகள்

- மாறிவரும் வழிகாட்டும் அமைப்பின் வேலைகளைப் பற்றி குழுவில் பகிர்ந்துகொள்வதும் கலந்துரையாடுவதும் வேண்டும். குழுமமும் குழுக்களும் முதிர்ச்சியடைந்துள்ளனர், தாங்களாகவே தாங்கள் தொடங்கிய செயல்பாடுகளை எப்படி முன்னெடுத்துச் செல்வது என்ற வழிமுறைகளை மேற்கொள்ளத் தயாராக உள்ளனர் என்பதை குழுமத்திற்கும் குழுக்களுக்கும் விளக்கிச் சொல்ல வேண்டும். எந்த ஒரு வெளி அமைப்பின் வழிகாட்டுதலும் இன்றி தாங்கள் தொடங்கிய வேலைகளை நிலைத்த நீடித்த வகையில் செயல்படுத்த முடியும் என்பதை பகிர்வுகளிலும் கலந்துரையாடல்களிலும் உணர்த்த வேண்டும்.
- குழுக்கள் மற்றும் குழும அடிப்படையிலான அமைப்புகள் தன்னம்பிக்கையோடு செயல்படத் தொடங்கிய பிறகு, நலத்திட்டங்களைச் செயல்படுத்தும் அதிகாரிகளோடு நேரடியாக பேசிப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளும் ஆற்றலை வளர்த்துக்கொண்டபிறகு, வழிகாட்டி அமைப்பு மெல்ல மெல்ல கட்டங்கட்டமாக எல்லாச் செயல்பாடுகளையும் குழுமத்திடமே கொடுப்பது எப்படி என்று விலாவாரியான திட்டம் ஒன்றினைப் போட்டுக்கொள்வதற்கான கலந்துரையாடல்களை நடத்தத் தொடங்க வேண்டும்.
- வெளியேறும் திட்டம் முழுமையான வடிவம் பெறும் வரை மாற்றங்களை மெதுவாக நடைமுறைப்படுத்த

வேண்டும். ஏனென்றால் முக்கிய தலைவர்களுக்கும், குழுக்களின் உறுப்பினர்களுக்கும், குழும அடிப்படையான அமைப்புகளுக்கும், வழிகாட்டும் அமைப்புகளின் பணியாளர்களுக்கும் திட்டமிட்டுள்ளபடி பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதற்கும் ஒப்படைப்பதற்கும் ஏதாவது தயக்கம் இருக்கலாம்.

- வழிகாட்டும் அமைப்புகள் குழுமத்தின் எல்லா வேலைகளையும் குழும உறுப்பினர்கள், குழுக்கள் மற்றும் குழும அடிப்படையிலான அமைப்புகளிடம் ஒப்படைக்கும் திட்டம் இரண்டு கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படலாம் - ஒப்படைப்பதும் மற்றும் பொறுப்பேற்பதும் மெல்ல மெல்ல நடைபெறும் இடைக்காலம், முதலாவது கட்டம், ஒட்டுமொத்தமாக தங்களது செயல்பாடுகளை ஒப்படைத்துவிட்டு, வழிகாட்டும் அமைப்புகள் மாற்றம் பெற்ற தங்களது செயல்பாடுகளை முன்னெடுக்கும் காலம், இது இரண்டாவது கட்டம்.
- இரண்டு கட்டங்களும் எவ்வளவு நாட்களுக்குள் நடைபெறும் என்பது உறுதிசெய்யப்பட்ட உடனேயே அதை குழும உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் மற்றும் குழுமத்தின் செயல்பாடுகளால் பயன்பெறும் அனைவருக்கும் எந்த அளவிற்குப் பரவலாகத் தெரிவிக்க முடியுமோ அந்த அளவிற்குப் பரவலாகத் தெரிவிக்க வேண்டும்.
- குழும உறுப்பினர்கள், குழுக்கள் மற்றும் குழும அடிப்படையிலான அமைப்புகள், வழிகாட்டும் அமைப்புகளிடம் இருந்து பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளும் இடைக்காலத்தில், வழிகாட்டும் அமைப்பு எந்தெந்த வேலைகளை எல்லாம் செய்துகொண்டிருந்தது என்பதை பட்டியலிட வேண்டும். அந்தப் பட்டியலில் உள்ள வேலைகளையெல்லாம் குழும உறுப்பினர்கள் யாரை வைத்து எங்கே எப்படி செய்வார்கள் என்பதைப்பற்றி கலந்து உரையாட வேண்டும். இப்படிப்பட்ட வேலைகளை குழும உறுப்பினர்களில் செய்யக்கூடியவர்களை வைத்தோ அல்லது குழுத் தலைவர்களில் செய்யக்கூடியவர்களை வைத்தோ அல்லது அரசு திட்டங்களில் பயிற்றுனர்களை வைத்தோ அல்லது பிற நிறுவனங்களின் பயிற்றுனர்களை வைத்தோ செயல்படுத்த வேண்டும். மேற்கண்ட செயல்பாடுகளைத் தொடர்ச்சியான ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். அப்போதுதான் எதிர்காலத்தில் இப்படி நம்மால் செய்ய முடியும் என்ற தன்னம்பிக்கையுடன் குழும உறுப்பினர்கள் வளர்வார்கள்.
- குழும உறுப்பினர்கள் மற்றும் குழுத்தலைவர்களிடம் இருந்து, ஏற்கெனவே வழிகாட்டும் அமைப்பு செய்துவந்த வேலைகளையெல்லாம் நாமே செய்யக் கற்றுக்கொண்டு பொறுப்பேற்றுக்கொண்டபிறகு, எந்தமாதிரி வேலையை எதிர்காலத்தில் வழிகாட்டும் அமைப்பு செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள் என்று அவர்களது கருத்தைக் கேட்டறிந்துகொள்ள வேண்டும். ஒருமித்த நிலைப்பாடு வரும் வரை கலந்துரையாடல் செய்யவேண்டும். வழிகாட்டும் அமைப்பு எதிர்காலத்தில் தங்களுக்கு ஆலோசனை மட்டும் வழங்கினால் போதும் என்று முடிவு செய்யலாம். அல்லது ஏதாவது சிக்கல்களுக்கு குரல்கொடுக்கும்போது அல்லது பிற அமைப்புகளுடன் பிணைப்பை ஏற்படுத்திக்கொள்ளும்போது சிறிய அளவில் வழிகாட்ட வேண்டும் என்று முடிவு செய்யலாம். அல்லது இதுபோன்ற பிற வேலைகளை வழிகாட்டும் அமைப்பு தொடர்ந்து குழுமத்திற்காகச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளலாம். எது எப்படி இருந்தாலும், அது தெளிவான மற்றும் ஒருமித்த புரிதலாக இருக்க வேண்டும்.
- (சூழலுக்கேற்ப மாற்றிக் கொள்ளவோ அல்லது சேர்க்கவோ செய்யலாம்.)

# பயனுள்ள குறிப்புகள்

- வழிகாட்டும் அமைப்பு தங்களது திட்டத்தை குழும உறுப்பினர்கள் மத்தியில் செயல்படுத்துவதற்கு முன்பு குழுமத்தின் நிலை எப்படியிருந்தது என்பதையும் தற்போது குழுமம் எப்படி வளர்ச்சியடைந்து இருக்கிறது என்பதையும் ஒப்பிட்டுக் காட்ட வேண்டும். அப்போதுதான் தாங்கள் எந்த அளவிற்கு வளர்ந்திருக்கின்றோம் என்பதை ஒட்டுமொத்தமாகப் புரிந்துகொண்டு, வழிகாட்டும் அமைப்பினைச் சாராமல் தனியாகச் செயல்படுவதற்குத் தாங்கள் எந்த அளவிற்குத் தயாராக இருக்கின்றோம் என்று அறிந்துகொண்டு செயல்படுவார்கள்.
- குழும உறுப்பினர்களும் வழிகாட்டி அமைப்பும் இணைந்து நடந்துவந்த பாதையை, பயணத்தை, கடந்துவந்த மகிழ்வான பயன்தரும் தருணங்களை நினைவுகூறும் வகையில் நன்றி நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யவேண்டும். அப்படிச் செய்யும்போது வழிகாட்டி அமைப்பின் கரங்களைப் பற்றிக்கொள்ளும் நிலையில் இருந்து தனித்து நடக்கும் நிலையை அருமையானதாகவும், நன்றிகூறிப் பாராட்டக்கூடியதாகவும் புரிந்துகொள்ள உதவும்.

- வழிகாட்டி அமைப்பு ஒட்டுமொத்தப் பொறுப்புகளையும் குழுமத்திடம் ஒப்படைக்கும் சூழலில் இந்த அமைப்பும் மற்றும் குழுமத்தின் குழுக்களும் ஒவ்வொரு 6 மாதத்திற்கும் ஒருமுறை கூடி வந்து கலந்துரையாடவேண்டும். அந்தக் கலந்துரையாடலில் எழும் பரிந்துரைகளின்படி அன்றைய நிலைமைக்கு ஏற்ப பொறுப்பு ஒப்படைக்கும் மற்றும் பொறுப்பேற்கும் திட்டத்தில் சில மாற்றங்களைச் செய்துகொண்டு செயல்படுத்தலாம்.
- 8 லிருந்து 9 வருட குழும அணித்திரட்டல் செயல்பாட்டில் ஒவ்வொரு 3 வருட இடைவெளியில் வழிகாட்டும் அமைப்புகள் குழும உறுப்பினர்களுக்கு ஒருசில பொறுப்புகளை ஒப்படைத்து வர வேண்டும். வழிகாட்டும் அமைப்பு குழுமத்தினர் செய்யக்கூடிய வேலைகளை அவர்களிடம் ஒப்படைத்துவிட்டு மற்ற வேலைகளை எடுத்துச் செய்வதை வழக்கமாக்கிக்கொள்ள வேண்டும்.
- (சூழலுக்கேற்ப சேர்க்கவும் அல்லது மாற்றி அமைக்கவும்.)

## பயனுள்ள எச்சரிக்கைகள்

- வழிகாட்டும் அமைப்புகள் தாங்கள் செய்து வந்த அத்தனை வேலைகளையும் குழுமத்திற்காகத் தொடர்ந்து மும்முரமாகச் செய்தே ஆகவேண்டும் என்பதற்கான சாக்குப் போக்குகள் எப்போதும் இருக்கும். நடந்த பிள்ளையைத் தவழ்ந்து போகச்செய்யும் இப்படிப்பட்ட சிந்தனைக்கு நாம் இடம்தரக்கூடாது.
- வழிகாட்டும் அமைப்புகள் திடீரென வெளியேறுவதை தவிர்க்க வேண்டும்.
- வழிகாட்டும் அமைப்புக்கள் தங்களது சிந்தனைகளை குழுமங்களின் மேல் திணிக்கக்கூடாது. வழிகாட்டும் அமைப்புக்கள் குழுமங்களிடம் பொறுப்புக்களை ஒப்படைத்தபிறகு தொடர்ந்து உங்களோடு நாங்கள் செயல்படுவோம் என்ற வாக்குறுதிகளைக் கொடுக்கக்கூடாது. குழும செயல்பாடுகளில் வழிகாட்டும் அமைப்புக்களின் ஈடுபாடு என்னவாக இருக்கவேண்டும் என்பதைக் குறிப்பிட்ட குழுமமும் குறிப்பிட்ட வழிகாட்டி அமைப்பும் உட்கார்ந்து பேசி முடிவெடுத்துச் செய்ய வேண்டும்.
- (சூழலுக்கு ஏற்ப சேர்க்கவும் அல்லது மாற்றம் செய்துகொள்ளவும்.)

## செயல்பாடுகள் சரியான பாதையில் போய்க்கொண்டிருக்கின்றது என்பதைக் காட்டும் காரணிகள்

1. வழிகாட்டும் நிறுவனம் குழுமத்திடம் எல்லா வேலைகளுக்கான பொறுப்புகளை ஒப்படைப்பதும் குழுமங்கள் அந்தப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதும் (இத்தனை) குழுக்களுக்கும் (இத்தனை) குழுமம் சார்ந்த அமைப்புகளுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.
2. (இத்தனை) குழுக்களும் (இத்தனை) குழும அடிப்படையிலான அமைப்புகளும், குழுமம் தனது வளர்ச்சிக்கான பாதையில் சொந்தக்காலில் நின்று நடைபோட்டு முன்னேறிச் செல்லப் போதுமான தயாரிப்புடன் இருப்பதை உணர்திருக்கின்றார்கள்.
3. (இத்தனை) குழுக்கள் மற்றும் (இத்தனை) குழும அடிப்படையிலான அமைப்புகள் வழிகாட்டும் அமைப்புடன் சேர்ந்து பொறுப்புகளை ஒப்படைப்பதைப்பற்றியும் பொறுப்புகளை ஏற்றுக்கொள்வது பற்றியும் நுணுக்கமான திட்டம் ஒன்றைத் தயாரித்து வைத்திருக்கின்றார்கள்.
4. (இத்தனை) குழுக்கள் மற்றும் (இத்தனை) குழும அடிப்படையிலான அமைப்புகள் பொறுப்புகளை ஒப்படைப்பதும் ஏற்றுக்கொள்வதும் எளிதாக இருக்கும் வகையில் நிலைத்த நீடித்த செயல்பாடுகளுக்கான திட்டங்களையும் உள்ளடக்கி இருக்கின்றார்கள்.
5. (இத்தனை) குழுக்கள் மற்றும் (இத்தனை) குழும அடிப்படையிலான அமைப்புகள் நிலைத்த நீடித்த செயல்பாடுகளுக்கான திட்டங்களைச் செயல்படுத்தத் தேவையான ஆட்கள், பொருளாதாரம் போன்றவற்றை எப்படி எப்போது எங்கிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதைப் பற்றியும் திட்டமிட்டு இருக்கின்றார்கள்.

6. (இத்தனை) குழுக்கள் மற்றும் (இத்தனை) குழும அடிப்படையிலான அமைப்புகள் தாங்கள் இதுவரை சாதித்தவற்றைப் பற்றியும் தங்களது தகுதியைப் பற்றியும், தங்களது குழுமச் செயல்பாடுகளுக்குத் தாங்களே முழுப் பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்போவதைப்பற்றியும் பெருமைப்படுகின்றார்கள்.
7. (இத்தனை) குழுக்கள் மற்றும் (இத்தனை) குழும அடிப்படையிலான அமைப்புகள் வழிகாட்டும் அமைப்பு தாங்கள் செய்த வேலையை குழுமம் தன் சொந்தக் காலில் நின்று செய்யுமளவிற்கு வளர்ந்துவிட்டதை உணர்ந்து தங்களிடம் பொறுப்புக்களை ஒப்படைத்தது சரியான செயல்தான் என்று அங்கீகரிக்கின்றார்கள்.
8. (சூழலுக்கு ஏற்ப சேர்க்கவும் அல்லது மாற்றவும்.)

# பொறுப்புக்களை ஒப்படைப்பதன் விளைவுகள்

| வரிசை எண் | வழிகாட்டும் அமைப்பின் முக்கிய பங்களிப்புகள் | நிலைத்த நீடித்த திட்டங்கள் மற்றும் செயல்முறைகள் | நபர் அல்லது குழு அல்லது பொறுப்பு அமைப்பு |
|---|---|---|---|
| 1 | பயிற்சி அல்லது திறன் வளர்த்தல் | | |
| 2 | அரசு மற்றும் பிற நிறுவனங்களுடன் குழுமத்திற்காகக் குரல்கொடுத்தல் | | |
| 3 | ஒத்துழைப்பு, பிணைப்பு மற்றும் கூட்டமைப்பு | | |
| 4 | பார்வையிடல் மற்றும் மற்றவர்களின் அனுபவங்களில் இருந்து கற்றலுக்கான வாய்ப்புகள் | | |
| 5 | அனுபவம், ஆய்வு மற்றும் கற்றலை நடைமுறையில் பயன்படுத்துதல் | | |
| 6 | தன்னார்வ முன்வருதல், கொடுத்தல் பகிர்தல் | | |
| 7 | செயல்முறைகளை ஆவணப்படுத்துதல் | | |
| 8 | தேவையான ஆட்களைத் திரட்டல் | | |
| 9 | நிதி ஆதாரங்களைத் திரட்டல் | | |
| 10 | கொண்டாட்டங்கள் மற்றும் பொது நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல் | | |
| 11 | மேலும் மற்றவை | | |

# சிந்திக்கவும் பகிர்ந்துகொள்ளவும் சில கேள்விகள்

1. பெரும்பாலான குழுக்கள் மற்றும் குழும அடிப்படையிலான அமைப்புகள் எதற்காக வழிகாட்டும் அமைப்புகள் தங்களுடைய பொறுப்புகளை ஒப்படைக்கின்றார்கள் என்பதையும் எதற்காக குழும உறுப்பினர்களே அந்தப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்கின்றார்கள் என்பதையும் புரிந்து கொண்டார்களா? இது பற்றிய கருத்து வேறுபாடுகள் எவ்வாறு கேட்கப்பட்டு குழும உறுப்பினர்கள் அனைவருக்கும் எடுத்துச்சொல்லபட்டது?.
2. வழிகாட்டும் அமைப்புகள் தங்களுடைய பொறுப்புகளை ஒப்படைக்கின்றார்கள் என்பதையும் குழும உறுப்பினர்களே அந்தப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்கின்றார்கள் என்பதையும் தெரிந்துகொண்டபின்பு குழும செயல்பாடுகளின் பயனாளிகள் என்ன சொன்னார்கள்?
3. பொறுப்பு மாற்றத்தில் எந்த பகுதி அமல்படுத்துவதற்கு மிகவும் கடினமாக இருந்தது? ஏன்?
4. குழும உறுப்பினர்கள் தாங்களாகவே பொறுப்புக்களை மேற்கொண்டு வேலை செய்யும் போது எதையெல்லாம் தன்னம்பிக்கையோடு செய்தார்கள் எதையெல்லாம் மிகவும் சங்கடத்தோடு செய்தார்கள்?
5. பொறுப்புகளை மாற்றிக்கொள்ளும் இறுதிக்கட்டத்தின் போது வழிகாட்டும் அமைப்பின் செயல்பாடுகள் முந்தைய ஆண்டுகளை ஒப்பிடும்போது எந்தெந்த வகைகளில் வேறுபட்டு இருந்தது?
6. (சூழ்நிலைக்கேற்ப மேலும் சேர்க்கவும் அல்லது மாற்றவும்).



# நிறைவாக

இந்தக் கையேடு குழுமங்களை அணிதிரட்டும் முறைகளில் ஈடுபட்டிருக்கும் வளர்ச்சிப் பணியாளர்கள் எப்போதும் தங்களோடு வைத்துக்கொண்டிருக்க வேண்டிய ஒன்றாகக் கருதி உருவாக்கப்படுகின்றது. அனுபவங்களின் அடிப்படையில் இது நான்கு அடிப்படையான தூண்களின் மீது கட்டியெழுப்பப்படுகின்றது. உருவாக்கப் பட்டிருக்கும் பன்னிரெண்டு படிமுறைகளும் எற்கெனவே நாம் குறிப்பிட்ட நான்கு தூ ண்களின்மீதே அசையாவண்ணம் அழுத்தமாகக் கட்டியெழுப்பப்பட்டிருக்கின்றன. நாம் எவ்வாறு இது தொடர்பான செயல்களில் முன்னேற்றம் காண்கின்றோம் என்று மதிப்பீடு செய்வதற்கான அடையாளச்செயல்களும், தகவல் பட்டியல்களும் அடிப்படையில் நாம் ஏற்கெனவே எழுப்பியிருக்கும் தூண்களை வலுப்படுத்துவதற்காகவே செயல்படுகின்றன.

முதலாவதாக இந்தக் கையேடு ஒவ்வொரு குழுமத்தின் உறுப்பினரையும் தங்களது வளர்ச்சி என்னும் வாகனத்தின் ஓட்டுனர்களாக உட்காரவைக்கின்றது. அரசுசாரா தொண்டு நிறுவனங்கள், ஊக்குனர்கள், நன்கொடையாளர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் அனைவரையும் குழும உறுப்பினர்கள் திறம்பட செயல்படுவதற்கான ஆதரவுச் சூழலை அமைத்துக்கொடுப்பவர்களாகத் தங்களது பணியைப் புரிந்துகொண்டு செயல்பட ஊக்குவிக்கின்றது. கருத்தளவில் நம்மில் பலருக்கும் இந்த காரியங்கள் எல்லாம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தபோதிலும், செயல்முறைப்படுத்தும்போது ஒவ்வொரு செயலாக எடுத்துச் செய்யும்போது யார் என்ன செய்ய வேண்டும் என்பதில் தலைகீழ் மாற்றங்களை நாம் காணமுடிகின்றது.

சமூகப் பாகுபாடு மற்றும் சமூக ஒதுக்கல், பொருளாதார ரீதியாக வறுமைக்குள்ளாக்குவது, பண்பாட்டு விலக்கல் மற்றும் அரசியல் காழ்ப்புணர்வு மிக ஆழமானதாக இருக்கின்றது, தலைவிரித்தாடுகின்றது. எனவே பெரும்பான்மையான நகர்ப்புற மற்றும் கிராமப்புற ஏழைகள் எந்தவிதமான கேள்விகளையும் கேட்காமல், நடக்கும் கொடுமையான சூழல் எல்லாமே வழக்கம்போல்தான் நடக்கிறது என்று ஏற்றுக்கொண்டு விட்டதாகத் தெரிகிறது. எதையும் அலசி ஆராய்ந்து பார்ப்பதற்கு இயலாதவர்களாகிவிட்ட இந்த மக்கள் இன்றைய நிலைமையை அப்படியே ஏற்றுக்கொண்டதுபோலத் தெரிகின்றது. இது போதாத

குறைக்கு பெரும்பான்மையான ஏழைகளுக்கு கல்வியில்லை, தொழில்பயிற்சியில்லை, திறன்களில்லை அவையெல்லாவற்றையும்விட முன்னேற வேண்டும் என்கின்ற முனைப்பு இல்லை. எனவே இந்தக் குழும உறுப்பினர்களை முன்வைத்து காரியங்களை நகர்த்துவது என்பது சிக்கல் மிகுந்தது. பலரும் வெறும் காட்சிப்பொருளாக மட்டும்தான் இருப்பார்கள். இவர்களால் மாற்றங்களைக் கொண்டுவருபவர்களாக செயல்பட முடியாது. இது ஒரு வாதம்.

இந்த வாதத்தை நாம் ஓரளவிற்கு ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் இதற்கு இன்னொரு பக்கம் இருக்கின்றது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. தங்களது வாழ்க்கையை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என்கின்ற ஆசை குழும உறுப்பினர்களின் அடிமனதில் எழும்பிக்கொண்டேயிருக்கும் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஒன்றுமே நடக்காது என்று நம்பிக்கையை ஒட்டுமொத்தமாக இழக்கச் செய்யக்கூடிய சூழல்களில் கூட நமக்கு ஒரு நல்ல எதிர்காலம் பிறக்காதா என்னும் அவர்களுடைய ஏக்கச் சுடர் எரிந்துகொண்டேதான் இருக்கின்றது. எல்லாவிதமான சங்கடங்களுக்கு இடையிலும், தோழமை, சகோதரத்துவம், பகிர்வு, நீதி ஞாய உணர்வு, எழைகளுக்கான பரிவு போன்ற மதிப்பீடுகளை அவர்கள் மதித்துப் போற்றிக்கொண்டேதான் இருக்கின்றார்கள். குழுமங்களை அணிதிரட்டுவது என்பதன் முதன்மையான நோக்கமே அவர்களிடம் உள்ள சிறப்பான குணநலன்களையெல்லாம் வெளிக்கொண்டுவந்து அவர்களுடைய ஒட்டுமொத்த ஞானத்தைச் செயல்படச்செய்வதுதான். சொல்வதைக் கேள்விகேட்காமல் செய்பவர்களாக அவர்களை மாற்றுவதற்காக நாம் அவர்களை அணிதிரட்டுவது கிடையாது. ஏனென்றால் அந்தக் குழமத்தின் உறுப்பினர்கள்தான் தங்களது குழுமத்தின் வளர்சிக்கான செயல்பாடுகளை முன்னெடுப்பதற்காக கடைசிவரை கால்கடுக்க நிற்பார்கள். இறுதியாக உறுதியாகப் பயன்பெறுகின்ற அவர்கள் இல்லாமல் நம்மால் எதையும் செய்ய முடியாது.

இரண்டாவதாக வளர்ச்சிக்கான முறைகளை வடிவமைப்பதில் இன்றைக்கு நாம் தெளிவாகத் திட்டமிட்டு ஒரு பெரும் மாற்றத்தைக் கொண்டுவருகின்றோம். இல்லாதவர்களுக்கு எதையாவது இரக்கப்பட்டு கொடுப்பது அல்லது வறுமையைப் போக்குவது போன்ற செயல்பாடுகள் அல்லாமல் உரிமைகளை வென்றெடுப்பதற்கான சமூகசெயல்பாடுகளை முன்னெடுப்பது என்கின்ற புதிய முறையில் நம்மையே மாற்றிக்கொண்டு செயல்படுவதற்காக நாம் இன்றைக்கு அழைக்கப்பட்டிருக்கின்றோம். தனிநபர்களைப் பற்றி நாம் அக்கறையாக இருக்க வேண்டும் எளிதில் பாதிப்பிற்கு உள்ளாகக்கூடியவர்களை நாம் பராமரிக்க வேண்டும் என்பதில் எந்தவிதமான மாற்றுக்கருத்தும் இல்லை. ஒரு குழுமம் ஒட்டுமொத்தமாக தனக்காக சிந்திக்கும் ஆற்றல் படைத்தது என்பதை வலியுறுத்தி குடிமக்களாக அவர்களது ஒருங்கிணைந்த ஆற்றல் அவர்களது வாழ்க்கையில் வளர்ச்சியைக் கொண்டுவருவதற்கு கடமைப்பட்டவர்களைத் தட்டிக்கேட்டுப் பேச்சுவார்த்தை நடத்திப் பெற்றுக்கொள்ளச் செய்வதற்கு நாம் அழுத்தம் தருகின்றோம், அவ்வளவுதான். தாராளமயமாக்கம், தனியார் மயமாக்கம் மற்றும் உலகமயமாக்கம் என்னும் காலச் சூழலில், அரசுகள் தங்களது அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையிலான கடமைகள் மற்றும் அர்ப்பணிப்புகளில் இருந்து உருவிக்கொண்டு ஒதுங்கும் சூழலில், நமது வளர்ச்சியைப் பற்றிப் பேசுவதற்காகக் குடியுரிமையைப் பற்றிய பேச்சு முதன்மையான கருவியாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

மூன்றாவதாக, நாம் அமைக்கும் வியூகம் குழுமங்களின் தலைமையில் மக்களின் தலைமையில் காரியங்களை நடத்திச்செல்லும் ஒரு முறை. இந்த முறையில் காரியங்கள் நடைபெறச் செய்ய வேண்டுமானால் குழுமங்கள் சார்ந்த அமைப்பினை உருவாக்குவது இன்றியமையாதது. குழும உறுப்பினர்கள் அனைவரும் தாங்கள் எதனை இலக்காகக் கொண்டு, எந்த மதிப்பீடுகளை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றார்கள் என்று உணர்ந்துகொள்ள வழிவகை செய்துகொடுக்க வேண்டும். தங்களது குழுமத்திற்கான ஒற்றை நோக்கத்தை நிறைவேற்ற இணைக்கப்பட்டவர்களாக வளர்த்தெடுக்க வேண்டும். மக்களாட்சி வழியில் தாங்கள் செய்யும் செயல்களின் காரண காரியங்களை, விளைவுகளை, தாக்கங்களைத் அறிந்து, தெரிந்து புரிந்து முடிவெடுக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். இதற்காக குழுமத்தின் உறுப்பினர்கள் அனைவருக்கும் பயிற்சி கொடுக்கப்பட வேண்டும். அறிவும் திறனும் பெற்றவர்களாக அவர்களை உருவாக்க வேண்டும். நாம் இதனை எப்படிச் செய்கின்றோம் என்பது என்ன செய்கின்றோம் என்பதைப் போலவே முக்கியமானது. ஏதோ காரியம் முடிந்தால் போதும் என்று எண்ணிவிடக் கூடாது. வெற்றிகரமாகச் செயல்களைச் செய்துமுடித்து வீரம் பேசுவது எவ்வளவு முக்கியமோ அதுபோல தங்களது அனுபவங்களில் இருந்து அடுத்தடுத்து எப்படிச் செயல்படுவது என்று கற்றுக்கொள்வதும் முக்கியம். குழுமங்கள் இப்படிக் கற்றுக்கொள்வதை உள்வாங்கிக்கொண்டார்கள் என்றால் அவர்கள் ஆற்றல் மிக்கவர்கள் ஆகிவிடுகின்றார்கள். தாங்களாகவே தங்களுக்கான பாதையை அமைத்துக்கொண்டு முன்னேறத் தகுதிபெற்றுவிடுகின்றார்கள். குழும உறுப்பினர்கள் தாங்கள் செயல்பட வேண்டிய முறை என்பதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு ஒவ்வொரு படியாக தனித்தனியாக முடிவெடுத்துச் செயல்பட்டாக வேண்டும். பொறுமை, விடாமுயற்சி, அணைவரையும் அரவணைத்துச்செல்லும் போக்கு ஆகியவை நமது இலக்கை அடைய இன்றியமையாதவை ஆகின்றன.

நான்காவதாக, வளர்ச்சியை நோக்கிய செயல்பாட்டுமுறை என்பது வெறுமனே பொருளாதாரம் சார்ந்தது மட்டும் அல்ல. அது மனநிலைகளைச் சார்ந்தது, பண்பாட்டு மாற்றங்களை உள்ளடக்கியது அத்தோடு எல்லோரும் இணைந்து கனவு காண்பதற்கான ஆற்றலை வளர்த்தெடுப்பது. இதுவரை ஆதிக்கவாதிகளாலும் அதிகாரம் செலுத்துபவர்களாலும் 'துடைத்துத் தூக்கியெறியப்படக் கூடியவர்களாக' 'உதவாக்கரைகளாக' 'தற்குறிகளாக' 'குடிகாரர்களாக' மேலும் சில குறிப்பிட்ட வேளைகளில் 'போக்கிரிகளாக' நடத்தப்பட்ட ஏழையர்கள் உடனிருந்து செயல்படக்கூடியவர்களாக அணுகப்படவேண்டியிருக்கின்றது. முடியும் என்று எதையும் நினைத்து அணுகும் திறனை ஊக்குவிப்பது, தன்மதிப்பை உறுதிப்படுத்துவது, மற்றவர்களைப் பாராட்டக் கற்றுக்கொள்வது, தன்னார்வத்துடன் செயல்படும் மனப்பாங்கை வளர்த்தெடுப்பது மற்றும் கொடுப்பதில் இன்பம் காண்பது, பகிர்ந்துவாழப் பழகிக்கொள்வது இவை அனைத்தும் மிகப்பெரும் பலன்களைத் தரக்கூடும். இந்த முறை காலம் செல்லச் செல்ல நிலைத்து நின்று பலன்தரும் முறையாக மாறும். அப்படி மாறவேண்டுமானால் இந்தக் குழுமத்தின் உறுப்பினர்கள் பாராட்டப்படவேண்டும், புதிய சிந்தனைகளைச் செயலாக்கிப் பார்க்கும் வாய்ப்புகள் கொடுக்கப்படவேண்டும், அவர்களது பங்களிப்பிற்காக அங்கீகரிக்கப்படவேண்டும், எல்லோருக்கும் முன்பாக வாழ்த்தப்படவேண்டும் அத்தோடு இவர்களுடைய வெற்றிக்கதைகள் பரணியாகப் பாடப்படவேண்டும். இந்தச் செயல்பாட்டுப் படிநிலைகள் எல்லாம் இந்த மக்களின் வாழ்க்கை மாற்றத்திற்கான விலைமதிப்பில்லாத முதலீடுகள்.

கோவிட் -19 நாட்டின் வளர்ச்சிப் பாதையில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. வேலையில்லாத் திண்டாட்டம், பிழைப்பிற்காகப் புலம்பெயர்தல் மற்றும் வீடுதிரும்பப் புலம்பெயர்தல், சமூகப் பாதுகாப்பிற்கான கடமைகளில் இருந்து அரசு தனது கைகளைக் கழுவிவிடுதல், உழைப்பாளர்களின் பாதுகாப்பிற்கான சட்டங்களை உடைத்தெறிவது அல்லது வலுக்குறைந்ததாக்குவது என்ற செயல்பாடுகள் ஏற்கெனவே பெரும்பான்மையான ஏழைகள் மற்றும் நடுத்தர வர்க்கத்தவர்களை வெலவெலத்துப் போக வைத்துவிட்டிருக்கின்றது. அரசாங்கங்களின் வெளிவேடங்கள் கலைந்துவிட்டன. அவர்களின் மீனுக்குத் தலையும் பாம்புக்கு வாலும் காட்டும் போக்கு குடிமக்களால் தெளிவாகப் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. மக்கள் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக அரசாங்கங்கள் சொல்வது என்ன செய்வது என்ன என்பதைக் கண்டுகொள்ள ஆரம்பித்துவிட்டார்கள். சட்டங்கள் இயற்றும் எம்.எல்.ஏக்களும் எம்.பிக்களும், அதிகாரவர்க்கமும், நீதித்துறையும் உலகளாவிய அளவிலும் உள்நாட்டு அளவிலும் பேராசைபிடித்த வியாபாரக் கூட்டத்தோடு கள்ளக்கூட்டுப்போட்டுக்கொண்டு செயல்படுவதை தெளிவாகப் புரிந்துகொண்டிருக்கின்றார்கள். லாப வெறிபிடித்த புதிய தாராளமயமாக்கல் கொள்கைகளும் செயல்பாடுகளும் அவர்களை அழித்து ஒழிப்பதற்காகவே இருக்கின்றன என்பதைக் கண்டுகொண்டார்கள். இந்த வெற்றிடங்கள் குடிமக்களாக மாண்புடன் வாழ்வதற்கான உரிமைக்காகவும், நீடிய நிலைத்துநிற்கக்கூடிய வளர்ச்சி மற்றும் சுற்றுப்புறச் சூழலைக் காப்பதற்கு ஏற்ற வாழ்க்கை முறை ஆகியவற்றிற்காகவும் எழுப்பப்படும் மக்களின் குரல்களால் நிரப்பப்படவேண்டும். இதுவரை இல்லாத அளவில், கோவிட் தாக்கத்திற்குப் பின் வரும் காலக்கட்டத்தில், ஏற்பட இருக்கும் புதிய வழக்கமான வாழ்க்கை முறையில் மக்களின் தலைமையில் நடக்கும் குழும அணிதிரட்டல் முயற்சி தங்களுக்குத் தேவையானவற்றைக் கேட்டு வாதாடிப் பெற்றுக்கொள்ளும் மக்களின் ஆற்றலில் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தப்போகின்றது. இதில் ஐயமில்லை.

அறிமுக இயலில் சொல்லப்பட்டுள்ளது போல, குழும உறுப்பினர்களால் தலைமையேற்று வழிநடத்தப்படும் ஒரு வளர்ச்சி முறையை அதன் அனைத்துப் பரிமாணங்களையும் கவனத்தில் கொண்டு வடிவமைக்க ஒரு முயற்சி இங்கே மேற்கொள்ளப்படுகின்றது. அதன் விளைவாக இங்கே முன்மொழியப்படுகின்ற 12 படிகளைக் கொண்ட முறை என்பது 'எல்லாமுமானது இனி சொல்வதற்கு ஒன்றுமே இல்லை' என்றோ இதைத்தான் எல்லோரும் செய்தாக வேண்டும் என்றோ எடுத்துக்கொள்ளக் கூடாது. இந்தப் பன்னிரெண்டு படிமுறைகளும் அந்தந்த ஊர் நிலவரங்களுக்கு ஏற்ப திருத்தி பொருத்தி வடிவமைத்துக்கொள்ளப்பட வேண்டும். அப்படிச் செய்யப்படும் போது, இந்தப் பன்னிரெண்டு படிமுறைகளைப் பயன்படுத்தி, அதன் அடித்தளமாக அமைக்கப்பட்டிருக்கின்ற நான்கு தூண்களை மறந்துவிடாமல் செயல்படுகின்ற அமைப்புகள் அந்தக் குழும உறுப்பினர்களால் அவர்களது வழிகாட்டுதல்களுக்காக ஆண்டாண்டுகாலமாக நினைந்துகொண்டாடப்படும்.





# Select Bibliography


Boud, D., and N. Miller. (1997). *Working with Experience: Animating Learning*. London: Routledge

Dernbach, J. C. (2003). 'Achieving sustainable development: The Centrality and multiple facets of integrated decision-making'. *Indiana Journal of Global Legal Studies*, 247-285.

Gerard McElwee et. al. (2017). "Conceptualising animation in rural communities: The Village SOS case".

Gibbs, G., (1988). Learning by Doing: A guide to teaching and learning methods. Further Education Unit. Oxford Polytechnic: Oxford.

Heinrich C. J., (2002). "Outcomes-based Performance Management in the Public Sector: Implications for Government Accountability and Effectiveness". *Public Administration Review*, Vol. 62, No. 6, pp. 712–725.

Kenny, S. (2007). *Developing Communities for the Future* (3rd ed.). South Melbourne: Thompson.

Kovach, Margaret. (2009). *Indigenous methodologies. Characteristics, conversations and contexts*. Toronto: University of Toronto Press. p. 171.

Osborne, S. (2002). *Public Management – A Critical Perspective*, London: Routledge.

Schnarch, B. (2004). Ownership, control, access, and possession (OCAP) or self-determination applied to research: A critical analysis of contemporary First Nations research and some options for First Nations communities.

Smith, R. (2013). "Developing and Animating Enterprising Individuals and Communities: A Case Study from Rural Aberdeenshire, Scotland." *Journal of Enterprising Communities, People and Places in the Global Economy* 6 (1): 57–83.

Spivak, G.C. (1988). *Can the Subaltern Speak?* Basingstoke: Macmillan, 1988.

Stoddart, H. (2011). *A Pocket guide to sustainable development governance*. Stakeholder Forum.

Strauss, Anselm L. (1978). "A Social World Perspective", *Studies in Symbolic Interaction* 1: 119-128.



## முனைவர். ஜோசப் சேவியர் சே.ச.

மனித உரிமைகள் துறையில் முதுகலைப் பட்டமும், மனித உரிமைகள் மற்றும் குற்றவியல் துறையில் முனைவர் பட்டமும் பெற்றவர். 2001-2007 காலக்கட்டத்தில் இயேசுசபையின் தெற்காசிய சமூக செயல்பாட்டாளர்கள் அமைப்பின் செயலராகப் பணியாற்றியுள்ளார். 2012 -2015 காலக்கட்டத்தில் டெல்லியில் உள்ள இந்திய சமூக நிறுவனத்தின் செயல் இயக்குனராகவும், 'சோசியல் ஆக்சன்' என்னும் காலாண்டிதழின் ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். 2017-2019 காலக்கட்டத்தில் ரோமை நகரில் அமைந்துள்ள இயேசுசபைப் புலம்பெயர்ந்தோர் பணி அமைப்பின் உலகளாவிய துணை இயக்குனராகப் பொறுப்பேற்றுச் செயல்பட்டிருக்கின்றார். ஐந்து புத்தகங்களை எழுதியிருக்கின்றார். இருபது கட்டுரைகளுக்கு மேல் எழுதி பலராலும் பாராட்டப்படும் இதழ்களில் வெளியிட்டிருக்கின்றார். அத்தோடு ஐந்தாறு பணித்திட்டங்களை மதிப்பீடு செய்யும் பணிகளையும் செய்திருக்கின்றார். லோக் மன்ச் அமைப்பின் நிறுவனர்களில் ஒருவராக இருக்கின்றார். ஆய்வு முறைகள், வேரோட்டமான திட்டமிடல், நிறுவன மேம்பாட்டு முறைகள் பற்றிய பயிற்சிப் பட்டறைகளை நடத்தி வருகின்றார். 'பட்டியலின கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களின் அதிகாரப்படுத்தலுக்கான இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவையின் கொள்கை வரைவு: அனைவரையும் உள்ளடக்கிய சமுதாயங்களைக் கட்டியெழுப்புவதற்கான அறம் மற்றும் அருள்பணி சார்ந்த பரிந்துரைகள்' என்னும் ஆவணத்தின் முதன்மை ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். தற்போது, பெங்களூருவில் உள்ள இந்திய சமூக நிறுவனத்தின் இயக்குனராகப் பணியாற்றி வருகின்றார்.



## திருமிகு. ஸ்ரீவித்யா சாய்நாதன்

சமூகவியலிலும் உயிர்வேதியலிலும் முதுகலைப்பட்டங்கள் பெற்றவர். வளர்ச்சிப்பணித் துறையில் பதினெட்டு ஆண்டுகாலப் பணி அனுபவம் மிக்கவர். தனித்துச் செயல்படும் ஆலோசகராகவும், கேர் இன்டியா என்னும் உலகளாவிய அரசு சாரா தொண்டு நிறுவனத்தின் சார்பாகவும் நலவாழ்வு மற்றும் நுண்ணூட்டம் சார்ந்த துறைகளில் குறிப்பாக தாய் சேய் நலத்துறையில் பரந்த அளவில் பணியாற்றிவந்திருக்கின்றார். பணியிடத்தில் பாலியல் தொல்லை தொடர்பாக முறைசார்ந்த மற்றும் முறைசாரா பணிகளில் ஈடுபட்டுவரும் பெண்களிடையே பணியாற்றிவந்திருக்கின்றார். வாழ்வாதாரச் சிக்கல்கள், பாலினம், வளரிளம் பருவத்து நலவாழ்வு, மாற்றுத் திறனாளிகள், சமூக ஏற்பு, உணர்வு மற்றும் சமூகசெயல்பாட்டு நலம் போன்ற துறைகளிலும் ஆய்வுகள், திட்டங்களுக்கு கருத்துரு உருவாக்குதல், மேற்பார்வை அமைப்புகளை மேம்படுத்துதல், திட்டங்களின் தாக்கங்களை சீர்தூக்கிப் பார்த்தல், செயல்பாட்டு முறைகளை ஆவணப்படுத்துதல் மற்றும் சீர்மிகு செயல்பாடுகளை அடையாளம் காணுதல் ஆகிய துறைகளிலும் நிபுணத்துவம் பெற்றவராக இருக்கின்றார்.



## முனைவர். சதானந்த் பாக்

புதுடில்லி, ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் அரசியல் அறிவியலில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார். ஆய்வு, குரல் கொடுத்தல், பரப்புரை, மனித உரிமைகள், பெண்களை வலுப்படுத்துதல், ஊராட்சி நிறுவனங்கள், கல்வி மற்றும் நலவாழ்வு சார்ந்த வளர்ச்சிப் பணித்துறைசார்ந்த பணிகளில் நிபுணராக பதிமூன்று ஆண்டுகளுக்கு மேலாக அனுபவம் பெற்றவராக இருக்கின்றார். ஜெர்மன் நாட்டின் மிசரயோர் மற்றும் நெதர்லாந்து நாட்டின் எஸ்.கே.எம் ஆகிய புரவலர்களின் நிதிஉதவிபெற்று இந்தியாவில் பலவேறு அமைப்புகளாலும் செயல்படுத்தப்பட்ட வளர்ச்சித் திட்டங்களை மதிப்பீடுசெய்யும் பணியில் ஈடுபட்டிருக்கின்றார். தற்போது புதுடில்லியில் இருந்து செயல்படும் காரிதாஸ் இந்தியா நிறுவனத்தின் ஆய்வு மற்றும் வளங்களை வளர்த்தெடுத்தல் பிரிவின் மேலாளராகப் பணியாற்றிவருகின்றார்.

With financial support of
the Federal Ministry for
Economic Cooperation and Development

**Caritas India**
CBCI Centre
1 Ashok Place
New Delhi - 110001
www.caritasindia.org

**Indian Social Institute**
24 Benson Road
Benson Town
Bengaluru - 560046
www.isibangalore.com

ISBN: 978-81-947949-5-0

Printed @ Jyoti Printers, Noida. Ph: 9289199317